# இஸ்லாம்

## க.பொ.த உயர் தரம்

## தரம் - 12

## ஆசிரியர் வழிகாட்டி

**(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 12
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு 2017

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

**ஸ்ரீலங்கா**

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள்,

புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சங்கைக்குரிய கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## வளப்பங்களிப்பு / கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர், நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முகம்மத்**
பிரதிப் பணிப்பாளர், நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.பாரி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை
கலைப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.ஹனீபா**
துறைத் தலைவர்,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை
கலைப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**அஷ்ஷெய்க் எம்.எம்.மஸாஹிர்**
சிரேஷ்ட விரிவுரையாளர்.'. பீடாதிபதி
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்

**அஷ்ஷெய்க் எம்.ரி.ரிஸ்வி**
துறைத் தலைவர்,
இஸ்லாமிய நாகரிக கற்கைகள் துறை
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.ரி. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக**

| | |
|---|---|
| **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்,** | தேசிய கல்வி நிறுவகம் |

**வெளியக**

| | |
|---|---|
| **அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.புஹாரி** | ஆசிரிய ஆலோசகர்,மினுவங்கொடை கல்வி வலயம் |
| **எம்.எச்.எம். நாளிர்** | ஓய்வுபெற்ற ஆசிரியர். |
| **எம்.எஸ்.எம். அனஸ்** | ஆசிரியர், அலுத்கம்வீதிய தேசிய பாடசாலை, தர்கா நகர் |
| **அஷ்ஷெய்க் எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்** | ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு. வி, நாம்புளுவ. |
| **எம்.எப்.எம்.பாஹிம்** | ஆசிரிய ஆலோசகர்,மினுவங்கொடை கல்வி வலயம் |
| **மௌலவி எம்.எஸ்.ஏ. நாளிம்** | ஆசிரியர், ஸாஹிரா தேசிய பாடசாலை, மாவனல்லை |
| **எம்.எஸ்.எம் பூஸரி** | ஆசிரியர், அல் பத்ரியா மு.வி, கஹடோவிட |
| **எம்.எச்.எம். பர்ஹான்** | ஆசிரியர், அலுத்கம்வீதிய மு.ம.வி, தர்கா நகர். |

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்குப் பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைத் திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே, குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றது.

கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்குத் தேவையான காலப்பகுதியைச் சுயாதீனமாக தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தைத் திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின்போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காகக் குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. குறிப்பாக உயர் தர வகுப்புக்களுக்கு குழுச் செயற்பாடுகள் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன. குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாகத் திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக தேடலினூடாக விடயங்கள் முன்வைக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்களுக்கு சுயமான தேடலுக்கு வழிகாட்டுவது ஆசிரியரின் பொறுப்பாகும்.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

செயற்றிட்டத் தலைவர்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| • பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | v |
| • கலைத்திட்டக் குழு | vi |
| • ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | viii |
| • கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் | 1 -220 |

# விடய வழிகாட்டித் தொடர்

**தேர்ச்சி 01: இஸ்லாம் சம்பூர்ண வாழ்க்கை முறை என்ற வகையில் அதன் சிறப்பம்சங்களை இனங்கண்டு விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1: இஸ்லாம் பூரண வாழ்க்கை முறை என்பதை விளங்கி அதன் சிறப்பம்சங்களை எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 15**

**கற்றல்பேறுகள் :**

- இஸ்லாம் என்பதன் விரிவான விளக்கத்தை எடுத்துக் கூறுவார்.
- இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார்.
- இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள் ஒவ்வொன்றையும் விளக்குவார்.
- இஸ்லாம் பூரண வாழ்க்கைத் திட்டம் என்பதை அதன் சிறப்பம்சங்கள் ஊடாக நிறுவுவார்.
- இஸ்லாம் பூரண வாழ்க்கை நெறி என்பதை ஏற்று வாழ்வில் கடைப்பிடிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- இஸ்லாம் என்ற சொல் ‘ஸில்ம்’ என்ற அறபுச் சொல்லிலிருந்து பிறந்துள்ளது. இது சாந்தி, பரிசுத்தம், பணிவு, பாதுகாப்பு போன்ற கருத்துக்களை உடையது.

- வழக்கில், இஸ்லாம் என்பது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த எல்லா அம்சங்களும் உள்ளடங்கிய வாழ்க்கை முறையைக் குறிக்கும்.

- எல்லா நபிமார்களும் இஸ்லாத்தையே போதித்தார்கள் என்பதும், அவர்கள் அனைவரினதும் போதனைகளின் சாரம், நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட ‘புர்கான்’ எனும் இறுதி வேதத்தில் அமைந்துள்ளது என்பதும் முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். இஸ்லாம் என்பது வழக்கில் ஒரு மதமாகக் கொள்ளப்பட்டாலும் அது ஒரு முழுமையான வாழ்க்கை முறை - கலாசாரம் - நாகரிகம் என்பதே உண்மையாகும்.

- முஸ்லிம்களால் பின்பற்றப்படுகின்ற, மக்களால் வழங்கப்படுகின்ற இஸ்லாம் என்ற சொல் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டதாகும். அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம் என அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது.

**இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்.**

- உலகில் தோன்றிய எல்லாச் சமயங்களும் தனக்கெனத் தனியான சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் கொண்டிருக்கின்ற சிறப்பம்சங்களே, அதனை ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. இஸ்லாமும் அது கொண்டிருக்கின்ற சிறப்புக்களின் காரணமாகவே ஏனையவற்றிலிருந்து

வேறுபடுகின்றது. ஏனைய சமயங்களிலிருந்து இஸ்லாம் வேறுபடுகின்ற முறை பற்றிய அறிவு, முஸ்லிம்களின் நம்பிக்கைக் கோட்பாட்டைப் பலப்படுத்திக் கொள்ளவும், உண்மையான விசுவாசியாக தன்னை மாற்றிக் கொண்டு செயற்படவும் தூண்டுகின்றது.

- உலக சமயங்களிற் சில, தனி நபர்களால் உருவாக்கப்பட்டவை. பௌத்தம் (சித்தார்த்தர்) சமணம் (மகாவீரா) சீக்கியம் (குருநானக்) சொராஸ்டரியம் (சொராஸ்டர்) போன்றன தனி மனித அறிவின் முடிவாகவோ, தவத்தின் பேறாகவோ தோன்றி வளர்ந்திருப்பதாகக் கொள்வர். இதற்கு மாறாக, யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்றன தனிமனித செல்வாக்கிலன்றி இறைவழிகாட்டலால் - நபியொருவரின் வஹி மூலம் பெறப்பட்ட அறிவையும், வழிகாட்டலையும் கொண்டு உருவாகி மக்களால் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன.

- மனித முயற்சியால் தோன்றிய சமயங்கள் பெரும்பாலும் ஆன்மீக கருத்துக்களைத் தழுவியவை, கருத்து முரண்பாடு கொண்டவை, ஆனால் இறை வழிகாட்டலில் தோன்றியவை. ஆன்மீகத்தையும் உலகியலையும் இணைத்து, மனித சமுதாயத்துக்கு வழிகாட்டுபவை. இஸ்லாம், சமயக்கருத்துக்களை முன்வைக்கின்ற அதே நேரத்தில் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் முதலான தனிப்பட்ட, பொது வாழ்வின் எல்லா விவகாரங்களிலும் அக்கறை கொண்டுள்ளது. ஆதலால், அது சமயமாகவன்றி, ஒரு வாழ்க்கை முறையாகவே தன்னை அறிமுகப்படுத்துகின்றது.

- இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரம் அல்குர்ஆனும், ஸுன்னாவுமாகும். அல்குர்ஆனுக்கு முன்னால், தவ்றாத், ஸபூர், இன்ஜீல் என்ற வேதங்கள் முறையே மூஸா (அலை) தாவூத் (அலை) ஈஸா (அலை) ஆகிய இறை தூதர்களுக்கு அருளப்பட்டன. எனினும் அவை காலப் போக்கில் திரிபடைந்தன. இறுதி வேதமான அல்குர்ஆன் (புர்கான் வேதம்) நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கி.பி ஏழாம் நூற்றாண்டில் அருளப்பட்டது. அதனை நபி (ஸல்) அவர்கள் வஹி மூலம் பெற்று, தாம் வாழ்ந்த சமூகத்துக்கு அறிமுகப்படுத்தியும், நடைமுறைப்படுத்தியும் காட்டினார்கள். அவர்கள் போதித்தும், வாழ்ந்தும் காட்டிய முறைமையின் உள்ளடக்கமே ஸுன்னாவாகும்.

- அவர்களது போதனையை ஏற்று வாழ்ந்தோர் முஸ்லிம்கள் ஆவர். அவர் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி முழு மனித சமூகத்திற்கும், எல்லாக் காலத்துக்கும் உரியவராக (காப்பதுன் லின்நாஸ்) இறுதி நபியாக (காத்தமுன் நபிய்யீன்) கொள்ளப்படுகிறார். அவருக்குப் பின் நபிமார்கள் தோன்ற மாட்டார்கள். வேதங்களும் அருளப்படமாட்டாது. ஏனெனில் முன்னர் அருளப்பட்ட வேதங்களுக்கு, அழிவுகள், திரிபுகள், இடைச் செருகல்கள் போன்ற சிதைவுகள் ஏற்பட்டமை போன்று, புர்கான் வேதத்துக்கு ஏற்படவில்லை. ஏற்படப்போவதுமில்லை. அதை மக்கள் அனுமதிக்கவும் மாட்டார்கள். இதற்கு அல்லாஹ் உத்தரவாதம் அளித்துள்ளான். (அல்குர்ஆன் 15:09) மட்டுமன்றி, இஸ்லாத்தின் போதனைகள் (அல்குர்ஆனும், ஸுன்னாவும்)இன்றுவரை திரிபுபடாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவை அருளப்பட்டுள்ள மொழி வழக்கொழிந்து போகாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. உலகில் அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோரும், இரண்டாம் மொழியாகக் கற்போரும் கோடிக் கணக்கில் உள்ளனர். அது ஒரு சர்வதேச மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- இஸ்லாம், நம்பிக்கைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், ஒழுக்க விழுமியங்கள், கல்வி முறை, குடும்ப நிருவாகம், சமூக விவகாரம், நீதி பரிபாலனம், பொருளாதார நடவடிக்கைகள், அரசியல் நடைமுறை, சர்வதேச உறவு முதலான ஆன்மீக, உலகியல் செயற்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

- இஸ்லாம், தனிநபர் மார்க்கமாகவன்றிச் சமூக மார்க்கமாக இருப்பதால், நபி (ஸல்) அவர்கள் தனிநபர்களை உருவாக்கிய அதே நேரத்தில் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதிலும், அதற்கூடாக இஸ்லாத்தை நடைமுறைப்படுத்திக் காட்டுவதிலும் அதிக கவனம் செலுத்தினார்கள். அவர் உருவாக்கிய ஸஹாபாச் சமூகமே இஸ்லாத்தின் முன்னோடிச் சமூகமாகவுள்ளது.

- அந்தச் சமூகத்தை வளர்ப்பதற்காகவும், நெறிப்படுத்துவதற்காகவும் நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் மஸ்ஜிதுந் நபவியை நிறுவினார்கள். அங்கு இபாதத்துகள் இடம்பெற்றன. அவ்விபாதத்துகளுக்கூடாகத் தனி மனிதன் அல்லாஹ்வுடனும், சமூகத்துடனும் பிணைக்கப்பட்டான். அது சமூக வாழ்வுக்கான பயிற்சிப்பாசறையாக அமைந்தது. தனிமனித, சமய, சமூக, பொருளாதார, அரசியல், கல்வி, கலாசார, சர்வதேச விவகாரங்கள் அனைத்துக்கும் அது தலைமையகமாக இயங்கியது. இது முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு முன்மாதிரியாகும்.

- இஸ்லாம் மனித சமுதாயத்துக்குரிய மார்க்கமாக இருப்பதால் அது மனிதனுக்கு முதன்மையான இடத்தை வழங்கியுள்ளது. இஸ்லாத்தின் பார்வையில், அவன் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டுள்ளான். அதற்காக, அவனுக்கு பூரண சுதந்திரமும், வழிகாட்டலும் வழங்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும், எதற்கும் அடிமையாவதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அவன் தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்ற அடிப்படைக் கோட்பாடுகளை நம்பி, அதனடிப்படையில் இபாதத், இமாரத், கிலாபத் என்ற பணிகளை நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் வழிபடாத தன்மையும், தனித்துவமும், அல்லாஹ்விடம் பதில் கூற வேண்டுமென்ற பொறுப்புணர்வும், பயமும், நல்லதைச் செய்கின்ற தைரியமும், பக்குவமும் அவனது செயற்பாட்டுக்கு உறுதுணையாக அமையும். புலனறிவைச் சரியாகப் பயன்படுத்தியும் பகுத்தறிவை உரியவாறு பங்களிக்கச் செய்தும் வஹி அறிவை வழிகாட்டியாகக் கொண்டும் அவன் செயல்படுகிறான். படைப்புக்கள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பம் என்றவகையில் அவன் தனக்குச் செய்ய வேண்டிய கடமைகளோடு ஏனைய படைப்புகளுக்கு வழங்க வேண்டிய உரிமைகளையும் (ஹுகூகுல் இபாத்) கொடுத்து வருகிறான்.

- மனிதன் சேர்ந்து வாழும் இயல்புடையவன். அவ்வாறு சேர்ந்து வாழும் போது மற்றவர்களுடன் இயல்பாக நடந்து கொள்வதும், அவர்களது உரிமைகளை மதித்து நடப்பதும், சுயமாகச் செயல்பட முடியாத காரியங்களைக் கூட்டமாக நிறைவேற்றுவதற்குமான மனப்பக்குவமும், விட்டுக் கொடுப்பும் அவனில் உயர்ந்து நிற்கும். சில கட்டங்களில் இஸ்லாம், தனிமனிதனைவிட, சமூகத்துக்கு முன்னுரிமை வழங்குகின்றது. அதற்கான வழிகாட்டல்களையும் கொடுத்திருக்கின்றது.

- இஸ்லாத்தின் சிறப்பம்சங்களில் எதிர்மறைகளுக்கிடையேயுள்ள முரண்பாடுகளை

உடன்பாடாக அமைத்திருப்பது மிக முக்கியமான அம்சமாகும். ஆண்- பெண், தனிமனிதன் - சமூகம், வஹி - பகுத்தறிவு, நெகிழ்வு - நெகிழாமை, வாழ்வை துய்த்தல் - துறத்தல், முஸ்லிம் - காபிர், இம்மை- மறுமை, ஆன்மீகம் - உலகியல், இலட்சியவாதம்- யதார்த்த வாதம், தெய்வீகத் தன்மை- மானுடத் தன்மை என்பவற்றுக்கிடையில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து விடாமல் நடுநிலையான போக்கை விதந்துரைத்துள்ளது. இதனால் மானசீக ரீதியாகவோ, சமூக, தேசிய ரீதியாகவோ மனிதன் மனிதனோடு மோதிக் கொள்ளும் நிலை தவிர்க்கப்படுகிறது. முரண்பாடுகளை உடன்பாடுகளாக ஏற்கக் கற்பிக்கின்றது.

- ஒரே சமயத்தில் நெகிழும் தன்மையும் நெகிழாத் தன்மையையும் கொண்டிருப்பதை இதற்குதாரணமாகக் குறிப்பிடலாம். அவ்ரத்தை மறைத்தல் என்பது நெகிழாமல் நிற்க, மறைக்கும் பொருள், முறை என்பன காலத்துக்கும் சூழ்நிலைக்கும் பொருத்தமான முறையில் நெகிழும். சாரத்துக்குப் பதிலாக காற்சட்டை, ஜுப்பா அணிதல், சேலைக்குப் பதிலாக ஹபாயா அணிதல் என்பதை உதாரணமாகக் காட்டலாம்.

- இவ்வாறான மாற்றங்களை ஏற்பதா, நிராகரிப்பதா என்பதைத் தீர்மானிப்பதற்காக இஸ்லாம் இஜ்திஹாத் என்ற வழிமுறையை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் மூலம், நபி (ஸல்) அவர்களின் காலத்தில் தோன்றாத பிரச்சினைகளுக்கு துறைசார்ந்த அறிஞர்கள் (முஜ்தஹித்) தனியாகவோ, கூட்டாகவோ தீர்ப்பு வழங்கலாம். இது, இஸ்லாம் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமானது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

- இஸ்லாம், மனிதனின் இம்மை மறுமை வாழ்வுக்கான எல்லா விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. அது, எங்கும், எப்போதும், எதனையும் சமநிலைத் தன்மையோடு நோக்கவும், செய்யவும், தூண்டுகின்றது. அதில் ரப்பானியத் என்ற தெய்வீகத் தன்மையும், இன்ஸானிய்யத் என்ற மானுடத் தன்மையும் முரண்படாமல் இயங்கி வருகின்றது. தீவிரவாதம் மிதவாதம் என்பவற்றுக்கிடையில் வஸதிய்யா என்ற நடுநிலைப் போக்கைக் கையாளுகின்றது.

- எனவே, இஸ்லாம் எல்லாக் காலத்துக்கும், எல்லாப் பிரதேசங்களுக்கும், எல்லா இனத்தவருக்கும் பொருத்தமான சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது என்பது மிகத் தெளிவானது.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


- ரவூப் ஸைன் - இஸ்லாத்தின் தனிப் பண்புகள்
- பஸ்லுர் ரஹ்மான் அன்ஸாரி - இஸ்லாம் என்பது என்ன, இலங்கை முஸ்லிம் மிஷனரி சொசைட்டி, கொழும்பு.
- அபுல் அ.்.லா மௌதூதி - இதுதான் இஸ்லாம், இஸ்லாமிக் புக் ஹவுஸ் வெளியீடு, கொழும்பு 10.

**தேர்ச்சி 01: இஸ்லாம் சம்பூர்ண வாழ்க்கை முறை என்ற வகையில் அதன் சிறப்பம்சங்களை இனங்கண்டு விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2: பிரபஞ்சம், மனிதன், வாழ்வு பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளங்கித் தனது வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்வார்.**

**பாடவேளைகள் : 10**

**கற்றற்பேறுகள் :**

- பிரபஞ்சம், மனிதன், வாழ்வு தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளக்குவார்.
- பிரபஞ்சம், மனிதன், வாழ்வு தொடர்பான ஏனைய சிந்தனைகள், சமயங்களின் கண்ணோட்டத்தை ஒப்பு நோக்குவார்.
- இறைவன், பிரபஞ்சம், மனிதன், வாழ்வு ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பை விளக்கி எழுதுவார்.
- பிரபஞ்சம், மனிதன், வாழ்வு தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளங்கி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**பிரபஞ்சம்**

- பிரபஞ்சம் என்பது அல்லாஹ் தவிர்ந்த அனைத்துப் படைப்பினங்களையும் குறிக்கின்றது.
- உலக வாழ்வையும் அதன் இலக்கையும், புரிந்து கொள்வதற்கு பிரபஞ்சம் பற்றிய அறிவு அவசியமானதாகும்.

  ‘‘வானத்தையும், பூமியையும் இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் வீணுக்காக நாம் சிருஷ்டிக்கவில்லை. இது (வீணென்பது) நிராகரிப்போரின் எண்ணமேயாகும். நிராகரிக்கும் இவர்களுக்குக் கேடுதான் இவர்களுக்கு (நரக) நெருப்பே கிடைக்கும்.’’ (38:27)

- பிரபஞ்சத்தின் படைப்பாளன் அல்லாஹ். ‘‘அவனே வானங்களையும், பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் எதை(ப் படைக்கக் கருதி) முடிவு செய்தாலும், அதனை ‘ஆகுக’ என்று கூறிய மாத்திரத்தில் உடனே ஆகிவிடுகின்றது.’’ (2:117)
- பிரபஞ்சம் ஓர் சத்தியத்தின் அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளது.

  ‘‘பின்னர் புகை வாயுவாக இருந்த வானத்தளவில் திரும்பி அதனையும், பூமியையும் நோக்கி நீங்கள் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி (வழிப்பட்டு என்னிடம்) வாருங்கள், என்று கூறினான். அதற்கு அவை (இதோ) நாங்கள் விருப்பத்துடனேயே வந்தோம் என்று கூறின. பின்னர் அவன் அவைகளை இரண்டு நாட்களில் ஏழு வானங்களாகத் திட்டமிட்டு ஒவ்வொரு வானத்திற்கும் அதனதன் கடமையை அறிவித்தான்.’’ (41:11-12)

- பிரபஞ்சம் அல்லாஹ்வின் சட்டத்தின் கீழ் இயங்குகின்றது.

  ''தன்னுடைய வரையறைக்குள் (தவறாமல்) செல்லும் சூரியனும் (ஓர் நட்சத்திரமாகும்) இது (யாவையும்) நன்கறிந்தோனும் மிகைத்தோனுமால் விதிக்கப்பட்டதாகும்.'' (36:38)

- பிரபஞ்சத்தின் தோற்றமும், இயக்கமும் தற்செயல் நிகழ்வுகளன்று. மாறாக திட்டமிடப்பட்ட சீரிய ஒழுங்கமைப்பைக் கொண்டது.

  ''(மனிதர்களே! உருவ) அமைப்பில் நீங்கள் பலசாலிகளா? அல்லது அவன் படைத்த வானமா? அவனே அதன் முகட்டை உயர்த்தி அதனை ஒழுங்குபடுத்தினான். அவனே அதன் இரவை இருளாக்கி(ச் சூரியனைக் கொண்டு) பகலை வெளியாக்கி (வெளிச்சமாக்கி)னான் இதற்குப்பின்னர் அவனே பூமியை விரித்தான்.'' (79: 27-30)

- பிரபஞ்சப் பொருட்கள் மனிதனுக்காகப்படைக்கப்பட்டிருக்கின்றன.

  ''அவன் தான் (பூமியையும்) பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காகப் படைத்தான்.'' (2:29)

- பிரபஞ்சமும் அதிலுள்ளவைகளும் அல்லாஹ்வின் நாட்டப்படி அழியும்.

  ''வானங்களையும், பூமியையும் அவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் தக்க காரணமும் குறிப்பிட்ட தவணையுமின்றி நாம் சிருஷ்டிக்கவில்லை. எவர்கள் (அல்லாஹ்வை) நிராகரிக்கின்றார்களோ அவர்கள் தங்களுக்குப் பயமுறுத்தி எச்சரிக்கை செய்யப்பட்டதைப் புறக்கணிக்கின்றனர்.'' (46:3)

  ''பூமியிலுள்ள யாவும் அழிந்தே போகும். மிக்க கண்ணியமும் பெருமையும் தங்கிய உமதிறைவன் மட்டும் (அழியாது) நிலைத்திருப்பான்.'' (55: 26-27)

**மனிதன்**

- மனிதனது தோற்றம் பற்றிய கொள்கைகள்.
- மனிதன், அவனது தோற்றம் பற்றிய இஸ்லாத்தின் கொள்கை.

  ''நிச்சயமாக (ஆரம்பத்தில் முதல்) மனிதரைக் களிமண்ணின் சத்திலிருந்து சிருஷ்டித்தோம்.'' (23:12)

  ''பின்னர் அவரை நான் சரியாக உருவாக்கி, அவரில் என் ஆவியிலிருந்தும் நான் ஊதியபோது, அவருக்குச் சிரம் பணிந்தவர்களாக விழுங்கள் என்று மலக்குகளிடம் அல்லாஹ் கூறினான்.'' (15:29)

  ''நபியே உமதிறைவன் மலக்குகளை நோக்கி நான் பூமியில் (என்னுடைய) பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக அமைக்கப்போகிறேன்.'' (2:30)

- மனிதன் அல்லாஹ்வினால் அறிவூட்டப்பட்டே உலகுக்கு அனுப்பப்பட்டுள்ளான்.

  ''பின்பு (ஆதமைப் படைத்து) ஆதமுக்கு(ப் பூமியிலுள்ள) எல்லாப் (பொருள்களின்) பெயர்களையும் (அவற்றின் தன்மைகளையும்) கற்றுக் கொடுத்து, பின்னர் அவற்றை (அந்த) மலக்குகளின் முன்பாக்கி (மலக்குகளே! ஆதமுக்கு என்னுடைய பிரதிநிதி யாவதற்குரிய தகுதியில்லையென்று கூறினீர்களே ! இதில்) நீங்கள் உண்மையான வர்களாயிருந்தால் (இதோ உங்கள் முன்னிருக்கும்) இவற்றின் பெயர்களை நீங்கள் எனக்கறிவியுங்கள் எனக் கூறினான்.'' (2:31)

- மனிதன் உயர் படைப்பாகக் கணிக்கப்படுகிறான்.

''பின்னர் நாம் மலக்குகளை நோக்கி ஆதமுக்கு நீங்கள் பணி(ந்து ஸுஜூது செய்)யுங்கள் எனக் கூறியபோது அவர்கள் (யாவரும்) ஸுஜூது செய்தார்கள். இப்லீஸைத் தவிர. அவனோ பெருமை கொண்டு விலகி (நம்முடைய கட்டளையை) நிராகரிப்பவராகிவிட்டான்.'' (2:34)

- மனிதனுக்கு நேர்வழிகாட்டும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுள்ளான்.

''நிச்சயமாக என்னுடைய நேர்வழி உங்களிடம் வரும். எவர் என்னுடைய நேர்வழியைப் பின்பற்றுகின்றாரோ அவர் வழி தவறமாட்டார். நட்டமடையவும் மாட்டார்.'' (2:38)

- பிரபஞ்ச அருட்கொடைகள் அனைத்தும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளன.

''இன்று நான் உங்களுக்கு மார்க்கத்தைப் பூரணமாக்கிவிட்டேன். மேலும் உங்களுக்கு எனது அருட்கொடைகளையும் நிறைவாக்கினேன். இஸ்லாத்தை உங்களுக்குரிய மார்க்கமாகவும் அங்கீகரித்துக் கொண்டேன்.'' (5:3)

- மனிதன் பொறுப்புக்களை சுமந்தவன். அதற்கு வகைகூறக் கடமைப்பட்டவன்.

''நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படுவீர்கள்'' (முஸ்லிம்)

- மனிதன் கிலாபத், இபாதத், இமாரத் பணிகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவனாக உள்ளான்.

''(மனிதர்களே) உங்களில் எவரேனும் மெய்யாகவே விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்தால் அவர்களுக்கு முன்னர் சென்றவர்களை(ப் பூமிக்கு) அதிபதிகளாக்கிய பிரகாரமே இவர்களையும் நிச்சயமாக பூமிக்கு அதிபதிகளாக்கி வைப்பதாகவும், அவன் விரும்பிய மார்க்கத்தில் இவர்களை ஸ்திரப்படுத்தி வைப்பதாகவும் இவர்களுடைய பயத்தை அமைதியும் பாதுகாப்புமாக மாற்றிவிடுவதாகவும் நிச்சயமாக அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்'' (24:55)

''மனித வர்க்கத்தையும், ஜின் வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவேயன்றிப் படைக்கவில்லை.'' (51:56)

''என்னுடைய மக்களே நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனைத்தவிர வேறு கடவுள் இல்லை, அவன் உங்களைப் பூமியிலிருந்து படைத்தான். அந்தப் பூமியை நிருவகிக்கும் படி உங்களைப் பணித்தான்.'' (11:61)

- கலீபாவாக தொழிற்படல்
- இறைசட்டங்களையே மேலாக மதித்தல்
- இறை சட்டங்களைப் பின்பற்றி தனது வாழ்வை அமைத்தல்.
- அடுத்தவர்களையும் இறை சட்டங்களைப் பின்பற்றி வாழ வைப்பதற்காக தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளல்.
- இறைசட்டங்களை மேலோங்கச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்தல்
- இபாதத் செய்தல்
- சகலவிதமான ஷிர்க்குகளிலிருந்தும் நீங்கி அல்லாஹ்வுக்கு மாத்திரம் இபாதத் செய்தல்.
- இமாரத் - வளப்படுத்தும் பணியில் ஈடுபடல்

''அவனே உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கினான். அதனைப்

பரிபாலிக்குமாறும் உங்களைக் கேட்டுக் கொண்டான்.'' (11:61)

''ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை அல்லது ஒரு பயிரை நாட்டி அதிலிருந்து ஒரு பறவை அல்லது ஒரு மிருகம் அல்லது ஒரு மனிதன் பிரயோசனம் பெறும் காலமெல்லாம் அவனுக்கு அது ஸதகாவாக அமையும்.'' (முஸ்லிம்)

**வாழ்வு**

- மனிதனது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெறும் நல்ல உயர்தரமான செயற்பாடுகளே வாழ்வாகும்.

  ''உங்களில் எவர் செயல்களில் மிக்க சிறந்தவர் என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே அவன் வாழ்வையும் மரணத்தையும் படைத்திருக்கின்றான்.'' (67:02)

- பிரபஞ்சம் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளதால் அவன் அதனை உணர்ந்து பயன்படுத்த வேண்டியவனாக உள்ளான்.

  ''நீர் கேட்பீராக! அல்லாஹ் தன் அடியார்களுக்காகத் தோற்றுவித்துள்ள அலங்காரத்தையும் மேலும் அவன் வழங்கியுள்ள தூய்மையான உணவுப் பொருட்களையும் தடைசெய்தது யார்? நீர் கூறும்! விசுவாசிகளுக்கு இவை அனைத்தும் இவ்வுலக வாழ்க்கையில் உரியவையாகும். மறுமை நாளில் இவை அவர்களுக்கு மாத்திரமே உரியன. இவ்வாறு நாம் நம்முடைய வசனங்களை அறிவுடைய சமூகத்தாருக்கு தெளிவாக விவரிக்கின்றோம்'' (7:32)

- மனிதன் தனது உலக வாழ்வைச் சமநிலையானதாக அமைத்துக் கொள்ளுமாறு இஸ்லாம் கூறுகின்றது.

  ''அல்லாஹ் உனக்கு வழங்கியிருப்பவற்றின் மூலம் மறுமையின் வீட்டைப் பெற அக்கறை கொள். மேலும் இம்மையிலும் உனது பங்கை மறந்துவிடாதே. மேலும் அல்லாஹ் உனக்குச் செய்திருப்பது போல் நீயும் உபகாரம் செய். மேலும் பூமியில் அராஜகம் விளைவிக்க முயற்சி செய்யாதே! நிச்சயமாக அல்லாஹ் அராஜகம் விளைவிப்பவர்களை நேசிப்பதில்லை.'' (28:77)

- இவ்வுலகம் ஒரு சோதனைக்களம், இங்கு மனித செயற்பாடுகளுக்குரிய விளைவுகளைப் பெற முடியாது. மறுமைக்குரிய விளைநிலமாகவே இதுவுள்ளது.

  ''எவன் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அவன் அதனைக் கண்டு கொள்வான். மேலும் எவன் அணுவளவு தீமை புரிந்தானோ அவனும் அதனைக் கண்டுகொள்வான்.'' (99:7-8)

  ''இவ்வுலகம் மறுமைக்குரிய விளை நிலமாகும்.''

- உலகிலுள்ள ஒவ்வொன்றும் மற்றொன்றுக்காகப் படைக்கப்பட்டுள்ளது என இஸ்லாம் கூறுகின்றது. மனிதன் அல்லாஹ்வுக்காகப் படைக்கப்பட்டுள்ளான்.

- பிரபஞ்சமும் உலகமும் அழிந்து விடுவதாகவே இஸ்லாம் குறிப்பிடுகிறது. ஆதலால் ஆத்மாவைப் பாதிக்கக்கூடிய விதமாக இதனைப் பிரயோகித்தல் கூடாது.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**

- கலாநிதி சுக்ரி M.A.M. - இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடு, அல் கலம் பதிப்பகம், பேருவளை.

**தேர்ச்சி 02: இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளை விளங்கி தன் வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1: இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றற்பேறுகள்**

- இறைவன் ஒருவன் என்பதை வஹி, பகுத்தறிவு, படைப்புகள் என்பன சார்ந்த ஆதாரங்கள் ஊடாக விளக்கிக் கூறுவார்.
- றப்பு, இலாஹ், அஸ்மா வஸ்ஸிபாத் என்பவற்றின் விளக்கத்தை முன்வைப்பார்.
- அல்லாஹ்வை றப்பாகவும், இலாஹ் ஆகவும் ஏற்று அவனுக்கு அடிபணிந்து தன் வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.
- ஈமான் கொள்ள வேண்டிய ஏனைய அம்சங்களை ஆதாரங்களுடன் விளங்கி முன்வைப்பார்.
- மனித வாழ்வை வழிநடத்த இறைவழிகாட்டல் அவசியம் என்பதை அறிந்து விளக்குவார்.
- நபி (ஸல்) அவர்களை இறுதி நபியாக ஏற்று அவர்கள் மீது அன்பு வைத்து அவர்களைப் பின்பற்றுவார்.
- மறைவானவற்றை நம்பிக்கை கொள்வதனூடாக வாழ்வை நெறிப்படுத்தி ஒழுகுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- ஒரு மனிதன் ஆத்திகனாக இருந்தாலும் சரி நாத்திகனாக இருந்தாலும் சரி அவனது நடத்தைகளும் செயற்பாடுகளும் எப்போதும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. ஆத்திகன் கடவுள் உண்டு என்று நம்புகின்றான். நாத்திகன் கடவுள் இல்லை என்று நம்புகின்றான். ஆத்திகரிடையே அனைத்தும் கடவுளுடைய படைப்பு என்ற ஒருமித்த நம்பிக்கையும் கடவுள் எப்படி என்ற விடயத்தில் பல்வேறுபட்ட நம்பிக்கைகளும் உள்ளன. நாத்திகரிடையே கடவுள் இல்லை என்பதில் ஒருமித்த நம்பிக்கையும் படைப்புக்கள் எவ்வாறு தோன்றின என்ற விடயத்தில் பல்வேறு நம்பிக்கைகளும் காணப்படுகின்றன. ஒவ்வொரு தரப்பினரினதும் நடத்தைகளில் அவர்களது நம்பிக்கைகளே அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றன.

- இஸ்லாம் இறைநம்பிக்கையை (கடவுள் நம்பிக்கை) வலியுறுத்தும் வாழ்க்கை வழிமுறையாகும். இஸ்லாமிய நம்பிக்கையில் இறைவன் ஒருவனே. அவன் அல்லாஹ் என்று பொதுவாக அழைக்கப்படுகின்றான். அவனுக்கு இன்னும் பல திருநாமங்கள் உள்ளன. அல்லாஹ் மனிதனைப் படைத்தது மட்டுமல்லாது அவனுக்குரிய வழிகாட்டலையும் வழங்கியுள்ளான். இவ்வழிகாட்டல் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டக்கூடியதாகும். அவனுக்கு எவ்விதத் தேவையும் கிடையாது. ஆனால்

அவனோ அனைவருக்கும் தேவையானவன். அவன் எவரையும் பெற்றெடுக்கவும் இல்லை. எவராலும் பெறப்படவும் இல்லை. அவனுக்கு ஒப்பாக எதுவும் கிடையாது. அவன் நாடியவாறே அனைத்தையும் படைத்துள்ளான். அவன் உலகைப்படைப்பதற்கு முன் சுவர்க்கத்தையும் நரகத்தையும் படைத்தான். அதன் பின்பே பூமியையும் அதிலுள்ளவற்றையும் மனிதனுக்காகப் படைத்தான். அதன் பிறகு மனிதனைப்படைத்தான். மனிதர்களுள் நல்லவர்களையும் தீயவர்களையும் இனம்கண்டு இறைநீதிக்கமைய அவர்களைச் சுவர்க்கத்துக்கோ நரகிற்கோ செலுத்துகின்றான். நரகம் நுழையும் மனிதன், தான் நல்லவனாக வாழ வழிகாட்டல் கிடைக்கவில்லை என்று அல்லாஹ்வைக் குறைகூறாமல் இருப்பதற்காக இறைத் தூதையும் இறைத்தூதர்களையும் உலகிற்கு அனுப்பியுள்ளான்.

இஸ்லாம் கூறும் மேற்படி நம்பிக்கைகளை வஹி, பகுத்தறிவு, படைப்புகள் என்பன சார்ந்த ஆதாரங்கள் ஊடாக உறுதிப்படுத்துவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

## 1. அல்லாஹ் பற்றிய நம்பிக்கை

- பௌதிக நியதிகளுக்கு அப்பால் மறைவாயுள்ள விடயங்களை முற்றிலும் பௌதிக நியதிகளுக்குட்பட்ட அறிவுள்ள மனிதன் எவ்வித ஆதாரமும் இன்றி நம்புதல் மூடநம்பிக்கை என்றும் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியுமானவற்றை மறைவானது என்பதற்காக மறுத்தல் நிராகரிப்பு என்றும் அழைக்கப்படுகிறது.

- இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டில் (அகீதாவில்) அல்லாஹ் பற்றிய நம்பிக்கை முதலிடத்தை வகிக்கின்றது. அதுவே நம்பிக்கைகளின் அச்சாணியாகவும், அடிப்படையாகவும் காணப்படுகிறது.

- அல்லாஹ் பௌதிக நியதிகளுக்கு அப்பால் முற்றிலும் மறைவானவன் என்றவகையில் அவன் பற்றிய நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காகவும் அந்நம்பிக்கையின் எல்லையினை வரையறைப்படுத்தவும் ஆதாரங்கள் முக்கியம் பெறுகின்றன.

- இஸ்லாம் முன்வைக்கும் ஆதாரங்கள் இருவகையானவை
  1. வஹியை அடிப்படையாகக்கொண்ட வைதீகம் சார்ந்தவை
  2. காரண காரிய அடிப்படையில் அமைந்த பகுத்தறிவு சார்ந்தவை

.

- வஹியை நம்புபவன் பகுத்தறிவுரீதியாகச் சிந்தித்துத் தனது நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொள்வது போன்று பகுத்தறிவு ரீதியாகச் சிந்தித்து நம்பிக்கை கொள்பவன் வஹியை அடிப்படையாகக் கொள்வதன் மூலமே வெற்றிபெறுவான் என்பது இஸ்லாமிய கோட்பாடாகும்.

- வஹியை அடிப்படையாகக்கொண்ட இஸ்லாமிய வைதீகம் சார்ந்த ஆதாரங்கள் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையின் உள்ளடக்கங்களை விளக்குவதுடன் அவற்றை நிராகரிப்பது பகுத்தறிவுக்கு முரணானது என்றும் மனிதனை நிரந்தரமாக நஷ்டப்படுத்தக்கூடியது என்றும் கூறுகிறது

**வஹியின் அடிப்படையில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை**

- வஹி, அல்லாஹ்வின் பக்கத்தில் இருந்து வரக்கூடிய வெளிப்பாடு என்ற வகையில் அல்லாஹ்வைப்பற்றி முழுமையாக அறிந்து அவனை விசுவாசம் கொள்வதற்கு அதுவே மிகச்சரியான ஊடகமாகும்.
- மறைவானவற்றை நம்புவதன் அவசியம், அதற்கு வஹியின் முக்கியத்துவம் என்பன காரணமாகவே ஒவ்வொரு காலகட்டத்திலும் அல்லாஹ் வஹியை வெளிப்படுத்தியுள்ளான்.
- மறைவானவை குறித்த வஹியின் கருத்துக்கள் எக்காலத்திலும் ஒன்றாகவே இருந்தன. எனினும், வஹியின் பாதுகாக்கப்பட்ட தொகுப்பாகிய அல்குர்ஆன் ஸுன்னா தவிர்ந்த ஏனையவற்றில் மறைவானவை பற்றிய கருத்துக்களில் மனிதக் கற்பனைகள் கலந்துள்ளன.

**அல்லாஹ் பற்றி அல்குர்ஆனும் ஸுன்னாவும்.**

- அல்குர்ஆன் ஸுன்னாவின் நிழலில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையில் வஹ்தானிய்யத் எனப்படும் ஏகத்துவம் அல்லது தனித்துவம் மிகவும் முக்கியமானதாகும். அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் அல்லாஹ்வின் தனித்துவம் உலூஹிய்யத், ருபூபிய்யத், அஸ்மா வஸ்ஸிபாத் என்ற மூன்று பரிமாணங்களில் விளக்கப்படுகின்றது

**1. தவ்ஹீத் ருபூபிய்யத்**

- ருபூபிய்யத் என்ற சொல் ரப்பு என்ற மூலச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். ரப்பு என்ற சொல் இரட்சிப்பவன், ஆள்பவன், பரிபாலிப்பவன் என்ற பொருள்களைத் தருகின்றன. இவ்வகையில் தான் வீட்டின் தலைவன் என்ற வகையில் தந்தை அரபு மொழியில் ரப்புல் பைத் என்றும் தாய் ரப்பதுல் பைத் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

- பிரபஞ்சத்தைப் படைத்துப் பரிபாலித்துக் காத்து வருகின்ற அல்லாஹ் மாத்திரமே “ரப்பு” என்ற சொல்லின் பூரண அர்த்தத்தில் அழைக்கப்படுவதற்குத் தகுதியானவனாவான். இவ்வகையில் தவ்ஹீத் ருபூபிய்யத் என்றால் பிரபஞ்சத்தில் படைத்தல், ஆட்சி செய்தல், திட்டமிடுதல் ஆகிய மூன்று இறையாண்மை சார்ந்த விடயங்களையும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே வழங்குவதாகும். அல்குர்ஆன் இது பற்றித் தெளிவாக விளக்குகிறது. (அ.ஃ.ராப்:54)(ஜாஸியா:27)(மு.ஃ.மினூன்:14)(அல்ஹஜ்:73) (ஆபிர்:64)

- ஆத்திக நம்பிக்கையுடைய அதிகமானோர் தவ்ஹீத் ருபூபிய்யத்தை ஏற்றுக் கொள்கின்றனர். அதற்கு ஜாஹிலிய்யாக் காலத்தில் வாழ்ந்த இணைவைப்பாளர்கள் பற்றிக் குறிப்பிடும் அல்குர்ஆன் வசனங்கள் சிறந்த ஆதாரமாகும்.

**2. தவ்ஹீத் உலூஹிய்யத்**

- உலூஹிய்யத் என்ற சொல் இலாஹ் என்ற மூலச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இலாஹ் என்ற சொல் கடவுள், தெய்வம், வணக்கத்துக்குரியவன் என்ற கருத்துக்களைத் தருகின்றன. ஆகவே தான் வணங்கப்படுகின்ற அனைத்தையும் அல்குர்ஆன் இலாஹ் என்று கூறுகிறது. (கஸஸ்:88)(மு.ஃ. மினூன்:117)(ஹூத்:101)(ஸாப்பாத்:86)

தவ்ஹீத் உலூஹிய்யத் என்றால் வணங்கப்படுவதற்குரிய முழுத் தகைமையையும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே வழங்குவதாகும். வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற கோட்பாட்டை அல்குர்ஆன் ஆணித்தரமாக முன்வைக்கின்றது.

- ஜாஹிலிய்யாக்கால மக்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை எதிர்த்தமைக்கான காரணம் அவர்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை முன்வைத்தமையாகும். ஏனெனில் இக்கலிமா வணக்கத்துக்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எவரும் இல்லை என்ற கருத்தையே உறுதிப்படுத்துகின்றது. ஜாஹிலிய்யாக்கால மக்கள் அல்லாஹ்வின் ருபூபிய்யத்தை ஏற்றுக் கொண்டாலும் பல்வேறுபட்ட சிலைகளைக் கடவுள் என்ற அந்தஸ்தில் வைத்து வணங்கி வழிப்பட்டனர். நபியவர்கள் முன்வைத்த கலிமா இவர்களது கடவுள் கோட்பாட்டுக்கு விரோதமாக இருப்பதைக் கண்டபோது அவர்களைக் கடுமையாக எதிர்த்தனர்.

- வணங்குதல் என்ற சொற்பிரயோகம் பிரார்த்தித்தல், கிரியைகளில் ஈடுபடல், உதவிகோரல், சத்தியம் செய்தல், நேர்ச்சை வைத்தல் போன்ற அனுஷ்டானங்களை நேரடியாகக் குறிப்பது போலவே ஒருவர் இயற்றும் சட்டத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதையும் அது குறிக்கின்றது.

- ''யூதர்களும் கிறிஸ்தவர்களும்........''(தவ்பா:31) என்ற வசனம் கிறிஸ்தவராக இருந்து இஸ்லாத்தை ஏற்ற அதி இப்னு ஹாதிம் என்ற நபித் தோழருக்கு ஐயத்தை ஏற்படுத்தியது. தெளிவுபெறும் நோக்கில் நபியவர்களிடம்''அல்லாஹ்வின் தூதரே யூதர்களும் கிறிஸ்தவர்களும் தமது குருமார்களை வணங்குவதில்லையே என்று கூறியபோது, அல்லாஹ் ஹராமாக்கியதை அவர்கள் ஹலால் என்றும் ஹலாலாக்கியதை ஹராம் என்றும் கூறும்போது யூதர்களும் கிறிஸ்தவர்களும் அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள் அல்லவா என்று கேட்டதற்கு ஆம் எனப்பதில் கூறினார். அவ்வாறாயின் அது அவர்கள் தமது குருமார்களை வணங்குவதாகும் என நபியவர்கள் தெளிவூட்டினார்கள்.

### 3. தவ்ஹீத் அஸ்மா வஸ்ஸிபாத்

- அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்களும் தனித்துவமான பண்புகளும் உள்ளன. அவையே அஸ்மா (பெயர்கள்), ஸிபாத் (பண்புகள்) என்று அழைக்கப்படுகின்றன.

- தவ்ஹீத் அஸ்மா வஸ்ஸிபாத் என்றால் அல்லாஹ் அல்குர்ஆனிலோ அல்லது தனது தூதர் வாயிலாகவோ தனக்குச் சூட்டிக் கொண்ட பெயர்களிலோ தனக்கென்று வர்ணனையாக்கிக் கொண்ட பண்புகளிலோ வேறெவரையும் பங்காளிகளாக்காமல் இருப்பதுடன் தனது பண்பாக அல்லாஹ் கூறியவற்றைத் திரிபு படுத்தாமலும் மறுக்காமலும் விளக்கத்துக்குட்படுத்தாமலும் உருவகப்படுத்தாமலும் சிலேடைப்படுத்தாமலும் உருவம் கற்பிக்காமலும் ஒப்பிட்டு நோக்காமலும் உள்ளவாறு அப்படியே நம்புவதாகும்.

- அல்லாஹ்வுக்கு 99 திருநாமங்கள் இருப்பதாக ஹதீஸ்களில் வந்துள்ளன. அவற்றுள் பல அல்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளன. அவ்வாறே அல்லாஹ்வின் பண்புகள் பற்றியும்

அவை கூறியுள்ளன. அறிஞர்கள் அப்பண்புகளை வாஜிபானவை (கட்டாயமானவை), முஸ்தஹீலானவை (சாத்தியமற்றவை) என வகைப்படுத்துகின்றனர்.

மேலே கூறியவற்றை மேலும் விளக்குவதாயின், அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்றான

- ஸமீஉன் என்ற சொல் அல்லாஹ் கேட்பவன் என்ற கருத்தைத் தருகிறது. இதன்படி நாம் அல்லாஹ்வின் கேட்டலை மிகப் பரிபூரண நிலையில் வைத்து நோக்குவதுடன் ஏனைய படைப்புக்களின் கேட்டலுடன் அதை ஒப்பிடவும் கூடாது. அவ்வாறே அவன் எப்படிக் கேட்கிறான் என்பதற்கு ஒரு மாதிரியைக் கற்பனை பண்ணவும் கூடாது. அவ்வாறே அல்லாஹ் ஹய்யுல் கய்யூம் என்ற பெயரிலும் தன்னை அழைக்கின்றான். இதன்படி அல்லாஹ் நித்திய ஜீவன், அவனது ஜீவியம் ஆரம்பமோ முடிவோ இல்லாத பூரணத்துவம் மிக்கது என்றும் விசுவாசிக்க வேண்டும்.

- அவ்வாறே அல்லாஹ் ‘‘இஸ்தவா அலல் அர்ஷ்’’ என்று அல்குர்ஆனின் ஏழு இடங்களில் குறிப்பிடுகின்றான். இஸ்தவா என்றால் அமர்ந்தான் என்று பொருள். இதன்படி ‘‘இஸ்தவா அலல் அர்ஷ்’’ என்பதன் கருத்தை அதன் நேரடிப் பொருளில் நோக்கவேண்டுமே ஒழிய அதற்கு வேறு விளக்கங்களைக் கூறவோ அல்லது அதைக் கற்பனை பண்ணவோ கூடாது. ஆகவே தான், இமாம் மாலிக் (ரஹ்) இடம் அல்லாஹ் எங்குள்ளான் என்று கேட்கப்பட்டதற்கு அர்ஷில் உள்ளான் என்றும், எப்படி இருக்கிறான் என்று கேட்கப்பட்டதற்கு இவ்வினா ‘‘பித்அத்’’ முன்சென்ற நல்லோர்களின் முன்மாதிரிக்கு முரணானது என்றும் பதில் கூறினார்கள். அல்லாஹ் தன்னைப் பற்றி கூறும்போது ‘‘அவனுக்கு ஒப்பாக எதுவுமே இல்லை’’(ஷூரா:11) என்கின்றான். இவ்வசனம் அல்லாஹ் பற்றிய கற்பனைக்கு முற்றுப்புள்ளியாக உள்ளது.

**அல்லாஹ்வின் தாத்தும் அவனது ஸிபாத்தும்**

- ‘‘தாத்’’ என்பது ஒன்றின் வெளியுருவமாகும். வெளியுருவத்தையுடைய ஒவ்வொரு பொருளுக்கும் ‘‘ஸிபாத்’’ எனப்படும் பண்புகள் உள்ளன. பண்புகளையுடைய ஒவ்வொரு பொருளுக்கும் ‘‘தாத்’’ எனும் வெளியுருவம் உண்டு. அல்லாஹ்வுக்கு ஸிபத்துகள் உள்ளன. எனவே அவனுக்கு தாத்தும் உண்டு. எனினும் பௌதிக நியதிகளுக்கு அப்பாற்பட்ட அவனது தாத்தை பௌதிக நியதிகளுக்கு உட்பட்ட மனிதனால் உணரவோ கற்பனை பண்ணவோ முடியாது. பௌதிக விதிகளால் வரம்பிடப்பட்ட ஒன்று அதன் எல்லைக்கு வெளியே செல்வதால் அழிவையே தேடிக்கொள்ளும். மீனுக்கு நிலத்தில் வாழமுடியாது. நிலத்தில் வாழும் உயிரினத்துக்கு நீரில் வாழ முடியாது. அவ்வாறே பௌதிக விதியால் வரம்பிடப்பட்டுள்ள மனித அறிவால் பௌதிக விதிக்கப்பாற்பட்ட அல்லாஹ்வின் தாத்தை அறிய முடியாது. மனிதன் அவனது வரம்பை மீறிச் செயற்படுவானாயின் அழிவையே தேடிக் கொள்வான்.

எனவே தான் இஸ்லாம் அல்லாஹ்வின் தாத்தைப் பற்றி சிந்திப்பதைத் தடுத்து அவனது படைப்புக்கள் பற்றி சிந்திக்கத் தூண்டுகிறது. நபி(ஸல்) அவர்கள் ‘‘நீங்கள் அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றி சிந்தியுங்கள் அவனது தாத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம் என்றார்கள்’’.

அல்லாஹ்வின் தாத்தைப் பற்றிச் சிந்தித்ததனாலேயே சில மனிதர்கள் அல்லாஹ்வுக்கு உருவம் கற்பித்தனர். இன்னும் சிலர் அவனது இருப்பையே மறுத்தனர்.

**பகுத்தறிவு, படைப்புகள் என்பன சார்ந்த ஆதாரங்களின் அடிப்படையில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை**

- ஒன்றைப் பற்றி மேலெழுந்த வாரியாக அல்லாமல் ஆராய்ந்து முடிவுக்கு வர உதவும் ஆற்றலே பகுத்தறிவு எனப்படுகிறது. இது மனிதன் பெற்றுள்ள பேரருளாகும். இதன்மூலம் மனிதன் நன்மை தீமைகளைப் பகுத்தறிகின்றான். புதிர்களுக்கு விடைகாண முயற்சிக்கின்றான். தனது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான வழிமுறைகள் பற்றி வெவ்வேறுவிதமாக சிந்திக்கின்றான். மனிதனைச் சரியான பாதையில் கொண்டு செல்வதற்குப் பகுத்தறிவு இன்றியமையாததாயினும் அதைப் பெற்றுள்ள மனிதனின் இயல்புகளுக்கு ஏற்ப அது கூறும் விடை வெவ்வேறுவிதமானதாக அமையலாம்.

  உதாரணம்:

  ''எந்த ஒரு படைப்பும் படைப்பாளனின்றி உருவாவதில்லை'' ''ஒன்றை இல்லை என்று மறுப்பதற்குக் கட்புலனாகாமை மாத்திரம் போதுமானதல்ல'' என்பன பகுத்தறிவின் முடிவுகளாகும். இருப்பினும் பகுத்தறிவு ரீதியாகச் சிந்திக்கின்றவர்களுள் சிலர், பிரபஞ்சம் படைக்கப்பட்டது என்பதையும் படைப்பாளன் ஒருவன் இருக்கின்றான் என்பதையும் மறுக்கின்றனர்.

  அவர்கள் எழுப்பும் வினா: எந்த ஒன்றுக்கும் படைப்பாளன் ஒருவன் இருக்கவேண்டும் என்றால் கடவுளைப் படைத்தவன் யார்? என்பதாகும். இவ்வினாவை முதலில் எழுப்பியவர் ''பேடன் ரஸல்'' என்ற பிரபலமான பகுத்தறிவுவாதியாவார்.
- கடவுளை யாரும் படைக்கவில்லை. அவன் தானாக உருவாகியவன் என்று கூறப்பட்டதற்கு அவ்வாறாயின் ஏன் உலகம் தானாக உருவாகியது என்று ஏற்கமுடியாது என்று கேள்வி எழுப்பினர்.
- வெப்பவியக்கவியல் தொடர்பாக நிரூபிக்கப்பட்ட விதியின்படி பிரபஞ்சமானது தானாக உருவாகிய ஒன்றாக இருக்க முடியாது. அதன் உருவாக்கத்துக்கு அறிவும் பேராற்றலும் மிக்க ஒரு சக்தியே காரணமாகும்.
- பிரபஞ்சத்தில் அணுமுதல் அண்டம் வரை உள்ள அனைத்திலும் அவற்றின் இயக்கச் செயற்பாடுகளிலும் காணப்படும் நுட்பங்களும் மனித ஆற்றலை மிஞ்சிய அவற்றின் எண்ணிக்கையும் விசாலமும், பிரபஞ்சம் தானாக உருவாகியது என்பதை மறுப்பதற்குப் போதுமான பகுத்தறிவு ரீதியான சான்றுகளைத் தருகின்றன.
- மனிதன் படைப்பாளனை மறுக்கக் காரணம் ஆணவம், சுயநலம் போன்ற மனவெழுச்சிகளுக்கும் மனோஇச்சைகளுக்கும் அடிமைப்பட்டு பகுத்தறிவுக்கு முரணாக செயற்படுவதாகும்.
- அறிவியல் மறுமலர்ச்சியைத் தொடர்ந்து சில மதங்களுக்கும் அறிவியலுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலால் கைத்தொழில் புரட்சியின் பின் அறிவியல், சமய நம்பிக்கைகளுக்கு எதிராகப் பாரிய அளவில் செயற்பட்டது.
- உயிரியல், பௌதிகவியல், உளவியல் போன்ற துறைகளில் அறிவியல் அடைந்த சாதனைகள், சில சமயங்கள் கொண்டிருந்த மூட நம்பிக்கைகள் பிழையானது என நிரூபித்ததன் மூலம் மதம் பகுத்தறிவுக்கும் அறிவியலுக்கும் எதிரானது என்ற கருத்து வலுவடைய ஆரம்பித்தது.

- நவீன அறிவியலால் பிரபஞ்ச நிகழ்வுகளுக்கான காரணத்தை விளக்கமுடிந்ததே அன்றி அதற்கான நோக்கத்தை விளக்க முடியவில்லை
  *உதாரணம்:* கடவுளே மழையைப் பொழிவிக்கின்றான் என்று மதவாதிகள் நம்பிவந்தனர். ஆனால் அறிவியலானது திண்மம், திரவம், வாயு என்ற மூன்று நிலைகளையும் அடையக்கூடிய தண்ணீரின் பௌதிக இயல்பை அடிப்படையாக வைத்து மழை பொழிவதற்கான காரணத்தை விளக்கியதுடன் அதனை நிரூபித்தும் காட்டினர். இதன் காரணமாக அறிவியலை நம்பிய பலர் கடவுளை மறுத்து கடவுள் மனிதனது அறிவீனத்தினாலும் பிரமைகளினாலும் உருவாக்கப்பட்ட கற்பனைப்பாத்திரம் என்று கூறலாயினர். எனினும் ஏன் மழை பொழிகிறது? பௌதிக நியதிகளுக்கு யார் காரணம்? போன்ற வினாக்களுக்கு அறிவியல் விடை கூறாமை அதன் பெரிய குறைபாடாகும்.

- சிலவற்றுக்கு அறிவியல் முன்வைத்த விளக்கங்கள் தற்காலிகமானதாகவும் பிழையானதாகவும் இருக்கின்றமை அதன் இன்னொரு குறைபாடாகும்.
  *உதாரணம்:* மனிதனின் தோற்றம் பற்றி எழுந்த வினாவுக்கு பரிணாமவாதத்தின் அடிப்படையில் விளக்கமளித்தனர். இன்று பரிணாமவாதம் அறிவியல் ஆதாரமற்றது என்ற கருத்தை அறிவியலாளர்கள் பலர் முன்வைக்கின்றனர்.

- இஸ்லாம், அறிவியல் விடைகூறாத வினாக்களுக்கு விடைகூறுவதுடன் அறிவியல் ரீதியாகச் சிந்திக்குமாறு தூண்டுகின்றமை அறிவியலை மிஞ்சிய அதன் சிறப்பம்சமாகும்.
  (ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது …………..)

- பகுத்தறிவு மற்றும் அணுமுதல் அண்டம் வரை பரந்துள்ள அனைத்துப் பொருட்களும் அல்லாஹ் பற்றிய இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டையே உறுதிப்படுத்துகின்றன.
- இருளில் செல்லும் மனிதனின் கண்கள் போன்றதே பகுத்தறிவு. அவனது கையில் இருக்கும் விளக்குப்போன்றதே வஹியறிவு. இறைவன் பற்றியும் ஏனைய மறைவான விடயங்கள் பற்றியும் அறிந்து கொள்வதற்கு இவ்விரு வகை அறிவுகளும் இன்றியமையாதனவாகும்.

**2. மலக்குகள் -**

- மலக்குகள் என்போர் அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஆன்மீக உலகைச் சார்ந்தோராவர். இவர்களை ஈமான் கொள்வது இஸ்லாமிய அகீதாவின் இரண்டாவது அம்சமாகும். மலக்குகளை ஈமான் கொள்வதன் அவசியம் பற்றி அல்குர்ஆனும் கூறுகிறது. (2:285)(2:177)
- ஷைத்தான், ஜின் ஆகிய படைப்புக்களும் ஆன்மிக உலகைச் சார்ந்தோராவர். ஆகவே தான் அகீதாத் துறை அறிஞர்கள் இம்மூன்று வகுப்பினர்களையும் அர்ரூஹானிய்யாத் என்ற தலைப்பில் ஆராய்கின்றனர்.
- மலக்குகள் தொடர்பான நம்பிக்கையில், அவர்களது படைப்பு மூலம் அவர்களது பணிகள், பண்புகள், எண்ணிக்கை, ஆற்றல்கள், அவர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் போன்றன முக்கியம் பெறுகின்றன.
- அகீதாவில் மலக்குகள் தொடர்பான நம்பிக்கை முக்கியம் பெற்றமைக்கான காரணம்

1. பிரபஞ்ச இயக்கத்துடனும் மனித வாழ்வுடனும் தொடர்புடையவர்கள்.
2. மலக்குகள் பற்றிய பிழையான நம்பிக்கைகள் காணப்பட்டமை.
3. மனிதனுக்கும் அல்லாஹ்வுக்குமிடையிலான தொடர்பை ஏற்படுத்துவதில் மலக்குகளின் வகிபங்கு

- நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். “ மலக்குகள் ஒளியால் படைக்கப்பட்டனர். ஜின்கள் தீச்சுவாலையில் இருந்து படைக்கப்பட்டனர். ஆதம் உங்களுக்கு விளக்கப்பட்டது போன்று களிமண்ணால் படைக்கப்பட்டார்”.
- மலக்குகளையும் அல்லாஹ் கூறியுள்ள பிரகாரமே நம்பிக்கை கொள்ள வேண்டும். எமது கற்பனையில் அவர்களுக்கு வடிவம் கொடுக்கக் கூடாது.
- மலக்குகளிடம் பிரார்த்தித்தல், அவர்களை வழிபடுதல், அவர்களுக்கு தெய்வீக அந்தஸ்த்தைக் கொடுத்தல் போன்றன ஷிர்க்காகும்.
- அல்லாஹ் மலக்குகளை முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கும் இயல்பிலேயே படைத்துள்ளான். அவன் நாடிய சந்தர்ப்பங்களில் அல்லாமல் அவர்களுக்கு சுயவிருப்பத்தையோ தெரிவுச் சுதந்திரத்தையோ வழங்குவதில்லை. (நஹ்ல்:50)(தஹ்ரீம்:6)
- மலக்குகளின் ஆற்றல் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இறக்கைகளின் அளவுக்கு ஏற்ப மாறுபடும். (பாதிர்:1)
- நபி(ஸல்) அவர்கள், ஜிப்ரீல் (அலை) அவர்களை 600 இறக்கைகளுடன் கண்டதாக இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.
- அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருத்தல், அவனது அர்ஷை சுமத்தல், சுவனவாசிகளுக்கு சோபனம் கூறுதல், நரக வாசிகளைத் தண்டித்தல், வஹியைக் கொண்டு வருதல், இயற்கை நிகழ்வுகளுக்குப் பொறுப்பாய் இருத்தல், மு:.மின்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்தல், அவர்களது தூய ஆன்மிக செயற்பாடுகளில் கலந்து கொள்ளல், மனிதர்களின் செயல்களைப் பதிவு செய்தல், மு:.மின்களுக்கு உதவி செய்து அவர்களை உறுதிப்படுத்தல், உயிரைக் கைப்பற்றல் போன்ற பணிகள் மலக்குகளுக்குப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளன.
- அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரத்தின் அடிப்படையில் மலக்குகளின் இருப்பு நிச்சயமானது என்ற நம்பிக்கையை விஞ்ஞானரீதியாக சிந்திக்கின்ற போது மேலும் உறுதியாகின்றது.
- இஸ்லாமிய நம்பிக்கையின் படி மலக்குகள் ஒளியால் படைக்கப்பட்டவர்களாவர். நவீன அறிவியல் ஒரு செக்கனுக்கு 186,000 மைல் பயணம் செய்யும் ஒளியின் வேகத்தை வைத்து அமைத்துள்ள சார்புக் கொள்கை அடிப்படையில் பார்க்கும் போது அல்குர்ஆன் வசனங்கள் குறிப்பிடும் உண்மைகள் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன. (70:4, 32:5)

### 3. நுபுவ்வத், ரிஸாலத், ஹிதாயத்

- நுபுவ்வத், ரிஸாலத், ஹிதாயத் என்பன ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த வெவ்வேறான சொற்களாகும்.

- **நுபுவ்வத்** என்ற சொல் அல்லாஹ்வுடன் நேரடியாகவோ அல்லது ஒரு மலக்கின் ஊடாகவோ செய்திப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கான தகுதியைப் பெற்ற

ஒரு மனிதனின் பதவியைக் குறிக்கவே இஸ்லாமிய மரபில் பயன்படுத்தப்படுகிறது. இவ்வகையில் அப்பதவியைப் பெற்றவர் நபி (அல்லாஹ்விடமிருந்து செய்தி சொல்பவர்) என்றும் அல்லாஹ்விடமிருந்து அவர் அறிவிக்கும் செய்தி நப∴ என்றும் அழைக்கப்படும். உலகில் நபிமார்களின் பணி அல்லாஹ் இவர்களுக்கு அறிவிக்கும் செய்தியை மக்களுக்கு எத்திவைப்பதாகும். நபிமார்ளிடம் காணப்படும் சிறப்பான சில பண்புகளும் அவர்கள் கொண்டுவரும் மு∴ஜிஸாத் எனப்படும் அற்புதமும் அவர்கள் நபியென்பதை அடையாளப்படுத்தும்.

- **ரிஸாலத்** என்பது தெரிவு செய்யப்பட்ட சில நபிமார்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட தூதுத்துவம் எனப்படும் பாரிய பொறுப்பைக் குறிக்கிறது. ரிஸாலத் என்பதன் மொழிக்கருத்து கடிதம், தூது போன்றனவாகும். ரிஸாலத்தைப் பெற்றவர் தூதர் எனும் பொருள் தரும் ரஸூல் என்ற சொல் மூலம் அழைக்கப்படுகிறார். ரஸூல்மார்கள் நபிமார்களில் இருந்தே தெரிவு செய்யப்படுவதால் அவர்கள் அனைவரும் முதலில் நபி என்ற அந்தஸ்த்தைப் பெற்றவர்களாகவே இருப்பர்.

- அல்குர்ஆன் ரஸூல் என்ற சொல்லை அதன் பொதுவான அர்த்தத்தில் மூவகையினரைக் குறிப்பிட உபயோகித்துள்ளது.

1. அல்லாஹ்வின் தூதை உரியவர்களுக்கு எத்திவைப்பதற்காக மலக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. “அல்லாஹ் மலக்குகளில் இருந்தும் மனிதர்களில் இருந்தும் தூதர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்கிறான்”(22:75) “நிச்சயமாக (திருக்குர்ஆன் எனும்) இதுமிக்க கண்ணியமுள்ள (ஜிப்ரீல் எனும்) ஒரு தூதர் மூலம் கூறப்பட்டதாகும்”(81:19).
2. இறைவேதத்தை மனிதர்களுக்கு எத்திவைப்பதுடன் மட்டுமல்லாது அவர்களுக்குத் தலைமை தாங்கி அல்லாஹ்வினது ஷரீஅத்தின் அடிப்படையில் அவர்களை வழிநடாத்துவதற்காக நபிமார்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களைக் குறிப்பிட ரஸூல் எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (அவன் மறைவான் விசயங்களையெல்லாம் நன்கறிந்தவன். அவன் தூதராகத் தெரிவுசெய்தவருக்கே அன்றி எவருக்கும் மறைவானவற்றை வெளிப்படுத்துவதில்லை. நிச்சயமாக அவன் அவர்களுக்கு முன்னும் பின்னும் (ஒரு மலக்கை) பாதுகாப்பவராக அனுப்பி வைக்கின்றான் - அவர்கள் தம் இரட்சகனின் தூதுகளை மெய்யாகவே எத்தி வைத்தார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காக” (72:26-∴28)
3. அல்லாஹ்வின் கட்டளைகளையும் உபதேசங்களையும் அவ்வப்போது மக்களுக்கு எத்திவைப்பதற்காக அல்லது வேதம் வழங்கப்பட்ட ஒரு தூதருக்கு உதவியாக அல்லது, அவருக்குப்பின் அவரது உம்மத்தினரை அவரது ஷரீஅத்தில் வழிநடாத்துவதற்காக நபி அனுப்பப்படுகிறார்.
   மனிதர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நபிமார்களைக் குறிப்பிடுவதற்காக (2:285)

- அல்லாஹ்விடமிருந்து நபிமார்களுக்கு வழங்கப்படுகின்ற ரிஸாலத் (தூது), நம்பிக்கைகள்(அகீதா), வணக்கவழிபாடுகள்(இபாதாத்), சட்டங்கள்(ஷரீஅத்), ஒழுக்கங்கள்(அஹ்லாக்) ஆகிய நான்கு விடயங்களைப் பிரதானமாக உள்ளடக்கியிருக்கும்.
- நபி அல்லது ரஸூல் என்ற அந்தஸ்து அல்லாஹ்வால் வழங்கப்பட்டாலே அன்றி எவருக்கும் அதற்காக உரிமை கோர முடியாது.

- மனிதர்கள் அஞ்ஞானத்தில் மூழ்கி அல்லாஹ்வை முழுமையாக மறந்த நிலையில் இருக்கும்போதே றிஸாலத் எனும் பெரும் பொறுப்பைச் சுமந்த தூதர்களை அனுப்புகிறான்.
- ஆதம் (அலை) அவர்களுக்குப் பிறகு ஏறத்தாழ ஆயிரம் வருடங்களின் பின் மக்கள் முழுமையாக அல்லாஹ்வை மறந்து வாழ்ந்த போது அவர்களிடையே ரிஸாலத் பணியை நிறைவேற்ற அவன் நூஹ்(அலை) அவர்களை அனுப்பினான். அதன்பின் அவரது போதனைகள் முற்றாக மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் அவன் இப்ராஹீம் (அலை) அவர்களை அனுப்பினான்.
- தூதுத்துவ வரலாற்றில் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஒரு திருப்பு முனையாவார். அவருக்குப்பின் அல்லாஹ் நபிமார்களையும் ரஸூல் மார்களையும் அவரது சந்ததியிலிருந்தே தெரிவு செய்தான். அவரது சந்ததி அவரது பிள்ளைகளான இஸ்மாயீல்(அலை), இஸ்ஹாக் (அலை)என்ற இரு நபிமார்களின் மரபு வழியில் வளர்ச்சியுற்றது.
- இஸ்ஹாக்(அலை) அவர்களது பரம்பரையில் ய.்.கூப்(அலை), யூஸுப்(அலை) மூஸா(அலை) தாவூத்(அலை) ஸுலைமான்(அலை) ஸகரிய்யா(அலை) யஹ்யா(அலை) யூனுஸ்(அலை) ஈஸா(அலை) போன்றோர் நபிமார்களாகத் தெரிவு செய்யப்பட்டோராவர்.
- இப்ராஹீம் (அலை) அவர்களுக்குப் பிறகு ஏறத்தாழ ஆயிரம் வருடங்களின் பின் மக்கள் பிர்அவ்ன் என்ற கொடிய மன்னனின் அதிகாரத் துஷ்பிரயோகத்தால் அவலப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அல்லாஹ் மூஸா(அலை) அவர்களைத் தூதுத்துவப் பணிக்காகத் தெரிவு செய்து அவருக்குத் தௌராத் என்ற வேதத்தையும் வழங்கினான்.
- மூஸா(அலை) அவர்களால் வழிநடாத்தப்பட்ட பனூஇஸ்ராயீல் என்ற சமூகம் தம் எதிரிகளை வெற்றி கொண்டபோது அவர்கள் மத்தியில் நீதியான முறையில் ஆட்சி செய்வதற்காக தாவூத்(அலை) அவர்களை ரஸூலாகத் தெரிவு செய்து அவருக்கு ஸபூர் எனும் வேத்தை வழங்கினான்.
- இறைத்தூதை மக்களுக்கு எத்திவைப்பதில் முன்மாதிரியாகத் திகழ வேண்டிய பனூஇஸ்ரவேலர்கள் அல்லாஹ்வை மறந்து பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட ஆரம்பித்த போது தௌராத்தின் சில இறுக்கமான சட்டங்களைத் தளர்த்தி மக்களை நல் வழிப்படுத்துவதற்காக ஈஸா(அலை) அவர்களை ரஸூலாகத் தெரிவு செய்தான். அவருக்கு இன்ஜீல் எனும் வேதத்தையும் கொடுத்தான். எனினும் பனூஇஸ்ரவேலர்கள் அவரைக் கொலை செய்ய முயற்சித்த போது அவர்களிடமிருந்து அவரைப் பாதுகாத்து முக்கியமான ஓர் அத்தாட்சிக்காக தன்பக்கம் உயர்த்திக் கொண்டான்.
- கி.பி 6ம் நூற்றாண்டளவில் முழு உலகும் அசத்தியத்தில் மூழ்கி அல்லாஹ்வை மறந்திருந்த வேளையில் அவன் அதுவரை எந்தவொரு நபியும் அனுப்பப்படாத இஸ்மாயீல்(அலை) அவர்களது பரம்பரையில் தூதுத்துவப் பணியை முற்றுப் பெறச் செய்வதற்காகவும் அனைத்து மக்களுக்கும் பொதுவானவராகவும் முஹம்மத்(ஸல்) அவர்களை இறுதித் தூதராகவும் இறுதி நபியாகவும் அனுப்பி வைத்தான். அவருக்கு வழங்கப்பட்ட வேதம் புர்கான் எனப்படுகிறது.
- முஹம்மத்(ஸல்) அவர்கள் இறுதி நபி என்ற வகையில் அவரது வருகை குறித்து முன்னைய வேதங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. பனூஇஸ்ரவேலர் அவரை தமது பரம்பரையிலேயே எதிர்பார்த்திருந்தனர். ஆனாலும் அவர் பனூஇஸ்ரவேலர்

விரும்பாத இஸ்மாயீல் (அலை) அவர்களது பரம்பரையில் வந்தமை பனூஇஸ்ராயீல்களை விசனத்திற்குள்ளாக்கியது.

- **ஹிதாயத்** என்பது நேரான பாதை என மொழி ரீதியாக பொருள் கொள்ளப்படுகிறது. இதன் உள்ளார்ந்த விளக்கம் ஆசாபாசங்களும் மனதை மயக்கும் மாச்சரியங்களும் நிறைந்த சோதனைக்களமான இவ்வுலகில், மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தைப் புரிந்து இம்மை மறுமை ஆகிய ஈருலகிலும் அவன் வெற்றி அடையக்கூடிய பாதையில் அவனை வழிநடாத்தும் வழிகாட்டல் என்பதாகும். ஹிதாயத் என்பதன் நேர் பொருளில் ஹுதா என்ற சொல்லும் உபயோகிக்கப்படுகிறது.
- ஹிதாயத்தை மனிதனது சுய அறிவால் மாத்திரம் அடைந்து கொள்ள முடியுமா முடியாதா என்பது வரலாறு நெடுகிலும் வாதப் பொருளாக இருந்து வரும் விடயமாகும்.
- மனித வாழ்வு சீர்பெற நான்கு விடயங்கள் இன்றியமையாதவை
  1. சீரான நம்பிக்கைகள்
  2. உள்ளத்தை நெறிப்படுத்தும் ஆன்மீகப் பயிற்சிகள்
  3. கட்டுப்படுத்தும் சட்டங்கள்
  4. ஒழுக்க விழுமியங்கள்
- இந்நான்கு அம்சங்களுள் முதல் அம்சமே மிக முக்கியமானது. ஏனெனில் மனிதனது நம்பிக்கைகளுக்கு அமையவே ஏனைய மூன்று விடயங்களும் உருவாக்கப்படுகின்றன.
- மனிதர்களை வழிநடாத்தும் அனைத்து கொள்கை கோட்பாடுகளும் மறைவானவை குறித்து மனிதனிடம் இயல்பாக எழும் வினாக்களுக்கு நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ நம்பிக்கையின் அடிப்படையிலேயே பதிலளிக்கின்றன. (உ-ம்) கடவுள் இருக்கின்றானா? இவ்வினாவுக்கு''ஆம்'' என்பது நேர்மறையான பதில். எதிர்மறையான பதில் இல்லை என்பதாகும்.
- ஆம் என்றால் இருப்பதற்கும். இல்லை என்றால் இல்லை என்பதற்கும் சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். இல்லாது போனால் அவை மீண்டும் சந்தேகத்துடனேயே நோக்கப்பட முடியும்.
- மறைவான விடயம் பற்றி ரிஸாலத் குறிப்பிடும் விடயங்கள் மாத்திரமே சான்றுகள் மூலம் நிரூபிக்கக்கூடியனவாக உள்ளன. அத்துடன் அது ஆன்மிகப் பயிற்சி, சட்டங்கள், ஒழுக்க விழுமியங்கள் என்பன பற்றியும் தெளிவான வழிகாட்டலைத் தருவதனால் ஹிதாயத்தைப் பெற்றுக் கொள்ள அதுமாத்திரமே சிறந்த ஊடகமாகும்.

**கத்முன் நுபுவ்வத்**

- கத்முன் நுபுவ்வத் என்றால் இறுதி நபித்துவம் என்பது பொருள்.
- முஹம்மத்(ஸல்) அவர்களுக்குப்பின் நபித்துவத் தொடர் முற்றுப் பெற்று விட்டது என்பதே பெரும்பாலோரது நம்பிக்கையாகும். இருப்பினும் முஹம்மத்(ஸல்) அவர்களது காலம் முதல் தாமும் நபியென்று வாதிட்டவர்கள் இருந்துள்ளனர். அவ்வாதாட்டங்களின் தாக்கம் இன்றும் ஒருசாராரிடையே காணப்படுகிறது. எனவே இறுதி நபித்துவக் கோட்பாட்டை ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்துவது முக்கியமான விடயமாகும்.

- முஹம்மத்(ஸல்) அவர்களுக்குப்பின் நபித்துவத் தொடர் முற்றுப் பெற்று விட்டது என்பதற்கு மூவகை ஆதாரங்கள் காணப்படுகின்றன.

  1. அல்குர்ஆன் ஆதாரங்கள
  2. ஹதீஸ் ஆதாரங்கள்
  3. தர்க்க ரீதியான ஆதாரங்கள்.

- முஹம்மத்(ஸல்) அவர்களுக்குப்பின் தாமும் நபியென்று வாதிட்ட எவரிடமும் அவர்கள் நபியென்பதற்கான சான்றுகள் எதுவும் இருக்கவில்லை. ஒருவரை நபியாக ஏற்றுக் கொள்வதற்கு அவர் கொண்டு வருகின்ற நபித்துவ சான்று மிகவும் முக்கியமானதாகும்.

- போலி நபிமார்களில் சிலர் தமது வாதாட்டத்தை நியாயப்படுத்த முஹம்மத்(ஸல்) அவர்களின் இறுதி நபித்துவத்தை மறுத்தனர். அத்துடன் இறுதி நபித்துவம் பற்றி வந்துள்ள அல் குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை தமக்குச் சார்பாக வலிந்து விளக்கினர். (உ-ம்) அல்குர்ஆனில் (33:40)ம் வசனத்தில் இடம்பெற்றுள்ள ''காதம்'' என்ற சொல்லை ''இறுதி'' என்ற அதன் உண்மையான அர்த்தத்தினை மறைத்து ''சிறப்பு'' என்று அதற்கு விளக்கம் கூறுதல்.

**மஹப்பதுர் ரஸூல் (ஸல்)**

- நபி(ஸல்)அவர்கள் மீது அன்பு கொள்வதை ''மஹப்பதுர்ரஸூல்'' என வழங்குவர். ''மஹப்பா'' என்பதன் விரிவான கருத்து எம்மை விடவும் எமது உயிரைவிடவும் மேலாக ஒருவரை மதித்து நேசித்து அவருக்காக எதனையும் அர்ப்பணிக்கத் தயாராகும் நிலையைச் சுட்டிக்காட்டும்.

- முஹம்மத் (ஸல்) அவர்களை நேசம் வைப்பது தொடர்பாக நபி (ஸல்) அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள்.
  ''தனது பிள்ளையை விடவும் பெற்றோரை விடவும் மற்றெல்லா மனிதர்களை விடவும் நான் உங்களுக்கு அன்புக்குரியவராக மாறாதவரை உங்களில் எவரும் (பூரண) ஈமான் கொண்டவராக ஆக முடியாது'' (புஹாரி)

- அல்லாஹ்வின் தூதர் எமக்கு முன்மாதிரியாக இருப்பவர் நாம் பின்பற்றுவதற்கு தகுதியானவர். அவர்களைப் பின்பற்றுவது எமது கடமை என்ற வகையில் முஹம்மத் (ஸல்) அவர்கள்மீது ''மஹப்பத்'' வைப்பது அவர்களைப் பின்பற்றுவதற்கு ஒரு தூண்டுதலாக அமைகின்றது.

- ஒருவரில் காணப்படுகின்ற கவர்ச்சி, அவரது தோற்றம், பேச்சு, அவர் உறவாடும் முறை, அவரது அறிவாற்றல், பண்பு, அவர்களின் வாழ்க்கையில் பிரதிபலிக்கின்ற தூய்மை, ஒழுக்கம், செயற்றிறன், அவரது சாதனைகள் போன்ற பல விடயங்கள் அவர்மீது ஏனையோர் அன்புகொள்ளக் காரணமாக அமைகின்றன. நபி முஹம்மத் (ஸல்) அவர்களை இந்தக் கண்ணோட்டத்தில் நோக்கினால் அவர்களின் வாழ்வின் எல்லாக் கோணங்களிலும் அன்பு கொள்ளத்தக்க அம்சங்கள் நிறைந்திருக்கின்றன.

- ஸஹாபாக்கள், நபி (ஸல்) அவர்கள் மீது எவ்வாறு பற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நடைமுறையில் காட்டியுள்ளார்கள். அவர்கள் சொல்லாலும் செயலாலும்

உள்ளத்தாலும் நபி (ஸல்) அவர்கள்மீது எவ்வாறு அன்பு கொண்டார்கள் என்பதற்கு வரலாற்றில் நிறைய ஆதாரங்கள் உள்ளன.

- ஒரு முறை உமர் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். ''அல்லாஹ்வின் தூதரே! நிச்சயமாக எனது உயிருக்கு அடுத்து ஏனைய அனைத்தையும் விட நீங்கள்தான் எனக்குப் பிரியமானவர்'' என்றார்கள்.
  இதைக்கேட்ட நபி (ஸல்) அவர்கள், ''எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக உமது உயிரைவிட நான் உமக்கு அன்புக்குரியவனாக மாறவேண்டும்.'' என்றார்கள். அதன் பின்னர், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக நிச்சயமாக எனது உயிரைவிட நீங்கள் நேசத்திற்கு உரியவர்கள்'' என்று உமர் (ரழி) அவர்கள் அழுத்தமாகச் சொன்னார்கள். அப்பொழுது ''உமரே! இப்பொழுதுதான் உமது ஈமான் பூரணமாகிறது'' (புகாரி) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதனைத்தான் மு.:.மின்களுக்கு அவர்களது உயிரை விட நபி (ஸல்) அவர்கள் மேலானவர்கள். (33:06) என்று அல்குர்ஆன் குறித்துக்காட்டுகின்றது.

- ஒரு முறை காபிர்கள், ஸைத் இப்னு தஸினா (ரழி) அவர்களைக் கொலை செய்யச் சென்றார்கள். அப்போது காபிர்களின் தலைவர்களுள் ஒருவரான அபூஸுப்யான் ''ஸைதே! நீ இருக்கும் இதே இடத்தில் முஹம்மத் (ஸல்) அவர்கள் நிறுத்தப்பட்டு அவர்களது கழுத்து துண்டிக்கப்படவும் நீ பாதுகாப்புடன் உமது குடும்பத்தவருடன் சேரவும் விரும்புகிறாயா?'' எனக்கேட்டார். உடனே ஸைத் (ரழி) அவர்கள், ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் எனது குடும்பத்துவருடன் பாதுகாப்பாக இருக்க, முஹம்மது (ஸல்) அவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்தில் அவர்களது பாதத்தில் ஒரு முள் தைப்பதைக்கூட நான் விரும்பமாட்டேன்'' (பைஹகீ) என பதிலளித்தார்கள். எனவேதான், ''முஹம்மத் (ஸல்) அவர்களை அவர்களது தோழர் நேசிப்பது போல் மனிதர்களில் எவரும் எவரையும் நேசிப்பதாக நான் அறியமாட்டேன்'' என அபூ ஸுப்யான் அவர்களே கூறியுள்ளார்கள்.

- ஸஹாபாக்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை அணுவணுவாகப் பின்பற்றினார்கள். அவர்களது ஸுன்னாவை அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் பாதுகாத்துக் கொடுத்தமை நபி (ஸல்) அவர்கள் மீது அவர்கள் வைத்த மஹப்பத்தின் விளைவுகளேயாகும்.

- நபி (ஸல்) அவர்கள் இறுதி நபி என்றபடியால் அவர்மீது அன்புவைப்பதை அல்லாஹ் அனைத்து முஸ்லிம்களுக்கும் பின்வரும் வழிமுறைகளில் கடமையாக்கியுள்ளான்.
- தொழுகையில் அத்தஹிய்யாத்தின் போது "நபியே உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக" என்று முன்னிலையில் கூறுதல்.
- மேலும் தொழுகையின் இறுதி அத்தஹிய்யாத்தில் நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுதல்.
- ஏனைய சந்தர்ப்பங்களிலும் அதிகமாக ஸலவாத்துச் சொல்லல்.
  ''நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொல்கிறார்கள். விசுவாசிகளே! நீங்களும் அவர்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்"(33:56)
- ''நபி (ஸல்) அவர்கள் மீது வைக்கின்ற அன்பு அவரது உம்மத்தினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்.'' (48:29)
- அவர்களுக்கு எதிராக புனைந்துரைப்போரைத் தடுக்க வேண்டும்.

- அவர்களது வார்த்தைகளையும், வழிகாட்டல்களையும் பின்பற்றவும் பாதுகாக்கவும் வேண்டும்.
- அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிகாட்டல்களையும் முன்மாதிரிகளையும் பின்பற்றி நடக்க வேண்டும்.

**மறுமை உண்டு என்பதற்கான ஆதாரங்கள்.**

- மறுமை பற்றிய நம்பிக்கை ஈமானின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். உலக வாழ்க்கைக்குப் பின், முடிவில்லாத நித்தியமான இன்னொரு வாழ்க்கை உண்டு. இவ்வுலகம் சோதனைக் களமாகும். இங்கு மனிதன் குறித்த காலமே வாழ்வான். அல்லாஹ் இவ்வுலகத்தை அதன் தவணை முடிந்தபின் அழித்துவிடுவான். பின் உலகில் வாழ்ந்த அனைத்து மனிதர்களும் இன்னொரு வாழ்க்கைக்காக எழுப்பப்படுவார்கள். அவர்களது இவ்வுலக செயற்பாடுகள் அனைத்தும் அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணை செய்யப்படும். விசாரணையின் பின் செயலுக்கும் நம்பிக்கைக்குமுரிய வெகுமதியாக சிலர் நிரந்தரமாக சுவர்க்கத்திற்கும் இன்னும் சிலர் நிரந்தரமாக நரகத்திற்கும் மூன்றாம் சாரார் தமது குற்றத்திற்குரிய தண்டனையை நரகில் பெற்றுக் கொண்ட பின் சுவர்க்கத்திற்கும் செல்வர். இதுவே மறுமைபற்றிய இஸ்லாமிய நம்பிக்கையின் சுருக்கமாகும்.
- நபி (ஸல்) அவர்கள் மறுமை நம்பிக்கை பற்றிக் கூறியபோது அது சாத்தியமற்ற ஒன்று என்று எண்ணிய காபிர்கள் நபியவர்களைப் பரிகசித்தனர். குதர்க்க வினாக்களைத் தொடுத்தனர். அவற்றுக்கு அல்குர்ஆன் தர்க்கரீதியாக பதில் கூறியது.
- உக்கிப்போன எலும்புத்துண்டைக் கொண்டுவந்து நபியவர்களிடம் இதை எப்படி உமது இறைவன் மீண்டும் எழுப்புவான் எனப் பரிகாசமாகக் கேட்டதற்கு அல்லாஹ் அல்குர்ஆன் (36:77-83) வசனங்களை இறக்கிப் பதில் கூறினான்.
- பிறப்பும் இறப்பும் கொண்ட இவ்வுலக வாழ்க்கை என்பது காலத்தின் கோலம் என்று வாதிட்டவர்களுக்கு (45:24) அல்குர்ஆன் அவர்களது அறியாமையை சுட்டிக் காட்டியது. (45:26-27)
- மறுமை சாத்தியமான ஒன்றா எனச் சந்தேகம் கொண்டோரைப் பார்த்து அல்குர்ஆன் பதில் கூறுகின்றது. (22:05)(56:60-62)
- எந்த முன்மாதிரியும் இல்லாமல் முதலில் உலகைப் படைத்த அல்லாஹ்வுக்கு இரண்டாம் முறை அதனை உருவாக்குவது மிகவும் இலகுவானது என்றது. (30:27-28)
- மறுமையில் நம்பிக்கையற்றோர் அது எப்போது வரும் என்று நபியவர்களிடம் பரிகாசமாகக் கேட்டதற்கு அல்குர்ஆன் பதில் கூறியது. (79:42-46) (7:187)
- அறிவியல் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலத்தில் மறுமை நம்பிக்கை அறிவுக்கு அப்பாற்பட்டது என்போருடைய வாதமும் அன்றைய மறுப்பாளர்களின் வாதத்தை ஒத்ததே.

- மறுமை உண்டு என்பதற்கான பல்வேறு தர்க்கரீதியான சான்றுகளைப் பகுத்தறிவு முன்வைக்கின்றது.

**மறுமை சாத்தியமானது.**

- ஒன்று இருப்பின் முடிவு ஒன்றும் இருக்கும் என்பது பொது விதியாகும்.
- படைக்கும் சக்தி வாய்ந்த அல்லாஹ்வுக்கு அழிக்கும் சக்தியும் உண்டு.
- அனைத்தும் அழியக்கூடியன என்பதை அறிவியல் ஏற்றுக்கொள்கிறது.

**மறுமைக்கான அவசியம்.**

- மனிதனது எதிர் பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமாயின் இன்னொரு வாழ்க்கை தேவைப்படுகின்றது.
- உலகம், செயற்பாட்டின் சரியான விளைவைத் தருவதில்லை. சிலவேளை குறைவான பயனைத்தரும். அல்லது எதிர்மாறான விளைவைத்தரும்.
  உதாரணம்: நன்மை செய்தோர் அதற்கான உரிய விளைவையோ, தீமைசெய்வோர் அதற்கான உரிய விளைவையோ பெறுவதில்லை. ஆதலால் விளைவைப் பெற மற்றோர் களம் தேவை.
- மனிதன் மரணிக்க விரும்புவதில்லை. தொடர்ந்து வாழவே விரும்புகிறான். அதற்கு இவ்வுலக நியதி பொருத்தமாக இல்லை. எனவே வாழ்வதற்கான மற்றொரு களமாக மறுமை அமைகின்றது.
- மனிதனின் செயற்பாட்டுக்கான தண்டனை அல்லது பரிசு வழங்கப்படுவதற்குப் பொருத்தமான - நீண்ட கால களம் தேவை. அதற்கு மறுமை அவசியப்படுகிறது.
- உயர்ந்த படைப்பான மனிதன், தாழ்ந்த படைப்புகள் போல மரணத்தோடு விடப்படுவது அவனது அந்தஸ்துக்கு இழிவானது. அவனது உயர்நிலைக்கு அடையாளமாக மறுமை அமைகிறது.
- இறைவன் இருப்பதை உலகில் காணமுடியாது. மறுமையில் இறைவனைக் காணும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுகிறது.

**உலக முடிவிற்கான அடையாளங்கள்.**

- மறுமை நாள் எப்போது வரும் என்பது பற்றிய அறிவு மனிதனுக்கு மறைவானதாக இருப்பினும் அது வர இருப்பதைக்காட்டும் அடையாளங்களை அல்லாஹ் வெளிப்படுத்தி யுள்ளான். (47:18)(54:1-2)
- மறுமைநாளின் அடையாளங்கள் பெரியவை, சிறியவை என இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன. சிறிய அடையாளங்கள் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள் சில:
  "எனக்கும் மறுமைக்கும் இடையிலுள்ள நெருக்கம் இவ்வாறுதான் என்று நபியவர்கள் தன் சுட்டுவிரலையும் நடுவிரலையும் இணைத்துக்காட்டினார்கள்."(புகாரி)
- மறுமையின் அடையாளங்களைக் கூறுங்கள் எனக்கூறியதற்கு நபியவர்கள் அடிமைப்பெண் தன் எஜமானியைப் பெற்றெடுப்பாள்; பாதணியோ ஆடையோ இல்லாத ஏழைகளும் இடையர்களும் உயர் கட்டிடங்களைக் கட்டுவதில் ஒருவருக்கொருவர் போட்டிபோடுவார்கள்" (புகாரி, முஸ்லிம்)
- நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் "பின்வரும் நிகழ்வுகள் நிகழாதவரை மறுமை ஏற்படாது அவை, இரு பெரும்

கோஷ்டியினரிடையே யுத்தம் மூண்டு அவர்களிடையே மிக அதிகளவிலான உயிர்ச் சேதம் நிகழும். அவ்விரு கோஷ்டியினரதும் கோஷம் ஒன்றே. தன்னை அல்லாஹ்வின் தூதரென்று வாதிக்கும் ஏறத்தாழ 30 பொய்யர்கள் தோன்றுவர். அறிவைச் சுமந்த அறிஞர்கள் மரணிப்பர், பூகம்பங்கள் அதிகரிக்கும். காலம் சுருங்கும். குழப்பங்கள் அதிகரிக்கும். கொலைகள் அதிகரிக்கும். தர்மம் பெறுவோரை தேட கஷ்டப்படும் அளவுக்கு உங்கள் மத்தியில் செல்வம் கொழிக்கும். தர்மத்தைக் கொண்டு போய் கொடுத்தால் கொடுக்கப்பட்டவர் அது எனக்கு அவசியமில்லை என்று எடுக்க மறுப்பர். மனிதர்கள் உயர்கட்டிடங்கள் கட்டுவதில் போட்டியிடுவர்; ஒரு மனிதனின் புதைகுழியைக் கடந்து செல்லும் மனிதன் அவனது இடத்தில் தான் இருக்கக்கூடாதா என்று கைசேதப்படுவான், சூரியன் மேற்கில் உதிக்கும். அவ்வாறு நிகழ்வதை மனிதர்கள் கண்டால் அனைவரும் விசுவாசம் கொள்வார்கள். அந்நிலை பற்றி அல்குர்ஆன் விபரிக்கின்றது (7:158) அவ்வேளையில் (சூரியன் மேற்கில் உதித்தால்) துணி வியாபாரி தன் வாடிக்கையாளன் முன் துணியை விரித்து அதனை விற்பதற்கோ அல்லது மடித்து வைப்பதற்கோ முன் மறுமை வந்துவிடும். மற்றொரு மனிதன் தன் ஆட்டின் பாலைக்கறந்து அதனை பருகுமுன் மறுமை நிகழ்ந்துவிடும். நீர் தாங்கியைச் சுத்தம் செய்து அதில் நீர்நிறைப்பதற்கு முன் மறுமை நிகழும், தன் உணவை வாயருகே கொண்டுவந்து சாப்பிடுவதற்கு முன் மறுமை நிகழ்ந்துவிடும்.(புகாரி)

**உலக முடிவிற்கான பெரிய அடையாளங்களுள் சில:**

- இமாம் மஹ்தி அவர்கள் தோன்றி நீதியான ஆட்சி செய்வார். இவர்களது ஆட்சியின் இறுதிப்பகுதியில் தஜ்ஜால் வெளிப்படுவான்.
- தஜ்ஜாலை அழிப்பதற்காக ஈஸா (அலை)அவர்களை அல்லாஹ் இவ்வுலகிற்கு அனுப்புவான்.
- ஈஸா (அலை) அவர்களின் ஆட்சியின் போது ய.்.ஜூஜ் ம.்.ஜூஜ் கூட்டத்தினர் தோன்றி உலகின் பல பாகங்களிலும் பரவி குழப்பம் விளைவிப்பர்.
- இரவு நீண்டு கொண்டே போகும், பின் மேற்கில் மறைந்த சூரியன் அதே திசையிலிருந்து கிளம்பி தனது கதிர்களை வெப்பமுடையதாக பரப்பிக் கொண்டிருக்கும். ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து நிகழும் இந்நிகழ்ச்சிகளை காணும் மக்கள் திடுக்கிடுவர். அப்போது தௌபா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ஈஸா (அலை) அவர்களின் மறைவோடு அபீஸீனியாவைச் சேர்ந்த ஒருவனால் க.்.பா இடிக்கப்படும்.

  தாப்பதுல் அர்ழ் எனும் பெயரைக் கொண்டு பூமியில் திரியக்கூடிய ஓர் அற்புதமான பிராணி வெளிப்படும்.

  ஒரு வகையான புகை வெளிப்பட்டு ஈமானற்றவர்களுக்கு மயக்க நிலையை ஏற்படுத்திவிடும் அதன்பின்னர் நறுமணமுடைய காற்று வீசும். இதனால் முஸ்லிம்கள் அனைவரும் இறப்பர். அல்லாஹ் எனும் நாமத்தை உச்சரிக்கும் எவரும் இப்பூமியில் இருக்க மாட்டார்கள். காபிர்கள் மாத்திரம் எஞ்சியிருப்பர்.

  நெருப்பு வெளியாகி உலகமெங்கும் பரவும். இஸ்ராபீல் (அலை) அவர்கள் சூர் எனும் குழலை அல்லாஹ்வின் ஆணைப்படி ஊத உலகம் முற்றாக அழிந்துவிடும்.

**மறுமை நிகழ்வுகள்**

- உலகம் அழிக்கப்பட்டு நீண்டகாலம் சென்றபின் அல்லாஹ் ஒருவகை மழையைப் பொழிய வைப்பான். அதன்மூலம் அழிந்து போனவற்றை மீண்டும் உண்டாக்குவான்.

பிறகு இஸ்ராபீல் (அலை) அவர்களை மீண்டும் எழுப்பி இரண்டாவது முறையாக சூர் ஊதும்படி கட்டளையிடுவான். அதனால் இவ்வுலகில் தோன்றி மறைந்த அத்தனை உயிரினங்களும் உயிர் பெற்றெழுந்து ஒரு பரந்த வெளியில் நிற்கும். இவ்வெளி 'மஹ்ஷர்' எனப்படுகிறது.இது மறுமையின் ஆரம்பமாகும்.

- மறுமை நாளின் தொழிற்பாடுகளை வைத்து அதற்கு பல பெயர்கள் உண்டு. யவ்முல் கியாமா, யவ்முத்தீன், யவ்முல் பஸ்ல், யவ்முல் ப∴ஸ், யவ்முல் ஹஷ்ர், யவ்முல் ஹிஸாப், யவ்முல் மீஆத், யவ்முல் ஆகிர், அஸ்ஸாஆ

- மஹ்ஷர் மைதானத்தில் மக்கள் குழுமியிருக்கும் போது அவர்களைச் சூழ்ந்து மதில் அமைக்கப்பட்டது போல் மலக்குகள் நின்று கொண்டிருப்பர். சூரியன் மிக அண்மையில் கொண்டுவரப்படுவதால் ஏற்படும் நிழலில்லாத பயங்கரமான சந்தர்ப்பத்தில் ஏழு கூட்டத்தினருக்கு மாத்திரம் அல்லாஹ் தனது அர்ஷின் கீழ் நிழல் கொடுப்பான்.

- மஹ்ஷர் மைதானத்தின் வேதனையைத் தாங்க முடியாத மக்கள் நபிமார்களிடம் சென்று தமக்காக அல்லாஹ்விடம் பரிந்து பேசுமாறு வேண்டுவர். ஆனால் நபி(ஸல்) அவர்கள் மாத்திரமே அதற்காக இணங்கி மகாமுன் மஹ்மூத் என்ற இடத்திற்கு அம் மக்களை இட்டுச் சென்று அல்லாஹ்வை ஸுஜூது செய்து அவர்களுக்காக அவனிடம் சிபாரிசு செய்து பேசுவார்கள். இதன் பிரதிபலனாக எல்லாப் படைப்புக்களையும் விசாரணை செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிடுவான். அதுவரை மக்கள் துன்பங்களை அனுபவித்துக் கொண்டே இருப்பர்.

- நபி (ஸல்) அவர்களது ஷபாஅத்தைப் பெறுவோர் பற்றி நபியவர்கள் கூறியுள்ளார்கள். "எனது ஷபாஅத்திற்கு மிகவும் அருகதையுடையோர் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவை பரிசுத்தமான உள்ளத்தோடு மொழிந்தவராவார்."(முஸ்லிம்)

  "எவர் அதான் சொல்லி முடிந்ததும் அல்லாஹும்ம ரப்பஹாதிஹி த∴வதித் தாம்மா வஸ்ஸலாதில் காஇமா ஆதி முஹம்மதனில் வஸீலத வல் பளீலா வப்அஸ்ஹு மகாமன் மஹ்மூதா அல்லதீ வஅத்த என்று ஓதுகின்றாரோ அவருக்குக் கியாமத் நாளில் எனது ஷபாஅத் விதியாகிவிடும்"

- ஷபாஅத்திற்கு அருகதையுடையவர்கள் அவர்களது ஈமானினதும் அமல்களினதும் தரத்திற்கு ஏற்ப பல தரங்களையுடையோராயிருப்பர்.

- ஷபாஅத்தைப் பெறும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும் என்பதையும் அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. (4:48)(40:18)(20:109)

- ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டு ஷபாஅத்தை அறிஞர்கள் பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர்.

01. மிக உயர்ந்த ஷபாஅத்:
இது அனைத்து மனிதர்களுக்காகவும்,மஹ்ஷர் வெளியின் பயங்கரத்திலிருந்து பாதுகாக்கவும்,விசாரணையைத் துரிதப்படுத்துவதற்குமாக அமையும்.

02. மு∴மின்களின் ஒரு பிரிவினரை கேள்வி,விசாரணையின்றியே சுவர்க்கம் செல்ல

அனுமதிக்குமாறு செய்யப்படும் ஷபாஅத்.

இவ்விரண்டு ஷபாஅத்துக்களும் இறைத் தூதர்(ஸல்) அவர்களுக்கு மட்டுமே உரியதாகும்.

03.சுவர்க்க வாசிகள் சிலருக்கு அவர்கள் சுவர்க்கத்தில் இருக்கும் தரத்தை உயர்த்துவதற்கான ஷபாஅத்

04.நரகில் வீழ்ந்து தண்டனை அனுபவிக்கும் மு∴மின்களில் ஒரு பகுதியினரை அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை முடியுமுன்னரே நரகிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கான ஷபாஅத்.

- இந்த ஷபாஅத்களை அல்லாஹ் ஏற்பதும்,மறுப்பதுவும் அவனது எல்லையற்ற கருணைக்கு உட்பட்டதாகவே அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.
- ஷபாஅத்தைத் தொடர்ந்து விசாரணைகள் நடைபெறும். நாம் செய்த தீமைகளை எவ்விதத்திலும் மறுக்க முடியாது. ஏனெனில் எமது உறுப்புக்களே எமக்கெதிராக சாட்சி சொல்ல வரும் (24:24-25)
- மறுமையின் விசாரணை அச்சமும் கலக்கமும் நிறைந்தவொன்றாகும். மஹ்ஷரில் நடைபெறும் இவ்விசாரணை என்ற சொல்லே அந்நாளில் அங்குள்ளோரை திடுக்கிடச் செய்யும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார். (இப்னு குஸைமா)
- தொடர்ந்து உலக வாழ்க்கையில் அவரவர் செய்த காரியங்கள் பதிவு செய்யப்பட்ட ஏடுகள் வழங்கப்படும். (69:18-29)(84:7-15)
- மறுமையில் அல்லாஹ் நீதி தவறாதவன் என்பதை உறுதிப்படுத்து முகமாக கடுகளவு எடையையும் துல்லியமாகக் காட்டும் தராசு (மீஸான்) கொண்டே மனிதர்களின் செயல்கள் நிறுக்கப்படும். (21:47)
- எல்லாப் படைப்புகளும் பதற்ற நிலையில் இருந்தாலும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் நபி (ஸல்) அவர்களின் ‘ஹவ்ழுல் கவ்ஸர்’ எனும் நீர்தடாகத்திலிருந்து மதுரமான பானம் ஊட்டப்படுவர். குறிப்பிட்ட சில தொகுதியினர் லிவாவுல் ஹம்து கொடி நிழலில் நிற்பர்.
- ‘ஸிராத்’ எனும் நரகத்திற்கு மேலால் அமைக்கப்பட்ட பாலத்தை ஒவ்வொருவரும் தமது நற்செயல்களுக்கு ஏற்ப இமைப்பொழுதிலும், மின்வேகத்திலும், குதிரை வேகத்திலும், ஓடியும், நடந்தும், தவழ்ந்தும் கடப்பர். நரகவாசிகள் அதைக் கடக்க முடியாமல் நரகில் விழுவர்.
- சிலர் கேள்விகணக்குகள் எதுவுமின்றி சுவர்க்கம் நுழைவர்.
- அமளிதுமளிப்படும் அந்நாளில் சிலர் அல்லாஹ்வின் அருளின் காரணமாக நரகம் செல்லாது சுவர்க்கத்தை அடைவர்.

### சுவர்க்கவாழ்வு

- இவ்வுலகில் ஒவ்வொருவரும் தான் செய்த நற்செயல்களுக்கு ஏற்ப வெவ்வேறு படித்தரங்களில் இன்பம் அனுபவிப்பர். சுவர்க்கங்களின் பெயர்களைக் கொண்டு

அவற்றின் படித்தரங்களை வேறுபடுத்தலாம். "ஜன்னதுல் பிர்தவ்ஸ், ஜன்னதுல் அத்ன், ஜன்னதுன் நஈம், ஜன்னதுல் ஹுல்த், தாருஸ்ஸலாம், தாருல் ஜலால், தாருல் கரார்"

- இந்த சுவர்க்கங்களில் மிகவும் உயர்ந்ததும், சிறந்ததும் ஜன்னதுல் பிர்தவ்ஸ் எனும் சுவர்க்கமாகும்.
- "நீங்கள் அல்லாஹ்விடம் சுவர்க்கத்தைக் கேட்கும் போது உயர்ந்த தரத்தில் உள்ள பிர்தவ்ஸ் எனும் சுவர்க்கத்தையே கேளுங்கள்" (ஹதீஸ்)
- சுவர்க்கத்தை அடைந்த நல்லடியார்கள் விதவிதமான இன்பங்களை அனுபவித்து எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்திருப்பர்.
  (2:25) (13:24) (32:17) (75:22-23) (36:55-58) (56:10-40) (55:46-78)
- சுவர்க்கம் நுழைவோர் யாரெனக் கேட்கப்பட்டதற்கு நானும் எனது தோழர்களும் அவர்கள் சென்றவழியில் நடப்போரும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
- சுவர்க்கம் நுழைவோரின் பண்புகளைப் பின்வருமாறு கூறலாம்.
  "கலிமாவை மொழிந்து இஸ்லாம் கூறும் மறைவான விடயங்களை நம்புதல், இஸ்லாம் கூறும் கடமைகளைப் பேணுதலுடன் நிறைவேற்றுவதுடன் விலக்கப்பட்ட காரியங்களி லிருந்து விலகி நடத்தல், அல்லாஹ்வின் பேரருளில் நம்பிக்கை வைத்து அவனது தண்டனைகளுக்குப் பயந்து வாழ்தல், மற்ற மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மதித்து நடத்தல், நற்பண்புகளுடன் வாழ்தல், நன்மையை நிலைநாட்டுவதற்காகவும் தீமையை அழிப்பதற்காகவும் முயற்சித்தல்"

**நரக வாழ்வு**

- அல்லாஹ்வின் கட்டளைகளைப் புறக்கணித்து தம் மனோ இச்சைப்படி வாழ்வோர் நரகமே நுழைவர். நரகங்களில் ஏழு வகையானவை காணப்படுகின்றன
  "லழா, ஜஹன்னம், ஹுதமா, ஜஹீம், ஸகர், ஸஈர், ஹாவியா"
  நரகக் காட்சிகளைப் பின்வரும் அல்குர்ஆன் வசனங்களினூடாகப் பார்க்கலாம்.
  (4:56) (9:34-35) (7:44-51) (70:9-18) (69:25-37) (67:6-11) (56:51-60)
- ஒருவரை நரகவாதியாக்கும் செயல்களே பாவங்களாகும். அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், ஈமானின் அம்சங்களில் ஏதாவதொன்றை நிராகரித்தல், இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்றை மறுத்தல், இஸ்லாத்தின் நடைமுறைகளைப் பரிகசித்தல், இறை சட்டங்களைத் தமக்கு ஏற்றவாறு மாற்றியமைத்தல், இஸ்லாத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கம் கொண்டிருத்தல் போன்ற பாவங்களில் இணைவைப்பைத் தவிர மரணத்திற்கு முன் தவ்பா செய்வதன் மூலம் அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெறலாம். தவ்பாச் செய்யாதிருந்தாலோ, செய்தும் அதை அல்லாஹ் ஏற்காவிட்டாலோ தொடர்ந்தும் நரக வேதனையை அனுபவிக்க வேண்டி வரும்.
- கொலை செய்தல், களவெடுத்தல், மது அருந்தல், வட்டியுடன் தொடர்புறுதல், விபசாரம் செய்தல், கோள் சொல்லுதல், புறம் பேசுதல், துரோகம் செய்தல் முதலான பாவங்களைப் பொறுத்தவரை தம் மரணத்திற்கு முன் தவ்பாச் செய்யாவிட்டால் பாவத்திற்கேற்ற தண்டனையை நரகில் அனுபவித்த பின்புதான் அதைவிட்டும் வெளியேறலாம்.

- புறம் பேசுதல் போன்ற ஏனையோருடன் தொடர்பான பாவங்களாக இருந்தால் அவர்கள் மன்னிக்காதவரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். இத்தகைய பாவங்கள் செய்தவர்கள்தாம் மறுமையில் வங்குரோத்து நிலையை அடைவர்.

**மறுமை நம்பிக்கை மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம்.**

- ஒவ்வோர் ஆத்மாவும் தனது செயல்களுக்குத் தனித்தனியாகப் பொறுப்பாளர்கள் எனும் உணர்வு ஏற்படுவதால் இவ்வுலகில் மனிதன் தனது வாழ்க்கையை செவ்வனே நெறிப்படுத்திக் கொள்வதற்குத் துணை செய்கின்றது.

- கஷ்டங்களின்போதும் கவலைகளின்போதும் அவற்றைச் சகித்துக்கொள்ளும் பொறுமையை ஏற்படுத்துகிறது.

- சுயநலப்போக்குகளில் இருந்து விடுபட்டு தன்னிடம் இருப்பதைக் கொண்டு திருப்தியடையும் மன நிலையும் தன்னிடம் இருப்பவற்றை மற்றவருக்கு வாரிவழங்கும் தாராளத்தன்மையும் ஏற்படுகிறது.

- எப்போதும் நேர்மையாளனாவும் மன உறுதியுடையவனாகவும் சுறுசுறுப்பானவராகவும் நற்பழக்கங்கள் உள்ளவராகவும் வாழ வழிகாட்டுகின்றது.

- மறுமையில் உயர்ந்த பதவிகளை அடைய வேண்டும் என்ற மனத்தூய்மையுடன் செயலாற்றத் தூண்டுகின்றது.

- மறுமையில் தனது நன்மை தீமைகள் "மீஸானில்" எடை போடப்படும் என்ற நம்பிக்கை ஒரு விசுவாசிக்கு நன்மைகளைச் செய்வதற்கும் தீமைகளைத் தவிர்ந்து கொள்வதற்கும் ஊக்கம் அளிக்கின்றது. பிறர் உரிமையை மீறாமல் நடந்துகொள்ளத் தூண்டுகின்றது.

- பிறரின் மூலமாக நமக்கு ஏற்பட்ட அநீதங்களுக்காக இவ்வுலக வாழ்க்கையில் நீதி கிடைக்காத போது மறுமையில் ஏற்படவிருக்கும் தீர்ப்பை எண்ணி மனநிம்மதி அடைய முடிகின்றது.

- மறுமையைப் பற்றிய நம்பிக்கையானது விசுவாசிகளின் உள்ளங்களில் ''தக்வா'' எனும் பயபக்தி நிலையை ஏற்படுத்தி விடுகின்றது. இவ்வாறே அது அவர்களுக்கு எந்நேரமும் நரக வேதனைகளை எச்சரித்துக் கொண்டும் சுவன இன்பங்களை ஆசையூட்டிக் கொண்டும் இருக்கின்றது. இதனால் விசுவாசிகளின் ஒழுக்க வாழ்வு சீர்படுகின்றது.

**கத்ர்**

- பிரபஞ்சத்தில் ஒவ்வொரு நிகழ்வும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நிகழ்கிறது என்பதை உறுதியாக உண்மைப்படுத்துவதே கழா கத்ர் பற்றிய நம்பிக்கையின் யதார்த்தமாகும். இந்நம்பிக்கை அடிப்படை இஸ்லாமிய நம்பிக்கைகளில் ஆறாவது இடத்தை வகிக்கிறது. இன்நம்பிக்கை இன்றி ஒருவரது ஈமான் பூர்த்தியாவதில்லை.

- சில மனிதர்கள் கத்ரை விசுவாசிப்பதில்லை என்ற செய்தி இப்னு உமர் அவர்களை எட்டியபோது கூறினார். நான் அவர்களைச் சந்தித்தால் அவர்களிடம் கூறுவேன்: நான் உங்களை விட்டும் நிரபராதியாகி விட்டேன் நீங்களும் என்னை விட்டு

நிரபராதியாகி விட்டீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக உஹத் மலையளவு தங்கத்தைத் தர்மம் செய்தாலும் அவர்கள் கத்ரை நம்பும் வரை அவர்களது தர்மம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. (முஸ்லிம்)

- கத்ரின் நான்கு நிலைகளை நம்பாத வரை கத்ர் பற்றிய நம்பிக்கை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை

1. அல்லாஹ் ஒவ்வொன்றினதும் தொடக்கம் முதலே அதைப்பற்றிப் பூரணமாக அறிந்துள்ளான். வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒரு அணுக்கூட அவனது அறிவை விட்டும் மறைவதில்லை. (ஹஷ்ர்: 22) (தலாக்:12)

2. அல்லாஹ் வானங்கள் பூமியைப் படைக்க ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அனைத்தைப் பற்றியும் லவ்ஹுல் மஹ்பூழில் எழுதியுள்ளான். (ஹஜ்: 70) வானங்கள் பூமியைப்படைக்க ஐம்பதாயரம் வருடங்களுக்கு முன்பே படைப்பினங்களின் தக்தீரை எழுதிவைத்தான். (முஸ்லிம்)

3. அல்லாஹ்வின் நாட்டத்தைக் கொண்டும் அவனது வல்லமையைக் கொண்டுமே இப்பிபஞ்சத்தில் அனைத்து நன்மை தீமைகளும் நிகழ்கின்றன. (கஹ்ப்:24,25) (தக்வீர்:29)

4. அனைத்து வஸ்துக்களும் அல்லாஹ்வின் படைப்புக்களாகும். அவற்றின் பண்புகளையும் செயற்பாடுகளையும் கூட அல்லாஹ்வே படைக்கின்றான். (அன்ஆம்: 102) (ஸுமர்:62) (ஸாப்பாத்:96) நபி (ஸல்) கூறினார்கள்:

   **Åä Çááå íÕäÚ ßá ÕÇäÚ æÕäÚÊå “ ÃÎÑÌå ÇáÈÎÇÑí** இமாம் இப்னு ஸ.்.தி கூறுகிறார் “ அல்லாஹ் மனிதர்களைப் படைத்ததைப் போன்று அவர்களது ஆற்றலுக்கும் நாட்டத்துக்கும் ஏற்ப அவர்கள் செய்பவற்றையும் படைத்துள்ளான். பின்னர் அவர்கள் கட்டுப்பட்டவர்களாவோ அல்லது வரம்பு மீறியவர்களாகவோ அல்லாஹ் படைத்த அவர்களது ஆற்றலுக்கும் நாட்டத்துக்கும் ஏற்ப நடந்து கொள்கின்றனர்.

   கத்ர் பற்றிய ஈமான் சரியான நிலையை அடையப் பின்வரும் விடயங்களும் அவசியமாகின்றன.

- மனிதர்களுக்குச் சுய நாட்டமும் தெரிவுச் சுதந்திரமும் உள்ளது. அதற்கமையவே அவர்களது செயல்கள் இடம்பெறுகின்றன. (தக்வீர்: 28) (பகரா: 286)

- மனித நாட்டமும் வல்லமையும் அல்லாஹ்வின் நாட்டம் வல்லமையில் இருந்து சுதந்திரமானதல்ல. அல்லாஹ்வே மனிதனுக்கு அவற்றை வழங்கினான். பிரித்தறியவும் தெரிவு செய்யவும் அவனுக்கு ஆற்றலை வழங்கினான். (தக்வீர்: 29)

- கத்ர் என்பது அல்லாஹ்வின் இரகசியம். அதிலிருந்து அவன் தெளிவுபடுத்தியவற்றை நாம் அறிவோம்; ஈமான் கொள்வோம். மறைத்தவற்றை ஏற்றுக்கொள்வோம்; ஈமான் கொள்வோம்; எமது பலவீனமான அறிவைக் கொண்டு அவனது தீர்ப்புகளில் விவாதிக்க மாட்டோம். அல்லாஹ்வின் நீதி பூர்த்தியானது. அவனது அறிவு எல்லையற்றது. அவன் விசாரணைகளுக்கு அப்பாற்பட்டவன்.

**கழா கத்ரின் மொழிக்கருத்து**

கழா என்றால் மொழி ரீதியாக, தீர்க்கமாகச் செய்தல், பூர்த்தியாகச் செய்தல் என்றும் கத்ர் என்றால் நிர்ணயித்தல் என்றும் பொருள்படும்

இதன் வரைவிலக்கணம்: கத்ர் என்றால் ஒவ்வொன்றுக்குமான அல்லாஹ்வின் முன்னளப்பும் அவனிடம் குறிப்பிடப்பட்ட காலத்தில் குறிப்பிட்ட விதமாக அது நிகழ்வது பற்றிய அவனது அறிவும் அவனது எழுத்தும் நாட்டமும் அவன் முன்னளந்ததற்கேற்ப நிகழ்வதுமாகும்.

**கழா கத்ர் என்பவற்றிற்கிடையில் உள்ள வேறுபாடு**

சில அறிஞர்கள் வேறுபடுத்தி நோக்குவர். இரு சொற்களும் ஒரே கருத்தைக் கொண்டது என்பதுவே மிகக் கிட்டிய கருத்தாகும். ஏனெனில் அவை இரண்டையும் பிரித்து நோக்குவதற்கான எவ்வித ஆதாரமும் அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ கிடையாது. இரண்டும் ஒரே கருத்திலேயே மாறி மாறிப் பிரயோகிக்கப்படுகின்றன. இருப்பினும் கத்ர் ˙என்ற சொல் குர்ஆனிலும் ஹதீஸிலும் கூடுதலாக இடம் பெற்றுள்ளது.

**மார்க்கத்தில் கத்ர் நம்பிக்கையின் முக்கியத்துவம்.**

ஹதீஸ் ஜிப்ரீல்: அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும் அவனது வேதத்தையும் அவனது றஸூல்மார்களையும் மறுமை நாளையும் நீர் நம்புவதும் நல்லதும் கொடியதும் கத்ரின் படியே என்றும் நம்புவதாகும். (முஸ்லிம்) கமர்: 49, அஹ்ஸாப்: 38)

**தேர்ச்சி 02 : இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளை விளங்கி தன் வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2: ஈமானுக்கும் அஹ்லாக்குக்கும் இடையிலுள்ள தொடர்பை விளங்கிக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 25**

**கற்றற்பேறுகள்**

- ஈமானக்கும் அமலுக்குமிடையிலான தொடர்பினை எடுத்துக் காட்டுவார்.
- ஈமானுக்கும் அக்லாக்கிற்கும் இடையிலான தொடர்பை விளக்குவார்.
- அமலுக்கும் அக்லாக்கிற்கும் இடையிலான தொடர்பைத் தர்க்கிப்பார்.
- ஈமானுக்கும் அமலுக்கும் அக்லாக்கிற்குமிடையிலான தொடர்பை ஏற்று வாழ்வில் கடைப்பிடிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- ஈமான் என்பது அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாத்தினரிடையே உள்ளத்தால் நம்பி நாவால் மொழிந்து செயல்களால் வெளிப்படுத்துவதாகும். இஸ்லாம் ஒரு பூரணவாழ்க்கைத்திட்டம் என்றவகையில் அது இவ்வாறு முழு வாழ்வையும் ஈமானுடன் பின்னிப்பிணைத்திருப்பது அதன் தனிப்பெரும் சிறப்பம்சமாகும். இது அகமும் புறமும் ஒன்று போல் இருப்பதற்கு சமனாகும். உடலும் உயிரும் ஒன்றாய் இருப்பது போல் முக்கியம் வாய்ந்ததாகும்.

- ஒருவர் இஸ்லாத்தைத் தனது வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்கின்ற போது முதலில் இஸ்லாம் கூறுகின்ற அம்சங்களில் நம்பிக்கை கொள்ளல் வேண்டும். இந்நம்பிக்கை பெரும்பாலும் மறைவானவற்றோடு தொடர்புடையது. இதனை 'ஈமான் பில் கைப்' என அழைப்பர். பொதுவாக நம்பிக்கை என்பது அகவயமான ஒரு கருத்தே ஆகும். ஒன்றை நம்புகிறோம் என்று கூறும் போது பார்வை கேள்வி சிந்தனை என்பவற்றின் தொழிற்பாடு நேரடியாக இடம்பெறுவதில்லை. அவ்வாறு நேரடியாகப் பங்கு கொள்ளும் போது சாட்சி அல்லது சான்று கூறல் என்றே வழங்கப்படுகின்றது. ஆதலால் ஒருவரது ஈமானைப் புலனுணர்வினாலோ பகுத்தறிவினாலோ அறிந்து ஏற்றுக்கொள்ள முடியாது, புறவயமான அதன் வெளிப்பாடுகளே ஈமானுள்ளவரை அடையாளம் காட்டுகின்றன. ஈமானின் புறவயமான வெளிப்பாடுகளே அமல்கள் எனப்படுகின்றன.

- இஸ்லாத்தில் ஈமானும் அமலும் பின்னிப்பிணைந்தவை என்பதற்கு அல்குர்ஆனும் ஹதீஸும் சான்றுகளாய் உள்ளன.

- அல்குர்ஆன் ஈமானையும் அமலையும் மூன்று விதமாகத் தொடர்பு படுத்திக் கூறுகிறது.

1. ஈமான் கொண்டு நற்கருமங்கள் செய்வோர் என்று பொதுப்படையாகக் கூறுதல்

உதாரணம்(2:25)

- அல்குர்ஆனில் ஏறத்தாள 52 இடங்களில் இவ்வாறு பொதுப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

2. ஈமான் கொண்டவர்களின் பண்பாக பல்வேறு நற்கருமங்களைக் கூறுதல்

உதாரணம்(23:1-11)

- இவ்வசனத்தில் தொழுகை, வீணான காரியங்களைத் தவிர்த்தல், ஸக்காத்துக் கொடுத்தல், கற்பைப் பேணல், அமானிதம் பேணல் ஆகிய அமல்கள் ஈமானுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறான வசனங்கள் அல்குர்ஆனில் பல உள்ளன.

3. ஈமான் கொண்டவர்களை விளித்து நற்செயல்ளை ஏவுதலும் தீச்செயல்களை விலக்கலும்

உதாரணம்(5:8) (5:2) (3:8)

- அல்குர்ஆனைப் போலவே அல்ஹதீஸூம் ஈமானுடன் அமலை இணைத்தே பேசுகிறது. நாளாந்த வாழ்வுடன் தொடர்பான அனைத்துக் காரியங்களையும் அது ஈமானுடன் தொடர்பு படுத்துகிறது.

1. ''அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் உண்டு மகிழ்பவன் உண்மை மு.்.மினல்ல.'' (தபரானி)

2. ''தனக்கு விரும்புவதை தனது சகோதரனுக்கும் விரும்பாதவரை மு.்.மினாக மாட்டான்.'' (புஹாரி, முஸ்லிம்)

3. ''யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்கிறாரோ அவர் அண்டை வீட்டானுக்கு நல்லதை செய்யட்டும். யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்கிறாரோ அவர் தன் விருந்தினரை உபசரிக்கட்டும். யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்கிறாரோ அவர் பேசினால் நல்லதையே பேசட்டும். இல்லாவிடின் மௌனமாக இருக்கட்டும்.'' (புஹாரி)

- இஸ்லாமிய ஷரீஅத்தில் அனைத்து அமல்களும் அவை செய்யப்படுகின்ற நோக்கத்தின் அடிப்படையில் இபாதாத், முஆமலாத் என்றும் அமல்கள் யாருடைய விடயத்தில் செய்யப்படுகின்றன என்பதற்கமைய ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் என்றும் அமல்களை யார் செய்ய வேண்டும் என்பதற்கமைய பர்ளு ஐன், பர்ளு கிபாயா என்றும் வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன.

**இபாதத், முஆமலாத் :**

- தொழுகை, நோன்பு, ஹஜ், குர்ஆன் திலாவத், பிரார்த்தனை, உம்ரா, திக்ர், தவ்பா, போன்ற புனிதத்துவம் கொண்ட அனைத்து வணக்கவழிபாடுகளும் இபாதாத் எனப்படுகின்றன. அவற்றுள் கடமையாக்கப்பட்டவை பர்ளுகள் என்றும் ஆர்வமூட்டப்பட்டவைகள் நபில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவ்வாறான அமல்களின் வெளிப்படையான நோக்கம் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுவதும் அவனது திருப்தியைப் பெறுவதுமேயாகும். இவை நபி(ஸல்) அவர்களது முன்மாதிரிக்கமையவே செய்யப்படல் வேண்டும். முன்மாதிரிக்கு முரணாக அமைகின்ற போது பித்அத் எனப்படுகின்றது.

- இபாதாத் தவிர்ந்த அனைத்து செயற்பாடுகளும் முஆமலாத் வகையைச் சார்ந்தவைகளாகும். இவை செய்யப்படுவதற்கான அடிப்படை நோக்கம் மனிதர்களினதும் மற்றவைகளினதும் தேவைகளை நிறைவேற்றி வைப்பதாகும். இவ்வகையில் மனிதனின் அடிப்படைத் தேவைகள் முதல் வியாபாரம், திருமணம், ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், ஜீவகாருண்யம், சுற்றாடலைப் பேணல், நீதி நிர்வாகம் போன்ற அனைத்தும் முஆமலாத் வகையைச் சேர்ந்த அமல்களாகும். ஷரீஅத் வழிமுறைக்கமையவும் அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்தும் உலக ஆசையோ சுயநலமோ இன்றி முஆமலாத் விடயங்களில் ஈடுபடும் போது அவைகளும் அல்லாஹ்விடம் வணக்கமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் :**

- மனிதன் அல்லாஹ்வின் அடிமை என்ற வகையிலும் சமூகமாய் வாழ்பவன் என்ற வகையிலும் அவன் அல்லாஹ்வுக்கும், ஏனையவற்றுக்கும் செய்யவேண்டிய கடமைகள் பல உள்ளன. அவற்றுள் அல்லாஹ்வுக்குச் செலுத்தவேண்டியவை ஹுகூகுல்லாஹ் என்றும் தனக்கும் பிற மனிதர்களுக்கும் பிற படைப்புக்களுக்கும் செய்ய வேண்டியவை ஹுகூகுல் இபாத் என்றும் வழங்கப்படுகின்றன.

- அல்லாஹ் அடியார்கள்மீது விதியாக்கியுள்ள தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற கடமைகளும் ஏவல்கள், விலக்கல்கள் என்ற அவனது கட்டளைகளும் ஹுகூகுல்லாஹ்வைச் சார்ந்தனவாகும். இவற்றை முறையாக நிறைவேற்றுவது அடியார்களின் கடமையாகும். நிறைவேற்றாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றமே. இக்குற்றங்களை மன்னிப்பதும் மன்னிக்காமல் விடுவதும் அல்லாஹ்வைப் பொறுத்துள்ளது. தான் நாடியவர்களுக்கு ஷிர்க்கைத் தவிர எல்லாப் பாவங்களையும் மன்னிப்பதாக அல்லாஹ்வே கூறுகிறான்.

- தனக்கும், மனிதர்கள், விலங்குகள், சுற்றாடல் ஆகியவற்றோடு தொடர்பான அனைத்தும் ஹுகூகுல் இபாத் அடங்கும் கடமைகளாகும். அவ்வாறே அவர்கள் விடயத்தில் தவிர்ந்து கொள்ள வேண்டிய கொலை, ஏமாற்று, புறம், கோள் போன்றனவும் இதில் அடங்குகின்றன. ஹுகூகுல் இபாத்களை சரியாக நிறைவேற்றும் போது அடியார்களுக்கிடையிலான ஆளிடைத் தொடர்பு சீராவதுடன் அல்லாஹ்விடமும் அதற்கு நற்கூலி உண்டு. ஆனால் அவற்றில் தவறிழைக்கின்ற போது சம்பந்தப்பட்ட நபர் மன்னிக்காத வரை அல்லாஹ்வும் மன்னிக்கமாட்டான்.

**பர்ளு ஐன், பர்ளு கிபாயா:**

- ஒவ்வொரு தனிநபரும் நிறைவேற்றவேண்டிய ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் சார்ந்த கடமைகள் அனைத்தும் பர்ளு ஐன் எனப்படுகின்றன. உதாரணமாக ஐங்காலத் தொழுகை, குடும்பத்தைப் பராமரித்தல், தனது ஊதியத்துக்குரிய பணி போன்றன. இவற்றை உரியவாறு நிறைவேற்றுவது ஒவ்வொரு தனிநபர் மீதும் கடமையாகும். அவற்றை நிறைவேற்றாதவன் குற்றவாளியாகக் கருதப்படுவான்.

- பர்ளு கிபாயா என்றால் எல்லோர் மீதும் கடமையான பொது விடயங்களாகும். அவற்றுள் ஜமாஅத் தொழுகை போன்ற ஹுகூகுல்லாஹ் சார்ந்த விடயங்களும் பொதுப்பணியுடன் தொடர்பான ஹுகூகுல் இபாத் சார்ந்த விடயங்களும் அடங்குகின்றன. அவற்றைப் பேணுவது சமூகத்தார் அனைவர் மீதும் கடமையாகும்.

யாராவது அவற்றை நிறைவேற்றினால் சமூகத்தின் மீதுள்ள பொறுப்பு நீங்குகிறது. ஆனால் நிறைவேற்றியவர்கள் மட்டுமே அல்லாஹ்விடத்தில் நன்மைகளைப் பெற்றுக்கொள்வர்.

- மேலே வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ள அனைத்து அமல்களுமே ஈமானுடன் தொடர்புற்றவையாகும். எனவே அனைத்து அமல்களையும் ஒரு மு.்.மின் சமாந்தரமாகப் பேணுவது அவசியமாகும். ஆகவே தொழுகை போன்ற வணக்க வழிபாடுகளினூடாக இறை திருப்தியைப் பெறமுயற்சிப்பவர் முஆமலாத்களினூடாகவும் அதைப் பெற முயல வேண்டும். அப்போதுதான் அவரது ஈமான் பூரணமடைகிறது. அவ்வாறே ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத், பர்ளு ஐன், பர்ளு கிபாயா ஆகிய எந்த ஒன்றிலும் ஒரு மு.்.மின் கவனக் குறைவாக இருக்கமாட்டார்.

- இஸ்லாம் அமல்களுக்கு முக்கியத்துவம் வழங்கியிருப்பது போன்று ஒழுக்கத்துக்கும் கூடிய முக்கியத்துவம் வழங்குகிறது. நபி (ஸல்) அவர்கள் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் போது ‘‘நான் நல்லொழுக்கங்களைப் பூர்த்தியாக்கவே அனுப்பப்பட்டுள்ளேன்’’ என்றார்கள். அல்குர்ஆன் நபியவர்களைப் பார்த்து ‘‘நபியே நீர் சிறந்த நற்குணமுடையவராக இருக்கின்றீர்’’ எனப் புகழ்கிறது.

- இஸ்லாம் ஒழுக்கத்தையும் ஈமானுடன் தொடர்புபடுத்தியே நோக்குகிறது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ‘‘ஈமான் எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது. அவற்றுள் உயர்ந்தது லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவாகும். தாழ்ந்தது பாதையில் காணப்படும் நோவினை தரும் ஒன்றை அகற்றுவதாகும். வெட்கமும் ஈமானைச் சார்ந்த ஒன்றே’’.( புஹாரி, முஸ்லிம்)

- இந்த ஹதீஸ், ஈமானின் பரப்பு மிகவும் விசாலமானது என்ற கருத்தை முன்வைக்கிறது. அத்துடன் ஈமான், அமல் ஆகியவற்றுடன் அக்லாக்கினையும் இணைத்து மூன்றையும் பிரிக்கமுடியாத ஒரே உருவாகக் காட்சிப்படுத்துகிறது. மேலும் கலிமாவை மொழிதலும் பாதையில் காணப்படும் நோவினை தரும் ஒன்றை அகற்றுதலும் முறையே இபாதாத், முஆமலாத் ஆகிய இருவகை அமல்களுக்கு உதாரணமாகவும் வெட்கம் நல்லொழுக்கத்துக்கு உதாரணமாகவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் உயர்ந்தது தாழ்ந்தது என்ற சொற்பிரயோகங்கள் ஒவ்வொன்றுக்கிடையிலும் காணப்படும் தரவேறுபாட்டைக் குறிப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இது இஸ்லாத்தின் யதார்த்தபூர்வ நிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

- மேற்கூறப்பட்ட ஹதீஸை விளக்குவது போன்று இன்னும் பல ஹதீஸ்களும் காணப்படுகின்றன. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்:

  ‘‘ஈமான் கொண்டவர்களில் பூரணமான ஈமானை உடையவர் அவர்களுள் அழகிய நற்குணமுடைவராவார். உங்களில் சிறந்தவர் யாரெனில் உங்கள் மனைவிக்கு சிறந்தவரே’’ (திர்மிதி)

  ‘‘மறுமையில், மு.்.மினின் மீதானில் நல்லொழுகத்கத்தை விடவும் எடைகூடிய இன்னொன்று இருக்கமுடியாது’’. (திர்மிதி)

  ‘‘மு.்.மின், தனது நல்லொழுக்கத்தினால், நின்று வணங்கும் நோன்பாளியின் அந்தஸ்த்தை அடைந்துகொள்கிறார்’’. (அபூதாவூத்)

''ஒருமுறை நபியவர்களிடம் அதிகமாக சுவர்க்கத்தில் நுழைவிக்கும் அமல் எது என வினவப்பட்டது. அதற்கு அவர்கள் இறையச்சமும் நல்லொழுக்கமும் எனப் பதில் கூறினார்கள்''. (திர்மிதி)

''நீங்கள் ஈமான் கொள்ளாதவரை சுவர்க்கம் நுழையமாட்டீர்கள். ஒருவரை ஒருவர் நேசிக்காத வரை ஈமான் கொள்ள மாட்டீர்கள். உங்களிடையே நேசத்தை உண்டாக்கும் ஒரு விடயத்தைச் சொல்லித்தரட்டுமா. உங்களிடையே ஸலாத்தைப் பரப்புங்கள''. (முஸ்லிம்)

''உங்களில் எனக்கு மிகவும் விருப்பமானவரும் மறுமையில் எனக்கு மிகவும் நெருக்கமாக அமர்பவரும் யாரெனில் உங்களில் சிறந்த நற்குணமுடையவராவார்''. (திர்மிதி)

''நன்மையென்பது நற்குணமாகும். உமது உள்ளத்தை உறுத்தும் விடயங்களும் மற்றவர்கள் பார்ப்பதை நீர் வெறுக்கும் விடயங்களுமே தீமையாகும்''. (முஸ்லிம்). இந்த ஹதீஸை இமாம் இப்னுல் கையும்(ரஹ்) அவர்கள் விளக்கும் போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்: இந்த ஹதீஸ் நற்குணம் தான் முழு மார்க்கம் என்று குறிப்பிடுகிறது. ஈமானினதும் ஷரீஅத்தினதும் யதார்த்தங்களும் அதுவே. ஆகவே தான் தீமைக்கு நேர் எதிராக நற்குணத்தைக் குறிப்பிட்டுள்ளது.

- ஒழுக்கம் அரபியில் ஹுலுக் எனப்படுகிறது. இச்சொல்லும் உடல் தோற்றத்தைக் குறிக்கும் ஹல்க் என்ற சொல்லும் ஒலிவடிவில் வேறுபட்டாலும் வரிவடிவில் இரண்டும் ஒன்றே. சில ஆய்வாளர்கள் இவை இரண்டுக்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்கும் போது ஹல்க் என்பது உடலின் புறத்தோற்றம் என்றும் ஹுலுக் என்பது அதன் அகத்தோற்றம் என்றும் குறிப்பிடுகின்றனர். ''இறைவா நீ எனது புறத்தோற்றத்தை (ஹல்க்) அழகுபடுத்தியது போன்று அகத்தோற்றத்தையும் (ஹுலுக்) அழகுபடுத்துவாயாக'' என்ற நபி(ஸல்) அவர்களின் பிரார்த்தனை இந்தக் கருத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

- ஒழுக்கம் என்ற சொல் பொதுவாக நற்பண்புகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டாலும் அது நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்ற இரு பக்கங்களைக் கொண்டது. உடலின் அசைவுகளே செயல்களாகின்றன. அச்செயல்கள் எப்போதும் அன்பு, கோபம், வெட்கம், பேராசை, பொறுமை, பொறாமை, உலோபித்தனம், பணிவு, சுயநலம், தூய்மை, கவலை போன்ற மனவெழுச்சிப் பண்புகளுடன் கலந்தே தோற்றம் பெறுகின்றன. நல்ல மனவெழுச்சிப் பண்புகளுடன் கலந்த செயல்களை நல்லொழுக்கம் என்றும் தீய மனவெழுச்சிப் பண்புகளுடன் கலந்த செயல்களைத் தீயொழுக்கம் என்றும் அழைக்க முடியும்.

- ஈமான் அதிகரிக்கும் போது நல்ல மனவெழுச்சிகள் உள்ளத்தில் மேலோங்குகின்றன. ஈமான் பலவீனமடையும் போது தீய மனவெழுச்சிகள் மேலோங்குகின்றன. இதற்கமையவே ஒருவரது செயல் நல்லொழுக்கம் சார்ந்ததாகவோ அல்லது தீயொழுக்கம் சார்ந்ததாகவோ அமைகின்றது.

- உதாரணமாக பலமான ஈமானைக் கொண்ட ஒருவர் ஏழைகளைக் காணும் போது அவரது உள்ளத்தில் அன்பு எனும் மனவெழுச்சி மேலெழுகிறது. இப்போது தயக்கமின்றி தன்னிடம் உள்ளதை தர்மமாகக் கொடுத்துதவுகிறார். இன்னொருவரிடம்

ஈமான் பலவீனமாகவே இருக்கிறது. அவரிடம் ஓர் ஏழை உதவிக்காக கை நீட்டும் போது அவரிடம் உலோபித்தனம் மேலோங்குகிறது. தர்மம் செய்வதைத் தவிர்த்து கேட்டுவந்தவரை வெறும் கையுடன் திருப்பியனுப்புகிறார்.

- ஈமானின் பலவீனமான நிலையில் வெளிப்படும் இரக்கமற்ற கருமித்தனத்தை அல்குர்ஆன் சாடுகிறது. ''மறுமை நாளைப் பொய்யாக்குபவனைப் பார்த்திருக்கின்றீரா? அவன் தான் அநாதைகளை விரட்டுவான். ஏழைகளுக்கு உணவளிக்கத் தூண்டவும் மாட்டான்..'' ( 107:1-3)

- ஒரு மனிதன் தீய மனவெழுச்சிக்கு ஆளாகி தீய செயல்களைச் செய்வாராயின் அது அவரது ஈமானின் பலவீனத்தைக் காட்டுவதாக ஹதீஸூம் தெளிவுபடுத்துகிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''விபசாரம் புரிபவன் விபசாரம் புரியும்போது மு.்.மினான நிலையில் அவ்வாறு செய்யமாட்டான். திருடன் திருடும் போது மு.்.மினான நிலையில் திருடமாட்டான். ஒருவன் மது அருந்தும் போது மு.்.மினான நிலையில் மது அருந்த மாட்டான்.'' (புஹாரி, முஸ்லிம்)

- ஈமான் கொண்ட ஒரு மனிதனின் செயற்பாடுகளை நல்லொழுக்கங்களால் அலங்கரிக்கும் சிறந்த மனவெழுச்சிப் பண்பாக பொறுமையையும் நன்றியுணர்வையும் ஹதீஸ் அடயாளப்படுத்துகிறது.

- நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''மு.்.மினின் விடயம் ஆச்சரியமனது. ஏனெனில் அனைத்தும் அவருக்குச் சிறப்பாகவே அமைகிறது. அவருக்கேதும் மகிழ்ச்சிக்குரிய விடயங்கள் நிகழுமாயின் நன்றி செலுத்துவார். அது அவருக்கு நலவாக அமைகிறது. அவருக்கேதும் கவலைக்குரிய விடயங்கள் நிகழுமாயின் பொறுமையுடன் இருப்பார். அது அவருக்கு நலவாக அமைகிறது''.

- இஸ்லாம் ஈமானையும் அமலையும், ஈமானையும் அக்லாக்கையும், அமலையும் அக்லாக்கையும் என ஒவ்வொன்றையும் இவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தியே போதிக்கிறது. தொடர்பு படுத்தும் விதத்தைப் பின்வரும் வரிப்படம் விளக்குகிறது.




**படத்திற்கான விளக்கம்**

- ஈமான் ஆனது இபாதாத் முஆமலாத் அக்லாக் ஆகியவற்றுடன் தனித்தனியாக இருவழித் தொடர்பைக் கொண்டுள்ளது. இது இபாதாத், முஆமலாத், அக்லாக் ஆகியன ஈமானின் பிரதிபலிப்பாக இருப்பது போலவே அவை ஒவ்வொன்றும் ஈமானுக்குச் சான்று பகர்வனவாயும் உள்ளன என்பதை விளக்குகிறது.

- ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் ஈமானின் அளவுக்கு ஏற்பவே அவற்றின் தரம் அமைகிறது. தரத்துக்கு ஏற்பவே அல்லாஹ்விடம் வெகுமதி வழங்கப்படுகிறது. ஈமான் இல்லாத அமல்கள் பயனற்ற கானல் நீர் போன்றது.

- ஈமானுடன் ஒன்றறக் கலந்த இபாதாத், முஆமலாத், அக்லாக் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு சுழற்சி முறையில் காணப்படுகிறது. அதாவது, இபாதாத் சிறந்த அக்லாக்குகளை ஏற்படுத்தும் போது முஆமலாத் சிறப்புறுகிறது. அப்போது முஆமலாத் இபாதத் ஆக மாறுகிறது.

- ஈமான், அமல், அக்லாக் ஆகியவற்றிற்கிடையில் இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள தொடர்பை விளக்கப் பின்வரும் உதாரணம் மிகவும் பொருத்தமானது. ஈமான் உயிர் போன்றது. அமல் உடல் போன்றது. அக்லாக் உடலை மறைக்கும் ஆடை அணிகலன் போன்றன. எனவே ஒரு முஸ்லிம் ஈமான் மூலம் வெளிப்படும் அமல்களை அஹ்லாக் எனும் ஆடை அணிகலன்களினால் அலங்கரிப்பவனாக இருக்க வேண்டும். இதுவே அவனது இம்மை மறுமை வெற்றிக்கு வழியாகும்.

**தேர்ச்சி 02 : இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளை விளங்கி தன் வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3 : அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆவின் அகீதாவை விளங்கி அதன் அடிப்படையில் தனது நம்பிக்கையையும் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**பாடவேளைகள் : 25**

**கற்றற்பேறுகள் :**

- அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா கோட்பாட்டை தெளிவாக அறிந்து அதனைப் பின்பற்றுவார்.
- தவ்ஹீதைப் பாதிக்கும் அம்சங்களை விளங்கி விலகி நடப்பார்.
- அகீதாவில் முரண்பட்ட சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற்றமைக்கான பின்னணியையும் அவை ஏற்படுத்திய விளைவுகளையும் மதிப்பிடுவார்.
- ஈமானைப் பாதிக்கும் அம்சங்களின் தீய விளைவுகளை அறிந்து அவற்றிலிருந்து விலகி நடப்பார்.
- அகீதாவில் முரண்பட்ட சிந்தனைப் பிரிவுகளையும், செயற்பாடுகளையும் இனங்கண்டு அவற்றிலிருந்து விலகி நடப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**
**அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ**

- அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ என்றால் மொழிரீதியாக குறித்த வழிமுறையைச் சார்ந்தோர் என்ற பொருளுடைய “அஹ்லுஸ் ஸுன்னா” என்ற பதமும் குறிப்பிட்ட கூட்டத்தினர் என்ற பொருளுடைய “அல்ஜமாஆ” எனும் பதமும் இணைந்த ஒரு சொற்றொடராகும். இவ்வகையில் மொழிரீதியாக வழிமுறை சார்ந்த கூட்டம் என்று பொருள் கொள்ளலாம். இஸ்லாமிய மரபில் அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் அவற்றை முழுமையாக அடியொட்டி வாழ்ந்த ஸலபுஸ்ஸாலிஹீன்களாகிய ஸஹாபாக்கள் தாபிஈன்கள் தபஉத் தாபிஈன்கள் ஆகியோர் வழியில் செல்லும் முஸ்லிம் சமூகம் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ எனப்படுகிறது. இவர்கள் அஹ்லுல் அஸர். அஹ்லுல் ஹதீஸ், தாஇபதுல் மன்ஸுரா, பிர்கதுன் நாஜியா போன்ற சொற்களாலும் அழைக்கப்படுகின்றனர்.

**தோற்றம்**

- நபியவர்களின் பிரச்சாரத்தை ஏற்று எப்போது அவர்களைச் சூழ மக்கள் ஒன்றுகூட ஆரம்பித்தார்களோ அப்போதிருந்தே அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ தோற்றம் பெற்றது. என்றாலும் இப்பெயர் கொண்டு அந்தச் சமூகம் அப்போது அழைக்கப்படவில்லை. கலீபா அலி(ரழி) அவர்களது காலத்தில் ஏற்பட்ட அரசியல் சார்ந்த கருத்து வேறுபாடுகளால் தோன்றிய சில இயக்கங்கள் குர்ஆன் ஸுன்னாவுக்கு மாற்றமான நம்பிக்கைகளைத் தோற்றுவித்தமையினாலும் கிரேக்க பாரசீக இந்திய

தத்துவங்களின் செல்வாக்குக் காரணமாக ஈமான் சார்ந்த விடயங்களை சில முஸ்லிம்கள் தத்துவ விசாரணைக்கு உட்படுத்தியமையினாலும் வேறுபட்ட நம்பிக்கைகளையுடைய பல பிரிவுகள் முஸ்லிம் சமூகத்தில் தோற்றம் பெற்றதுடன் அவை ஒவ்வொன்றும் தாம் மாத்திரமே சரியான வழியில் செல்வோர் என்றும் வாதிட்டது

- இவ்வாறான சூழலில் சரியான நம்பிக்கைகள் யாவை? சரியான வழியில் செல்லும் கூட்டத்தினர் யாவர்? அவர்களது பண்புகள் யாவை? போன்ற வினாக்கள் எழுந்த போதே அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் முழுமையாக அடியொட்டி வாழ்ந்த ஸலபுஸ்ஸாலிஹீன்களாகிய ஸஹாபாக்கள் வழியில் வளர்ந்து வந்த முஸ்லிம் சமூகத்தை அடையாளப்படுத்திக் காட்டுவதற்காக அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ என்ற சொற்பிரயோகம் உபயோகிக்கப்பட்டது. அத்துடன் அக்கால அறிஞர்கள் தூய அகீதாவைப் பாதுகாப்பதற்காகவும் இனங்காட்டுவதற்காகவும் இல்முல் அகாஇத் என்ற கலையையும் உருவாக்கினார்கள்.

- முஸ்லிம்கள் மத்தியில் பல பிரிவுகள் தோன்றும் காலத்தில் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவைச் சார்ந்தவர்களே நேரான வழியில் செல்பவர்களாகவும் மறுமையில் வெற்றிபெறும் கூட்டத்தினர்களாகவும் இருப்பர் என்பதற்குப் பல ஹதீஸ்கள் ஆதாரமாய் உள்ளன. உதாரணத்துக்காக

- “பனூ இஸ்ரவேலர்கள் 71 பிரிவினராகப் பிரிந்தனர். எனது உம்மத்தினர் 73ஆகப் பிரிந்து விடும். அவற்றுள் ஒன்றைத்தவிர அனைத்தும் நரகம் செல்பவைகளாகும். அந்த ஒன்று எது என்று வினவப்பட்டதற்கு நானும் எனது தோழர்களும் சென்ற வழியில் செல்வோர்” (திர்மிதி)

- “உங்களுக்கு முன் சென்ற வேதம் வழங்கப்பட்டோர் 72 கூட்டத்தினராகப் பிரிந்தனர். இந்த மார்க்கத்தினர் 73 கூட்டத்தினராகப் பிரிந்து செல்வர். அவற்றுள் 72 கூட்டத்தினர் நரகம் நுழைவர்.

- முஸ்லிம்களின் மத்தியில் ஏற்படும் பிரிவுகள் தொடர்பாக வந்துள்ள ஹதீஸ்களை ஆய்வுசெய்த இமாம் இப்னு தைமியா(ரஹ்) அவர்கள் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவையும் ஏனைய பிரிவினர்களையும் பற்றிக் கூறுகையில் “அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவை சேர்ந்தோரே வெற்றிபெற்ற பிரிவினராவர். அவர்களே மிகப்பெரிய கூட்டத்தினருமாவர். ஆனால் எஞ்சிய பிரிவினரோ தனித்துச் செல்கின்ற பிரிந்து செல்கின்ற மனோ இச்சையைப் பின்பற்றும் நூதனமானோராவர். இவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருப்பர். வெற்றிபெற்ற பிரிவினரின் அளவை இவர்களால் ஒருபோதும் அடைய முடியாது. இவர்களது கோஷம் குர்ஆனையும் ஸுன்னாவையும் இஜ்மாவையும் புறக்கணிப்பதாகும். யார் குர்ஆனையும் ஸுன்னாவையும் இஜ்மாவையும் அடிப்படையாக வைத்துப் பேசுகிறாரோ அவர் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சார்ந்தவராவார்” எனக் குறிப்பிடுகிறார்.

**அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா**

- அகீதா என்றால் நம்பிக்கைக் கோட்பாடு என்று பொருள். கடவுள், ஆவிகள், வேதங்கள், மரணத்தின் பின்னுள்ள நிலை, பிரபஞ்சத்தினதும் அதிலுள்ள உயிருள்ள

உயிரற்றவைகளினதும் தோற்றம், விதி, மனிதர்கள் செய்யும் நன்மை தீமைகளுக்கு ஏற்ப அவர்களது முடிவுகள் போன்ற மறைவான விடயங்கள் குறித்து மனித உள்ளங்களில் எழும் ஐயங்களுக்கு வழங்கப்படும் விடைகளே நம்பிக்கைக் கோட்பாடுகளாகும். அந்நம்பிக்கைக் கோட்பாட்டுக்கமைய மனிதன் தன் வாழ்வை அமைத்துக்கொள்கிறான்.

- மனிதர்கள் நான்கு அடிப்படைகளில் தமது நம்பிக்கைக் கோட்பாடுகளை அமைத்துக் கொள்கின்றனர்.

  1. இறைவழிகாட்டல் என்று நம்பப்பட்ட மூலங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளல்.

  2. புலன்களையும் பகுத்தறிவையும் மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளல்

  3. இறைவழிகாட்டல்களின் உள்ளடக்கங்களுக்குத் தம்மிடம் உள்ள மூடநம்பிக்கைகள் அல்லது தமது பகுத்தறிவு கூறும் விளக்கத்தினை அடிப்படையாகக் கொள்ளல்

  4. கனவுகளையும் கற்பனைகளையும் அடிப்படையாகக் கொள்ளல்

- இந்நான்கு அடிப்படைகளிலும் முதல் அடிப்படையின் மீதே அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இவ்வகையில் இவர்களது அகீதாவின் அடிப்படை மூலாதாரங்கள் மூன்று. அவை அல்குர்ஆன், அல்ஹதீஸ், ஸலபுஸ் ஸாலிஹீன்களின் இஜ்மா ஆகியனவாகும்.

- பிற்காலத்தில் முஸ்லிம் உம்மத்திற்கு மத்தியில் கருத்து வேறுபாடுகளும் பிளவுகளும் உண்டாகிய போது அதற்குக் காரணமாக இருந்த நம்பிக்கை சார்ந்த கருத்துச் சிக்கல்கள் மேற்கூறப்பட்ட அல்குர்ஆன், அல் ஹதீஸ், ஸலபுஸ் ஸலாலிஹீன்களின் இஜ்மா என்ற மூன்று அடிப்படைகளில் சீர்செய்யப்பட்டன. அவ்வாறு சீர்செய்யப்பட்ட நம்பிக்கைகளே இன்று அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாத்தினரின் அகீதாவாகக் கொள்ளப்படுகிறது. அவற்றுள் முக்கியமான சிலவற்றை நோக்குவோம்

**அல்லாஹ்**

- அல்லாஹ்வே இவ்வுலகின் படைப்பாளன். அவனுக்கு ஆரம்பமோ இறுதியோ இல்லை. பரிபூரணத்துவத்தின் எல்லாப்பண்புகளையும் பெற்ற அவன் குறைகுற்றங்களைக் கொண்ட எல்லாத் தன்மைகளிலிருந்தும் தூய்மையானவன். அனைத்தும் அறிந்தவன். எல்லாவற்றின் மீதும் சக்தியுடையவன். தனது நாட்டப்படி சுதந்திரமாக செயற்படக் கூடியவன். நித்திய ஜீவன். கேட்பவன், பார்ப்பவன்,அவனுக்கு நிகராக, சமமாக எவரும் இல்லை; எதுவுமில்லை. வணக்கத்துக்குரியவன் அவன் மட்டுமே. நோயை குணப்படுத்துபவனும் ரிஸ்கை வழங்குபனும் துன்பங்களை நீக்குபனும் அவனே. அவன் ஒன்றை நாடினால் ஆகுக என்றால் போதுமானது. அது ஆகிவிடும். அவன் எதிலும் குடிகொள்வதில்லை. எவற்றுடனும் இணைவதுமில்லை. சங்கமமாவதுமில்லை. அவன் தன்னில் நிலைத்திருப்பவன். அவன் ஒரு சடமோ வஸ்துவோ ஸ்தூலமோ அல்ல. அவன் நாடியது நடக்கும்; நாடாதது நடக்காது. அவன் தேவைகள் அற்றவன். மு.்.மின்கள் மறுமையில் அவனைக் காணும் பேற்றைப் பெறுவர்.

- நன்மையும் தீமையும் அவனது நாட்டப்படியும் நிர்ணயப்படியுமே நடக்கின்றன. நிகழ்ந்தவை நிகழ இருப்பவை அனைத்தும் அவனது நாட்டப்படியும் திட்டப்படியுமே ஏற்படுகின்றன.

**ரூஹுகள்**

அல்லாஹ்வின் படைப்புக்களில் மலக்குகள், ஷைத்தான்கள், ஜின்கள் என்பன ஸ்தூல உடலமைப்பில்லாத ஆன்மாக்களாகும். அவற்றுள் மலக்குகள் ஒளியினாலும் ஷைத்தான்களும் ஜின்களும் நெருப்பினாலும் படைக்கப்பட்டவை. மலக்குகள் அல்லாஹ்வின் கட்டளைப்படி அடியார்களின் நலன்களைக் கவனித்து வருவதுடன் வானத்திலும் பூமியிலும் பல பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**அல்குர்ஆன்**

அல்குர்ஆன் அல்லாஹ்வின் கலாமாகும். அது நபியவர்களது கண்காணிப்பின் கீழ் முழுமையாக எழுதப்பட்டு அபூபக்ர் (ரழி) அவர்களது காலத்தில் எவ்விதக் கூட்டலோ குறைத்தலோ இன்றி தொகுத்து நூலுருப்படுத்தப்பட்டு அனைத்து ஸஹாபாக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அல்குர்ஆனுக்கு முன்பு இன்னும் பல இறைவேதங்கள் இருந்தன. அவை அல்குர்ஆன் மூலம் மாற்றப்பட்டு செல்லுபடியற்றதாகிவிட்டன.

**மறுமை**

மரணத்தின் பின் ஒரு வாழ்வு உண்டு. அதுவே ஆலமுல் பர்ஸக் கப்ருடைய வாழ்வாகும். உலக அழிவின் பின் மறுமை வாழ்வு ஆரம்பமாகும். அங்கு ப.்.ஸ், ஹஷ்ர், ஷபாஅத், விசாரணை, மீஸான், ஸிராத், சுவனம், நரகம் உண்டு என நம்ப வேண்டும்.

**பாவம்**

பெரும் பாவத்தில் ஈடுபட்ட முஸ்லிம் பாவியாவார். ஆனால் காபிரல்ல. பெரும் பாவங்களில் ஈடுபட்ட முஸ்லிம் நரகம் நுழைந்தாலும் நிரந்தரமாக அங்கு தங்க மாட்டார். பாவங்கள் செய்த மு.்.மினை அல்லாஹ் நாடினால் மன்னித்து சுவனம் நுழைவிப்பான். நாடினால் தண்டித்து பின்னர் சுவனம் நுழைவிப்பான்.

குப்ரையோ, ஷிர்க்கையோ உண்டாக்கும் ஒரு கருமத்தில் ஈடுபடாத நிலையில் ஒரு முஸ்லிமை காபிர் என்பது பெரும் குற்றமாகும். ஒரு பாவத்தை பாவம் அல்ல எனக் கருதுவதும் ஒரு ஹராமை ஹராமல்ல எனக் கொள்வதும் குப்ரை ஏற்படுத்தும். ஷரீஅத்தைப் பரிகாசம் செய்வதும் குப்ரை ஏற்படுத்தும் ஒரு கருமமாகும்.

**ஷபாஅத்**

- ''ஷபாஅத்'' என்பது பரிந்துரையைக் குறிக்கின்றது. மறுமையில் ஷபாஅத் செய்ய யாருக்கு அல்லாஹ் அனுமதிக்கின்றானோ அவர்களே அதனை செய்ய முடியும். அதனை ஏற்பதும் மறுப்பதும் அல்லாஹ்வினதும் எல்லையற்ற கருணைக்கு உட்பட்டதாகவே அமையும். ஷபாஅத் பற்றி அல்குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. (2:48, 2:254, 39:43-44, 4:48, 40:18, 20:109)

ஷபாஅத் பெறுவோர் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

‘‘எனது ஷபாஅத்திற்கு மிகவும் அருகதையுடையோர் ‘‘லாஇலாஹ இல்லல்லாஹ்’’ என்ற கலிமாவை பரிசுத்தமான உள்ளத்தோடு மொழிந்தவராவர்.’’ (முஸ்லிம்) ஹதீஸ்களை ஆதாரமாக வைத்து அறிஞர்கள் ஷபாஅத்தை பல பிரிவுகளாக வகைப்படுத்தியும் காட்டியுள்ளார்கள்.

**ரிஸாலத்**

- மனித சமுதாயத்துக்கு வழிகாட்டுவதற்காக காலத்துக்குக் காலம் நபிமார்கள், றஸூல்மார்கள் அனுப்பப்பட்டமை உண்மையானது. அல்லாஹ் இவர்கள் மூலமாக தனது அடியார்களுக்குப் பல ஏவல்களையும் விலக்கல்களையும் வழங்கியமை உண்மையானது. அவர்கள், ஏனைய மனிதர்களுடன் ஒப்பிடும் போது பல சிறப்பம்சங்களை பெற்றிருந்தனர். மு∴ஜிஸாத் எனும் அற்புதங்கள், சீரான இயல்பு, உயர் பண்புகள், “இஸ்மத்” அதாவது பாவங்கள், பிழைகள் செய்வதிலிருந்து பாதுகாப்பு ஆகியன அவற்றுள் பிரதானமானவையாகும். நபிமார்கள், றஸூல்மார்கள் அனைவரையும் எத்தகைய வேறுபாடும் பாகுபாடும் இன்றி நம்புதல் வேண்டும். இறைவேதங்களையும் நம்புதல் வேண்டும்.

- முஹம்மத்(ஸல்)அவர்கள் இறுதி நபியாவார்கள். அவர்களுக்குப்பின் வேறொரு நபி வரப்போவதில்லை. அவர்களின் தூது மனித, ஜின் வர்க்கத்தினருக்குப் பொதுவானதும் மறுமை வரை நிலைத்து நிற்பதுமாகும். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நபிமார்கள், றஸூல்மார்களில் உயர்ந்தவராவார். தனக்கே உரிய பல சிறப்பம்சங்களையும் அன்னார் பெற்றிருந்தார்கள். அவர்கள் இஸ்ரா, மி∴ராஜ்-விண்ணுலக யாத்திரையில் ஈடுபட்டார்கள் என்பதும் சத்தியமானதாகும்.

**ஸஹாபாக்கள்**

- மு∴மின்களில் உயர்ந்தவர்கள் நபித்தோழர்களான ஸஹாபாக்களாவார்கள். நபிமார்களுக்கு அடுத்த நிலையில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் இவர்களே. சுவனத்தைக் கொண்டு சுபசெய்தி கூறப்பட்ட பத்து நபித்தோழர்கள் உள்ளனர். “அஹ்லுல் பைத்” எனும் நபி(ஸல்) அவர்களின் குடும்பத்தையும் மு∴மின்களின் தாய்மார்களான அன்னாரின் மனைவிமார்களையும் கௌரவப் படுத்தல் வேண்டும். அவர்கள் மீது அன்பு கொள்ளல் வேண்டும். மேலும் ஸஹாபாக்கள் அனைவரும் நம்பிக்கையும் நாணயமும் கொண்டவர்கள் என்பதுவும் அவர்களுள் அபூபக்ர் (ரழி), உமர்(ரழி), உஸ்மான்(ரழி), அலி(ரழி) ஆகியோர் முறையே சிறப்பிடம் பெறுவர் என்பதும் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் நம்பிக்கையாகும்.

**வலிமார்கள்**

- இறைநேசர்களே வலிமார்கள் எனப்படுவார்கள். அல்லாஹ், தான் விரும்பியவர்களுக்கு அந்தத் தரத்தை வழங்குகின்றான். அவர்கள் ஷரீஅத்தை முழுமையாக விருப்புடனும், அர்ப்பணிப்புடனும் பின்பற்றுவார்கள். அறிவு, தக்வா, இஹ்லாஸ், வரஉ, இபாதா முதலிய பண்புகளோடு தமது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வர். இவர்கள் சன்மார்க்க கடமைகள் எதிலிருந்தும் விதிவிலக்களிக்கப்பட்டவர்களல்லர். இவர்களுக்கு இறையருளால் வழங்கப்பட்ட ஓர் அம்சமே கராமத் ஆகும்.

### கத்ர்

- நன்மை தீமை அனைத்தும் அல்லாஹ் விதித்தவாறே நடைபெறுகிறது. அல்லாஹ் வழங்க நாடியதை எவராலும் தடுக்க முடியாது. அல்லாஹ் தடுக்க நாடியதை எவராலும் வழங்க முடியாது. மனிதர்கள் நேர்வழியில் செல்வதும் வழிகேட்டில் செல்வதும் அல்லாஹ்வின் கையில் உள்ள அதேநேரம், அவர்களுக்கு செயல்சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது.

### புனிதத் தலங்கள்

- முஸ்லிம்களின் புனிதத் தலங்கள் முறையே மக்காவில் உள்ள மஸ்ஜிதுல் ஹராமும் மதீனாவில் உள்ள மஸ்ஜிதுன் நபவியும் பலஸ்தீனில் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவும் மாத்திரமே. இவை அல்லாத வேறு எந்த ஓர் இடத்துக்கும் யாத்திரை செய்வது ஆகாது.

### தவ்ஹீதுக்கு எதிரானவை

- இஸ்லாமிய அகீதாவில் தவ்ஹீத் மிக முக்கிய அம்சமாகும். தவ்ஹீத் என்ற பதம் வஹ்ஹத என்ற வினையில் இருந்து தோன்றியதாகும். வஹ்ஹத என்றால் ஒன்றாக்கினான் என்று பொருள். அதன்படி தவ்ஹீத் என்றால் இஸ்லாமிய மரபில் ‘‘அல்லாஹ் ஒருவனை மாத்திரமே கடவுளாக ஏற்றுக் கொள்ளல்’’, ‘‘கடவுளுக்குரிய சகல இலட்சணங்களையும் மரியாதையையும் அல்லாஹ்க்கு மாத்திரமே வழங்கல்’’, ‘‘கடவுளின் மதிப்பையும் கண்ணியத்தையும் பாதிக்கும் அனைத்துக் குறைபாடுகளில் இருந்தும் அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தல்’’ போன்றன பொருளாகக் கொள்ளப்படுகின்றன. அத்துடன் தவ்ஹீத் சிந்தனைக்கு முரணான நம்பிக்கைகள், செயற்பாடுகள், மனப்பாங்குகள் அனைத்தும் தவ்ஹீதுக்கு எதிரானவைகளாகக் கருதப்படுகின்றன. இஸ்லாம் தவ்ஹீத் சார்ந்த விடயங்களை வலியுறுத்துவதுடன் அதற்கு எதிரான அனைத்தையும் கடுமையாகக் கண்டிக்கின்றது. தவ்ஹீத் கோட்பாட்டுக்கு முரணான விடயங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

  1. ஷிர்க்
  2. குப்ர்
  3. ரித்தத்
  4. நிபாக்
  5. இல்ஹாத்

### ஷிர்க்

- ‘‘ மொழி அடிப்படையில் பங்காளியாக்குதல் எனப் பொருள் தரும் ஷிர்க் என்ற பதம் தவ்ஹீத் என்ற பதத்திற்கு நேர் எதிரானதாகும். முழுப்பிரபஞ்சத்தையும் படைத்துக்காக்கும் அல்லாஹ்வின் உலூஹிய்யத். ருபூபிய்யத், தாத், ஸிபாத் ஆகியவற்றில் அல்லாஹ்வுக்கு இருக்கும் தனித்துவங்களை இன்னொன்றுக்கு வழங்குவதோ அல்லது அல்லாஹ்வுக்காக மாத்திரம் நிறைவேற்றப்பட வேண்டிய

விடயங்களை இன்னொன்றுக்காகவும் நிறைவேற்றுவதோ இஸ்லாமிய வழக்கில் ஷிர்க் என்று அழைக்கப்படுகிறது''.

- ''நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். இதனைத் தவிர (மற்ற) எதனையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். எவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றார்களோ அவர்கள் நிச்சயமாக மிகப் பெரும் பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.''(4:48)

- உலக வரலாற்றை நோக்கும் போது ஷிர்க் தவ்ஹீதை மிகைத்து அதன் பிரகாசத்தை முழுமையாக மழுங்கச் செய்த காலங்களிலேயே அல்லாஹ் தவ்ஹீதை மீளவும் நிலைநிறுத்துவதற்காக நபிமார்களை அனுப்பியுள்ளான். ஆகவேதான் அல்குர்ஆன் குறிப்பிடும் அனைத்து நபிமார்களினதும் போராட்டம் முதலில் ஷிர்க்குக்கு எதிரானதாக காணப்படுகிறது.

**ஷிர்க்கின் வகைகள்**

ஷிர்க்

ஷிர்க் அவற்றின் பாரதூரத்திற்கு ஏற்பவும் அவற்றின் தன்மைகளுக்கு ஏற்பவும் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கப்படுகிறது.

1. ஷிர்க் அல் அக்பர்
2. ஷிர்க் அல் அஸ்கர்

1. **ஷிர்க்குல் அக்பர்:** இது மிகவும் பாரதூரமானது என்பதனாலேயே பெரிய வகை ஷிர்க் என்று அழைக்கப்படுகிறது. தான் மன்னிக்காத குற்றம் என்று அல்லாஹ் இதனையே கூறுகின்றான். இது ஜலி, கபி என்று இரு வகைப்படுகிறது.

- **ஷிர்குல் ஜலி**(தெளிவான ஷிர்க்)**:** அல்லாஹ் அல்லாதவற்றை கடவுள் என்றோ அல்லது கடவுளுக்கு நிகரானதென்றோ அல்லது கடவுள்தன்மை கொண்டதென்றோ நினைத்து அவற்றை வணங்குவது ஷிர்க்குல் ஜலி எனப்படும். இங்கு வணங்கப்படும் பொருளும் வணக்கத்திற்குரிய செயற்பாடும் மயக்கமின்றித் தெளிவாகக் காணப்படும். உ-ம்: சூரியன், சந்திரன். விக்கிரகங்கள், கற்கள், மிருகங்கள், ஜின்கள், ஷைத்தான்கள், மனிதர்கள்.

- **ஷிர்குல் கபி**(மறைவான ஷிர்க்): அல்லாஹ் அல்லாதவற்றை கடவுள் என்று கருதி அவற்றை வணங்காவிட்டாலும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரிய உரிமைகளை அவனல்லாதவற்றுக்கு வழங்குவது ஷிர்குல் கபி எனப்படும். இங்கு மேற்கொள்ளப்படுகின்ற செயல் வெளிப்படையில் வணக்கம் போன்று தென்படாமல் இருப்பதே இவ்வாறு அழைக்கப்படக் காரணமாகும். உ-ம்: மரணித்தவர்களிடம் உதவி தேடல், அவர்களிடம் பிரார்த்தித்தல், சட்டமியற்றும் அதிகாரத்தை அல்லாஹ் அல்லதாவற்றுக்கு வழங்குதல் போன்றன.

ஷிர்குல் கபி மயக்கமாக இருப்பதன் காரணமாக அது பற்றிய விளக்கமில்லாத அதிகமானோர் ஷிர்க்குல் அக்பர் என்ற பெரும் பாவத்தைச் சர்வ சாதாரணமாகச் செய்கின்றமை ஆபத்தான விடயமாகும்.

2. **ஷிர்குல் அஸ்கர்:** ஷிர்குல் அக்பரோடு ஒப்பிடுகையில் இது பாரதூரம் குறைந்ததனாலேயே அவ்வாறு அழைக்கப்படுகிறது. எனினும் இதுபற்றியும் இஸ்லாம் கடுமையாக எச்சரிக்கிறது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "தஜ்ஜாலுடைய பித்னாவை விடவும் சிறிய ஷிர்க் ஆபத்தானது." அல்லாஹ்வைப் பற்றிய அறிவும் தவ்ஹீத் பற்றிய நம்பிக்கையும் குறைந்து செல்கின்ற போதே இவ்வகையான ஷிர்க் தோற்றம் பெறுகிறது.

- இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருவனவற்றை சிறிய வகையான ஷிர்க் என அடையாளப்படுத்துகின்றனர்.

1. அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தல்
2. நூல், வளையம் என்பன கட்டுதல்.
3. மந்திரித்தல்
4. சூனியம்செய்தல்
5. வசியம் செய்தல்
6. சோதிடம் பார்த்தல்
7. சகுனம் பார்த்தல்
8. அல்லாஹ் அல்லாதவற்றின் பெயரில் நேர்ச்சை வைத்தல்
9. அல்லாஹ் அல்லாதவற்றுக்காக பலியிடுதல்

**ஷிர்க்கின் விளைவுகள்**

1. நற்காரியங்கள் அனைத்தும் பயனற்றுப் போகின்றன.(39:65),(6:88)
2. அல்லாஹ்வின் மன்னிப்புக் கிடைக்காமல் போகின்றது. (4:48)
3. இறை இல்லத்தை மாசுபடுத்துகிறது (9:28)
4. காற்றில் அகப்பட்ட துரும்பைப் போன்று அலைக்கழிக்கப்படுவான் (22:31)
5. சுவர்க்கம் ஹராமக்கப்பட்டு நரகத்தில் நிரந்தரமாகத் தள்ளப்படுவான் (5:72)
6. மனித சமூகத்தின் ஒருமைப்பாடு குலைந்து போகும்

- ஒருவர் இணைவைப்பவராக இருந்து பின் ஏகத்துவத்துவத்தை ஏற்று அதன் அடிப்படையில் செயற்பட்டால் அவரது முன்னய பாவங்கள் மன்னிக்கப்படும்

**அல் இல்ஹாத்**

- மொழி அடிப்படையில் அல்இல்ஹாத் என்ற சொல் நோக்கத்தை விட்டுத் திரும்புதல், புனிதத்துவத்தை இல்லாமல் செய்தல், மார்க்கத்தைப் பொய்ப்பித்தல் போன்ற கருத்துக்களைத் தருகின்றன. பரிபாசையில் கடவுளையும் மதங்களையும் நிராகரித்து

இப்பிரபஞ்சமும் அதிலுள்ள உயிரினங்களும் தானாகத் தோன்றியவை என்று நம்பும் நாஸ்திக வாதத்ததைக் குறிக்கின்றது.

**தோற்றமும் வளர்ச்சியும்**

- நாஸ்திக நம்பிக்கை சமய நம்பிக்கைக்குப் பின் தோன்றிய ஒன்றாயினும் அதுவும் பழமையான ஒரு நம்பிக்கையாகவே உள்ளது. ஒரு சமயம் போதிக்கப்படுகின்றபோது அதற்கு முரணான வேறு சமய நம்பிக்கைகளும் சமய நம்பிக்கைக்கு விரோதமான நாஸ்திக நம்பிக்கைகளும் சமகாலத்தில் இருந்துள்ளமையை வரலாற்றில் அறிய முடிகிறது. இதற்குச் சிறந்த உதாரணமாக இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தைக் குறிப்பிடலாம். அக்காலத்தில் பிரதான கடவுள் நம்பிக்கையாக சிலைவணக்கம் காணப்பட்டது. அத்துடன் மனிதனது பிறப்பு இறப்பு குறித்த நாஸ்திக நம்பிக்கையுடையவர்களும் இருந்தனர். அவர்களைப்பற்றி குர்ஆன் கூறும்போது மேலும் (மறுமையை நம்பாத) அவர்கள் : இது நமது உலக வாழ்க்கையைத் தவிர வேறு வாழ்க்கை கிடையாது. நாம் இறக்கிறோம். இன்னும் வாழ்கிறோம். காலம் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை" என்று கூறினார்கள். அவர்களுக்கு அது பற்றிய அறிவு கிடையாது. அவர்கள் (இது பற்றி கற்பனையாக) எண்ணுவதைத் தவிர வேறில்லை. (45:24)

- இஸ்லாத்திற்கு முந்திய வேதங்கள் போதிக்கப்பட்ட காலங்களிலும் இத்தகைய நாஸ்திக நம்பிக்கையுடையவர்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் அவ்வேத நூல்களில் காணப்படுகின்றன. ஆயினும் நாஸ்திக நம்பிக்கையுடையோர் சமய நம்பிக்கை பிந்திய காலத்தில் தோன்றியது என்று வாதிக்கின்றனர்.

- இஸ்லாமியப் பிரசாரத்தின் ஆரம்ப காலங்களில் நாஸ்திக நம்பிக்கை அறிவியற் பின்னணியுடன் காணப்படவில்லை. இஸ்லாமிய நம்பிக்கை தன்வாழ்வை நெறிப்படுத்துவதை விரும்பாத மனிதன், மனோ இச்சைப்படி வாழ நினைத்தான். வாழ்க்கை என்றால் உண்ணல், குடித்தல், உறங்கல், பாலின்பம் அனுபவித்தல் என்பவற்றுக்கு அப்பால் வேறெந்த இலட்சியத்தையும் காண்கின்ற அளவுக்கு அவனது அறிவு மட்டம் காணப்படவில்லை. எனினும் அறிவார்ந்த அடிப்படைகளில் முன்வைக்கப்பட்ட இஸ்லாம் குறுகிய காலத்தில் அறபுநாட்டிலும் அதற்கு வெளியிலும் வேகமாகப் பரவியதுடன் முஸ்லிம் நாடுகளின் அறிவியல் மறுமலர்ச்சிக்கும் காரணமாய் அமைந்தது.

- மத்திய காலப்பகுதியில் பிற்போக்கான சமய நம்பிக்கைகளால் இருள் சூழ்ந்திருந்த ஐரோப்பாவில் அறிவியல் கருத்துக்கள் முன்வைக்கப்பட ஆரம்பித்த போது மதநம்பிக்கையாளர்கள் கண்மூடித்தனமாக அதனை எதிர்த்தனர். இதனால் படித்தவர் மத்தியில் மதவிரோத சிந்தனைகளும் நாஸ்திக நம்பிக்கைகளும் வலுப்பெற்றன. அவர்கள் உலகினதும் உயிரினங்களினதும் தோற்றத்தினை மதநம்பிக்கைகளில் இருந்து விடுபட்டு பகுத்தறிவு ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் விளக்க முனைந்தனர். இதனால் படித்த ஐரோப்பியர் நாஸ்திகத்தை அறிவார்ந்த நம்பிக்கையாகக் கருதினர். கல்வி மறுமலர்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி ஐரோப்பாவெங்கிலும் நாஸ்திக நம்பிக்கை வளர்வதற்கு பெரும் உந்து சக்தியை வழங்கியது.

- நாஸ்திக நம்பிக்கை அறிவியல் பரிமாணம் பெறுவதற்கு டாவின், பேடன் ரஸல், புரோய்ட், கார்ல்மாக்ஸ் போன்ற அறிவியலாளர்களே காரணம் எனக் குறிப்பிடலாம். இவ்வறிவியலாளர்கள் மதத்தைக் கடுமையாக விமர்சித்தனர். மனிதனைக் கடவுள் படைக்கவில்லை. அவன் பரிணாமத்தால் வளர்ச்சி பெற்றவன் என்றார் டாவின். மனிதனைக் கடவுள் படைத்தால் கடவுளைப் படைத்தது யார் என்று கேட்டார் பேடன் ரஸல். மதம் மனிதனுக்கு அபின் என்றார் கார்ல்மாக்ஸ்.

- ஒக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து கம்யூனிஸ ஆட்சியின் கீழ் வந்த ரஷ்யாவில் நாத்திகம் முழுமையான மத எதிர்ப்பு மனப்பாங்குடன் செயற்பட்டது. ஆனால் முதலாளித்துவ ஐரோப்பாவில் அது மதச்சார்பின்மை என்ற அடிப்படையில் செயற்பட்டது. நாத்திக நம்பிக்கையின் செல்வாக்குடன் இந்நாடுகளில் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்ட பாரிய அபிவிருத்தி, சமய நம்பிக்கைகளைப் பொய்ப்பிக்கும் அவற்றின் பிரச்சாரம் என்பன காரணமாக 19ம் நூற்றாண்டின் தொடக்கத்துடன் நாத்திகம் உலகெங்கிலும் விரைவாகப் பரவ ஆரம்பித்தது. அதற்குப் பின்வருவனவற்றைக் காரணமாகக் குறிப்பிடலாம்.

  1. சமயங்களுக்கிடையிலும் சமயங்களுக்குள்ளும் இருந்த முரண்பாடுகளும் எதிர்ப்புணர்வுகளும்
  2. சமயங்களில் காணப்பட்ட மூடநம்பிக்கைகள்
  3. சமயங்கள் அறிவுபூர்வமான கருத்துப் பரிமாற்றத்தைத் தவிர்த்தமை
  4. சமயங்கள் அறிவியல் கோட்பாடுகளைக் கண்மூடித்தனமாக எதிர்த்தமை
  5. நாத்திக நம்பிக்கையில் காணப்பட்ட கருத்து ரீதியான நடத்தை ரீதியான சுதந்திரம்
  6. நாத்திகத்தின் பின்னணியில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

**மதச்சார்பின்மையின் வகைகள்**

- நாத்திகம் பேசுகின்ற எல்லோரும் ஒரேவிதமானவர்கள் அல்லர். கடவுள் பற்றிய அவர்களது கருத்துக்களுக்கும் நம்பிக்கைளுக்கும் ஏற்ப அவர்கள் மூவகையினராக வகைப்படுத்தி நோக்கப்படுகின்றனர்.

1. முல்ஹிதூன் : கடவுளை முற்றாக நிராகரிப்பவர்கள். மதம், கடவுள் என்பன மனிதர்களின் கட்டுக்கதை என்பதே இவர்களது கருத்தாகும்.
2. லாஅத்ரிய்யா : கடவுள் பற்றிய முடிவான கருத்துக்கு வராதவர்கள். இவர்கள் கடவுளை ஏற்கவும் மாட்டார்கள்; மறுக்கவும் மாட்டார்கள்.
3. ருபூபிய்யூன்கள் : இவர்கள் கடவுளை ஏற்கமாட்டார்கள். ஆனால் உலகை இயக்கும் ஒரு சக்தி இருப்பதாக நம்புவார்கள்.

**இல்ஹாத்தும் இஸ்லாமிய உலகும்**

- சியோனிஸ சூழ்ச்சியின் பின்னணியில உஸ்மானிய கிலாபத் வீழ்ந்ததைத் தொடர்ந்து மதச்சார்பற்ற ஐரோப்பிய நாடுகளும் நாத்திக சோவியத் ரஷ்யாவும் முஸ்லிம் நாடுகளில் தமது சிந்தனையைப் பரப்புவதற்காக மேற்கொண்ட முயற்சியின் பயனாக

முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட பல நாடுகள் மதச்சார்பற்ற நாடுகளாக மாறின.. அதே போன்று இன்னும் சில முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் கம்யூனிஸத்தை பின்பற்றும் ரஷ்யா சார்புள்ள நாடுகளாக மாறின. அதனைத் தொடர்ந்து நாத்திக நம்பிக்கையின் அடிப்படையில் இஸ்லாமிய பெறுமானங்கள் அனைத்தையும் அழித்தொழிப்பதற்கான பல முயற்சிகள் அந்நாடுகளில் மேற்கொள்ளப்படலாயின.

- நாத்திக நம்பிக்கை முஸ்லிம்களின் ஈமானுக்குக் பெரும் சவாலாய் அமைந்த போது அதிலிருந்து இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்காக ஜமாலுத்தீன் ஆப்கானி, முஹம்மது அப்துஹ்", அல்லாமா இக்பால் போன்ற இஸ்லாமிய அறிஞர்கள் கடுமையாக உழைத்தார்கள்.

  1. நாத்திக வாதத்தின் அறைகூவல்களுக்குப் பதில் கூறல்
  2. முஸ்லிம் உம்மத்தை அறிவு பூர்வமாகக் கட்டியெழுப்புதல்

  ஆகிய இரு பரிமாணங்களில் தொண்டாற்றினார்கள். அதன்பயனாக அல்குர்ஆனுக்கான நவீன விரிவுரைகள் தோற்றம் பெற்றன. அத்துடன் நவீன அறிவியலின் இஸ்லாத்துக்கெதிரான அறைகூவல்களுக்கு முன்னால் அறிவார்ந்த அடிப்படையில் முஸ்லிம் உம்மத்தை வழிநடாத்தக்கூடிய இஸ்லாமிய இயக்கங்களும் தோற்றம் பெற்றன.

**நிபாக்**

- நயவஞ்சகம் எனப் பொருள்படும் நிபாக் என்ற சொல் சுரங்கப்பாதை எனப் பொருள்படும் நபக் என்ற மூலச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இவ்விரு சொற்களிலும் முதலாவது பண்புப் பெயராகவும் இரண்டாவது பொருட் பெயராகவும் இருப்பினும் இரண்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. அதாவது சுரங்கப் பாதை எவ்வாறு தரையினால் மறைக்கப்பட்டிருக்கின்றதோ அவ்வாறே நயவஞ்சகம் என்பது மனிதனின் வெளிப்படையான நடவடிக்கைகளால் மறைக்கப்பட்டதாகும். எனவே தான் நயவஞ்சகத்தை அறிஞர்கள் பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்துகின்றனர்.
- உள்ளத்தில் உள்ள நம்பிக்கைக்கு முரணான சொல்லையோ செயலையோ வெளிப்படுத்தல் -இமாம் இப்னுல் அரபி
- வெளிப்படையாக நலவைக் காட்டலும் உள்ரங்கமாக தீயதை மறைத்துக் கொள்ளலும்.- இமாம் இப்னு கஸீர்
- வெளிரங்கத்துக்கு முரணான உள்ரங்கம் - இமாம் இப்னுல் ஹஜர் அல்அஸ்கலானி
- நிபாக் தவ்ஹீதுக்கு முரணானது என்று கூறப்படக் காரணம் நிபாக்கை உடையவர் அதாவது முனாபிக் வெளிப்படையாக தவ்ஹீதுக்கு சார்புடையவராக தன்னை வெளிக்காட்டிக் கொண்டாலும் தனது உள்ளத்தில் அதன் மீது குரோதத்தையும் விரோதத்தையும் மறைத்துக் கொண்டவராகவே காணப்படுவார். தவ்ஹீதுக்கு எதிரான ஏனையவற்றுடன் ஒப்பிடும் போது நிபாக் அவற்றை விடவும் ஆபத்தானது. ஆகவே தான் அல்லாஹ் முனாபிகீன்களைப் பற்றிக் குறிப்பிடும் போது ‘‘நிச்சயமாக

முனாபிக்கள் நரகத்தின் அடித்தளத்தில் இருப்பார்கள்'' (4: 145) என்று குறிப்பிடுகின்றான்.

- அல்குர்ஆன் ஸுன்னாவில் வந்துள்ள நிபாக் பற்றிய கருத்துக்களை ஆய்வு செய்த அறிஞர்கள் அதனை இரண்டாக வகைப்படுத்தி நோக்குகின்றனர்.

- இமாம் இப்னுல் அரபி, இப்னு கஸீர் ஆகியோர் நிபாக்கை நம்பிக்கை சார்ந்தது என்றும் அமல் சார்ந்தது என்றும் வகைப்படுத்தி நம்பிக்கை சார்ந்த நிபாக்கையுடையவர்களே நரகில் நிரந்தரமாகத் தங்குவார்கள் என்றும் செயல் சார்ந்த நிபாக் பெரும் பாவத்தை ஒத்தது என்றும் குறிப்பிடுகின்றனர். இமாம் இப்னு ஹஜர் அவர்கள் அதனை நிபாக்குல் குப்ர் என்றும் நிபாக்குல் அமல் என்றும் வகைப்படுத்தினார். இமாம் இப்னு தைமியா, ஹாபில் இப்னு ரஜப் ஆகியோர் நிபாக்கை மார்க்கத்தில் இருந்து வெளியேற்றிவிடக் கூடிய பெரிய வகை நிபாக் என்றும் மார்க்கத்தில் இருந்து வெளியேற்றும் அளவு பாரதூரம் இல்லாத சிறிய வகை நிபாக் என்றும் வகைப்படுத்தினர்.

- நிபாக்கை வகைப்படுத்துவதில் பெரிய வகை, சிறிய வகை என்ற வகைப்படுத்தலே சிக்கலின்றித் தெளிவானதாகக் காணப்படுகின்றது.

**பெரிய வகை நிபாக்**

- இதனை இமாம் இப்னு ரஜப் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார்: ''பெரியவகை நிபாக் என்பது ஒரு மனிதன் அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும் அவனது வேதத்தையும் அவனது ரஸூல்மார்களையும் மறுமை நாளையும் விசுவாசிப்பது போன்று வெளிரங்கத்தில் காட்டிக் கொண்டு உள்ரங்கத்தில் அவற்றுக்கு முரணான நம்பிக்கையில் இருப்பதாகும்''.

- இமாம் இப்னு தைமியா(ரஹ்) அவர்கள் இது பற்றிக் கூறுகின்ற போது: '' நிபாக்கில் பெரிய வகையும் உண்டு. இந்த வகை நிபாக்கை உடையவர்கள் தான் நரகின் அடித்தளத்தில் இருப்பார்கள். இவர்களுக்கு உதாரணமாக அப்துல்லாஹ் பின் உபை போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இரகசியமாக அல்லாஹ்வின் தூதரைப் பொய்ப்பிக்கலாம். அல்லது அவர் கொண்டு வந்த மார்க்கத்தில் சிலவற்றை நிராகரிக்கலாம். அல்லது அவரை வெறுக்கலாம். அல்லது அவரைப் பின்பற்றுவதைக் கடமை என்பதை நம்பாதிருக்கலாம். அல்லது அவரது மார்க்கம் தோல்வியுறுவதைக் கண்டு மகிழ்ச்சியடையலாம். அல்லது அவரது மார்க்கத்தின் வெற்றியை நினைத்துக் கவலைப்படலாம். இத்தகைய பண்புடையோர் அனைவரும் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் எதிரிகளாகவே இருப்பர். இவர்கள் நபியவர்களது காலத்திலும் இருந்தனர். அவர்களுக்குப் பின்னரும் இருந்து கொண்டே இருக்கின்றனர்…'' என்கின்றார்

- பெரிய வகை நிபாக் பற்றி வந்துள்ள அல்குர்ஆன் வசனங்கள்.

  (2:10 - 15)(63:1-2)

- நயவஞ்சகம் தொடர்பில் வந்துள்ள அல்குர்ஆன் வசனங்களுக்கு விளக்கமளிக்கும் இமாம்கள் பின்வரும் ஒன்பது பண்புகளை நயவஞ்சகப் பண்புகளாக அடையாளப்படுத்துகின்றனர்.

1. நபியவர்களை அல்லது அவரது ரிஸாலத்தின் ஒரு பகுதியை நிராகரித்தல்
2. நபியவர்களை அல்லது அவரது ரிஸாலத்தை வெறுத்தல்
3. நபியவர்களது மார்க்கத்தின் மறைவை நினைத்து மகிழ்தல் அல்லது அதன் வெற்றியை வெறுத்தல்
4. நபியவர்கள் கூறிய விடயங்களை ஏற்க வேண்டும் என்ற கடமைப்பாட்டை நம்பாதிருத்தால்
5. நபியவர்கள் ஏவிய விடயங்களில் அவர்களுக்கு கட்டுப்பட வேண்டும் என்ற கடமைப்பாட்டை நம்பாதிருத்தல்.
6. நபியவர்களுக்கு நோவினை செய்தல் அல்லது அவரைக் குறை கூறுதல்
7. மு∴மின்களை எதிர்க்கும் காபிர்களுக்கு ஆதரவாய் நிற்றல்
8. மு∴மின்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்டு அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள் என்பதற்காக அவர்களைப் பரிகசித்தல்.
9. அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் தீர்ப்பைப் புறக்கணித்தல்.

**சிறிய வகை நிபாக்**

- சிறிய வகை நிபாக் என்பது உள்ரங்கத்துக்கும் வெளிரங்கத்துக்கும் இடையில் உள்ள முரண்பாட்டின் சாதாரண ஒரு நிலையாகும். இதற்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ஒருவர் மீதுள்ள வெறுப்பையும் குரோதத்தையும் மறைத்துக் கொண்டு அவரை நேசிப்பது போன்றும் அவருக்கு உதவி செய்வது போன்றும் வெளிக்காட்டிக் கொள்ளுதல்

- வணக்க வழிபாடுகளில் அதிக ஆர்வமுடையவராகத் தன்னைக் காண்பித்துக் கொண்டு அவற்றில் ஈடுபடாதிருத்தல்.

- மார்க்கத்தில் நம்பிக்கை இருப்பினும் அதற்காக எவ்விதத் தியாகமும் செய்யாதிருத்தல்.

**சிறிய வகை நிபாக்கின் அடயாளங்கள் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்**

- “நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று: பேசினால் பொய்யுரைப்பான், வாக்களித்தால் மாறுசெய்வான், நம்பினால் துரோகமிழைப்பான்”

- நான்கு பண்புகள் யாரிடம் இருக்கின்றதோ அவன் தெளிவான முனாபிக் ஆவான். யாரிடம் அவற்றுள் ஒரு பண்பு இருக்கின்றதோ அதனை விட்டு விடும் வரை அவனிடம் நயவஞ்சகத்தின் ஒரு பண்பு இருக்கிறது: நம்பினால் துரோகமிழைப்பான், பேசினால் பொய்யுரைப்பான், வாக்களித்தால் மாறுசெய்வான், பகைத்துக் கொண்டால் தீயவார்த்தைகளைக் கூறுவான்”

- இரண்டாவதாகக் கூறப்பட்ட ஹதீஸை இமாம் நவவி அவர்கள் விளக்கும் போது பின்வருமாறு கூறுகிறார். “ இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள பண்புகள் முஸ்லிம் என்பதில் சந்தேகமில்லாத நபர்களிடமும் காணப்படுவதனால் சிலர் இதை ஹதீஸாகக்

கொள்வதில் மாற்றுக் கருத்துடையோராய் உள்ளனர். இருப்பினும் அதிகமான அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாவது: தன் உள்ளத்தாலும் நாவாலும் விசுவாசமான ஒரு மு.ஃமினிடம் குறிப்பிடப்பட்ட நிபாக்கின் பண்புகள் காணப்படுமாயின் அவன் காபிர் என்றோ நரகத்தில் நிரந்தரமாகத் தங்கும் முனாபிக் என்றோ தீர்ப்பளிக்கப்படுவதில்லை. மாறாக குறித்த நபர் குறிப்பிடப்பட்ட பண்புகளில் முனாபிக்கை ஒத்தவராகக் கருதப்படுவார். அவரது நயவஞ்சகத்தனம் அவர் வாக்களிக்கின்ற, பேசுகின்ற, அவரை நம்புகின்ற மனிதர்களுடன் தொடர்பான விடயத்திலே அன்றி குப்ரை மறைத்துக் கொண்டு இஸ்லாத்தை வெளிக்காட்டும் (அல்லாஹ்வுடன் தொடர்பான) விடயத்தில் அல்ல''.

- மேற்கூறப்பட்ட ஹதிஸ்கள் தொடர்பில் இமாம் கத்தாபி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: '' நயவஞ்சகர்களின் பண்புகள் பற்றிய ஹதீஸ்கள் ஒரு முஸ்லிமிடம் அப்பண்புகள் வந்து விடக் கூடாது என்பதற்காக அவனை எச்சரிக்கும் நோக்கிலேயே கூறப்பட்டுள்ளன. மாறாக யாரிடமிருந்தாவது வேண்டுமென்றல்லாமல் இப்பண்புகளில் ஒன்று வெளிப்படுகின்றதோ அவர் ஒரு நயவஞ்சகன் என்று கூறுவதற்காக அல்ல''
- பெரிய வகை நிபாக்கிற்கும் சிறிய வகை நிபாக்கிற்கும் இடையில் உள்ள பொதுத் தன்மை ''உள்ரங்கத்துக்கு முரணான வெளிரங்கத்தின் நிலைப்பாடாகும்.'' ஆகவேதான் இந் நிலைப்பாட்டை உணர்ந்த சில ஸஹாபாக்கள் கூட சில சந்தர்ப்பத்தில் தாமும் முனாபிக்காகி விட்டோமா என்று நிலை தடுமாறினார்கள். இதற்கு ஹன்ஸலா (ரழி) அவர்களது சம்பவம் சிறந்த உதாரணமாகும்.

## ஈமானில் முரண்பட்ட சிந்தனைகளும் கொள்கைகளும்

- அல்குர்ஆன், ஸுன்னா அடிப்படையில் பாதுகாக்கப்பட்டு வந்த நம்பிக்கைகளும் அதன்மீது கட்டியெழுப்பப்பட்ட முஸ்லிம் உம்மத்தும் மூன்றாம் கலீபாவின் இறுதிக் காலம் முதல் பல்வேறு சோதனைகளுக்கு உட்படலாகியது. அதன் காரணமாக அகீதாவுக்கு முரண்பட்ட நம்பிக்கைகளும் பல்வேறு பிரிவுகளும் முஸ்லிம் உம்மத்தினுள் தோற்றம் பெற்றன. அப்பிரிவுகளின் தோற்றத்துக்குப் பின்வருவனவற்றைக் காரணிகளாகக் குறிப்பிடலாம்.

  1. இஸ்லாத்திற்கு எதிரான சதிகள்
  2. ஸஹாபாக்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் ரீதியான பிளவுகள்
  3. ஸஹாபாக்கள் விடயத்தில் எல்லைமீறிய நிலைப்பாடுகள்
  4. அல்குர்ஆன், ஸுன்னா விடயத்தில் போதிய அறிவின்மை
  5. பிறகலாசாரங்களின் தாக்கம்
  6. பகுத்தறிவுக்குக் கொடுக்கப்பட்ட அதி முக்கியத்துவம்.
  7. சுயநலமும் மனோ இச்சையும்

இக்காரணிகளின் பின்னணியில் எழுந்த சிந்தனைகளும் பிரிவுகளும் ஏராளமானவை. அவற்றுள் சிலவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

## ஷீஆ

- ஷீஆ என்ற சொல் மொழி ரீதியாக ''பிரிவு'' ''கூட்டம்'' என்றும் ''ஆதரவுஅணி'' என்றும் பொருள் தருகிறது. இஸ்லாமிய மரபில் ''அலி(ரழி) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தவர் மீதும் அளவு கடந்த அன்பை வெளிப்படுத்துவதுடன் அவர்களுக்கே நபியவர்களின் பின் அரசியல், ஆன்மீக தலைமைத்துவம் வாரிசு அடிப்படையில் சென்றிருக்கவேண்டும் எனக்கூறி முந்திய மூன்று கலீபாக்கள் மீதும் அவர்களுக்கு ஆதரவான ஸஹாபாக்கள் மீதும் தப்பபிப்பிராயத்தைப் பரப்பும் ஒரு சிந்தனைப் பிரிவு'' ஷீஆ என்று அழைக்கப்படுகிறது.

- ''ஷீஆ''என்ற பிரிவு நீண்ட வரலாற்றையும் ஒன்றுக் கொன்று முரணான பல உட்பிரிவுகளையும் உடைய சிறுபான்மை முஸ்லிம் அணியினராவர். கலீபா அலி (ரழி) அவர்களது காலத்தில் எழுந்த அரசியல் ரீதியான கருத்து முரண்பாடுகளின் பின்னணியில் தோன்றிய இப்பிரிவின் தோற்றம் குறித்து பெரும்பான்மை முஸ்லிம் அறிஞர்களிடையேயும் ஷீஆ அறிஞர்களிடையேயும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

## தோற்றம்

- ''எனது ஆன்மா எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக இவரும் இவரைப் பின்பற்றும் பிரிவினருமே (ஷீஆ) மறுமையில் வெற்றி பெற்றோராவர்'' என நபியவர்கள் அலி(ரழி) யைப்பார்த்து கூறினார் என்று ஜாபிரிப்னு அப்துல்லாஹ்(ரழி) அவர்களின் பெயரில் ரிவாயத்து செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஹதீஸை ஆதாரமாக வைத்து நபியவர்களது வபாத்தைத் தொடர்ந்து அபூபக்ர்(ரழி) அவர்கள் கலீபாவாக தெரிவு செய்யப்பட்ட சமயத்தில், அலி(ரழி) தானே அதற்குத் தகுதிபெற்றவர் எனக் கருதிய போது, சில ஸஹாபாக்கள் அவருக்கு ஆதரவளித்ததன் மூலம் இப்பிரிவு தோற்றம் பெற்றுவிட்டது.

- கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கலீபா அலி(ரழி) அவர்களிடம் அநீதியான முறையில் கொலை செய்யப்பட்ட கலீபாவுக்காகப் பழி தீர்க்கப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கையை புதிய கலீபாவினால் உடனடியாக நிறைவேற்ற முடியாமல் போனதால் ஏற்பட்ட முரண்பாடுகள் முஸ்லிம்களை இரு அணிகளாகப் பிரித்தன. அப்போது முரண்பட்ட கலீபாவின் அணி ஷீஅது அலி என்று அழைக்கப்பட்டது.

- பலம்பெற்றிருந்த இஸ்லாமியப் பேரரசை வீழ்த்துவதற்காக உஸ்மான்(ரழி) அவர்களது ஆட்சியின் இறுதிக் காலத்தில் உருவான மக்களின் அதிருப்திகளைச் சாதகமாகப் பயன்படுத்தி கிலாபத்துக்கு எதிராக மக்களை அணிதிரளச் செய்வதற்காக அப்துல்லாஹ் இப்னு ஸபா என்பவனால் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகளின் அடிப்படையில் தோன்றிய சமயப் பிரிவு என்பதை அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாத்தைச் சேர்ந்த பெரும்பாலோரது கருத்தாகும்.

- யஸீதுடைய காலத்தில் அலி(ரழி) அவர்களது மகன் ஹுஸைன்(ரழி) அவர்கள் ஈராக் மக்களின் அழைப்பை ஏற்று அங்கே செல்லும்போது கர்பலா என்ற இடத்தில் அரச படையினரால் மிகத்துக்ககரமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த அவரது ஆதரவாளர்கள் ஹுஸைன்(ரழி) அவர்களுக்காக தம்உயிரையும் அர்ப்பணித்து உமையாக் கிலாபத்துக் கெதிராகப் போராட சத்தியப்

பிரமாணம் செய்து கொண்டனர். அன்றிலிருந்து ஷீஆ என்ற ஒரு பிரிவு முஸ்லிம்கள் மத்தியில் வலுப்பெற்றது.

- மேற்கூறப்பட்ட கருத்துக்களில் கர்பலாவுடன் தொடர்புபடுத்திக் கூறப்படும் கருத்தே சரியானதாகத் தோன்றுகிறது.

**ஷீயாக்களின் அகீதா**

- இன்று ஷீஆக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள், செயன்முறைகள் ஆகியவற்றுள் பல, தூய இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டுடன் கற்பனைகள், மூடநம்பிக்கைகள், பிறகலாசார சித்தாந்தங்கள் ஆகியன வலிந்து சேர்க்கப்பட்ட ஒரு கலவையாகும். அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினருக்கு முரணாக அவர்களினால் தீவிரமாக நம்பப்படும் கோட்பாடுகளுள் சில வருமாறு

**இமாமத்** (தலைமைத்துவம்):

- தலைமைத்துவம் எனும் பொருள் தரும் ''இமாமத்'' என்ற சொற்பிரயோகம் ஷீஆக்களிடத்தில் அகீதா சார்ந்த விடயமாக நம்பப்படுகிறது. ஆகவே இமாமத்துக்குரியவர் அல்லாஹ்வினால் அல்லது முந்திய தலைவரினால் நியமிக்கப்படுகின்ற தெய்வீக அந்தஸ்துப் பெற்றவராக இருக்க வேண்டும் என்று நம்புகின்றனர். முஹம்மத்(ஸல்) அவர்கள் தனக்குப் பின் அலி(ரழி) அவர்களை இமாமாக நியமித்துச் சென்றார்கள். இது போன்று ஒவ்வொரு இமாமும் தனக்குப் பின்னால் வரக்கூடிய இமாமை முறையாக நியமித்துள்ளார்கள். இவர்களை விசுவாசித்து அரசியல், ஆன்மீகம், இஸ்லாமிய அறிவியல் ஆகிய துறைகளில் இவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பது நபியை விசுவாசித்து அவருக்குக் கட்டுப்பட்டு நடப்பது போன்றதாகும்.
- ஷீயாக்களின் இந்நம்பிக்கையே கலீபாக்களான அபூபக்ர்(ரழி), உமர்(ரழி), உஸ்மான்(ரழி) ஆகியோரையும் இஸ்லாத்துக்காக அரும்பாடுபட்ட இன்னும் அதிகமான ஸஹாபாக்களையும் இவர்கள் வெறுப்பதற்குக் காரணமாக அமைந்தது.
- ஷீயாக்களின் இமாமியத் நம்பிக்கைக்கு கதிர்கும் எனும் இடத்தில் நபியவர்கள் கூறியதாகச் சொல்லப்படும் போலி ஹதீஸையே ஆதாரமாக முன்வைக்கின்றனர்.
- ஷீயாக்கள் முன்வைக்கும் இமாமியத் கோட்பாட்டில் காணப்படும் குறைபாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
- கதிர்கும் தொடர்பான ஹதீஸின் நம்பகமற்ற தன்மை
- இமாம்கள் யார் என்பதைத் தீர்மானிப்பதில் ஷீயாக்களிடம் காணப்படும் கருத்துவேறுபாடுகள்
- இமாம்களின் எண்ணிக்கையில் காணப்படும் கருத்துவேறுபாடுகள்
- இமாம்களின் எண்ணிக்கை பன்னிரண்டுடன் முற்றுப்பெறுதல்
- இமாமியத் கோட்பாடு ஷீயாக்கள் கூறும் ஆரம்ப கால இமாம்களிடம் காணப்படாமை

- ஷீயாக்களின் நம்பிக்கைகள் அவ்வக்காலங்களில் தோன்றிய அரசியல் பின்னணிகளின் பின்புலத்தில் மாற்றங்களுக்குட்பட்டமை

- பிறகலாசாரத்தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்தியமை

**இமாமியத் சிந்தனையின் வரலாற்றுச் சுருக்கம் வருமாறு**

- முதல் இமாம் எனக்கருதப்படும் **அலி(ரழி)** அவர்களிடம் இமாமத் எனும் கோட்பாடு ஒருபோதும் இருக்கவில்லை. ஆகவே தான் அவர் தனக்கு முந்திய கலீபாக்கள் எவரையும் எந்த ஒரு காரணத்துக்காகவும் எதிர்க்கவில்லை. மாறாக அவர்களுக்கு மிகவும் விசுவாசமானவராகவும் அவர்களின் சிறந்த ஆலோசகராகவுமே இருந்துள்ளார். அவ்வாறுதான் **ஹஸன்(ரழி), ஹுஸைன்(ரழி)** மற்றும் **அலி இப்னு ஹுஸைன்(ரஹ்)** ஆகியோரும் கலீபாக்கள் மூவர்மீதும் மிகுந்த மரியாதையுடனேயே இருந்துள்ளனர். இவர்கள் அலி(ரழி) அவர்கள் கலீபாக்களால் அநீதி இழைக்கப்பட்டார்கள் என்று கருதினார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது.

- நான்காவது இமாமாகிய அலி இப்னு ஹுஸைனுக்கு முஹம்மத், ஸைத் என்ற இரு ஆண் பிள்கைள் இருந்தனர். ஷீஆக்களில் ஒருசாரார் **முஹம்மதையும்** இன்னொரு சாரார் ஸைதையும் இமாமாகக் கொள்கின்றனர். ஆனாலும் இமாம் ஸைதைப் பொறுத்தவரையில் அவரது நிலைப்பாடு அலி(ரழி) அவர்களே கிலாபத்துக்கு மிகவும் தகுதியானவர் என்றாலும் அபூபக்ர்(ரழி), உமர்(ரழி), உஸ்மான்(ரழி) ஆகியோரை ஒருபோதும் நிராகரிக்கவில்லை.

- இமாம் ஸைதிடம் முதல் கலீபாக்கள் மூவரைப் பற்றியும் வினவிய போது அவர் நல்லதையே கூறினார். இதனால் கோபமடைந்த அவர்கள் இமாமின் நிலைப்பாட்டை நிராகரித்து அவரை விட்டும் பிரிந்து சென்றனர். அவ்வாறு சென்றவர்களே ராபிழ்கள் எனப்படுகின்றனர். இமாம் ஸைத் அவர்கள் உமையாக்களின் அடாவடித்தனங்களை எதிர்த்துப் போரிட்டமையினால் ஹிஜ்ரி 122ல் கொலை செய்யப்பட்டார். அதன் பின் உருவான பிரிவினரே ஸைதிகள் எனப்படுகின்றனர்.

- இமாம் முஹம்மதுக்குப் பின் வந்த **இமாம் ஜ.்.பர் ஸாதிக்(ரஹ்)** தனது முன்னோரைப் போன்றே கலீபாக்கள் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவராகவே திகழ்ந்தார். ஷீயாக்களிடம் காணப்படும் எந்த ஒரு நம்பிக்கையும் இவரிடம் இருக்கவில்லை. அனைத்து முஸ்லிம்களுக்கும் பொதுவானவராகவே அவர் இருந்துள்ளார்.

- ஜ.்.பர் ஸாதிக்(ரஹ்) அவர்களுக்குப்் பின் **மூஸா இப்னு ஜ.்.பர்(ரஹ்)** இமாமாகக் கருதப்படுகிறார். இக்காலத்தில் அப்பாசியர் தமக்குச் சார்பாக அஹ்லுல் பைத் ஆதாரவாளர்களை இணைத்துக் கொண்டனர். இவர்களும் அப்பாஸியருக்கு ஆதரவளிப்பதன் மூலம் அரசியல் தலைமைத்துவத்தை அலி(ரழி) அவர்களின் பரம்பரையினருக்கு பெற்றுக் கொடுக்க முடியும் என்று நம்பினர்.

- அப்பாசியர் அஹ்லுல் பைத் ஆதாரவாளரின் எதிர்பார்ப்புக்கள் எவற்றையும் நிறைவேற்றாமையினால் ஏமாற்றமடைந்த நிலையில் **இமாம் அலி அர்ரிழா(ரஹ்)** திடீர் மரணம் எய்தவே அவரது மரணத்தில் அப்பாசியரைச் சந்தேகித்து எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இக்காலத்தில் இவர்கள் அபூதாலிபின் பெயரில் தாலிபிய்யூன் என அழைக்கப்பட்டனர்.

- அப்பாஸிய கிலாபத்துக்கெதிராக தாலிபிய்யூன்கள் கிளர்ச்சி செய்து கொண்டிருந்த சமகாலத்தில் பாரசீகர்களும் கிலாபத்துக் கெதிராகக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தனர்.

- பலம் பெற்றிருந்த அப்பாஸிய கிலாபத்தை வீழ்த்துவது எளிதல்ல என்பதை உணர்ந்த பாரசீகர் தாலிபீன்கள் ஆதரவைப் பெறுவதன் மூலம் இதைச் சாதிக்கலாம் எனக் கருதினர். பாரசீகர்களின் இவ்விணைப்புதான் வெறும் அரசியல் பிரிவாக இருந்த அஹ்லுல் பைத் ஆதரவாளர்களாகிய முஸ்லிம்களிடையே பாரசீக நம்பிக்கைகளுடன் ஒன்றறக் கலந்த ''ஷீஆ'' என்ற சமயப்பிரிவு தோன்றுவதற்கு காரணமாய் அமைந்தது.

- இமாம் அலி அர்ரிழாவின் மரணத்தைத் தொடர்ந்து, மரணிக்கின்ற இமாமின் மூத்த புதல்வனே அடுத்த இமாமாகத் தெரிவு செய்யப்படும் மரபு தோன்றியது. மூத்த பிள்ளைக்கு அரசதலைமைத்துவத்தை வழங்குதல் பாரசீக மரபுகளில் ஒன்றாகும்.

- பதினோராவது **இமாம் ஹஸன் இப்னு அலி அல்அஸ்கரி** என்பவர் ஹி 260ல் மரணிக்கும் போது 5 வயது சிறுவனாக இருந்த அவரது மூத்த மகன் **முஹம்மத்** இமாமாகத் தெரிவு செய்யப்பட்டார். துரதிஷ்ட வசமாக முஹம்மத் தனது சிறுவயதிலேயே மரணித்தமையினால் இமாமத் பதவிக்கு வாரிசு ஒருவர் இல்லாத நிலையினால் கலவரமடைந்த ஷீயாக்கள் இமாம் மரணித்தார் என்று கூறாமல் தற்காலிகமாக மறைந்து விட்டார் என்ற நம்பிக்கையை உருவாக்கிக் கொண்டனர்.

**கபா:**

- மறைவு என்று மொழிரீதியாக பொருள்படும் இச்சொற்பிரயோகம் ஷீஆக்களிடத்தில் அகீதா சார்ந்த ஒரு சொற்பிரயோகமாகும். ஷீஆக்களில் ஒவ்வொரு பிரிவினரும் கடைசி இமாம் யார் என்பதில் கருத்து வேறுபாடு கொண்டனர். ஓர் பதுங்கு குழியினுள் மறைந்து வாழ்கிறார் என்ற நம்பிக்கையில் அனைத்துப்பிரிவினரும் பெரும்பாலும் உடன்படுகின்றனர். அவர்கள் குறிப்பிடும் அம்மறைவே **கபா** என்று அழைக்கப்படுகின்றது.

**ரஜ்ஆ**

- ரஜ்ஆ என்றால் மொழி அடிப்படையில் மீண்டு வருதல் என்று பொருள். அகீதாத்துறையில் இது சீயாக்களின் ஒரு கோட்பாடாகும். அக்கோட்பாட்டின்படி சீயாக்கள் தமது மறைந்து போன இமாம் மீண்டும் வருவார் என்றும் அவர் சீயாக்களின் உரிமைகள் அனைத்தையும் மீட்டிக் கொடுப்பார் என்றும் நம்புகின்றனர்.

**இஸ்மத்:**

- இஸ்மத் என்பதன் மொழிக்கருத்து தடுப்பு, பாதுகாப்பு என்பதாகும். அகீதாத் துறைப் பரிபாசையில் பாவங்கள் தவறுகள் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது. அவ்வாறு விலக்களிக்கப்பட்டவர் ம.்.ஸூம் என்று அழைக்கப்படுகின்றார்.

- ஷீயாக்களது அகீதாவில் இமாம்கள் ம.்.ஸூம்களாவர். அதன்படி இமாம்களிடமிருந்து சிறிதோ பெரிதோ வேண்டுமென்றோ மறதியாகவோ எத்தகைய பாவங்களோ தவறுகளோ நிகழ்வதில்லை.

**தகிய்யா**

- தகிய்யா என்பதன் மொழிக்கருத்து பாதுகாத்துக் கொள்ளல் என்பதாகும். பரிபாசையில் சீயாக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவோ அல்லது தமது பிரசார நடவடிக்கைகளுக்காகவோ தமது நம்பிக்கைக்கு முரணாக வெளிப்படுத்தும் தந்திரோபாயமான செயற்பாடுகளைக் குறிக்கிறது. ஷீஆக்கள் தகிய்யாவை அகீதா சார்ந்த விடயமாகவே நோக்குகின்றனர். யாரிடம் தகிய்யா இல்லையோ அவரிடம் ஈமான் இல்லை என்பது இவர்களின் நம்பிக்கையாகும்.

**தீனா**

- களிமண் எனப் பொருள் தரும் இச்சொல் சீயாக்களிடத்தில் ஹுஸைன் (ரழி) அவர்களது அடக்கஸ்தலத்திலிருந்து பெறப்பட்ட மண்ணுடன் தொடர்பான சில நம்பிக்கைகளைக் குறிக்கிறது. குறிப்பிட்ட அம்மண் அனைத்து நோய்களுக்கும் மருந்து என்று இவர்கள் நம்புகின்றனர்.

**முத்ஆ**

- இன்பப் பொருள் என்பது இதன் மொழிக்கருத்து. பரிபாசையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் அடிப்படையில் செய்து கொள்கின்ற தற்காலிகத் திருமணம் முத்ஆ எனப்படுகிறது.
- இஸ்லாத்தில் நிரந்தரமாக ஹராமாக்கப்பட்ட முத்ஆ திருமணத்தை ஷீஆக்கள் தமது சமய நம்பிக்கையின் மிகமுக்கிய அமலாகக் கருதுகின்றனர். அதனை நிராகரித்தவர் மார்க்கத்தையே நிராகரித்தவர் என்பதே அவர்களது நிலைப்பாடு.

**ஷீயாக்களின் உட்பிரிவுகள்**

- நபி (ஸல்) அவர்களுக்குப்பின் அலி(ரழி) அவர்களுக்கே அரசியல் ஆன்மிகத் தலைமைத்துவம் செல்ல வேண்டும் என்ற தீவிர நம்பிக்கைக் கோட்பாடு காரணமாக பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தை விட்டும் பிரிந்து சென்ற ஷீஆக்கள் ஹுஸைன்(ரழி) அவர்களுக்குப்பின் அடுத்த இமாம் யார் என்ற விடயத்தில் ஒவ்வொரு இமாமின் மரணத்தைத் தொடர்ந்தும் தமக்கு மத்தியில் எழுந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக தமக்குள் இன்னும் பல பிரிவுகளாகப் பிரிந்து சென்றனர்.
- ஷீயாக்கள் பற்றி ஆய்வு செய்தவர்கள் அவர்களுக்கு மத்தியில் எழுபதுக்கும் மேற்பட்ட பிரிவுகள் காணப்படுவதாக் கூறுகின்றனர். அவற்றுள் மிக முக்கியமானவைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**இஸ்னாஅஸரிய்யா**

- இஸ்னாஅஸரிய்யா என்றால் பன்னிருவரைச் சார்ந்தோர் எனப் பொருள்படும். இப்பிரிவினர் இவ்வாறு அழைக்கப்படக் காரணம் இவர்கள் இமாம்களின் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டு என்று நம்புவதனாலாகும். அத்துடன் இவர்கள் இமாமிய்யா என்றும் அழைக்கப்படுகின்றனர். இஸ்னாஅஷரிகளே இன்று உலகில் மிகக்கூடிய எண்ணிக்கையும் செல்வாக்கும் கொண்ட ஷீஆப் பிரிவினராவர்.

### இஸ்மாஈலிய்யா

- இமாம் ஜஃபர் ஸாதிகின் மூத்த பிள்ளையாகிய இஸ்மாஈல் என்பவரைப் பின்பற்றுபவர்களே இஸ்மாஈலிய்யா எனப்படுகின்றனர். இவர்கள் வாக்களிக்கப்பட்ட மஹ்தி இஸ்மாஈல் என்றும் அவர் மரணிக்கவில்லை மீண்டும் வருவார் என்றும் நம்புகின்றனர். ஆனால் தந்தை உயிருடன் இருக்கும் போதே இஸ்மாஈல் மரணித்து விட்டார் என்றே பெரும்பாலான ஷீயாக்கள் நம்புகின்றனர். இஸ்மாஈலின் இமாமத்துடன் தொடர்பான விடயத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் உருவாகிய இப்பிரினர் காலப்போக்கில் இன்னும் பல பிரிவுகளாகப் பிரிந்தனர்.

### பாத்தினிகள்

- இஸ்மாயிலிய இலட்சியப்பணிக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட, இரவு முழுதும் நின்று வணங்கக் கூடிய பகல் முழுதும் நோன்பு நோற்கக் கூடிய அனாமேதய மனிதர் ஒருவர் கூபாவில் மேற்கொண்ட பிரசாரத்தின் பயனாக தோற்றம் பெற்ற அமைப்பே பாதினிகளாவர். இவர்கள் வரலாற்றில் தோன்றிய மிகமோசமான பிரிவினராவர். இவர்கள் மதுவை ஹலாலாக்கிக் கொண்டனர். தொழுகையை இருநேரமாக்கினர். தமது கொள்கை சாராத ஏனைய முஸ்லிம்களைக் கொலை செய்வதை ஹலாலாக்கிக் கொண்டனர். இவர்கள் மக்காவுக்குச் சென்று பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களைக் கொலை செய்து ஹஜருல் அஸ்வத் கல்லை யெமனுக்கு எடுத்துச் சென்றனர். இவர்கள் இஸ்லாத்தின் புறஅம்சங்களை அந்தரங்கமான முறையில் அர்த்தப்படுத்துவதன் காரணமாக பாதினிகள் எனப்படுகின்றனர். இடைப்பட்ட ஒரு காலத்தில் கராமைத் என்பவரால் வழிநடாத்தப்பட்டதனால் இவர்கள் கராமிதாக்கள் என்றும் அழைக்கப்படுன்றனர். பாதினிக்களைச் சார்ந்து நிஸாரிகள், முஸ்தாலிகள், துரூஸ்கள், முகன்னாஹ் போன்ற பல் பிரிவுகள் தோற்றம் பெற்றன.

### ஸைதிக்கள்

- ஹுஸைன்(ரழி) அவர்களின் மகன் அலி அவர்களின் இரண்டாவது புதல்வர் ஸைத்(ரஹ்) அவர்களைப் பின்பற்றியவர்களே ஸைதிகள் எனப்படுகின்றனர். இவர்கள் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினருக்கு மிகவும் நெருக்கமான ஷீஆப்பிரிவினராவர். இவர்களிடம் ஏனைய ஷீயாக்களிடம் இருப்பது போன்று அகீதாவுக்கு முரணான எந்த நம்பிக்கையும் இருக்கவில்லை. இமாம் ஸைத்(ரஹ்) அவர்களிடம் காணப்பட்ட ஒரே ஒரு மாற்றுக் கருத்து நபியவர்களுக்குப்பின் கிலாபத்துக்கு மிகவும் தகுதிபெற்றவர் அலி (ரழி) அவர்கள் என்பதாகும். என்றாலும் இமாம் ஸைத் அவர்கள் ஒருபோதும் முதல் மூன்று கலீபாக்கள் பற்றி குறைகூறியதில்லை.

### நுஸைரிகள்

- முஹம்மத் பின் நுஸைர் என்பவரினால் உருவாக்கப்பட்ட ஷீஆப்பிரிவினரே நுஸைரிகள் எனப்படுகின்றனர். இவர்கள் அலவிய்யூன்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஷீயாக்களில் மிகவும் மோசமான பிரிவினர்களாகவே இவர்கள் வரலரற்றில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர். அலி (ரழி) அவர்களுக்கு தெய்வீக அந்தஸ்து இருப்பதாக வாதிடும் இவர்கள் அலி (ரழி) அவர்களைக் கொலை செய்த இப்னு முல்ஜிமையும் நேசிக்கின்றனர். அத்துடன் இஸ்லாம் ஹராமாக்கிய பல விடயங்களை தமக்கு ஹலாலாக்கிக் கொண்டுள்ளனர். இவர்கள் பற்றி இமாம் இப்னு தைமியா

(ரஹ்) பின்வருமாறு கூறுகிறார்கள். ''பாதினிப் பிரிவைச் சேர்ந்த இவர்கள் யூதர்களையும் கிறிஸ்த்தவர்களையும் விட நிராகரிப்பில் கூடியவர்கள். முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தம் செய்த தாத்தாரிகளைவிடவும் இவர்கள் ஆபத்தானவர்கள். தாத்தாரியர்கள் இவர்களது உதவியுடனேயே முஸ்லிம் நாடுகளுக்குள் நுழைந்து கலீபாவையும் அதிகமான முஸ்லிம்களையும் கொலை செய்தனர்''

**ஷீயாக்கள் பற்றிய அஃலுஸ்ஸுன்னாக்களின் நோக்கு**

- அஹ்லுஸ்ஸுன்னாவைச் சேர்ந்தவர்கள் ஷீயாக்களின் உட்பிரிவுகளுக்கு ஏற்ப அவர்கள் பற்றிய மூன்று வகையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

    1. நேர்வழியில் செல்வோர்: அகீதா ரீதியில் அல்லாமல் மேலோட்டமான சில விடயங்களில் மாத்திரம் கருத்து வேறுபாடு கொண்டவர்கள்.
    2. வழிகேடர்கள்: அகீதாவில் சில புதிய விடயங்களை இணைத்துக் கொண்டாலும் ஈமானின் அடிப்படையான விடயங்களில் அல்குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் அமைய விசுவாசம் கொள்பவர்கள்.
    3. காபிர்கள்: ஈமானின் அடிப்படை அம்சங்களில் அல்குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் முரணாக விசுவாசம் கொள்பவர்கள்.

**கவாரிஜ்கள்**

- கவாரிஜ் என்ற சொல் காரிஜ் என்ற மூலச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். வெளியேறியவன் என்று பொதுவாக கருத்துத் தரும் இச்சொல் தலைவரின் கட்டுப்பாட்டை விட்டு வெளியேறிச் சென்று தலைமைத்துவத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்பவரைக் குறிக்கிறது. ''பாவம் செய்பவன் காபிராவான் என்ற கருத்தின் அடிப்படையில் பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தைவிட்டும் பிரிந்து அதற்கு எதிராக செயற்படும் பிரிவினர்'' கவாரிஜ் எனப்படுகின்றனர்.

**தோற்றமும் வளர்ச்சியும்**

- கலீபா அலி(ரழி) அவர்களுக்கும் ஷாம் தேச கவர்னர் முஆவியா (ரழி) அவர்களுக்கும் இடையே உஸ்மான்(ரழி)அவர்களின் கொலை தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் உருவான ஸிப்பீன் யுத்தத்திற்கு தீர்வு காண்பதற்காக இரு தரப்பிலிருந்தும் இரு ஸஹாபாக்கள் நடுவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட போது அலி(ரழி) அவர்களின் படையில் இருந்த ஒரு பிரிவினர் ''அல்லாஹ் தீர்ப்பு வழங்கிய விடயத்தில் நடுவர்களை நியமித்து அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வது அல்லாஹ்வின் தீர்ப்பைப் புறக்கணிப்பதாகும் எனக்கூறி ''தீர்ப்புக் கூறும் அதிகாரம் அல்லாஹ்வுக்கன்றி வேறெவர்க்கும் இல்லை'' என்ற கோஷத்துடன் நடுவர்களின் தீர்ப்பை நிராகரித்து தொடர்ந்தும் முஆவியாவுக்கு எதிராகப் போராடுமாறு அலி(ரழி) அவர்களை வலியுறுத்தினர்.

  அதைக் கேட்ட அலி(ரழி) அவர்கள் ''உண்மையான வார்த்தை பிழையாக நோக்கப்படுகிறது'' எனக்கூறி அவர்களின் வாதத்தை மறுத்துரைத்தார்கள்

  அப்போது அவர்கள் அப்துல்லாஹ் இப்னு வஹப் அர்ராஸிபி என்பவரைத் தமக்கு அமீராக நியமித்துக் கொண்டு அலி(ரழி) அவர்களை விட்டுப் பிரிந்து சென்று

அவர்களுக்கு எதிராகப் போர்தொடுக்க முனைந்ததன் மூலம் கவாரிஜ் என்ற பிரிவு தோற்றம் பெற்றது.

- இப்பிரிவினர் பல்வேறு காரணங்களுக்காக பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள்.

- அலி(ரழி), முஆவியா(ரழி) ஆகியோருக்கிடையே தீர்வுகாண நடுவர்கள் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்தமையினால் **முஹக்கிமா** என்றும், **ஹ**ரூரிய்யா என்ற இடத்தில் ஒன்று கூடி கலந்தாலோசித்தமையினால் **ஹரூரிய்யா** என்றும் நகர்வான் என்ற இடத்தில் அலி(ரழி) அவர்கள் இவர்களுக்கு எதிராக யுத்தம் தொடுத்தமையினால் **அஹ்லு நகர்வான்** என்றும், அநீதியை ஒழிப்பதற்காக அல்லா**ஹ்**வுடன் தம் உயிரை விலை பேசியவர்கள் என்ற அர்த்தத்தில் **அஷ்ஷிராத்** என்றும் இவர்கள் பற்றிய நபியவர்களது தீர்க்கதரிசன செய்தியில் அல்மாரிகா (மார்க்கத்தை விட்டும் விரைந்து வெளியேறுபவன்) என்று குறிப்பிடப்பட்டுள்ளதனால் **அல்மாரிகா** என்றும் அழைக்கப்படுகின்றனர்.

- கவாரிஜ்கள் ஆரம்பத்தில் அல்லாஹ்வின் தீர்ப்புக்கு மாறாகத் தீர்ப்பளிப்பது குற்றம் என்ற அடிப்படையிலேயே தமது முரண்பாட்டை வெளிப்படுத்தினர். பிற்பட்ட காலங்களில் மு∴தஸிலா, ஜஹமிய்யா, அஷாஇரா, மாத்ருதிய்யா போன்ற தத்துவ இயக்கங்களின் செல்வாக்குக் காரணமாக இவர்களும் அகீதா சார்ந்த விடயங்களில் தத்துவார்த்த ரீதியில் பேச ஆரம்பித்தனர். இதன் விளைவாக கவாரிஜ்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளும் உட்பிரிவுகளும் தோன்ற ஆரம்பித்தன.

**கவாரிஜ்களுக்கு மத்தியில் உருவான உட்பிரிவுகள்**

1. அல்அஸாரிக்: நாபி∴ இப்னு அஸ்ரக் என்பவரைப் பின்பற்றுபவர்கள். காபிர்களின் குழந்தைகளும் நரகம் நுழைவர் என்பது இவர்களது கருத்தாகும். ரஜ்ம் தண்டனையை மறுத்தல், பெண்மீது கூறப்படும் படுதூறுக்காக மாத்திரம் தண்டனை வழங்குதல். திருடப்பட்ட பொருள் சிறியதாயினும் பெரியதாயினும் சமமாகத் தண்டனை வழங்குதல் போன்ற நடைமுறைகளும் இவர்களிடம் காணப்பட்டன.

2. அஸ்ஸபரிய்யா: ஸியாத் அல் அஸ்பர் என்பவரைப் பின்பற்றுவோரே இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். இவர்களது கொள்கை நம்பிக்கையில் முரண்பட்டோரது பிள்ளைகளைக் கொல்ல வேண்டும் என்ற விடயத்தில் மாத்திரம் அஸாரிக்களுடன் முரண்படுகின்றனர்.

3. அந்நஜ்தாத்: நஜ்தா இப்னு ஆமிர் அல்ஹனபீ என்பவரைப் பின்பற்றுபவர்கள். இவர்களது கருத்தின்படி மார்க்கம் என்பது இரு விடயங்களாகும். ஒன்று: அல்லாஹ்வை அறிவதும் அவனது தூதரை அறிவதும் முஸ்லிம்களது இரத்தத்தையும் செல்வங்களையும் மதித்து நடத்தல். இரண்டு: அல்லாஹ்விடமிருந்து வந்தவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ளல். அது தவிர்ந்த ஏனைய ஹலால் ஹராம் சார்ந்த விடயங்கள் பற்றி அறியாதிருப்பது குற்றமல்ல. ஏனெனில் அது மார்க்கத்தில் உள்ளதல்ல. ஒருவன் பாவத்தில் பிடிவாதம் காட்டுவதன் மூலம் காபிராகின்றான். அது பெரும் பாவமாயினும் சரி சிறு பாவமாயினும் சரி.

4. அல்அபாலிய்யா: அப்துல்லாஹ் இப்னு அபால் என்பவரைப் பின்பற்றுவோர் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். இப்பிரிவு தோன்றக் காரணம் கவாரிஜ்களின் தலைவர் நாபி∴ பின் அஸ்ரக் என்பவர் அனைத்து முஸ்லிம்களும் அரபுக்காபிர்களைப்

போன்றவர்களே. இவர்களிடம் எதிர்பார்க்கப்படுவதெல்லாம் இஸ்லாம் அல்லது யுத்தம். அவர்களைத் திருமணம் முடிக்கக்கூடாது. அவர்கள் அறுத்தவற்றை சாப்பிடக் கூடாது. அவர்கள் மத்தியில் வாழவும் கூடாது. இவ்வாறு கூறும் போது இப்னு ஸிபார் என்பவர் அதை மறுத்து ஸிபரிய்யாவை உருவாக்கினார். அப்போது இப்னு அபால் இன்னொரு கருத்தைக் கூறினார். அதாவது அவர்கள் முஷ்ரிக்குகள் அல்ல. நி.்.மத்தை மறுக்கும் காபிர்கள். இவர்களது இரத்தத்தைத் தவிர வேறெதுவும் எமக்கு ஹலாலாக மாட்டாது. என்ற கருத்தின் அடிப்படையில் தனது இயக்கத்தை அமைத்தார்.

இந்நான்கு பிரிவுகளும் கவாரிஜ்களின் பிரதான உட்பிரிவுகளாகும். அவ்வாறே இந்நான்கிற்குள்ளும் இன்னும் பல உட்பிரிவுகள் பல காரணங்களுக்காக உருவாகின.

**கவாரிஜ்களின் முரண்பாடான நம்பிக்கைகளும் முடிவுகளும்**

1. பெரும் பாவம் செய்தவர்களை காபிர்கள் என்றும் அவர்கள் நரகில் நிரந்தரமாகத் தங்குவார்கள் என்றும் கூறுதல்.
2. அலி(ரழி), உஸ்மான் (ரழி) ஆகியோரையும் இன்னும் அதிகமான ஸஹாபாக்களையும் காபிர்கள் என்று கூறுதல்
3. மறுமையில் அல்லாஹ்வைக் காணமுடியும் என்பதை மறுத்தல்
4. ஸிராத்தையும் அதைக் கடந்து செல்வதையும் நிராகரித்தல்
5. அல்லாஹ்விடமிருந்தல்லாமல் நபியவர்கள் கூறும் விடயங்களில் நபிக்கு கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை எனக்கூறுதல்
6. குர்ஆனின் வெளிப்படையான கருத்து என தாம் நம்பும் விடயங்களுக்கு முரணாக வரும் முதவாதிரான ஹதீஸ்களை நிராகரித்தல்
7. அல்குர்ஆனும் ஸுன்னாவும் உறுதிப்படுத்தும் அல்லாஹ்வின் பண்புகளை மறுத்தல்
8. தமது நம்பிக்கைகளில் தம்முடன் உடன்பட்டவர்களுடனல்லாமல் ஜமாஅத்தாக தொழுவதை மறுத்தல்
9. திருமணத்துக்குப் பின் விபசாரத்தில் ஈடுபடும் ஆணுக்கு ரஜ்ம் தண்டனை வழங்குவதை மறுத்தல்
10. ஷபாஅத்தை மறுத்தல்
11. குறைந்த பட்சம் 40 பேர் இருக்கும் நிலையில் தவறிழைக்கும் தலைவர்களுக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபடுவது கடமை எனக் கூறல். இது ஹத்து ஷிரா.். எனப்படுகிறது.

## கவாரிஜ்களின் இயல்பான பண்புகள்

சில நபர்களிடம் காணப்பட்ட இயல்பான பண்புகளுடன் தீவிர மதப்பற்றும் ஒன்று சேர்ந்தமையே கவாரிஜ்கள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாய் அமைந்தது. அப்பண்புகள் வருமாறு.

- தீவிரத் தன்மை: இவர்கள் தாம் உருவாக்கிக் கொண்ட நம்பிக்கைகளிலும் ஏனைய வணக்க வழிபாடுகளிலும் தீவிரத்தன்மையை வெளிப்படுத்தியமையினால் அதிக வணக்கவாளிகளாகவும் பாவங்களுக்கிடையில் பாகுபாடு பார்க்காமல் அனைத்துப் பாவங்களையும் பெரும் பாவங்களாக காட்டுபவர்களாவர்.

- கடும்போக்கு: கடும்போக்குக் காரணமாக இவர்களிடம் எந்த ஒன்றிலும் நளினத் தன்மை இருக்கவில்லை. சிறிய தவறுகளுக்காகவும் மக்களை எதிர்த்துப் போர் புரிபவர்களாகவே இருந்தனர்.

- எதிர்ப்பு மனப்பாங்கு: இணங்கிப் போகின்ற தன்மை இவர்களிடம் குறைவாகவே காணப்பட்டது. இதனால் தம்முடன் முரண்படுபவர்களை எப்போதும் எதிர்த்துக் கொண்டே இருப்பார்கள். சமாதானம் செய்து கொள்வதை ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்.

- மேலோட்டமான அறிவு: இவர்கள் மார்க்கம் தொடர்பான மேலோட்டமான அறிவையே பெற்றிருந்தனர். ஷரீஅத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்கின்ற அளவுக்கு அவர்களிடம் நுணுக்கமான அறிவு இருக்கவில்லை. அதனால் தான் நடுவர்கள் நியமிக்கப்பட்டதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் போனது.

- பிரமை: தாம் கற்ற அறிவில் கொண்ட பிரமை காரணமாக தாம் ஸஹாபாக்களை விடவும் ஏனைய அறிஞர்களை விடவும் தம்மைக் கற்றவர்களாகக் கருதிக் கொண்டார்கள்.

- முதிர்ச்சியின்மை: முதிர்ச்சியின்மை காரணமாக தமது சிந்தனையிலும் செயற்பாட்டிலும் பொறுமை இழந்து செயற்பட்டனர்.

## கவாரிஜ்களின் விடயத்தில் ஸஹாபாக்களின் நிலைப்பாடு:

- கவாரிஜ்கள் ஸஹாபக்களை காபிர்கள் என்று கூறினாலும் ஸஹாபாக்கள் அவர்களை அவ்வாறு கூறவில்லை. மாறாக கவாரிஜ் அமைப்பபைச் சேர்ந்த ஒருவர் தொழுகையில் இமாமத் செய்யும் போது அவருக்குப் பின்னால் நின்று தொழுதிருக்கின்றார்கள். இவர்கள் பற்றி அலி(ரழி) அவர்கள் குறிப்பிடும் போது ''எமக்கெதிராக அத்துமீறிய எமது சகோதரர்கள்'' என்றே கூறினார்கள். எனினும் அவர்களை எதிர்துப் போரிட்டுள்ளார்கள். அதற்கு இரு காரணங்கள் உள்ளன.

1. கவாரிஜ்களின் அத்துமீறிய செயற்பாடு: இவர்கள் அலி (ரழி) அவர்களையும் இன்னும் பல ஸஹாபாக்களையும் காபிர்கள் எனக் கூறி அவர்களுக்கு எதிராக வாளேந்திப் போரிட்டதுடன் சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், நிரபராதிகள் என்று பார்க்காமல் தமது கொள்கைக்கு மாற்றமான முஸ்லிம்களை கொன்று குவித்துள்ளார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஸஹாபாக்கள் அவர்களை எதிர்த்துப் போராடியுள்ளார்கள். நகர்வான் யுத்தம் அதற்கு சிறந்த உதாரணமாகும்.

2. ஸஹாபாக்களின் இஜ்திஹாத்: நபி(ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்களின்படி வாளேந்திப்போராடுமாறு கூறப்பட்டுள்ளவர்களின் பண்புகள் முழுமையாக கவாரிஜ்களிடம் காணப்பட்டமையினால் அவர்களை எதிர்த்துப் போராடுவதை நன்மை என்று கருதினார்கள். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘எனது உம்மத்தில் ஒரு கூட்டம் தோன்றும். உங்களது ஓதலை அவர்களது ஓதலுடன் ஒப்பிட முடியாது. உங்களது தொழுகையை அவர்களது தொழுகையுடன் ஒப்பிட முடியாது. உங்களது நோன்பை அவர்களது நோன்புடன் ஒப்பிட முடியாது. குர்ஆனை ஓதுவார்கள். அவர்கள் நினைக்கிறார்கள் அது அவர்களுக்கு சார்பானது என்று. ஆனால் அது அவர்களுக்கு எதிராகவே இருக்கிறது. அவர்களது தொழுகை அவர்களது பிடரி நரம்பைத் தாண்டாது. இவர்கள் வில்லில் இருந்து அம்பு விரைவது போன்று மார்க்கத்தை விட்டு வெளியேறுகிறார்கள். அவர்களை எதிர்த்துப் போராடியழிக்கும் படையினர் தமது நபியின் வாயிலாக அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நன்மைகளை அறிவார்களாயின் அமல் செய்வதை விட்டுவிடுவார்கள்’’(புஹாரி, முஸ்லிம்).

- கவாரிஜ்கள் விடயத்தில் ஸஹாபாக்கள் கொண்டிருந்த அதே நிலைப் பாட்டையே ஸஹாபாக்களுக்குப் பின் வந்த ஸலபுஸ்ஸாலிஹீன்களும் கொண்டிருந்தார்கள். முஸ்லிம் உம்மத் கவாரிஜ்கள் விடயத்தில் தொடர்ந்தும் விழிப்புடனேயே இருந்து வந்துள்ளது. ஏனெனில் நபியவர்கள் முன்னறிவுப்புச் செய்த ஹதீஸ்களை நோக்கும் போது அவை, இத்தகையவர்கள் மறுமைநாள் வரை வெளிப்படக்கூடியவர்கள் என்பதையே உணர்த்துகின்றன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘இறுதிக் காலத்தில் ஒரு கூட்டம் வெளியாகும். அவர்கள் இளவயதுடையவர்களாகவும், மூடக்கனவுடையவர்களாகவும் இருப்பார்கள். மனிதர்களில் சிறந்தவருடைய வார்த்தைகளில் இருந்தே பேசுவார்கள். அவர்களது ஈமான் அவர்களது தொண்டைக் குழியைத் தாண்டாது. வில்லில் இருந்து அம்பு புறப்படுவது போன்று இவர்கள் மார்க்கத்தை விட்டு வெளியேறுவார்கள். அவர்களை எங்கு கண்டாலும் கொலை செய்யுங்கள். அவர்களைக் கொன்றவர்களுக்கு மறுமையில் நற்கூலியுண்டு’’ (புஹாரி)

### மு.ஃ.தஸிலாக்கள்

- மு.ஃ.தஸிலா என்பதன் மொழிக்கருத்து பிரிந்து சென்றவர்கள் என்பதாகும். இஸ்லாமிய மரபில் ‘‘அகீதா சார்ந்த விடயங்களை பகுத்தறிவு ரீதியாக சிந்தித்ததனால் எழுந்த கருத்து வேறுபாடு காரணமாக பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தை விட்டும் பிரிந்து சென்ற ஒரு தத்துவ இயக்கம்’’ மு.ஃ.தஸிலா என அறியப்படுகிறது.

### தோற்றம்

- இமாம் ஹஸனுல் பஸரி(ரஹ்) பஸராப் பள்ளி வாசலில் இஸ்லாமிய வகுப்புக்களை நடாத்திக் கொண்டிருந்த போது அவர்களது மாணவர்களில் ஒருவனாயிருந்த வாஸில் பின் அதாவினாலேயே இவ்வியக்கம் உருவாக்கப்பட்டது. இமாம் அவர்களுடன் பெரும் பாவம் செய்தவனின் நிலைப்பாடு பற்றி தர்க்கித்து முரண்பாடு கொண்ட வாஸில், அவன் குப்ருக்கும் ஈமானுக்கும் இடையில் இருக்கிறான் எனக்கூறி இமாம் அவர்களது சபையில் இருந்து விலகிச் சென்றான். அப்போது இமாமவர்கள் அவர் எங்களைப் பிரிந்து சென்றார்(ÆæÅÛÊÒáÛÇ) என்று கூறினார். இந்நிகழ்வைத் தொடர்ந்து இவர்கள் மு.ஃ.தஸிலாக்கள்(பிரிந்து சென்றவர்கள்) என வரலாற்றில் அடையாளப்படுத்தப் படுகின்றனர்.

- இமாமை விட்டுப் பிரிந்த வாஸில், பகுத்தறிவு ரீதியாக சிந்திக்கத் தொடங்கி தனது கருத்துக்கு சார்பாக மாணவர்களைத் திரட்டிக் கொண்டார். அவர்களது செயற்பாட்டால் இவ்வியக்கம் மேலும் வளர்ச்சி பெற்றது.

- அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்பது இவர்களது பிரதான கொள்கைகளில் ஒன்றாகும். அல்லாஹ்வின் தாத், ஸிபாத் பற்றிய விடயத்திலும் இவர்கள் முரண்பட்ட சிந்தனையைக் கொண்டிருந்தனர். மனிதன் பூரண செயற் சுதந்திரம் மிக்கவன் எனப் பகுத்தறிவு ரீதியாக விளக்கினர். மறுமையில் அல்லாஹ்வைக் காண முடியாது எனவும் பெரும் பாவம் செய்தவர்கள் நிராகரிப்புக்கும் விசுவாசத்துக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

**மு:்.தஸிலாக்களின் அகீதா**

- தொடக்கத்தில் பெரும் பாவம் செய்தவனின் விடயத்தில் முரண்பட்ட மு:்.தஸிலாக்கள் பின்னர் இன்னும் பல விடயங்களிலும் முரண்பட்டனர். அதனால் அவர்களிடம் பல நம்பிக்கைகள் உருவாகின. அவற்றுள் ஐந்து அடிப்படைகள் மிக முக்கியமானவை. அவற்றைப் பொதுவாக அனைத்து மு:்.தஸிலாக்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அவை வருமாறு.

1. **தவ்ஹீத்:** இவர்களிடத்தில் தவ்ஹீத் என கருதுவது அல்லாஹ்வின் தாத்தும் ஸிபத்தும் ஒன்றே என்பதாகும். இவை இரண்டையும் பிரித்துத் தனியாக நோக்கினால் இறைவனின் ஒருமைத் தன்மை நீங்கி விடும் என்கின்றனர். இவர்கள் அல்லாஹ்வை எதிர்மறையிலேயே வர்ணிப்பார்கள் உதாரணம். அவன் நீளமானவனுமல்ல. அகலமானவனுமல்ல. நிறமுடையவனுமல்ல. சுவையுடையவனுமல்ல. மணமுடையவனுமல்ல. வெப்பமானவனுமல்ல. குளிரானவனுமல்ல….

2. **நீதி:** இதன் மூலம் இவர்கள் நாடுவது. மனிதர்களது செயற்பாடுகள் அனைத்தும் அவர்களாகவே செய்து கொள்வதுதான். அவர்களது எந்தச் செயற்பாட்டிலும் அல்லாஹ்வின் நாட்டத்திற்கு எப்பங்கும் கிடையாது. அது நன்மையாயினும் சரி தீமையாயினும் சரியே. ஒருவனது தீயசெயற்பாட்டுக்கு அல்லாஹ்வின் நாட்டம் காரணமாக இருப்பின், அது நீதிக்கு முரணானது என்பது இவர்களது வாதமாகும்

3. **இரு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை:** உலகில் பெரும் பாவம் செய்பவன் எவ்விதத்திலும் மு:்.மின் என்று அழைக்கப்பட தகுதி அற்றவன். அவன் மு:்.மினுக்கும் காபிருக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பான். அவன் தவ்பா செய்தால் ஈமானின் பக்கம் மீள்வான். தவ்பாச் செய்யாத நிலையில் மரணித்தால் நரகில் நிரந்தரமாகத் தங்குவான்.

4. **வாக்குறுதியும் தண்டனையும்:** இதன் மூலம் இவர்கள் நம்புவது. மு:்.மின் தவ்பா செய்தவனாகவும் கட்டுப்பட்டவனாகவும் உலகை விட்டுச் சென்றால் பிரதிபலன்களுக்கும் நன்மைகளுக்கும் உரித்துடையவனாவான். தான் செய்த பெரும் பாவத்துக்காக தவ்பா செய்யாத நிலையில் மரணித்தால் அவன் நரகில் நிரந்தரமாகாகத் தங்குவான். எனினும் அவனுக்குரிய தண்டனை காபிருக்குரிய தண்டனையை விடக் குறைவானதாக இருக்கும். மறுமையில் பாவிகளுக்குத் தண்டனை வழங்கப்படாமல் மன்னிப்பு வழங்கப்படும் என்ற கூற்றானது அல்லாஹ்வுடைய தண்டனையை அர்த்தமற்றதாக்கி விடுகிறது. இந்தக் கொள்கையின் காரணமாகவே

மு.்.தஸிலாக்கள் மறுமையில் ஷபாஅத் மூலமாக பாவிகள் பயன் பெறுவதை நிராகரிக்கின்றனர்.

5. **நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல்:** நாவினாலோ கையினாலோ ஆயுதத்தினாலோ சக்தி பெறும் போது அதற்கேற்ப நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பது அனைவர் மீதும் கடமையானதாகும்

இவை அல்லாத இன்னும் பல நம்பிக்கைகளும் மு.்.தஸிலாக்களிடம் காணப்படுகின்றன. அவற்றுள் சில அவர்களிடம் கருத்துவேறுபாடானவை. இன்னும் சில கருத்தொற்றுமையானவை. அவை வருமாறு

1. மறுமையில் எவருக்கும் அல்லாஹ்வைக் காண முடியாது
2. அல்குர்ஆன் படைக்கப்பட்டது
3. அல்லாஹ் அர்ஷில் அமர்ந்துள்ளான் என்பதை மறுத்தல்
4. பெரும் பாவம் செய்த எவரும் நபியவர்களின் ஷபாஅத்தை பெறமுடியாது.
5. அவ்லியாக்களின் கராமத்தை மறுத்தல்

**மு.்.தஸிலாக்களின் உட்பிரிவுகள்**

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட மு.்.தஸிலாக்கள் தமக்குள்ளும் கருத்து வேறுபாடுபட்டு ஈமான் சார்ந்த விடயங்களில் பல உட்பிரிவுகளாகப் பிரிந்தனர். அவற்றுள் சில

1. வாஸிலிய்யா
2. ஹுதைலிய்யா
3. நிலாமிய்யா
4. ஹாதிபிய்யா
5. பஷரிய்யா
6. முர்தாரிய்யா
7. ஸமாமிய்யா
8. ஹிஷாமிய்யா

- இது மட்டுமல்லாது முஸ்லிம் உம்மத்தில் ஜஹமிய்யா, கதரிய்யா. ஜபரிய்யா. முஅத்திலா போன்ற பிரிவுகள் தோன்றுவதற்கும் மு.்.தஸிலாக்கள் உருவாக்கிய பகுத்தறிவுவாத சிந்தனைப் போக்கே காரணமாக அமைந்தது. ஈமான் சார்ந்த விடயங்களில் பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் உண்மையைக் கண்டறிய முடியாது என்பதற்கு மேற்குறிப்பிட்ட பிரிவுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- அப்பாஸிய ஆட்சியாளரான ம:.மூனின் காலத்தில் மு:.தஸிலாக் கொள்கை அரச கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இக்கொள்கையை ஏற்காதோர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். இதனால் இக்கொள்கை அரச ஆதரவோடு வளரத் தொடங்கியது. பின்வந்த ஆட்சியாளர்கள் இக்கொள்கைக்கு ஆதரவு வழங்காமையினாலும் அறிஞர்களின் தெளிவான இஸ்லாமிய அகீதாப் பிரசாரத்தாலும் அது இல்லாதொழிந்தது. எனினும் அதன் சிந்தனைத் தாக்கம், இன்றும் சில முஸ்லிம் பகுத்தறிவாளர்களிடையே செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது.

**வஹ்ததுல் வுஜூத்**

- ''வஹ்ததுல் வுஜூத்'' என்ற சொல் மொழி ரீதியாக ''உள்ளவை அனைத்தும் ஒன்று'' என்று பொருள்தருகிறது. இஸ்லாமிய மரபில் ''அல்லாஹ்வும் இயற்கையும் ஒன்று என்று வாதிடும் தத்துவ கொள்கை'' இவ்வாறு அழைக்கப்படுகிறது. இக்கொள்கை சார்ந்தோர் நம்பிக்கையின் படி அல்லாஹ்வின் தோற்றமே இப்பிரபஞ்சம் என்றும் தமக்கென்று சுய இருப்பில்லாத சடப்பொருட்களின் மொத்தமான வெளித்தோற்றம் அல்லாஹ்வின் இருப்பில் நிலை கொண்டுள்ளது என்றும் நம்புகின்றனர்.

- ''வஹ்ததுல் வுஜூத்'' எனும் அத்வைதக் கோட்பாடு இஸ்லாத்தின் இறைநம்பிக்கைக்கு முற்றிலும் முரண்பட்ட ஒன்றாக இருப்பினும் தஸவ்வுப் சிந்தனையினூடாக முஸ்லிம்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றது. சில தஸவ்வுப் வாதிகள், ஷரீஅத்துக்கு அப்பால் அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைய முயற்சித்தமையே இதற்கான காரணமாகும். இவ்வகையில் இஸ்லாத்துடன் வஹ்ததுல் வுஜூத் சிந்தனையைப் புகுத்தியவர்களாக இப்னு அரபி, இப்னு பாரில், இப்னு ஸப்ஈன், தல்மஸானி போன்றோர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களுள் புதூஹாதுல் மக்கி எனும் நூலை எழுதிய இப்னு அரபியே முஸ்லிம்கள் மத்தியில் இத்துறையின் முன்னோடி எனக் கருதப்படுகிறார்.

- வஹ்ததுல் வுஜூத் கோட்பாட்டினை ஆரம்பத்தில் பேசியவர்கள் கிரேக்க இந்திய தத்துவஞானிகளாவர். பின்னர் அது சில யூத கிறிஸ்தவ வேதாந்திகளிடம் செல்வாக்குப் பெற்றது. ஹிஜ்ரி 7ம் நூற்றாண்டிற்குப் பிறகே இது பற்றி இப்னு அரபி பேச ஆரம்பித்தார்.

- இப்னு அரபியின் வஹ்ததுல் வுஜூத் சிந்தனையின் படி, படைப்பாளனுக்கும் படைப்புக்களுக்கும் இடையில் வேறுபாடுகள் எதுவும் கிடையாது. அல்லாஹ் ஆனவன் அனைத்துப் படைப்புக்களையும் தன்னிலேயே உள்ளடக்கியுள்ளான். இதுபற்றி அவர் கூறும் போது ''அனைத்தும் அவனாகிய நிலையில் அனைத்தையும் வெளிப்படுத்தும் அவன் தூய்மையானவன்'' என்கின்றார். இவரது சிந்தனையின் படி

- உலகம் நன்மை தீமை பற்றியோ, கழா கத்ர் பற்றியோ, சுதந்திரம் பற்றியோ அல்லது நாட்டம் பற்றியோ பேசும் இடமல்ல. ஆகவே விசாரணையோ, பொறுப்புக் கூறலோ, நன்மையோ தீமையோ என்று எதுவுமே இல்லை. அனைத்துமே இன்பத்தில் உள்ளன. சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடு வெறும் தரவேறுபாடே அன்றி வகை வேறுபாடல்ல. இப்னு அரபியின் சிந்தனைப்படி மதங்களுக்கிடையில் கூட வேறுபாடு கிடையாது. அல்லாஹ்வை வணங்குபவனும், கற்களை வணங்குபவனும் சிலைகளை வணங்குபவனும் சமமானவர்களே. ஏனெனில்

எல்லோரும் அல்லாஹ்வையே வணங்கியுள்ளனர். அதாவது படைப்பாளனும் படைப்புக்களும் ஒன்றே.

- இப்னு அரபி ஹி 560ல் பிறந்தார். தனது இளவயதில் ஏற்பட்ட கடும் சுகயீனம் அவரது வாழ்வில் மாறுதல்களைத் தோற்றுவித்தன. நோயில் இருந்து மீண்ட அவர் தேசம் சுற்றும் துறவியாக மாறினார். தனிமையில் நின்று வணங்குவதில் அதிக ஈடுபாட்டைக் காட்டினார். ஸ்பெய்னிலும் வடஆபிரிக்காவிலும் உள்ள பல ஸூபிகளிடம் ஆன்மிகப் பயிற்சிபெற்றார். தனது முப்பதாவது வயது பூர்த்தியானதும் டியுனேஷியா, எகிப்து, சிரியா, பலஸ்தீன் என பல நாடுகளுக்குப் பயணம் செய்தார். அக்காலத்திலே பல நூல்களை எழுதினார். புதூஹுதுல் மக்கி என்பது அவற்றுள் மிக முக்கியமான ஒன்றாகும்.

- அவரது இலக்கியங்கள் இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் அவருக்கு எதிரான கடும் விமர்சனங்களை எழுப்பின. அவர் காபிர் என்றும் ஸின்திக் என்றும் தீர்ப்புக் கூறப்பட்டார். அரச அதிகாரம் பெற்ற சிலர் அவருக்குப் புகலிடம் வழங்கினர். ஹி 638ல் மரணமெய்தினார்.

- இப்னு அரபியின் ஆதாரவாளர்கள் குறிப்படும் போது அவர் எழுதிய ஆழ்ந்த கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடியாமையினாலேயே பலர் அவரைப் பற்றித் தவறாகப் புரிந்துள்ளனர் என்கின்றனர். என்றாலும் இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கத்தையே தகர்த்தெறியக் கூடிய ஷிர்கான கருத்துக்களும் நாஸ்திக சிந்தனைகளும் அவரது ஆக்கங்களில் வெளிப்படையாகவே காணப்படுகின்றமை அவருக்கெதிரான விமர்சனங்களை நியாயப்படுத்துவதாக உள்ளது.

- அகீதாவில் முரண்பட்ட ஏனைய பிரிவினர் மத்தியில் பல்வேறு உட்பிரிவுகள் தோன்றியது போலவே வஹ்ததுல் வுஜூத் சார்ந்தோரிடமும் உட்பிரிவுகள் காணப்படுகின்றன. என்றாலும் அவை தனித்தனிப் பெயர்களால் அடையாளப்படுத்தப் படுவதில்லை. மாறாக கவர்ச்சியான முறையில் இக்கொள்கையை முன்வைக்கும் தனிநபர்களே இங்கு முக்கியம் பெறுகின்றனர். இவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் தமது கருத்துக்களால் கவரப்பட்ட பொது மக்களை ஒன்று சேர்த்துத் தமக்கென்று ஓர் அமைப்பை உருவாக்கிக் கொள்கின்றனர். இவ்வாறு தனிநபர்களால் தோற்றம் பெறும் பல அமைப்புக்கள் அடிப்படைச் சித்தாந்தத்தினால் ஒன்றுபட்டாலும் அதை விளக்குவதிலும் அவற்றின் வழிபாட்டு முறைகளிலும் வெவ்வேறு வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதனால் வேறுபடுகின்றன.

## அகீதா சார்ந்த சில விடயங்களும் அவை தொடர்பான நிலைப்பாடும்

**கழா கத்ர் :-**

**ஜபரிய்யா :**

அனைத்தும் கழா கத்ரின் படியே நடக்கின்றன. மனிதனுக்கு எவ்வித செயல் சுதந்திரமும் கிடையாது.

**அஹ்லுஸ் ஸுன்னா:**

மனிதனுக்குச் செயல் சுதந்திரம் உண்டு. ஆனாலும் அது அல்லாஹ்வின் நாட்டத்துடன் இணைந்தது.

**கதரிய்யா:**
கழாகத்ருக்கு எவ்வித தாக்கமும் கிடையாது. மனிதனின் நாட்டப்படியே அவனது செயற்பாடுகள் நடைபெறுகின்றன

**பெரும்பாவம் :-**

**கவாரிஜ் :**
பெரும்பாவம் செய்தவன் காபிர். அவன் கொல்லப்பட வேண்டியவன். அவனது செல்வம் கொள்ளையிடப்பட வேண்டியது.

**மு∴தஸிலா :**
பெரும் பாவம் செய்தவன் ஈமானை இழக்கின்றான். ஆனாலும் அவன் காபிரல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பான்

**அஹ்லுஸ் ஸுன்னா :**
பெரும் பாவம் செய்கின்ற மு∴மின் ஈமானை இழக்கமாட்டான். ஆனாலும் அதில் பலவீனமானவாக இருப்பான்.

**ஜஹமிய்யா, முர்ஜியா :**
ஈமானுடன் செய்யும் பெரும்பாவம் எவ்விதப் பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. குப்ருடன் நன்மை பயன் தராதது போன்று

**அலி (ரழி) :-**

**ஷீஆ :**
அலி(ரழி) அவர்கள் பாவமே செய்யாத தெய்வீக அந்தஸ்த்துப் பெற்ற புனிதர்.

**அஹ்லுஸ் ஸுன்னா:**
அலி(ரழி) அவர்கள் நேர்வழி நடந்த நான்காவது கலீபா, முக்கியமான ஸஹாபாக்களுள் ஒருவர். சுவனத்துக்காக நன்மாராயம் கூறப்பட்ட ஒருவர்.

**ஹவாரிஜ் :**
அலி (ரழி) அவர்கள் காபிராகி விட்டார்

**தேர்ச்சி 03 : வஹியின் அடியாகத் தோன்றிய மூலாதாரங்களையும் அதன் நோக்கங்களையும் விளங்கி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : ஷரீஆவின் அடிப்படை மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆன் பற்றிய விரிவான அறிவைப் பெற்று அதனைப் பின்பற்றி நடப்பார்.**

**பாடவேளை : 35**

**கற்றல் பேறுகள் :**

- ஷரீஆவின் கருத்து, அதன் வரலாறு (றஸூலுக்கு முன்னர், பின்னர்) என்பவற்றினை அறிந்து முன்வைப்பார்.
- மனித வாழ்வைச் சீராக்குவதில் இஸ்லாமிய ஷரீஆவின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார்.
- அல்குர்ஆன் அருளப்பட்டு, தொகுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட வரலாற்றைக் கட்டம் கட்டமாக எடுத்துக்காட்டுவார்.
- அல்குர்ஆன் சட்டமூலாதாரம் என்பதற்கான சான்றாதாரங்களை விளக்கி எழுதுவார்.
- அல்குர்ஆனின் மையக் கருத்துக்களை விளங்கி ஒழுகுவார்.
- உலூமுல் குர்ஆனின் உள்ளடக்கங்களை அறிந்து கூறுவார்.
- அல்குர்ஆன் முழுமையான வழிகாட்டி என்பதை ஏற்று அதனுடனான தனது உறவை வலுப்படுத்திக் கொள்வார்.
- அல்குர்ஆனை அணுகும் முறையை விளங்கி அவற்றைப் பிரயோகிப்பதில் ஈடுபாடு காட்டுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**இஸ்லாமிய ஷரீஆ**

**பதவிளக்கம்**

- ஷரீஆ என்பதன் மொழிக் கருத்து, ஆரம்பம், விளக்கம், நீர்ஊற்று, தெளிவு, தெளிவான பாதை என்பனவாகும். அல்குர்ஆன் ஷரீஆ எனும் பதத்தை ஒரேயொரு இடத்திலேயே பயன்படுத்தியுள்ளது . பின்னர் நாம் உம்மை மார்க்க விடயத்தில் (ஷரீஆவில்) நிலைபெறச் செய்தோம். நீர் அதனையே பின்பற்றுவீராக (45:18) இவ்வசனத்தில், அல்லாஹ் தனது அடியானுக்கு விதியாக்கியுள்ள தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் மற்றும் நல்லமல்களைக் குறிக்கவே அல்குர்ஆன் ஷரீஆ எனும் பதத்தை கையாண்டுள்ளது. எனினும் ஷரஆ எனும் சொல்லிலிருந்து பிரிந்து வருகின்ற வேறுபல பதங்களை (ஷரஆ, ஷரஉவ், ஷிர்அதன், ஷர்ரஅன்...) அல்குர்ஆன் கையாண்டுள்ளமை நோக்கத்தக்கது.

- இஸ்லாமிய பரிபாஷையில் ஷரீஆ என்பதை ஆய்வுக்குட்படுத்திய இஸ்லாமிய அறிஞர்கள், இருவகையான கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

**பொதுவான கருத்து**

அல்லாஹ்வால் உலக மக்களுக்காக வகுக்கப்பட்ட சட்டங்களே ஷரீஆ சட்டங்களாகும். அவற்றையே ஒவ்வொரு நபியும் போதித்தார்கள். இதன்படி ஷரீஆ என்பது, நம்பிக்கைக் கோட்பாடுகள், பண்பாடுகள், சட்டங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியிருக்கும்.

**விஷேட கருத்து**

- ஷரீஆ என்பது நம்பிக்கைக் கோட்பாடுகள் மற்றும் பண்பாடுகள் தவிர்ந்த மனிதவாழ்வுடன் அன்றாடம் தொடர்புறும் நடைமுறைசார் சட்டங்களாகும்.

- அல்குர்ஆன் சட்டவியல் எனும் கருத்தில் எந்தவொரு இடத்திலும் ஷரீஆ எனும் பதத்தைப் பயன்படுத்தவில்லை. நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் உருவாக்கிய சமூகத்திலேயே சட்டவாக்கம் அமுலாகியது. அல்குர்ஆன் ஷரீஆ எனும் பதத்தை மக்கி ஸூறாவில் ஒரேயொரு இடத்தில் பயன்படுத்தியுள்ளது. அதுவும் சட்டவியல் எனும் கருத்தில் ஷரீஆ எனும் சொல்லைப் பயன்படுத்தவில்லை. என்றாலும் அல்குர்ஆன் பல் துறைகளுடன் தொடர்புடைய சட்டங்களைக் கொண்டுள்ளதென்பது தெளிவானது. இபாதத், சமூகவியல், வியாபாரம், பொருளாதாரம், குற்றவியல் தண்டனைகள், அரசியல், சர்வதேச உறவுகள் எனப் பல்வேறுபட்ட துறைகளுடன் தொடர்புடைய சட்டங்களை அல்குர்ஆன் பேசுகின்றது.

**நிலையான தீனும் மாறுபட்ட ஷரீஆக்களும்**

- ஆதம் (அலை) அவர்கள் முதல், நபி (ஸல்) அவர்கள் வரை அனுப்பப்பட்ட அனைத்து ரஸூல்மார்களுக்கும் தீன் எனும் மார்க்கம் (கொள்கை) நிலையானதாகவும் ஷரீஆ எனும் சட்டம் வேறுபட்டதாகவும் அமைந்திருந்தன.

- நாம் நூஹுக்கு உபதேசித்தவற்றையே உமக்கும் மார்க்கமாக ஆக்கியுள்ளோம். மேலும் உமக்கு வஹியாக அருளியவையும் இப்றாஹீம், மூஸா,ஈஸா ஆகியோருக்கு உபதேசித்தவையும் நீங்கள் மார்க்கத்தை நிலைநாட்டுங்கள், அதில் பிரிந்துவிடாதீர்கள் என்பதாகும். (42:13)

- இங்கு தீன் என்பது மார்க்கத்தின் அடிப்படை விடயங்கள், நம்பிக்கைக் கோட்பாடுகள் என்பவற்றைக் கொண்டு நிலையானதாக மாறாத்தன்மை கொண்டதாக காணப்படுகின்றது.

- ஆனால் ஷரீஆ எனும் சட்டம் வித்தியாசமானதாகவும், காலமாற்றம் சமூகங்களின் நிலை என்பவற்றுக்கேற்ப வேறுபட்டதாகவும் அமைந்துள்ளதாகப் பின்வரும் அல்குர்ஆன் வசனம் கூறுகின்றது.

- உங்களில் ஒவ்வொரு தூதருக்கும் தனித்தனியாக ஷரீஆவையும், வழிகாட்டலையும் நாம் வழங்கியுள்ளோம். (5: 48)

- இவ்வாறாக தீன் நிலையானதாக இருக்க, ஷரீஆ சட்டங்கள் வரலாறு நெடுகிலும் வேறுபட்டதாக அமைந்தமைக்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. அல்லாஹ் காலம், இடம், சமூகங்களின் நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு வேறுபட்ட ஷரீஆ சட்டங்களை அமைத்துள்ளான்

2. முழு மனித சமூகத்தையும் ஒரு படிமுறை அணுகுமுறையின் கீழ் அழைத்துச் செல்வது அல்லாஹ்வின் நாட்டமாக இருக்கலாம்.

3. ஒவ்வொரு சமூகமும் கொண்டுள்ள இயல்புகள், வழக்காறுகள் என்பற்றைக் கருத்திற் கொண்டு வேறுபட்ட ஷரீஆ சட்டங்களை அல்லாஹ் அமைத்தான்

- உலக வரலாற்றில் அதிக நபிமார்களைப் பெற்ற சமூகம் யூத சமூகமாகும். அச்சமூகத்தில் தோன்றிய மூஸா (அலை) அவர்களின் ஷரீஆ சட்டத்தையும் ஈஸா (அலை) அவர்களின் ஷரீஆ சட்டத்தையும் எடுத்து நோக்கும் போது மேற்கூறிய காரணங்களை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். இதற்கு, முன்னைய வேதங்களில் கடைப்பிடிக்கப்பட்ட ''தலாக்'' பற்றிய சட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- யூதர்கள் கடின சித்தம் கொண்டவர்களாகவும் சடவாத உலகாயத சிந்தனைக்கு உட்பட்டவர்களாகவும் தலைக்கனம் பிடித்தவர்களாகவும் இனவாத சமூகமாகவும் காணப்பட்டனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட தௌராத் சட்டங்களைப் பூரணப்படுத்துவற்காக வந்த கிறிஸ்தவமதம் சில சட்டங்களை நீக்கி இன்னும் சில சட்டங்களை மென்மையாக முன்வைத்தது. எனவே இன்ஜீல் வேதமும் பொதுவான சட்டமாகவன்றி தற்காலிக தீர்வாகவே அமைந்திருந்தது. உதாரணமாக வரலாறு நெடுகிலும் அனைத்து மதங்களும் அங்கீகரித்த விவாகவிடுதலை (தலாக்) யை யூதர்கள் எல்லை மீறி உலகை அனுபவிக்கும் விதமாகப் பயன்படுத்திய போது, தொடர்ந்து வந்தகிறிஸ்தவம் விவாகரத்துச் செய்வதனைத் தடுத்தது. இதனை ஈஸா (அலை) அவர்கள் நிரந்தரத் தீர்வாகக் கூறியிருக்கச் சாத்தியமில்லை. அது மனித இயல்புக்கும் நடைமுறை வாழ்வுக்கும் பொருந்தாது. இதனாலேயே அவரது சீடர்களில் ஒருவர், இதுவே ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான சட்டம் எனின் அவ் ஆண் பிரமச்சாரியாக வாழ்வதே சிறந்ததாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

- இந்தவகையில் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பெற்ற தீனும் ஷரீஆவும் நிலையானதாகவும், இறுதியானதாகவும் அமைந்து காணப்படுகின்றன. இனிமேல் எந்தவொரு ஷரீஆவும் எந்தவொரு தூதரும் தோன்ற முடியாது. அதுவே இறுதியானது ஷரீஆவாகும். அது தெய்வீகம் சார்ந்தது. பாவ விலக்களிக்கப்பட்டது. தூய்மையானது. இலகுவானது. பரிபூரணமானது. நடுநிலையானது. நெகிழும் நெகிழாச் சட்டங்களைக் கொண்டது. நீதிமிக்கது.

**ஷரீஆவின் பரப்பு**

- இஸ்லாமிய கலைச்சொல் பாரம்பரியத்தில் சட்டம் எனும் கருத்திலேயே ஷரீஆ, பிக்ஹ் என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டாலும் இவ்விரண்டுக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

- பிகஹ் என்பது ஷரீஆவின் ஒரு பகுதி என சுருக்கமாகக் குறிப்பிடலாம். ஷரீஆ எனும் சட்டக் கோவையிலுள்ள சட்ட மூலாதாரங்களைப் பயன்படுத்தி நடைமுறைசார்ந்த ஷரீஆ சட்டங்களைப் பெறுவதுடன் தொடர்புடைய அறிவே பிக்ஹ் என்பதாகும். இவ்வாறு சட்டங்களை ஏற்படுத்துபவர்கள் புகஹாக்கள் என அழைக்கப்படுகின்றனர். ஷரீஆவுக்கும் பிக்ஹுக்கும் இடையிலான வேறுபாடுகளில் சில.

- - ஷரீஆ சட்டங்கள் என்றும் சரியானவை. சட்டவல்லுனர்களின் - புகஹாக்களின் - விளக்கம் சிலபோது பிழையாகவும் அமையலாம்

- - ஷரீஆ, சட்ட மூலாதாரங்களையும் சட்டவிதிகளையும் உள்ளடக்கியிருக்க, பிக்ஹ் முஜ்தஹித்களின் கருத்துக்களைக் கொண்டுள்ளது.

- - ஷரீஆ முழு மனித சமூகத்திற்கும் பொதுவானது; நிரந்தரமானது. பிக்ஹ் சட்டங்கள் காலம், சூழல், இடம் என்பவற்றுக்கேற்ப வேறுபடக் கூடியவை; வரையறுக்கப்பட்டவை

- - ஷரீஆவை முழு மனித சமூகமும் கட்டாயம் ஏற்றுப் பின்பற்ற வேண்டும். ஆனால் முஜ்தஹித்களின் கருத்துக்களின் அடியாக எழும் பிக்ஹைப் பொறுத்தவரையில் ஒரு முஜ்தஹிதுடைய கருத்தை இன்னொருவர் கட்டாயம் பின்பற்ற வேண்டுமென்ற அவசியம் இல்லை.

இந்தவகையில் இஸ்லாமிய ஷரீஆவின் பரப்பை பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கமுடியும்.

**1. சட்ட மூலாதாரம் (மஸாதிருஷ் ஷரீஆ)**

அ. அடிப்படை சட்ட மூலாதாரங்கள் - அல் குர்ஆன், ஸுன்னா

ஆ) துணை மூலாதாரங்கள் - இஜ்மா,கியாஸ், மஸ்லஹா முர்ஸலா, இஸ்திஹ்ஸான், கவ்லுஸ் ஸஹாபா, ஸத்துஸ் ஸராஇஉ, அமலு அஹ்லில் மதீனா, ஷராஇஉஸ் ஸாபிகா…

**2. ஷரீஆசட்டங்கள்**

இவை இஸ்லாமிய ஷரீஆ சட்ட மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்ட சட்டங்களாகும். இது இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

அ.அல்குர்ஆன், ஸுன்னாவின் தெளிவான ஆதாரங்களின் அடியாக எழும் சட்டங்கள்: இவை தெளிவானவை, வரையறுக்கப்பட்டவை, மார்க்கத்தின் அடிப்படைகள். ஒப்பீட்டளவில் இத்தகைய சட்டங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவானவை. எனினும் இவை கூடிய முக்கியத்துவம் பெறத்தக்கவை.

ஆ.சட்டமில்லாதபோது துணை மூலாதாரங்களைப் பயன்படுத்தி பெறுகின்ற சட்டங்கள். இவை ஷரீஆ சட்டங்களில் மிக அதிகமானவை. இஸ்லாமிய ஷரீஆவின் நடைமுறைச் சாத்தியத்தையும், காலத்தின் தேவையையும் ஈடு செய்வதில் இவற்றுக்குக் கூடிய பங்குண்டு.

- அந்தவகையில் இஸ்லாமிய ஷரீஆ, மனித நலன் காப்பதையே பிரதான பணியாகக் கொண்டுள்ளது. இந்த உயர்ந்த இலக்கை அடையவே அது தன்னகத்தே அகீதா- பகுத்தறிவு ஏற்கும் நம்பிக்கைக் கோட்பாடு, இபாதா, ஆன்மீக வணக்கவழிபாடுகள், அஹ்காம் - மனிதனை நெறிப்படுத்தும் சட்டங்கள் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இதுவே ‘‘இஸ்லாம் மதமும் அரசும்’’ என்ற சாசனத்தின் கருத்தாகும். உஸ்மான் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள் ‘‘அல்லாஹ் அல்குர்ஆனால் சாதிக்காத எத்தனையோ விடயங்களை அதிகாரத்தால் (ஆட்சியால்) சாதித்துள்ளான்’’.

**அல்குர்ஆன் : சட்ட மூலாதாரம்**

- மனிதன் இப்பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதி. எனவே மனிதன் தன்னிச்சைப்படி வாழ்ந்து நெறிதவறாது வாழ்வதற்குரிய தெய்வீக வழிகாட்டல்களை அல்லாஹ் அவ்வப்போது வழங்கி வந்தான்.

- அல்லாஹ்வால் இறுதி வேதமாக இறுதிநாள் வரை நிலைத்து நின்று மனித இனத்துக்கு சீரிய வழிகாட்டல்களை வழங்கும் வகையில் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட வேதமே அல்குர்ஆன் ஆகும்.

**அல் குர்ஆன் அருளப்படல்**

- முதலில் அல்குர்ஆன் முழுவதும் லவ்ஹுல் மஹ்பூழ் எனும் ஏட்டில் பதியப்பட்டிருந்தது. பின் அங்கிருந்து முழுமையாகக் கீழ்வானத்திற்கு (பைத்துல் இஸ்ஸ) இறக்கப்பட்டது. பின் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் நபி (ஸல்) அவர்களுக்கு, அவர்களது 40 வது வயது முதல் அல்குர்ஆன் தொடர்ந்து கால, சந்தர்ப்ப, சூழ்நிலைகள், தேவைகளுக்கேற்ப 23 வருடங்களாக வசனங்களாகவும் அத்தியாயங்களாகவும் சிறிது சிறிதாக, கட்டம் கட்டமாக அருளப்பட்டது.

  ‘‘நிச்சயமாக இது மிக்க கண்ணியமுள்ள குர்ஆனாகும்.(இது லவ்ஹுல் மஹ்பூழ் என்னும்) பாதுகாக்கப்பட்ட புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. பரிசுத்தவான்களைத் தவிர(மற்றெவரும்) இதனைத் தொடமாட்டார்கள். உலகத்தார் அனைவரினதும் எஜமானாகிய இறைவனால் இது அருளப்பட்டது.’’ (56 : 77-80)

- அல்குர்ஆனை இலகுவாக விளங்க, மனனம் செய்ய, எழுதிப் பாதுகாக்கும் சந்தர்ப்பத்தை வழங்க, எளிதாக நடைமுறைப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்த, சமூக சீர்திருத்தத்தை படிமுறையாக மேற்கொள்ள, நபி (ஸல்) அவர்களது உள்ளத்தைத் திடப்படுத்த, கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்க எனப் பல காரணங்களுக்காக அது சிறிது சிறிதாக இறங்கியது.

- நபி (ஸல்) அவர்களுக்கு வஹி வருகின்ற போதெல்லாம் அதை அவர்கள் தனது தோழர்களுக்கு எத்திவைப்பார்கள். தனக்குச் சொல்லப்பட்ட வஹியுடைய வசனங்கள் தவறிவிடக் கூடாது என்பதற்காக அவற்றை உச்சரிப்பதில் அவசரப்படுவார்கள். இவ்வாறு நபியவர்கள் அவசரப்படுவதை அல்லாஹ் தடுத்து அல்குர்ஆனை ஒன்று சேர்ப்பதும் பாதுகாப்பதும் தனது பணி எனக் கூறி அதை அல்லாஹ்வே பொறுப்பேற்றான்.

(நபியே!) ஜிப்ரீல் வஹிமூலம் ஓதிக்காண்பிக்கும் வசனங்கள் தவறிவிடுமோ என்று பயந்து அவர் ஓதி முடிப்பதற்கு முன்னர் நீங்கள் அவசரப்பட்டு அதனை ஓத உங்களுடைய நாக்கை அசைக்காதீர்கள் (75: 16-19)

- அல்லாஹ்வின் உதவியுடன் தனது உள்ளத்தில் பதியப்பட்ட அல்குர்ஆன் வசனங்களை நபி (ஸல்) அவர்கள் எழுதக் கற்றிருந்த தன் தோழர்களிடம் கூறி எழுதி வைப்பார்கள். அவர்கள் எழுதிய பின் அதை ஓதிக் காட்டி சரி பார்த்துக் கொண்டார்கள். ஆரம்பம் முதலே இவ்வேதம் அல்குர்ஆன், அல்கிதாப் என்ற அதன் பெயர்களுக்கு ஏற்ப ஓதல் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பாதுகாக்கப்பட்டது. அல்குர்ஆன் வசனங்கள் அருளப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறித்த வசனம் எந்த ஸூராவினுள் குறித்த எந்த ஸூராவுக்குப் பக்கத்தில் இடம்பெற வேண்டும் என்ற விடயங்களெல்லாம் குத்தாபுல் வஹிகளுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டன.

- ஓவ்வொரு றமழானிலும் ஜிப்ரீல் (அலை) அதுவரை இறக்கப்பட்ட அல்குர்ஆனை ஓதும் ஒழுங்கில் ஓதி மீட்டிக் காட்டுவார்கள். நபி (ஸல்) அவர்களது இறுதிக் காலத்தில் கடைசி ரமழானில் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் முழுக் குர்ஆனையும் நபியவர்களுக்கு ஓதிக் காண்பித்தார்கள். ஸைத் பின் தாபித் (ரழி) அவர்கள் அருகிலிருந்து அதை செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள்.

**தொகுக்கப்படல்**

- அல்குர்ஆன் ஒன்று சேர்க்கப்படல் ‘‘ஜம்உல் குர்ஆன்’’ எனப்படுகின்றது. காலத்தின் தேவை மற்றும் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் இப்பணியைத் தோழர்களின் ஆலோசனையோடு சிறப்பாக நிறைவேற்றினார்.

- நபி (ஸல்) அவர்களது வபாத்தைத் தொடர்ந்து கலீபாவாகிய அபூ பக்ர் (ரழி) அவர்களது காலத்தில் நிகழ்ந்த யமாமா (ஹி 12) யுத்தத்தில் அல்குர்ஆனை மனனமிட்டிருந்த பல ஹாபிழ்கள் ஷஹீதானார்கள். இதன் ஆபத்தை உணர்ந்த உமர் (ரழி) அவர்கள் ஓலைகளிலும் எலும்புகளிலும் பட்டைகளிலும் வேறு வேறாக எழுதப்பட்டிருந்த அல்குர்ஆன் வசனங்களை ஒன்றுசேர்த்து ஒரு தொகுப்பாக எழுதி வைக்க வேண்டுமென ஆலோசனை கூறினார்கள்.

- ஆரம்பத்தில் கலீபா அபூ பக்ர் (ரழி) அவர்கள் தயங்கினாலும் பின் மஸ்லஹா முர்ஸலாவை கருத்திற்கொண்டு ஸைத் பின் தாபித் (ரழி) அவர்களது தலைமையில் குழுவொன்றை நியமித்து அரச பணியாக அதனை மேற்கொண்டார்கள். ஸைத் பின் ஸாபித் (ரழி)அவர்கள், ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு இறுதி றமழானில் ஓதிக் காண்பித்த ஒழுங்கில் அல்குர்ஆனைத் தொகுத்தார்கள்.

- ‘‘கலீபா உஸ்மான் (ரழி) அவர்களது காலத்தில் இஸ்லாமிய கிலாபத் மேலும் விரிவடைந்தது. முஸ்லிம்கள் ஆர்மேனியப் போரில் கலந்துகொண்ட போது அல்குர்ஆனை ஓதும் முறையில் சர்ச்சைப்பட்டனர். இதன் ஆபத்தை உணர்ந்த ஹுதைபதுல் யமானி (ரழி) அவர்கள், கலீபாவுக்கு இதை எடுத்துச் சொல்லவே அல்குர்ஆனின் தூய்மையைப் பாதுகாக்கும் பொருட்டு, அதன் உச்சரிப்பை

பொறுத்தளவில் ஓர் ஒருமைப்பாடு தோற்றுவிக்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்த கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள், ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்களது தலைமையில் மீண்டும் ஒரு குழுவை நியமித்து ஹப்ஸா (ரழி) அவர்களிடமிருந்த பிரதியைத் தழுவி பல பிரதிகளை எழுதி கிலாபத்தின் ஒவ்வொரு பிரதேச கவர்னர்களுக்கும் அனுப்பி மக்களை ஒரே ஓதல் முறையில் ஓத ஒன்றுபடுத்துமாறு கட்டளையிட்டார்கள்.

- இவ்வாறு குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்களை ஒருமுகப்படுத்தியதினால் கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் அன்று முதல் 'ஜாமிஉல் குர்ஆன்' என்று கௌரவமாக அழைக்கப்படலானார்கள்.

## சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆன்

- அல்குர்ஆன் சட்ட ஆக்கத்தின் மூல ஆதாரமாக அமைவதற்குப் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.

### 1. அல்லாஹ்வின் வார்த்தை

- அல்குர்ஆன் அல்லாஹ்வின் தூய வார்த்தைகளாகும். அதில் எவ்வித இடைச்செருகல்களையும் மாற்றத்தையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒருபோதும் செய்துவிட முடியாது.

- அல் குர்ஆன் இறைவாக்காகும். எவராலும் அதுபோல ஒன்றை இயற்ற முடியாது. அதன் விடய உள்ளடக்கம், கம்பீரம், சொல்லாட்சி, உவமைகள், இலக்கிய நயம் ஆகிய அனைத்தும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவையாகவே உள்ளன.

'' நபியே!) இது வேதமாகும். இதனை உம்மீது இறக்கி அருளியுள்ளோம். மக்களை அவர்களுடைய இறைவனின் உதவி கொண்டு இருளிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் நீர் கொண்டு வர வேண்டும் என்பதற்காக!'' (14 : 1-2)

நிச்சயமாக இது அகில உலக இரட்சகனிடமிருந்து இறக்கப்பட்டதாகும் (26 : 192)

### 2. முழுமையான வழிகாட்டல்.

- மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்குமான வழிகாட்டல்களை அது தன்னகத்தே கொண்டுள்ளது. மனித வாழ்வை சீர்செய்யும் வகையில் தனிமனித, குடும்ப, சமூக வாழ்வு என அனைத்தையும் உள்ளடக்கியதாக அது அமைந்துள்ளது.

- இறைவன், இறைத்தூது, மறுமை போன்ற நம்பிக்கைக் கோட்பாடுகள், கொடுக்கல் வாங்கல் விதிமுறைகள், திருமணம், வியாபாரம், சர்வதேச உறவுகள் ஏனைய சமூக நடவடிக்கைகள் என மனித வாழ்வோடு தொடர்புறும் சிறிய பெரிய விடயங்கள் அனைத்திற்கும் அல்குர்ஆன் வழிகாட்டுகின்றது.

''நாம் இந்த வேதத்தை அனைத்து விடயங்களுக்கும் விளக்கமாகவும் முஸ்லிம்களுக்கு நேர்வழியாகவும் அருளாகவும் சுபசோபனமாகவும் இருப்பதற்காகவே இறக்கினோம்'' (6 : 89)

### 3. இலகு தன்மை கொண்ட வேதம்.

அல்குர்ஆன் அதனை ஓதுவதிலோ, விளங்குவதிலோ எவ்வித சிரமத்தையும் கொண்டிருக்கவில்லை. அது ஏவல் விலக்கல்களை நிர்ப்பந்தமின்றி இலகுவாக பின்பற்ற வழிகாட்டுகின்றது.

''நாம் இந்தக் குர்ஆனை படிப்பினை பெறுவதற்காக இலகுபடுத்திவிட்டோம்.'' (54 : 17, 22, 32)

''தாஹா, நாம் இந்தக் குர்ஆனை நீர் கஷ்டப்பட வேண்டும் என்பதற்காக உம் மீது இறக்கவில்லை'' (20 : 1-2)

- அல்குர்ஆன் வசனங்கள் மயக்கம் நிறைந்தனவாகவோ, புரிந்து கொள்ள முடியாத வெறும் வார்த்தை ஜாலங்கள் கொண்டனவாகவோ இல்லை. மாறாக அல்குர்ஆன் மிக எளிமையாகவும் நேரடியாகவும் விடயங்களை முன்வைக்கின்றது. அதன் சொற்களில் செயற்கைத் தன்மை கிடையாது. அது மனிதனின் சிந்தனையைத் தட்டியெழுப்புகின்றது. மனிதனின் அன்றாட வாழ்விலிருந்தே மனிதனுக்குப் பாடம் புகட்டுகின்றது. மாறாக அதன் வார்த்தைகளில் இதயத்தை ஈர்க்கும் இனிமையும் கவர்ச்சியும் இருக்கின்றன. அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்ளும் வகையில் அமைந்திருக்கின்றது.

### 4. அறிவின் ஊற்று

- போற்றத்தகு சமூக உருவாக்கத்தின் அத்திவாரம் அறிவாகும். இஸ்லாமிய வாழ்க்கை அமைப்பின் அடிப்படைகளை அறிவார்ந்த ரீதியில் தெளிவாக்கி அதனுடைய ஒழுக்க அடிப்படைகளை உறுதியாக எடுத்துக்காட்டுகின்றது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறை குறித்தும் அதற்குள்ள எல்லைகளையும் வரம்புகளையும் நிர்ணயித்து நெறிப்படுத்துகின்றது.

- கொள்கை, கோட்பாட்டு விதிகள், அறிவியல், கலை, இறையியல், சட்டம் போன்ற ஒவ்வொரு துறையின் நோக்கத்தையும் அறிவுபூர்வமாக முழுமையாக நிறைவு செய்கிறது.

- முதலில் அருளப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள் ஐந்தும் அறிவு ஞானம், எழுதுகோல் படைப்பாளன் ஆசானாக இருந்து கற்றுத் தந்தவை போன்றன பற்றி விளக்குகின்றது.

''ஓதுவீராக!(நபியே) படைத்த உம் இரட்சகனின் திருப்பெயர் கொண்டு!(உறைந்த) இரத்தக் கட்டியிலிருந்து மனிதனை அவன் படைத்தான். ஓதுவீராக! மேலும் உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட்கொடையாளன் எனில், அவனே எழுதுகோலின் மூலம் கற்றுக்கொடுத்தான். மனிதனுக்கு- அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான். (96 : 1-5)

- அல்குர்ஆன் அறிவு ஆராய்ச்சியைத் தூண்டுகின்றது. ''அவர்கள் ஆராய வேண்டாமா?'' ''உற்று நோக்க வேண்டாமா?'' ''அறிவுடையோர், சிந்திப்போர்''

போன்ற பிரயோகங்கள் அறிவாராய்ச்சியைத் தூண்டுகின்றதன் விளைவாக பல கலைகளை அறிவியல் உலகுக்கு முஸ்லிம்கள் வழங்கினார்கள்.

- எனவேதான், மருத்துவம், விஞ்ஞானம், கணிதம், புவியியல், வானவியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல் என பல கலைகளின் முன்னோடிகளாக முஸ்லிம்கள் திகழ்ந்தனர்.ஆழகியல் உணர்வை அல்குர்ஆன் மதித்து நெறிப்படுத்தியதன் விளைவாக முஸ்லிம்கள் அழகியல் கலைகளை வளர்ப்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

  ‘‘ஆதமுடைய மக்களே! தொழும்போதெல்லாம் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்(7:31) நிச்சயமாக நாம் சமீபமாக உள்ள வானத்தை (பூமியிலுள்ளவர்களுக்கு நட்சத்திர) விளக்குகளைக் கொண்டு அலங்காரமாக்கி வைத்தோம்(67:5) நபியே! அல்லாஹ் தன் அடியார்களுக்கு அளித்திருக்கும் அலங்காரத்தையும் நல்ல உணவையும் (ஆகாதவையென்று) தடுப்பவர் யார்? என்று கேளும் (7:32)

- அதேநேரம் அல்குர்ஆனையொட்டி இன்னும் பல கலைகள் தோற்றம் பெறவும் அல்குர்ஆன் தூண்டுதலாக அமைந்தது. உதாரணமாக உலூமுல் குர்ஆன், இஜ்திஹாத் (இஜ்மா, கியாஸ்) பிக்ஹு, உஸுலுல் பிக்ஹ் போன்ற கலைகள் தோற்றம் பெற்று இஸ்லாமிய அறிவியலுக்கு உரமூட்டின.

**5. கட்டுக்கோப்புள்ள சமூகத்தையும் உயர்ந்த நாகரிகத்தையும் கட்டியெழுப்புவதற்கான போதனைகள் அடங்கிய வேதம்.**

- தனிமனித உருவாக்கத்திற்கும் கூட்டு வாழ்விற்கும் அல்குர்ஆன் முக்கியத்துவம் வழங்குகின்றது. தனிமனித உருவாக்கத்திற்கு உடல், அறிவு, ஆன்மாவுக்கான வழிகாட்டல்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

- சமுதாய வாழ்வில் பேணவேண்டிய அன்பு, சகோதரத்துவம், கட்டுப்பாடு, ஷுரா போன்ற உயர் விழுமியங்களை அழுத்திப் பேசுகின்றது. இவற்றைப் பாதித்துவிடும் பண்புகளை எச்சரித்து, அவற்றைக் களைய வழிகாட்டுகின்றது. சூரா ஹுஜ்ராத், அந்நூர் போன்றவை சமூக வாழ்வின் யாப்பாக நோக்கப்படுமளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

- அல்குர்ஆனின் வசனங்களில் அறிவும் உணர்வும் சரியான அளவில் இணைக்கப்பட்டுள்ளன. பொதுவாக அறிவும் உணர்வும் நேர் எதிர் தன்மை கொண்டதாகக் கருதப்படுகின்றன. ஆனால் குர்ஆன் செய்திகளைக் கூறும்போதும் வாதங்களை முன்வைக்கும் போதும் சட்டங்கள் விதிமுறைகளை விளக்கும் போதும் இழையோடுகின்ற அறிவையும் உணர்வையும் இணைப்பதில் வெற்றிபெற்றுள்ளது; தன் இலக்கை அடையச் செய்கின்றது.

- இவ்வாறான வழிகாட்டல்களால் அல்குர்ஆன் பாலை மண்ணில் காட்டுமிராண்டிகளாக, நாடோடிகளாக வாழ்ந்த மக்களை உலக நாகரிகத்தின் சிற்பிகளாக, உலகாளும் மன்னர்களாக மாற்றியது. அன்றிருந்த ரோம, பாரசீக சாம்ராஜ்யங்கள் முகம்

திருப்பிப் பார்க்காத பாலைநில புதல்வர்களை உலகம் மதித்தது; வியந்து பார்த்தது. அவர்கள் இன்று வரை உதாரண புருஷர்களாக இன,மத வேறுபாடின்றி நம்பப்படுகின்றார்கள். இத்தகைய ஒப்பற்ற நாகரிகம், பண்பாடு கொண்ட சமுதாயத்தைத் தோற்றுவித்த பெருமை அல்குர்ஆனையே சாரும்.

- மொழி, நிறம், பிரதேசம், காலம் என்பவற்றுக்கு அப்பால் முஸ்லிம்களால் இன்றுவரை பின்பற்றப்படுவதும் போற்றப்படுவதும் அல்குர்ஆனே.

## உலூமுல் குர்ஆன்

- அல்குர்ஆனை அடியொற்றி வளர்ந்த கலையை விளக்குவதற்கே உலூமுல்குர்அன் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அல்குர்ஆனை மிகச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் அல்குர்ஆனின் போதனை, அதன் இலக்கு, அதன் தொனி என்பவற்றை வழுவின்றிப் புரிந்து கொள்வதற்கும் அல்குர்ஆன் வசனங்களுக்கிடையே சில போது முரண்பாடுகள் போன்று தோற்றமளிக்கும் விடயங்களில் தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் இக்கலை பற்றிய அறிவு இன்றியமையாததாகும்.

- ரஸூல் (ஸல்) அவர்கள் காலத்தில் இது ஒரு தனிக்கலையாக வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. ஆயினும் இக்கலைகளின் ஆரம்பம் இக்காலத்திலேயே தோற்றம் பெற்றது எனலாம். நபி (ஸல்) அவர்களுடன் இருந்த தோழர்களுக்கு அல்குர்ஆனின் கருத்துக்களைப் புரிந்து கொள்வதில் அதிகம் சிரமங்கள் இருக்கவில்லை. அவர்கள் தூய அறபு மொழியில் புலமை பெற்றிருந்தமையினால் அல்குர்ஆன் வசனங்களையும் அவற்றின் கருத்துக்களையும் எளிதில் விளங்கிக் கொள்ளச் சிரமப்பட்டவில்லை. தேவையான போது நபி (ஸல்) அவர்களிடம் வினவி தெளிவைப் பெற்றுக் கொண்டார்கள். சில சந்தர்ப்பங்களில் நபி (ஸல்) அவர்கள் தாமாகவே விளக்கமளித்ததுமுண்டு. இதனை உலூமுல் குர்ஆனின் தோற்றத்தின் அடிப்படை எனலாம்.

- உஸ்மான் (ரழி) அவர்கள் காலத்தில் அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டு அதன் பிரதிகள் பல்வேறு நகரங்களுக்கும் அனுப்பப்பட்டமையை இக்கலை வளர்ச்சியின் முதல் கட்டம் எனலாம். பின்னர் அலி (ரழி) அவர்கள் காலத்தில் அபூ அஸ்வத் அத்துவலி என்பர் அல்குர்ஆன் வசனங்களுக்கு உயிர்க்குறிகளை இட்டார். இம்முயற்சி அல்குர்ஆன் வசனங்களைத் தெளிவாக உச்சரித்து மொழிவதற்குப் பெரிதும் துணை புரிந்தது. இது உலூமுல் குர்ஆனின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கதொரு கட்டமாகும்.

- ஹிஜ்ரி 02 ஆம் நூற்றாண்டில் ஹதீஸ்கள் எழுத்துருவில் பதியப்படும் நிலை தோன்றியபோது அல்குர்ஆன் விரிவுரைகளுடன் தொடர்பான ஹதீஸ்களும் அவற்றோடு பதியப்படலாயின. இவ்வாறு அல்குர்ஆனிற்கு விரிவுரையாக ரஸூல் (ஸல்) அவர்களிடமிருந்தும் ஸஹாபிகள் மற்றும் தாபிஊன்களிடமிருந்தும் பெறப்பட்ட அறிவிப்புகளை இக்காலத்துப் பிரபல அறிஞர்கள் ஒன்று சேர்க்கலாயினர்.

- ஹிஜ்ரி 3ஆம் நூற்றாண்டில் உலூமுல் குர்ஆன் வளர்ச்சியின் பாரிய திருப்பங்கள் ஏற்பட்டதைக் காணமுடிகின்றது. அல்குர்ஆனுக்கான முழுமையான தப்ஸீர்கள் தோற்றம் பெறலாயின.

உலூமுல் குர்ஆன் பல்வேறு உப பிரிவுகளாகப் பிரித்து நோக்கப்படுகிறது.

**1. மக்கி மதனீ**

- அல்குர்ஆனில் மக்கி மதனி அத்தியாயங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கு ஹிஜ்ரத் நிகழ்வே பொதுவாக அறிஞர்களால் பயன்படுத்தப்படுகிறது. ஹிஜ்ரத்துக்கு முன்னர் அருளப்பட்டவற்றை மக்கி எனவும் பின்னர் அருளப்பட்டவை மதனீ எனவும் சிலர் வகைப்படுத்துவர். மக்காவிலும் அதனைச் சூழ அமைந்த அறபா ஹுதைபியா மினா ஆகிய பிரதேசங்களில் அருளப்பட்டவை ஹிஜ்ரத்துக்குப் பின் அருளப்பட்டவையாயினும் சரி அவை மக்கி என்று அழைக்கப்படுகிறது.

- மதீனாவிலும் அதனைச் சூழ அமைந்த கூபா, உஹத் போன்ற இடங்களில் அருளப்பட்டவற்றை மதனி என்றும் குறிப்பிடுவர். ஆயினும் இவ்வாறு வகைப்படுத்துவதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, தபூக், பைதுல் முகத்தஸ் பகுதிகளில் அருளப்பட்ட வசனங்கள் எவ்வகையைச் சார்ந்தது என்று வரையறுப்பது சிரமமாகுகின்றது. எனவே முதற் கருத்தை ஏற்றுக் கொள்வதே மிகவும் பொருத்தமானது.

- மக்கி மதனீயை வேறுபடுத்தி அறிந்து கொள்வதற்குச் சஹாபாக்களதும் தாபியீன்களதும் கருத்தைக் கைக்கொள்வதே மிகவும் பொருத்தமானது. இஜ்திஹாத் வழிமுறையைப் பிரயோகித்து மக்கி மதனியை வேறுபடுத்தி அறிந்து கொள்ள முடியும். ஒரு சூறாவின் ஆரம்பப்பகுதி ஹிஜ்ரத்துக்கு முன்னர் மக்காவில் அருளப்பட்டு இறுதிப் பகுதி மதீனாவில் அருளப்பட்டிருந்தால் அதனை மக்கி என்றே கணிப்பர். அவ்வாறே ஒரு சூறாவின் ஆரம்பப் பகுதி ஹிஜ்ரத்துக்குப் பின்னர் மதீனாவில் அருளப்பட்டு அதன் இறுதிப்பகுதி மக்காவில் அருளப்பட்டிருந்தால் அது மதனி என்று அழைக்கப்படும்.

- அல்குர்ஆனில் 114 சூறாக்களுள் 93 மக்கீ என்றும் 21 மதனீ என்றும் ஒரு கருத்துண்டு. ஆயினும் இவ்வெண்ணிக்கை தொடர்பாக அறிஞர்களிடையே பல கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் மக்கி 86 என்றும் மதனி 28 என்றும் குறிப்பிடுகின்றனர்.

**மக்கி மதனி வசனங்களின் சிறப்பம்சங்கள்**

**மக்கி**

- வசனக் கவர்ச்சி, சிறிய ஆயத்துக்கள் மற்றும் சிறிய அத்தியாயங்கள்
- தவ்ஹீதை வலியுறுத்தல், ஆதாரமாக பிரபஞ்சக் காட்சிகளை முன்வைத்து நிறுவுதல்
- சான்றுகளை முன்வைக்கின்ற போது "கல்லா" என்ற சொல்லைப் பிரயோகித்தல், சஜதா திலாவத் இடம்பெறல்
- இஸ்லாத்தின் அழைப்பை மானுடத்தை விழித்து முன்வைத்தல்.
- பொதுவாக ஓ மனிதர்களே என விழிக்கும் போக்கு
- ஹுரூபுல் முகத்தஆத் பிரயோகம் சூறாக்களின் ஆரம்பத்தில் இடம்பெற்றிருத்தல்

- ஒழுக்க வாழ்வை நிலை நாட்டுவற்காக நற்பண்புகள் பற்றிய போதனைகளை முன்வைத்தல்
- வரவாற்று நிகழ்வுகளை முன்வைத்து அதனூடாக இஸ்லாமியப் பிரச்சாரத்தின் இயல்பை எடுத்துக் காட்டல்

**மதனீ**

- நீண்ட வசனங்கள், நீண்ட அத்தியாயங்கள்
- றிஸாலத், மஆத் பற்றிய போதனைகளை முன்வைத்தல்
- குடும்ப சமூக ஒழுங்குகள் பற்றிய போதனைகளை முன்வைத்தல் (முனாகஹாத், முஆமலாத்)
- சமூகப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தல்
- முனாபிக்குகளின் பண்புகள் பற்றி விளக்குதல்
- முன்னைய வேதங்கள் பற்றிய உண்மைத் தன்மையை விளக்குதல்
- விசுவாசிகளே என விழித்து இஸ்லாத்தின் தூதுத்துவ அழைப்பைப் பொதுமைப்படுத்தல்

**அஸ்பாபுந் நுஸூல்**

- அல்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டதற்கான பின்னணிக் காரணங்களைக் குறிக்கவே இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இது அல்குர்ஆன் வசனங்கள் ஏன், எப்போது, அருளப்பட்டன என்பதைத் தெளிவுபடுத்துகின்ற ஒரு குர்ஆனியக் கலையாகும். அல்குர்ஆனை விளங்க, ஆராய முற்படும் ஒருவர் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய ஒரு கலையாகும். அல்குர்ஆனில் அனைத்து வசனங்களுக்கும் அவை அருளப்பட்டதற்கான பின்னணிக் காரணங்கள் இருக்க வேண்டும் என்பதில்லை. மாறாக சில வசனங்கள் அல்லது சூறாக்களுக்கு மாத்திரமே இவ்வாறு பின்னணிக் காரணங்கள் காணப்படுகின்றன. அவை காணப்படுவதற்கான இரண்டு நிலைகள் இருக்க முடியும் என அறிஞர்கள் விளக்குவர்.

1. நடைபெற்ற ஒரு நிகழ்வு தொடர்பாக அல்குர்ஆன் அருளப்படல். உதாரணமாக நபி (ஸல்) அவர்கள் குறைஷித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவ்விடத்திற்கு வந்த பார்வைப் புலன் அற்ற அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் புறக்கணித்தமையை கண்டித்து சூறா அபஸாவின் முதற்பகுதி அருளப்பட்டதைக் குறிப்பிடலாம்.
2. நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தெளிவு வழங்குதவற்காக அருளப்படல். உதாரணமாக அல்குர்ஆனில் பல இடங்களில் யஸ்அலூனக.. அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர் என்ற பதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தில் கிடைக்கும் பொருட்கள், மது, சூதாட்டம், பிறை, துல்கர்னைன் பற்றியெல்லாம் மக்கள் கேட்ட கேள்விகளுக்கு அல்குர்ஆன் விளக்கமளித்ததை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

“மது பற்றியும் சூதாட்டம் பற்றியும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். நீர் கூறுவீராக அவ்விரண்டிலும் பெரும் கேடு இருக்கிறது. அவற்றில் மக்களுக்குச் சிறிது பயன்கள் இருப்பினும் அவற்றினால் ஏற்படும் தீங்கு அவற்றின் பயன்களை விட அதிகமாக இருக்கிறது.” (2:219)

- அஸ்பாபுந் நுஸுூலை அறிந்து கொள்வதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

  1. ஸஹீஹான ஹதீஸ்கள்
  2. ஸஹாபாக்களின் அறிவிப்புக்கள்

  ஸபபுந் நுஸுூல் பற்றிய அறிவு பல பயன்களைத் தருகிறது.

1. அல்குர்ஆன் வசனம் கூறவரும் மேலோட்டமான கருத்துக்களை மட்டும் நோக்காது அதன் ஆழமான கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.
2. அல்குர்ஆன் வசனம் ஒன்று, குறிப்பாக யார் தொடர்பாக இறங்கியது என்பது பற்றி மயக்கமின்றி அறிய உதவுகின்றது.
3. இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தினை விதிப்பதற்கான நியாயங்களை விளங்கிக் கொள்ள துணை செய்கிறது.
4. பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் இஸ்லாமிய ஷரீஆ மக்களின் நலன்களை எந்தளவு கருத்தில் கொண்டுள்ளது என்பதை அறிய முடியும்.
5. ஒரு அல்குர்ஆன் ஆயத்தை இலகுவாக மனதில் பதித்துக் கொள்வதற்கு அவ்வசனம் தொடர்பான நிகழ்ச்சிகள், இறங்கியமைக்கான காரணிகளை அறிந்துகொள்ளல் என்பன துணை செய்கின்றன.

**நாஸிக் - மன்ஸுூக்**

- அறபு மொழியில் நஸக் என்ற சொல்லுக்கு நீக்குதல் மாற்றுதல் பிரதிபண்ணுதல் முதலான கருத்துக்கள் வழங்கப்படுகின்றன. இஸ்லாமியப் பரிபாஷையில் முன்னர் வந்த ஆதாரபூர்வமான ஷரீஅத் சட்டமொன்று பின்வந்த ஆதாரபூர்வமான ஷரீஆ சட்டம் ஒன்றினால் மாற்றப்படுவதை இது குறித்து நிற்கிறது. நாஸிக் என்பது மாற்றத்தை ஏற்படுத்திய பின்னர் வந்த சட்டத்தையும் மன்ஸுூக் என்பது மாற்றத்துக்குள்ளாகு முன்னர் இருந்த சட்டத்தையும் குறிக்கின்றன. எனவே நாஸிக் மாற்றிய சட்டம் என்றும் மன்ஸுூக் மாற்றப்பட்ட சட்டம் ஒன்றும் ஆகும்.
- அல்குர்ஆனில் நாஸிக் இடம்பெற்றுள்ளன என்பதற்கு ஆதாரமாகப் பின்வரும் வசனங்களை அறிஞர்கள் ஆதாரமாக முன்வைப்பர்.
- யாதொரு ஆயத்தை மாற்றிவிட்டால் அல்லது அதனை மறக்கடித்து விட்டால் அதற்கு ஒப்பானவை அல்லது அதைவிட சிறந்ததைக் கொண்டு வருவோம். (2:106)

  நாம் ஓர் ஆயத்தை மற்றொரு ஆயத்தைக் கொண்டு மாற்றினால் அதற்கு ஈடாக எதனை அருளவேண்டும் என்பதனை அல்லாஹ் நன்கறிவான். (16:101)

- அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ இடம்பெறுகின்ற நாஸிக் மன்ஸுக் என்பவற்றை இனங்காண்பது குறித்து பல கருத்துக்கள் காணப்படுகின்றன.

1. நபி (ஸல்) அவர்களோ அவர்களது தோழர்களோ அது பற்றி விளக்கியிருத்தல்
2. குறித்த ஒரு சட்டம் அல்லது வசனம் நாஸிக் அல்லது மன்ஸுக் என இஸ்லாமிய அறிஞர்கள் ஏகோபித்துக் கூறல்
3. வரலாற்று ஒளியில் காலத்தால் முந்தியது எது பிந்தியது எது என்பதை அறிதல்.

**நஸ்கின் வகைகள்**

1. அல்குர்ஆன் வசனம் ஒன்று இன்னொரு அல்குர்ஆன் வசனத்தால் மாற்றப்படுதல்

   ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் அவளது இத்தாக்காலம் ஒரு வருடம் என அல்குர்ஆன் (2:240) குறிப்பிடுகிறது. பின்னர் அச்சட்டம் 4 மாதங்களும் 10 நாட்களும் (2:234) என்ற வசனத்தால் மாற்றப்பட்டது

2. அல்குர்ஆனின் சட்டம் ஒன்று அஸ்ஸுன்னாவினால் மாற்றப்படுதல்

   இது குறித்து இமாம்களிடையே அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றன. இமாம்களான அபூஹனீபா, மாலிக், அஹ்மத் ஆகியோர் இது சாத்தியமானது எனக் கூறுகின்றனர். காரணம் இரண்டுமே வஹி என்பதனாலாகும். இமாம் ஷாபி அவர்களும் லாஹிரி மத்ஹபைச் சேர்ந்தோரும் சாத்தியமற்றது என வாதிக்கின்றனர். இதற்கு ஆதாரமாக அல்குர்ஆனின் (2:106) ஆம் வசனத்தை முன்வைக்கின்றனர்.

3. ஸுன்னாவின் சட்டம் ஒன்றை அல்குர்ஆன் மாற்றுதல்

   ஸுன்னாவின் வழிகாட்டலில் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் கிப்லாவாக மஸ்ஜிதுல் அக்ஸாவை நோக்கியே முஸ்லிம்கள் தொழுதனர். பின்னர் (2:144) வசனத்தின் மூலம் அது மஸ்ஜிதுல் ஹராமின் திசையில் மாற்றப்பட்டது.

4. ஸுன்னாவின் சட்டம் ஒன்று ஸுன்னாவினால் மாற்றப்படுதல்

   ''நான் ஆரம்பத்தில் புதைகுழிகளைத் தரிசிப்பதை உங்களுக்குத் தடை செய்திருந்தேன். இப்போது நீங்கள் அதனைத் தரிசிக்கலாம்''

   அல்குர்ஆனில் காணப்படும் நஸ்கின் வகைகள்

1. திலாவத், ஹுக்கும் இரண்டும் மாற்றப்படல்

   செவிலித் தாயிடம் 10 தடவைகள் பால் அருந்துவதன் மூலம் அவள் மஹ்ரமி அந்தஸ்தைப் பெறுகிறாள் என்ற கருத்துடைய வசனம் அல்குர்ஆனில் இருந்தது. பின்னர் செவிலித் தாயிடம் ஐந்து தடவைகள் பால் அருந்துவதன் மூலம் அவள் மஹ்ரமி ஆகுகின்றாள் என்ற வசனம் அருளப்பட்டதைத் தொடர்ந்து முந்தைய வசனமும் சட்டமும் மாற்றப்பட்டது.

2. திலாவத் மாற்றப்படாது ஹுக்கும் மட்டும் மாற்றப்படல்

இத்தா அனுஷ்டிப்பது ஒரு வருடம் என்ற மாற்றப்பட்ட சட்டத்தைக் கூறும் 2:240 ஆம் வசனம் இன்றும் அல்குர்ஆனில் உண்டு. ஆனால் அதற்குரிய ஹுக்கும் நடைமுறையில் இல்லை. அது 2:234 ஆம் வசனத்தால் மாற்றப்பட்டது.

3. திலாவத் மாற்றப்பட்டு ஹுக்கும் மாற்றப்படாதிருத்தல்

திருமணம் முடித்தவர்கள் விபச்சாரம் செய்தால் அவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் ''திருமணம் முடித்த ஆணும் பெண்ணும் விபச்சாரம் செய்தால் அவர்களைக் கல்லெறிந்து கொன்று விடுங்கள்'' என்ற வசனமும் அதன் ஹுக்குமும் ஆரம்பத்தில் அமுலில் இருந்தன. பின்னர் திலாவத் நீக்கப்பட்டது. ஹுக்கும் அமுலில் உள்ளது.

நாஸிக் மன்ஸூக் பற்றிய அறிவு மிகவும் முக்கியமானது. சட்டங்களைப் பிழையின்றி வகுக்கவும் அல்குர்ஆனின் வசனங்களுக்குத் தெளிவான விளக்கங்களை வழங்கவும் இக்கலை இன்றியமையாதது. இதனை உணர்த்தப் பின்வரும் சம்பவம் போதிய சான்றாகும்.

ஒரு முறை அலி (ரழி) அவர்கள் ஒரு நீதிபதியிடம் உமக்கு ''அந்நாஸிக் எது? அல்மன்ஸூக் எது எனப் பிரித்தறியத் தெரியுமா எனக் கேட்டார்கள். அதற்கு அவர் இல்லை எனப் பதிலளித்தார். அதற்கு அலி (ரழி) அவர்கள் நீயும் அழிந்தாய். மற்றவர்களையும் அழித்து விட்டாய் என எச்சரித்தார்கள்.

**முஹ்கம் - முதஷாபிஹாத்**

முஹ்கம் - முதஷாபிஹாத், உலூமுல் குர்ஆன் கலையில் மற்றொரு முக்கிய பகுதியாகும். அல்குர்ஆன் வசனங்களை முஹ்கமாத் - முதஷாபிஹாத் என்று இரு பெரும் பிரிவுகளாக நோக்க முடியும். நம்பிக்கைக் கோட்பாடுகள், இஸ்லாமிய அடிப்படைகள், சட்டங்கள் என்பவற்றைக் குறிப்பிடும் வசனங்கள் முஹ்கமாத் எனும் மிகத் தெளிவான வசனங்களாக உள்ளன. அவ்வகை வசனங்களே அல்குர்ஆனில் அதிகம் உண்டு. அவை குறித்து எந்தக் கருத்து வேறுபாடுகளும் எழவில்லை.

முதஷாபிஹாத் என்பது தஷாபுஹ் எனும் சொல்லிலிருந்து தோன்றியதாகும். ஒன்றையொன்று ஒத்திருத்தல், ஒன்றை ஒன்றிலிருந்து பிரித்துக் காட்ட முடியாத நிலை ஏற்படல் முதலான கருத்துக்களில் இப்பதம் கையாளப்படுகிறது. அல்குர்ஆனில் முதஷாபிஹ் என்பது தெளிவற்ற பல கருத்துக்களைத் தரக்கூடிய வசனங்களைக் குறிக்கிறது. இத்தகைய வசனங்கள் அல்குர்ஆனில் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றன.

முஹ்கம் - முதஷாபிஹாத் அடிப்படை வேறுபாடுகள்

**முஹ்கம்**

1. கருத்துத் தெளிவாக விளங்கப்படுத்தப்பட்டவை
2. ஒரே ஒரு கருத்துக்கு மட்டும் உரியது
3. மேலதிக விளக்கமேதுமின்றி சுயமாக விளங்கக்கூடியன.

**முதஷாபிஹாத்**

1. அவ்விடயம் தொடர்பான அறிவு அல்லாஹ்விடமே உள்ளது.
2. பல கருத்துக்களுக்கு இடம்பாடானது.
3. ஆதாரம், மேலதிக விளக்கங்களின் பால் தேவையுடையவை

**முஹ்கம் - முதஷாபிஹ் வசனங்கள்**

அல்குர்ஆனில் முஹ்கமாத் வசனங்கள் ஏராளமானவை என்பதால் அவற்றுக்கு பொதுவாக எல்லா வசனங்களுமே உதாரணமாக அமையும். ஆயினும் முதஷாபிஹாத் வசனங்கள் மிகச் சொற்பமானவை. அவற்றுக்கு பின்வருவனவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

1. அல்லாஹ்வின் தாத், சிபாத் தொடர்பான வசனங்கள்
   1. அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்பது தொடர்பான வசனங்கள்.
   2. எல்லாம் அழிந்து போகும்; உமது இறைவனின் திருமுகத்தைத் தவிர என்ற வசனம்
   3. அல்லாஹ்வின் கரம், அவர்களின் கரங்களுக்கு மேலே இருக்கின்றது என்ற வசனம்
   4. அல்லாஹ் யாவற்றையும் கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான் என்ற வசனம்
2. ஹுரூபுல் முகத்தஆத் எனும் தனித் தனி எழுத்துக்களைக் கொண்டு ஆரம்பமாகும் வசனங்கள்

**முதஷாபிஹாத்தின் பொருள்**

முதஷாபிஹாத் எனப்படும் சர்ச்சைக்குரிய வசனங்களின் பொருள், விளக்கம் என்பவற்றை அறிவது குறித்து கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றது. உபை இப்னு க.்.ப், இப்னு மஸ்ஊத், இப்னு அப்பாஸ் (ரழி) முதலிய நபித் தோழர்கள் உட்பட பலர் முதஷாபிஹாத்தான தெளிவற்ற வசனங்களுக்குரிய சரியான விளக்கங்களை அல்லாஹ் மட்டுமே அறிவான் எனக் கூறுகின்றனர். முஜாஹித், நவவி போன்ற அறிஞர்கள் முதஷாபிஹாத் வசனங்களின் விளக்கங்களை தேர்ச்சி பெற்ற அறிஞர்களும் அறிவார்கள் எனக் கூறுகின்றனர். முதஷாபிஹாத்தின் விளக்கத்தை அறிவது தொடர்பாக மேற்குறித்த கருத்து வேறுபாடு எழுவதற்கு முதஷாபிஹாத் சம்பந்தமாக குறிப்பிடும் வசனமும் தெளிவற்ற நிலையில் முதஷாபிஹாத்தாக இருப்பதுவே காரணமாகும். எவ்வாறு இருப்பினும் நபித் தோழர்களில் அதிகமானோர் அவ்வசனங்களுக்குரிய விளக்கங்களை அல்லாஹ் மட்டுமே அறிய முடியும் எனக்கூறுவதே மிகச் சரியானதாகும் எனக் கருதுகின்றனர்.

**அல்குர்ஆனின் மையக் கருத்து**

- அல்குர்ஆன் 114 அத்தியாயங்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. அத்தியாயங்கள் அவற்றின் பருமனுக்கு ஏற்ப அகீதா, இபாதாத் - முஆமலாத்

சார்ந்த சட்டங்கள், அக்லாக், வரலாறு மற்றும் பிரபஞ்சப் பொருட்கள் சார்ந்த ஆதாரங்கள், படிப்பினைகள் தரும் உதாரணங்கள் மற்றும் கதைகள் போன்ற அனைத்தையுமோ அல்லது அவற்றுள் சிலவற்றையோ விரிவாகவோ அல்லது சுருக்கமாகவோ உள்ளடக்கியுள்ளன. அத்துடன் அவை அவற்றின் உள்ளடத்துக்கு ஏற்ப தனியான மையக்கருத்தையும் கொண்டுள்ளன. இவ்வகையில் அவை பருமனில் வேறுபட்டாலும் ஒவ்வொன்றும் முழுமைப்படுத்தப்பட்ட கட்டடம் போன்றே காட்சியளிக்கிறது.

- முழுக் குர்ஆனுக்குமான பொதுவான மையக்கருத்து யாது? என்பது மிகவும் சிக்கலான ஒரு வினாவாகும். ஏனெனில் அல்குர்ஆன் மனித ஆக்கங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். பொதுவாக மனித ஆக்கங்கள் அவற்றை எழுதுபவர்களின் மனதில் தோன்றும் குறித்த ஒரு மையக் கருத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து பின் மையக்கருத்தை வலியுறுத்தும் விதமாக முற்றுப்பெறும். ஆனால் அல்குர்ஆன் 23 வருட காலமாக சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு அமைய அருளப்பட்ட வசனங்கள், அருளப்பட்ட ஒழுங்கில் அன்றி வேறொரு ஒழுங்கில் கோர்வை செய்யப்பட்ட தொகுப்பாகும். அதனை அருளிய அல்லாஹ் அதன் மையக் கருத்து என்ன என்பதைத் திட்டவட்டமாகக் கூறவுமில்லை.

- மனிதருக்கு வழிகாட்டுவதில் அல்குர்ஆனின் பூரணத்துவ நிலை காரணமாக பல்துறை சார்ந்த அறிஞர்கள் அதனைத் தமது ஆய்வுக்கு உட்படுத்தினர். அவர்கள் தமது சிறப்பு நோக்கிற்கு அமைய அல்குர்ஆனின் மைக்கருத்து என ஒரு விடயத்தையோ அல்லது அதற்கு மேற்பட்ட விடயங்களையோ சுட்டிக்காட்டி விளக்கியுள்ளனர். அல்குர்ஆனைக் கற்பவர்கள் இம்மையக் கருத்துக்கள் பற்றியும் அறிந்திருப்பது மிகவும் பயனுள்ள விடயமாகும்.

- இமாம் ஷாஹ் வலிய்யுல்லாஹ் தஹ்லவி அவர்கள் அல்குர்ஆனின் மையக்கருத்து எனத் தெளிவாகக் குறிப்பிடாவிட்டாலும் முழுக்குர்ஆனிலும் இருந்து ஐந்து கருப்பொருள்களைத் தெரிவு செய்து அல்குர்ஆன் குறிப்பிடும் ஐந்து அறிவுகள் என அவற்றை விளக்குகிறார். அவர் குறிப்பிடும் அவ்வைந்து விடயங்களும் வருமாறு.

1. சட்டம் தொடர்பான அறிவு

2. வேதம் வழங்கப்பட்டோர் முஷ்ரிகீன்கள் முனாபிக்கீன்கள் ஆகியோருடன் விவாதிக்கும் அறிவு

3. அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நினைவூட்டும் அறிவு

4. அல்லாஹ்வின் நாட்டங்களை நினைவூட்டும் அறிவு

5. மரணம் அதற்குப் பின்னுள்ள விடயங்கள் தொடர்பாக நினைவூட்டும் அறிவு .

இமாம் தஹ்லவி அவர்கள் அல்குர்ஆனை முழுமையாக ஆய்வு செய்து அதன் சாரமாக இவ்வாறு ஐந்து விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளமை பின்னால் வந்தவர்கள் அல்குர்ஆன் மையக்கருத்து தொடர்பாக ஆய்வு செய்வதற்கு காட்டிக் கொடுத்த முதற் பாதை எனக் குறிப்பிடலாம்.

நவீன கால அறிஞர்களுள் குர்ஆனின் மையக்கருத்துத் தொடர்பாக ஆய்வு செய்தவர்களாக அஷ்ஷெய்க் முகம்மது அல் கஸ்ஸாலி, கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி, கலாநிதி இமாரா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

அஷ்ஷெய்க் முகம்மது அல் கஸ்ஸாலி "அல்குர்ஆனின் ஐந்து மையக்கருத்துக்கள்" எனும் தனது நூலில் பின்வருமாறு பிரித்து அவற்றை விரிவாக விளக்குகிறார்.

1. அல்லாஹ் அவன் ஏகன் 2. தனது படைப்பாளனைக் காட்டி நிற்கும் பிரபஞ்சம் 3. குர்ஆனிய கதைகள் 4. மறுவாழ்வும் கூலி கொடுத்தலும். 5. பயிற்றுவித்தல் மற்றும் சட்டங்கள் பகுதிகள்

கலாநிதி இமாரா அல்குர்ஆனின் மையக் கருத்துக்கள் என மூன்று விடயங்களைக் குறிப்பிடுகிறார்.

1. ஏகத்துவம் 2. உள்ளத்தைத் தூய்மைப் படுத்தல் 3. பூமியை வளப்படுத்தல்

கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி "அல்குர்ஆனை அணுகுவது எப்படி" என்ற தனது நூலில் அல்குர்ஆனின் அடிப்படை இலக்குகள் என்ற தலைப்பின் கீழ் ஏழு விடயங்களை வலியுறுத்துகிறார். அவர் அவற்றை மையக்கருத்துக்கள் எனக் குறிப்பிடாமல் இலக்குகள் எனக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். எனினும் அல்குர்ஆனின் முழுப் போதனைகளும் உள்ளடக்கங்களும் அவ் இலக்குகளை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளமையினால் அவற்றை மையக்கருத்துக்கள் எனக் கூறுவதைத் தவறாக நோக்க முடியாது.

அவர் குறிப்பிடும் ஏழு விடயங்களும் வருமாறு.

1. நம்பிக்கை சார்ந்த கோட்பாடுகள் சித்தாந்தங்களைச் சரிப்படுத்தல்
2. மனித கண்ணியம் மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்தல்.
3. அல்லாஹ்வை வணங்குதல் மற்றும் தக்வாவுடன் நடத்தல்.
4. உள்ளத்தைத் தூய்மைப்படுத்தல்
5. சீரான குடும்பக் கட்டமைப்பை ஏற்படுத்தலும் பெண்களுக்கு நீதியை பெற்றுக் கொடுத்தலும்
6. மனித இனத்துக்குச் சாட்சிபகரக் கூடியதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.
7. பரஸ்பரம் உதவி செய்து கொள்ளும் மனிதாபிமானம் கொண்டதோர் உலகம் நோக்கி அழைப்பு விடுத்தல்

- நவீன தப்ஸீர் ஆசிரியர்களில் ஒருவராகிய மௌலானா மௌதூதி அவர்கள் அல்குர்ஆனின் மையப் பொருளை இன்னோர் கோணத்தில் இருந்து நோக்குகிறார். அல்குர்ஆனின் பிரதான விவாதப் பொருளாக மனிதன் இருக்கிறான் என்ற வகையில் அது மனிதனின் வெற்றியும் நற்பேறும் அவனுடைய வீழ்ச்சியும் இழப்பும் எந்த

அம்சங்களில் அமைந்துள்ளன என்பதை விரிவாக ஆராய்கிறது எனக் குறிப்பிடும் அவர் குர்ஆனின் மையக்கருத்துப் பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார்.

- ''குர்ஆனின் மையக்கருத்து இதுதான். இறைவன், பிரபஞ்சத்தின் அமைப்பு முறை, அதில் மனிதனுடைய அந்தஸ்து. அவனுடைய இந்த உலக வாழ்வு ஆகியவை பற்றி தம் புலனுணர்வுக்கு உட்பட்டவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மனிதன் ஏற்படுத்திக் கொண்ட சித்தாந்தங்கள் அல்லது தம் கற்பனைகளுக்கு ஏற்ப உருவாக்கிக் கொண்ட தத்துவங்கள் அல்லது மன-இச்சைகளுக்கு அடிமைப்பட்டு வகுத்துக் கொண்ட கருத்தோட்டங்கள் ஆகியன யாவுமே அடிப்படையில் தவறானவையாய் இருக்கின்றன. விரும்பத்தகாத விளைவுளை உண்டுபண்ணக் கூடியவையாகவும். அழிவைத்தரக் கூடியனவாகவும் இருக்கின்றன. இவற்றுக்கு மாறாக மனிதனைத் தன்னுடைய பிரதிநிதியாக நியமித்த போது இறைவன் அவனுக்கு காட்டிய பாதையேதான் நேரான வழியாகும். இதே பாதையில் செல்லும் படி தான் அனைத்துக் காலங்களிலும் அனுப்பபட்ட தூதர்கள் மக்களுக்கு உணர்த்தி வந்தார்கள். அந்த ஆதி நேர்வழிகாட்டுதலின் பக்கம் - நேரிய வாழ்க்கை நெறியின் பக்கம் திரும்பும் படி மனிதனை அழைப்பதே குர்ஆனின் அடிப்படை நோக்கமாகும்''.

- ஆரம்ப கால இமாம்களுள் ஒருவராகிய இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் ஸூரா பாதிஹா பற்றிக் குறிப்பிடும் கூற்று குர்ஆனின் மையக்கருத்தை இன்னொரு கோணத்தில் இருந்து அறிந்து கொள்வதற்கு உதவியாய் அமைகிறது. அவர் ''அல்லாஹ் அனைத்து வேதங்களின் ஞானத்தையும் நான்கு வேதங்களில் உள்ளடக்கினான். நான்கு வேதங்களின் ஞானத்தை அல்குர்ஆனில் உள்ளடக்கினான். அல் குர்ஆனின் ஞானத்தை சூரதுல் பாதிஹாவின் இய்யாக ந.்.புது வஇய்யாக நஸ்தஈன் என்ற ஆயத்தில் உள்ளடக்கினான்'' எனக் கூறுகிறார்.

- அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் சூரதுல் பாதிஹாவுக்கு வழங்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம், அல்குர்ஆன் குறிப்பிடும் மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் என்பவற்றுடன் ''இய்யாக ந.்.புது வஇய்யாக நஸ்தஈன்'' என்ற ஆயத்தினை ஒப்பு நோக்கும் போது தெளிவான ஒரு மையக்கருத்தை அடையாளம் காணமுடிகிறது.

- மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்பதேயாகும். '' நான் மனித வர்க்கத்தையும் ஜின் வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவே அன்றிப் படைக்கவில்லை'' ( 51:56 ) இதனை ஏற்றுக் கொண்ட மனிதன், தான் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதாகக் கூறும் உறுதிப்பிரமாணமே ''இய்யாக ந.்.புது வஇய்யாக நஸ்தஈன் (உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம்)'' என்ற வசனமாகும். இவ்வகையில் ''மனித வாழ்வை வணக்கமாக்குதல்'' என்ற விடயத்தை அல்குர்ஆனின் மையக் கருத்தாகக் கொள்ளலாம்.

- மனித வாழ்வு வணக்கம் என்ற உயர் அந்தஸ்தைப் பெற நம்பிக்கை, அதன் அடிப்படையில் அமைந்த செயற்பாடுகள் ஆகிய இருவிடயங்களும் முக்கியம் பெறுகின்றன. இவ்வகையில் அல்குர்ஆன் சீரான நம்பிக்கைக் கோட்பாடுகளை முன்வைப்பதுடன் பிழையான நம்பிக்கைகளை விமர்சனமும் செய்கிறது. அத்துடன் அந்நம்பிக்கைகளுக்கு ஏற்ற ஷரீஅத் எனும் வாழ்க்கை முறையையும் முன்வைக்கிறது. அத்துடன் சிலைவணக்கத்தின் அடிப்படையிலும் மனோ இச்சையின் அடிப்படையிலும்

அமைந்த வாழ்க்கை முறையை கண்டிக்கிறது. அல்குர்ஆனில் கூடுதலாகப் பேசப்படுகின்ற இன்னொரு விடயம் நபிமார்களுடன் தொடர்பான வரலாறுகளாகும். இவ்வரலாறுகள் மனிதவாழ்வை வணக்கமாக்குவதற்காக நபிமார்கள் மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும் அவர்கள் எதிர்கொண்ட சாதக பாதக சூழ்நிலைகள் பற்றியுமே விளக்குகிறது.

- மேற்கூறப்பட்ட கண்ணோட்டத்தில் அல்குர்ஆனை நோக்குகின்ற போது அல்குர்ஆனின் மையக் கருத்தாகக் கொள்ள இய்யாக ந.்.புது வஇய்யாக நஸ்தஈன் (உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம்) என்ற வசனத்தின் அடிப்படையில் ”மனித வாழ்வை வணக்கமாக்குதல்” என்ற கருப் பொருள் மிகவும் பொருத்தமானதாகும்.

## அல்குர்ஆனை அணுகும் முறை

- அல்குர்ஆன் அல்லாஹ்வின் புறத்தில் இருந்து மனித சமூகத்துக்கு வழங்கப்பட்ட அவனது தெய்வீக வழிகாட்டுதலைக் கொண்ட ஒரு நூலாகும். அதனை அருளியதன் நோக்கம் பற்றி அல்லாஹ் கூறுகையில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

  ”நபியே அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆராய்வதற்காகவும் அதனைக் கொண்டு அறிவுடையோர் நல்லுணர்ச்சி பெறுவதற்காகவும் மிக்க பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை நாமே உம்மீது அருள்புரிந்தோம்” (ஸாத்:29)

- மனிதன் நல்லுணர்ச்சி பெறவேண்டும், இறைவழிகாட்டலின் அடிப்படையில் வாழவேண்டும் இதன்மூலம் அவன் அல்லாஹ்வின் அன்பையும் நெருக்கத்தையும் பெற்று இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் அல்குர்ஆனை அருளியுள்ளான்.

- அல்குர்ஆனை ஏனைய புத்தகங்கள், நூல்கள் போன்று நோக்கவோ அணுகவோ முடியாது. அதனை முறைப்படி அணுகும் ஒருவர் எவ்வாறு அதன் அருட்பாக்கியங்களைப் பெற்றுக் கொள்வாரோ அவ்வாறே முறையாக அணுகாத ஒருவர் எதிர்மறையான பெறுபேறுகளையே பெற்றுக்கொள்வார். இதுபற்றி அல்குர்ஆனும் ஸுன்னாவும் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

  ”விசுவாசம் கொண்டோருக்கு அருளாகவும் பரிகாரமாகவும் உள்ளவற்றையே இந்தக் குர்ஆனில் நாம் இறக்கியிருக்கின்றோம். எனினும் அக்கிரமக்காரர்களுக்கோ இது நஷ்டத்தையேயன்றி வேறெதனையும் அதிகரிப்பதில்லை.” (17:82)

  ‘‘இவ்வேதத்தை நிராகரிப்பவர்களோ இதை உதாரணமாக்குவதைக் கொண்டு அல்லாஹ் என்னதான் நாடுகிறான் எனக் கூறுவார்கள். இதைக் கொண்டு பலரை வழிகெடும்படியும் செய்கிறான். இதைக் கொண்டு பலரை நேர்வழி பெறும்படியும் செய்கிறான். ஆனால் இவ்வேதத்தை மனமுரண்டாக நிராகரிக்கும் பாவிகளைத் தவிர, மற்றவர்களை இதைக் கொண்டு வழிகெடும்படி அவன் செய்யமாட்டான்.” (2:26)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘நிச்சயமாக அல்லாஹ் இந்தக் குர்ஆனைக் கொண்டு எத்தனையோ கூட்டத்தாரின் அந்தஸ்துகளை உயர்த்துகிறான். இன்னும் இந்தக் குர்ஆனைக் கொண்டு (அதனை உதாசீனப்படுத்தும் எத்தனையோ கூட்டத்தாரைத் தாழ்த்துகிறான்.” (முஸ்லிம்)

- எனவே அல்குர்ஆனின் மூலம் நேர்வழியையும் கண்ணியத்தையும் உயர்வையும் அடைந்து கொள்ள விரும்பும் ஒருவர் அல்குர்ஆனின்பால் கொள்ள வேண்டிய உளரீதியான , மற்றும் செயற்பாடு ரீதியான இரு பரிமாணங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவற்றின்படி அதனை அணுகும் போது நிச்சயமாக அல்குர்ஆன் தன்னகத்தே கொண்டுள்ள அனைத்து அருட்பாக்கியங்களையும் ஒருவரால் அறுவடை செய்து கொள்ள முடியும்.

**உளரீதியானவை**

1. ஈமான்: அல்குர்ஆன் அல்லாஹ்விடம் இருந்து முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வந்த வஹி என்றும் அதில் இடைச்செருகல்கள், திரிபுபடுத்தல் போன்ற எவ்வித மனித நடவடிக்கையும் இடம்பெறாமல் முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட வேதம் என்றும் நம்புதல் வேண்டும். இவ்வாறு நம்பிக்கை கொள்வோரிடம் அல்குர்ஆன் ஏற்படுத்தும் தாக்கம் மிகவும் அதிகமாகும்

   ”விசுவாசிகள் யாரென்றால் அல்லாஹ்வின் பெயர் அவர்கள் முன் கூறப்பட்டால் அவர்களது இதயங்கள் பயந்து நடுங்கிவிடும். மேலும் அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக்காண்பிக்கப்பட்டால் அவை அவர்களுக்கு ஈமானை அதிகப்படுத்தும். இன்னும் தங்கள் இரட்சகன் மீதே தவக்கலும் வைப்பார்கள்.”

2. அத்தக்வா (பயபக்தி): தக்வா என்பது ஈமானுடன் பின்னிப்பிணைந்த உளம் சார்ந்த உணர்வின் அடிப்படையில் விடயங்களை உள்வாங்குவதும் அவற்றை செயல் படுத்துவதுமாகும். இவ்வகையில் அத்தக்வா எனும் இவ்வுணர்வு அல்குர்ஆனின் போதனைகளையும் வழிகாட்டல்களையும் புரிந்து கொள்வதற்கும் அதன் அடிப்படையில் செயல் படுவதற்கும் உதவியாய் அமைகின்றது.

   ‘‘அலிப் லாம் மீம். இதுதான் புத்தகம், இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. தக்வா உடையவர்களுக்கு அதில் நேர்வழி இருக்கிறது” (2:1-3)

3. பணிவு : அல்குர்ஆன் சர்வ ஞானங்களும் பொருந்திய அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட ஞானம் மிக்க மறை என்ற வகையில் குறைவான அறிவைப் பெற்றுள்ள மனிதனால் ஒருபோதும் அதனை மிகைக்க முடியாது. இவ்வுண்மையை உணர்ந்து பணிவான முறையில் அல்குர்ஆனை அணுகுவோர் அதன் மூலம் எண்ணற்ற நன்மைகளை அடைந்து கொள்வார்.

   “அல்லாஹ் மிக்க அழகான செய்தியை வேதமாக இறக்கியிருக்கின்றான். இதிலுள்ள வசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாமல் ஒன்றை மற்றொன்று ஒத்ததாக திரும்பத் திரும்பக் கூறப்படுவதாக உள்ளன. தங்கள் இரட்சகனுக்கு பயப்படுபவர்களது தோல்களின் உரோமங்கள் அதைக் கேட்டமாத்திரத்தில் சிலிர்த்து விடுகின்றன.

பின்னர் அவர்களது தோல்களும் இதயங்களும் அல்லாஹ்வை நினைவு கூர்வதன்பால் இளகுகின்றன. அதுவே அல்லாஹ்வுடைய நேர்வழியாகும். தான் நாடியவர்களை அவன் இதன்மூலம் நேர்வழியில் செலுத்துகிறான்." (39:23)

4. சிந்தனை (ததப்புர்): அல்குர்ஆன் முற்றிலும் அறிவு ஞானம் நிறைந்த வசனங்களைக் கொண்ட வேதநூல் என்ற வகையில் அல்குர்ஆனைப்படிப்பவர் எந்த அளவு சிந்திக்கும் திறன் கொண்டவராக இருக்கின்றாறோ அந்த அளவுக்கு அதன் மூலம் படிப்பினை பெறுபவராக இருப்பார். அல்குர்ஆன் ததப்புர் எனும் ஆழ்ந்த சிந்தனையை வலியுறுத்துகிறது. கமர் எனும் அத்தியாயத்தில் "நாம் இக்குர்ஆனை படிப்பினை பெறுவதற்காக இலகுவாக்கியுள்ளோம். எனவே சிந்தித்துப் படிப்பினை பெறுவோர் எவரும் இல்லையா?" என திரும்பத்திரும்ப நான்கு முறை கேட்கிறது. இன்னோர் இடத்தில் " அல்குர்ஆனை அவர்கள் சிந்திக்க வேண்டாமா? அவர்களது உள்ளங்கள் தாழிடப்பட்டுள்ளனவா?" (ஸூரா முஹம்மத் : 24)

**செயற்பாடு ரீதியானவை**

1. ஓதுதல், செவி மடுத்தல்: பொருளறிந்தோ அறியாமலோ அல்குர்ஆனை ஓதுவதும், ஓதப்படும் போது அதற்குச் செவிமடுப்பதும் அல்குர்ஆன் விடயத்தில் கடைப்பிடிக்கவேண்டிய செயற்பாடுகளுள் அடிப்படையானதும் ஆரம்பப் படித்தரமானதாகவும் இருப்பதுடன் அது நன்மையைப் பெற்றுத்தரும் வணக்கமாகவும் உள்ளது. அல்குர்ஆன் ஓதுதல் செவி மடுத்தல் என்பவற்றின் முக்கியத்துவத்தை அல்குர்ஆனும் ஸுன்னாவும் வலியுறுத்துகிறன.

''அல்குர்ஆன் ஓதப்பட்டால் அதனைச் செவிமடுங்கள். மேலும் அமைதியாய் இருங்கள். நீங்கள் அருள்பாலிக்கப்படலாம்." (அ∴ராப்:204)

''நிச்சயமாக அல்லாஹ்வின் வேதத்தை ஓதி, தொழுகையை நிலைநாட்டி, நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும் பரகசியமாகவும் செலவு செய்பவர்கள் நட்டமடையாத வியாபாரத்தை எதிர்கொள்வார்கள்." (அல்பாதிர்: 29)

''அல்குர்ஆனை ஓதுங்கள். மறுமை நாளில் அது அதனை ஓதியவர்களுக்காகப் பரிந்துரை செய்யும்." (முஸ்லிம்)

''அல்குர்ஆனை ஓதுவதில் திறமையானவர் நல்லோர்களான சங்கைமிக்கோர்களுடன் இருப்பார். யார் தனக்குக் கஷ்டமானதாக இருந்தபோதும், திக்கித் திக்கியாவது அல்குர்ஆனை ஓதுகிறாரோ அவருக்கு இரு கூலிகளுண்டு." (புஹாரி, முஸ்லிம்)

- இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை என்னிடம் அல்குர்ஆனை எனக்கு ஓதிக்காட்டுங்கள் என்று கூறினார்கள். அதற்கு நான் உங்களுக்கு ஓதிக்காட்டுவதா? அல்குர்ஆன் உங்களுக்குத்தானே இறக்கப்பட்டுள்ளது? என்று கூறினேன். அதற்கவர்கள், நான் அதைப் பிறரிடமிருந்து செவிமடுப்பதை விரும்புகிறேன் என்றார்கள். நான் அவர்களுக்கு ஸூரா நிஸாவை ஓதிக்காட்டினேன். நாம் ஒவ்வொரு உம்மத்தையும் சாட்சியாளர்களுடன் அழைத்து அவர்களுக்கெல்லாம் சாட்சியாக உம்மைக் கொண்டு வந்தால் எவ்வாறிருக்கும் என்ற வசனம் வந்ததும் இத்தோடு போதும் என்று என்னை நிறுத்தினார்கள். நான்

அவர்களைத் திரும்பிப் பார்த்தேன். அவரது இரு கண்களும் கண்ணீரை உதிர்ந்து கொண்டிருந்தன.” (புகாரி, முஸ்லிம்)

அல்குர்ஆனை ஓதும் போது கடைப்பிடிக்கவேண்டிய சில ஒழுங்கு முறைகள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்பற்றுவது ஸுன்னாவாக இருப்பதுடன் அல்லாஹ்விடம் அதிகமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும் வழியாக அமைகிறது.

‘‘வுழுவுடன் குர்ஆனை ஓதுதல்: வுழு இன்றி குர்ஆனை ஓதுவது அனுமதிக்கப்பட்ட ஒன்றாயினும் அவ்வாறு ஓதுவதால் பெறப்படும் நன்மை குறைந்த தரத்திலேயே காணப்படும்.

‘‘ஓதும் அளவு: குர்ஆனை ஓதுவோர் அவர்கள் ஓதும் அளவைப் பொறுத்து பல்வேறு நிலையில் உள்ளனர். இதுதொடர்பில் ஸுன்னாவின் வழிகாட்டல் பின்வருமாறு காணப்படுகிறது. ”மூன்று நாட்களுக்குக் குறைவான காலப்பிரிவில் குர்ஆனை ஓதி முடிப்பவர் அதனை விளங்கவில்லை.” (திர்மிதி)

‘‘குர்ஆனை ஓதும் விதம்: அல்குர்ஆனை ஓதும் போது அதன் வசனங்களுக்கிடையே நிறுத்தி நிறுத்தி மெதுவாகவும் தெளிவாகவும் தனக்குக் கேட்கக்கூடிய முறையில் உரத்த குரலிலும் ஓத வேண்டும். இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: குர்ஆன் முழுவதையும் அவசரமாகவும் பதற்றத்துடனும் ஓதுவதைவிடஸுரா அல்பகராவையும் ஸுரா ஆலஇம்ரானையும் அவசரமின்றி மெதுவாகவும், ஒவ்வொரு வார்த்தைகளையும் தெளிவாக உச்சரித்தும் ஓதுவதை விரும்புகிறேன்.”

2. அல்குர்ஆனை மனனமிடுதல்: அல்குர்ஆனை ஓதுவது போன்றே அதனை மனனமிடுவதும் அல்குர்ஆனின் பால் உள்ள ஒரு செயற்பாடாகும். ஆகவேதான் நபி (ஸல்) அவர்கள் அதனை மிகவும் வலியுறுத்தியுள்ளார்கள்.

   ‘‘எனது உம்மத்தில் கண்ணியம் மிக்கவர்கள் அல்குர்ஆனைச் சுமந்தவர்களே” (அத்திர்மிதி)

   ‘‘யாருடைய உள்ளத்தில் அல்குர்ஆனின் சிறு பகுதியேனும் இல்லையோ அவரது உள்ளம் பாழடைந்த வீட்டைப் போன்றதாகும்.” (முஸ்லிம்)

   ஸஹாபாக்களிடையே அல்குர்ஆனை மனனமிட்டிருந்தவர்கள் பெருமதிப்புக்குரியாவர்களாகவும் கௌரவத்துக்குரியவர்களாகவும் கருதப்பட்டனர். இதுபற்றி அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார். ‘‘அல் பகராவையும் ஆல் இம்ரானையும் (மனனமிட்டு) ஓதபவராக ஒருவர் காணப்பட்டால் அவர் எங்கள் மத்தியில் மதிப்புக்குரியவராவார்.” (அஹ்மத்)

3. விளங்குதல்: அல்குர்ஆனை ஆராய்ந்து விளங்க முயற்சிப்பது அல்குர்ஆன் விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய இன்னொரு செயற்பாடாகும். அல்குர்ஆனை வெறுமனே ஓதுவதன் மூலம் நன்மை கிடைப்பினும் அதன் உண்மையான பயனை அடைய வேண்டுமாயின் அதனை விளங்கி ஓதுவது இன்றியமையாததாகும். அல்குர்ஆனை விளங்க முடியுமா என்ற பிற்போக்கான ஒரு கருத்து இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்களில் சிலரிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. இது அல்குர்ஆனுக்கும்

ஸுன்னாவுக்கும் ஸலபுஸ் ஸாலிஹீன்களின் நடைமுறைக்கும் முரணானதாகும். அதுமட்டுமல்லாது பொருள் விளங்காமல் ஓதுவதை மூடர்களின் செயல் என்று அல்குர்ஆன் வர்ணிப்பதுடன் அவ்வாறு அறிவிலிபோல் நடப்பதைக் கண்டிக்கவும் செய்கிறது.

''இன்னும் எவர்கள் தங்கள் இறைவனின் வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால் குருடர்களைப் போலும் செவிடர்களைப் போலும் அதன் மீது அடித்து விழாமல் அதனை முற்றிலும் நன்குணர்ந்து கொள்வதுடன் அதன்படி செயல்படுகிறார்களோ அவர்களும்.." (25:73)

4. செயற்படுத்தல்: இது அல்குர்ஆனின் போதனைகளையும் அதன் சட்டங்களையும் வாழ்வில் நடைமுறைப்படுத்துவதைக் குறிக்கிறது. அல்குர்ஆனை ஓதுவதன் மூலமும் விளங்குவதன் மூலமும் எதிர்பார்க்கப்படுவது அதன்படி வாழ்வதேயாகும். அல்குர்ஆனை செயற்படுத்துவதில் நபி(ஸல்)அவர்கள் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள். ஒருமுறை ஆயிஷா நாயகியிடத்திலே ஒரு மனிதர் வந்து நபியவர்களது நாளாந்த பண்புகள் எவ்வாறு இருந்தது என வினவினார். அதற்கு அவர் நபியவர்களது பண்புகள் குர்ஆனாக இருந்தது எனப் பதில் கூறினார்கள்.

   அவ்வாறே நபித்தோழர்களிடத்திலும் இதற்கு நிறைய ஆதாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக: "நீங்கள் விரும்புவதிலிருந்து செலவு செய்யாதவரை நன்மையை அடைந்து கொள்ள மாட்டீர்கள்" என்ற அல்குர்ஆன் வசனம் அருளப்பட்ட போது அபூதல்ஹா (ரழி) அவர்கள் நபியவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே நான் மிகவும் விரும்பும் சொத்து ''பைரஹா'' என்ற தோட்டம் தான். அதை நான் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்ய விரும்புகிறேன் என்றார்கள். இதைப்பாராட்டிய நபியவர்கள் அவரது உறவினர்களுக்கு அதை தர்மம் செய்யுமாறு கூறவே அபூதல்ஹா தனது உறவினர்களுக்கு அதைப் பங்கீடு செய்தார்.

   அல்குர்ஆனை நடைமுறைப்படுத்துவதற்காக ஸஹாபாக்கள் இலகுவான ஒரு வழிமுறையைக் கடைப்பிடித்திருந்தார்கள். இதுபற்றி இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

   "நாம் நபி(ஸல்) அவர்களிடமிருந்து பத்து வசனத்தைக் கற்றுக்கொண்டோமெனில் அவற்றில் உள்ள அறிவு, செயல் விடயங்களை செயற்படுத்தாமல் அவற்றைத் தாண்டிச் செல்லமாட்டோம்."

5. அல்குர்ஆனின் தூதை எத்திவைத்தல்: அல்குர்ஆன் குறித்த ஓர் இனத்துக்கோ பிரதேசத்துக்கோ மாத்திரம் உரிய வேதநூல் அல்ல. அது அகிலத்தார் அனைவரினதும் இரட்சகனாகிய அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட ஒரு பொது மறை. ஆகவே ஒரு தனிநபரோ அல்லது குறித்த ஒரு சமூகமோ தமக்கு மாத்திரம் உரிய வேத நூலாக அதைக் கருதக் கூடாது.

   அல்குர்ஆன் முதலில் இறுதித் தூதராகிய முஹம்மத் (ஸல்) அவர்களுக்கே அருளப்பட்டது. அவர் அதனை ஓர் அமானிதமாகக் கருதி தனக்கு அருளப்பட்டவாறே மக்களுக்கு எத்தி வைத்தார். அவரிடமிருந்து அல்குர்ஆனைப் பெற்ற ஸஹபாக்களும் அவரைப் போலவே அதைப்பாதுகாப்பதற்கும் ஏனையோர்க்கு எத்திவைப்பதற்கும்

பாரிய முயற்சி மேற்கொண்டனர். இவர்களது அயரா முயற்சியின் பயனாக இன்று முழு உலகிலும் அல்குர்ஆனைச் சுமந்த சமூகமாக முஸ்லிம் சமூகம் காணப்படுகிறது. இப்போது ஏனைய சமூகத்தாருக்கு அல்குர்ஆனை எத்தி வைக்கும் பொறுப்பு முஸ்லிம் சமூகத்தையே சார்ந்துள்ளது.

மேற்கூறப்பட்ட உளரீதியான, செயற்பாட்டு ரீதியான இரு அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவைகளாகும். உளரீதியான விடயத்தில் கவனம் செலுத்துபவர் செயற்பாடு ரீதியான விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். அல்குர்ஆனுடனான அவரது அணுமுறை பூரணமடைகிறது.

### இ∴ஜாஸுல் குர்ஆன் (அல்குர்ஆனின் அற்புதம்)

அல்குர்ஆனை ஆராய்ந்தவர்கள் அதன் அற்புதத் தன்மையை நான்காக வகைப்படுத்தி விளக்குகின்றனர்.

### 1. மொழி ரீதியான அற்புதம்

அரேபியர்கள் தமது மொழிவண்மையை நினைத்து செருக்குடன் வாழ்ந்த ஒரு காலகட்டத்தில்தான் அல்குர்ஆன் அருளப்பட்டது. கவிதை, உரைநடை போன்ற இலக்கியத் துறைகளில் புலமை பெற்றிருந்த மொழியியல் வித்தகர்கள் அல்குர்ஆனின் போதனைகளை ஏற்க மறுத்தாலும் அதன் மொழிச் சிறப்பை ஆராய்ந்து அதன்பால் ஆகர்ஷிக்கப்பட்டனர். அல்குர்ஆன் மனித முயற்சியால் படைக்கப்பட்ட இலக்கியம் அல்ல என்பதைப் பகிரங்கமாகவே ஏற்றுக் கொண்டனர். அபூ ஜஹ்ல், அபூ ஸுப்யான் போன்ற இலக்கியப் பித்தர்கள் அல்குர்ஆன் ஓதப்படுவதை இரகசியமாகக் கேட்டு இரசித்தனர். வலீத் பின் முகீரா என்ற இலக்கியவாதி அல்குர்ஆனுக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு புகழாரத்தை இவ்வாறு சூட்டினார்.

''அதற்குச் சுவையுண்டு. கட்டாயம் அது ஓதப்பட வேண்டியது. அதன் மேற்புறம் காய்த்துக் கனி தரக் கூடியது. கீழ்ப்புறம் ஆழமாக வேரூன்றியது. அது மிகைத்துச் செல்லும். அதனை எதனாலும் மிகைக்க முடியாது.''

உத்பா பின் ஆமிர் என்பவர் இஸ்லாத்தை ஏற்றார். வலீத் என்ற புகழ்பூத்த கவிஞன் ஸூரதுல் பகராவை ஓதியதன் பின் கவிதை புனைவதையே கைவிட்டு விட்டார்.

அல்குர்ஆனின் இலக்கிய நடை மிகவும் நயமிக்கது. முற்றிலும் கவிதையாகவோ அல்லது உரைநடையாகவோ இல்லாமலும் இலக்கியச் சுவை குன்றாமலும் அறிவியல், அழகியல், சட்டவியல், ஒழுக்கவியல், வரலாறு போன்ற துறைகளில் கருத்துக் கூறும் விதம் தனித்துவமானது. அல்குர்ஆன் பல அத்தியாயங்களைக் கொண்டது. அதன் மொழி நடை ஒவ்வோர் அத்தியாயத்திலும் வெவ்வேறானது. இது ஒரு தனிமனிதனால் எவ்விதத்திலும் இயற்ற முடியாதது. அல்குர்ஆனை ஓதிக் காண்பித்தவரான முஹம்மத் (ஸல்) அவர்களது சொந்த மொழிநடையில் இருந்து அது முற்றிலும் வேறுபட்டது. அல்குர்ஆனின் மொழியியல் அற்புதம், அது கையாளும் சொற்களிலும் பிரதிபலிக்கின்றது. ஏனெனில் அவை கருத்துச் செறிவுமிக்கவை. எல்லாக் காலத்திற்கும் ஏற்றவை.

## 2. அற்புதத் தன்மைமிகு எதிர்வு கூறல்கள்

எதிர்காலத்தில் நிகழப் போகின்றவை பற்றி அல்குர்ஆன் எதிர்வு கூறியிருக்கின்றது. அவற்றுள் சில, சோதிடர்களையே வியக்க வைக்கும் விதத்தில் எதிர்வு கூறப்பட்டவாறே நிகழ்ந்தேறியுள்ளன. உரோமர்களின் தோல்வி பற்றியும் தோல்வியைத் தொடர்ந்து நிகழ இருந்த வெற்றி குறித்தும் அத்தியாயம் ரூமில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. குறுகிய காலத்தினுள்ளேயே அல்குர்ஆனின் இத்தீர்க்கதரிசனம் நிறைவேறியமை வரலாற்றாசிரியர்களைப் பிரமிக்க வைக்கின்றது. அல்குர்ஆனின் அனைத்துக் கூற்றுக்களும் நடக்கக் கூடியவையே என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

## 3. அற்புதத் தன்மைமிகு விஞ்ஞான உண்மைகள்

அல்குர்ஆன் ஓர் அறிவியல் ஆய்வு நூல் அல்ல. என்றாலும் அது அறிவியல் தொடர்பான பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றது. அவற்றை அல்குர்ஆன் ஒரு விஞ்ஞானியின் கண்டுபிடிப்பாகக் கூறவில்லை. மாறாக படைப்பாளனாகிய அல்லாஹ்வின் வல்லமையின் பக்கம் கவனத்தை ஈர்க்கும் விதமாகக் கூறுகின்றது. இவ்வறிவியல் கருத்துக்கள் எவற்றையும் நவீன அறிவியலால் பொய்ப்பிக்க முடியாதுள்ளது. மாறாக இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் கூட கற்பனை பண்ணவும் முடியாதிருந்த உண்மையை 1400 ஆண்டுகளுக்கு முன் அல்குர்ஆன் கூறியுள்ளதை இன்று விஞ்ஞான உலகம் நிரூபித்துள்ளது. உதாரணத்திற்கு பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றி ஸூரா அல்அன்பியாவின் 30ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கூறலாம். நவீன அறிவியல் அதனையே பிரபஞ்ச வெடிப்புக் கொள்கை என்று கூறுகின்றது. அல்குர்ஆனின் இவ் அறிவியல் அதிசயமானது காலப்போக்கில் மனிதனது கண்டுபிடிப்புகள் அதிகரிக்க அதிகரிக்க அல்குர்ஆன் மேலும் மேலும் உண்மைப்படுத்தப்படும் என்பதற்குத் தகுந்த சான்றாகவே திகழ்கின்றது.

அல்குர்ஆன் கூறும் அறிவியல் கருத்துக்களை இரு வகையில் நோக்க முடியும்.

1. இதுவரை மனித அறிவால் கண்டறியப்பட்டவை
   - (அர்ரஹ்மான் :19,20 இரு கடல்கள் ஒன்றோடொன்று கலந்துவிடாத வகையில் அமைந்த தடுப்பு)
   - மகரந்தச் சேர்க்கை, மழைமேகம் (அல்ஹிஜ்ர் : 22)
   - கரு முளையவியல் ( 86:5-7) (23: 12-14)
2. இன்று வரை அறிவியல் உலகம் புரிந்துகொள்ளாத அறிவியல் கருத்துக்கள்.
   - ( அர்ர.்.த் : 2) வானங்கள் உயர்த்தப்பட்டுள்ளது பற்றிய கருத்து )

## 4. சட்டவியல் ரீதியான அற்புதம்

சட்டவியல் என்பது சமூகவியல் சார்ந்த ஒரு துறையாகும். மனிதர்களுக்குரிய கடமைகள், உரிமைகள், குற்றங்கள், அவற்றுக்கான தண்டனைகள், சமூக உறவுகளுக்கான வரையறைகள், அரசியல் போன்றன அதன் உள்ளடக்கங்களாகும். இவை அனைத்துக்குமான அடிப்படைக் கோட்பாடுகள் அல்குர்ஆனில் காணப்படுகின்றமையும் அவை தன்னகத்தே கொண்டுள்ள நீதித் தன்மையும் பாரபட்சமற்ற சம பார்வையும் எக்காலத்திற்கும் பொருந்தும் நெகிழ்வுத் தன்மையும் முழு உலக மக்களுக்கும் ஏற்ற பொதுத் தன்மையும் சட்ட நூல்களுக்கு மாற்றமான எளிய சிக்கலற்ற வசன நடையும் அல்குர்ஆனின் அற்புதத் தன்மைக்கான சான்றுகளாகும்.

அல்குர்ஆனின் சட்ட வசனங்கள் இரு வகையானவை.

- தனிமனிதனுக்குரியவை

  இவை தனிமனித சீர்திருத்தத்தை மையமாகக் கொண்டமைந்த அறிவுரைகளும் போதனைகளும் ஏவல்களும் விலக்கல்களுமாகும். இவற்றுக்குக் கட்டுப்படுவதன் மூலம் ஒருவன் எந்த ஒரு தனி மனிதனுக்கோ அல்லது குறித்த இனத்துக்கோ இல்லாமல் சுதந்திரமான முறையில் பிரபஞ்சங்களின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்குக் கீழ்ப்பணிந்து நடக்கின்றேன் என்ற உணர்வையே பெறுவான்.

- சமூகத்துக்குரியவை

  இவை அரசியல், பொருளாதாரம், குற்றவியல், சர்வதேச உறவுகள் போன்றவற்றுடன் தொடர்பானவையாகும். அமைதியான உள்ளம், அமைதியான உலகம் இவற்றை இலட்சியமாகக் கொண்ட அல்குர்ஆனின் சட்ட வசனங்களின் ஆத்மாவாக 'இறையச்சத்தைத் தூண்டிவிடுதல்' காணப்படுவதால் தாமாகவே அல்குர்ஆனுக்குக் கட்டுப்படுகின்ற தனிமனிதர்களையும் சமூகங்களையும் அதன் வரலாறு நெடுகிலும் காணக் கூடியதாக உள்ளது.

- இத்தகைய சிறப்பான அற்புதத் தன்மைகளைக் கொண்ட அல்குர்ஆன் ஒரு கவிஞனின் வார்த்தைகள் அல்ல. ஒரு சோதிடனின் கூற்றுக்களும் அல்ல. ஏனெனில், மனிதர்களால் இதுபோன்ற ஒன்றை உருவாக்கவே முடியாது. அது முழுமையாக அல்லாஹ்விடமிருந்து வந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அதில் எந்த ஒரு புதிய கருத்தும் சேர்க்கப்படவும் இல்லை. எந்தவொன்றும் அதிலிருந்து அகற்றப்படவுமில்லை.

  இத்தகைய அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்குமே கிடையாது.

  பார்க்க: (69: 40- 48), (2: 23-24), (2: 106)

- நிலையான அற்புதங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அல்குர்ஆன் இது போன்ற ஒரு குர்ஆனையோ அல்லது பத்து அத்தியாயங்களையோ அதுவும் முடியாதுபோனால் இதுபோன்ற ஒரு அத்தியாயத்தையோ கொண்டு வாருங்கள் என சவால் விடுகின்றது. அந்த சவால் இன்றுவரை முறியடிக்கப்படாமலேயே இருக்கின்றது.(ஹுத்:13-14, யூனுஸ் :38, அல்பகரா :23)

**தேர்ச்சி 03 : வஹியின் அடியாகத் தோன்றிய மூலாதாரங்களையும் அதன் நோக்கங்களையும் விளங்கி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 : இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னா பற்றிய விரிவான அறிவைப் பெற்று அதனைப் பின்பற்றி நடப்பார்.**

**பாடவேளைகள் : 35**

**கற்றல் பேறுகள் :**

- ஸுன்னா - ஹதீஸ் பதங்களுக்குரிய விளக்கத்தினை முன்வைப்பார்.
- ஸுன்னாவின் அவசியத்தையும் சட்டவாக்கத்தில் அதன் பங்கையும் விளக்கிக் கூறுவார்.
- ஸுன்னா பாதுகாக்கப்பட்ட வரலாற்றை முன்வைப்பார்.
- ஸுன்னாவின் தூய்மையைப் பாதுகாப்பதற்கு ஹதீஸ் துறை அறிஞர்கள் மேற்கொண்ட முயற்சிகளைத் தொகுத்து விளக்குவார்.
- ஹதீஸ்கள் வகைப்படுத்தப்பட்ட முறையினையும் அவற்றின் தராதரங்களையும் அறிந்து பிரயோகிப்பார்.
- பிரதான ஹதீஸ் கிரந்தங்களையும் அவற்றின் இமாம்களின் பணிகளையும் நயந்து முன்வைப்பார்.
- ஸுன்னா ஒரு முக்கிய வழிகாட்டி என்பதை ஏற்று அதனுடனான தனது உறவை வலுப்படுத்திக் கொள்வார்.
- ஸுன்னாவைக் கையாளும் முறையினை விளங்கிப் பிரயோகிப்பதில் ஈடுபாடு காட்டுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

## ஹதீஸ், ஸுன்னா பதவிளக்கம்

- ஹதீஸ் என்ற அரபுப் பதம், செய்தி, புதியவை, உரையாடல் எனும் மொழிக்கருத்துக்களில் பிரயோகிக்கப்படுகிறது.

- இஸ்லாத்தில் இப்பதம் ''நபி(ஸல்) அவர்களுடைய சொல், செயல், அங்கீகாரம், வர்ணனைகள், பண்புநலன்கள்'' என்பவற்றைக் குறிப்பதற்கே பயன்படுத்தப்படுகின்றது.

- ஸுன்னா என்ற அரபுப் பதம் வாழ்க்கை வழி, மார்க்கம், நியதி, முறைமை, ஒழுங்கு, வழக்கம், நடைமுறை எனும் மொழிக்கருத்துக்களில் பிரயோகிக்கப்படுகின்றது. இஸ்லாத்தில் இப்பதம் ''நபி முஹம்மது (ஸல்) அவர்கள் காட்டிச் சென்ற வாழ்க்கை முறைமையைக் குறிக்கின்றது''

- ஹதீஸ், ஸுன்னா ஆகிய இரு பதங்களையும் பொதுவாக முஹத்திஸீன்கள் ஒரே கருத்திலேயே பிரயோகிக்கின்றனர். வேறுபடுத்திக்காட்டுவோர், ஸுன்னா நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை முறைமை எனவும் ஹதீஸ் அவற்றின் பதிவு எனவும் குறிப்பிடுகின்றார்கள்.

- ஹதீஸ் என்ற பதம் 'கபர்' 'அஸர்' எனும் சொற்களிலும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. எனினும் குராஸான் பிரதேசத்து அறிஞர்கள் 'கபர்' என்ற சொல்லை ஹதீஸ் என்ற கருத்திலும் 'அஸர்' என்ற சொல்லை நபித்தோழர்களின் வாக்குகளும் முடிவுகளும் என்ற கருத்திலும் குறித்துக்காட்டியுள்ளார்கள்.

- ஸுன்னா என்ற சொல்லை துறைசார் அறிஞர்கள் ஒவ்வொரு கண்நோக்கில் முன்வைக்கின்றனர். நபியவர்களது வாழ்க்கை வரலாறு என்ற கருத்தில் ஸுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இது நபியவர்களது பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்து நிகழ்வுகளையும் குறிக்கின்றது. நுபுவ்வத்திற்கு முன்னைய நிகழ்வுகள் பின்னைய நிகழ்வுகள், நபியவர்களது பிறப்புக் காலப்பகுதியில் அறபு மக்களது வாழ்க்கைச் சூழல் போன்ற பல்வேறு விடயங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

- ஸுன்னா என்ற பதத்தை இந்தக் கருத்தில் ஹதீஸ் துறை அறிஞர்கள் அதிகம் பயன்படுத்தினார்கள். இங்கு நபியவர்களது வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை ஆதாரபூர்வமான வடிவில் கோர்வை செய்வதே இவர்களது நோக்கமாகக் காணப்பட்டிருக்கிறது.

- ஷரீஆ அல்லது தீன் என்ற கருத்தில் ஸுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இது மிகப் பெரும்பாலும் பித்அத் என்ற சொல்லுக்கான எதிர்ப்பதமாகவே கையாளப்படுகிறது. அதாவது ஒரு விடயம் ஷரீஅத்தில் உள்ளது என்று சொல்ல ஸுன்னா என்றும் ஷரீஅத்தில் இல்லாதது என்று சொல்ல பித்அத் என்றும் பயன்படுத்தப்படுகிறது.

- இந்தப் பிரயோகம் அகீதா சார் அறிஞர்களிடத்திலும் ஃபுகஹாக்களிடத்திலும் வு.ஃ.ஆழ் எனப்படும். சமூகப் பேச்சாளர்களிடத்திலும் அதிகம் காணப்பட்டது. இவர்கள் ஸுன்னா என்பதன் மூலம் நபியவர்களது வாழ்க்கை நிகழ்வுகளை விடவும் இஸ்லாமிய வாழ்வுமுறையையே நாடினார்கள். இஸ்லாமிய வாழ்வு முறை என்பது அல் குர்ஆன், நபியவர்களது வாழ்வு, ஸஹாபாக்களது வாழ்வு போன்ற அனைத்திலிருந்தும் பெறப்படும் ஒரு வாழ்வு முறையாகும். இதனால்தான் ஸுன்னாவின் எதிர்ப்பதமான பித்அத்தை மறுதலிக்கும்போது அது அல்லாஹ் கூறவுமில்லை. நபியவர்களோ ஸஹாபாக்களோ செய்யவுமில்லை என்பதன் அடிப்படையில் மறுக்கப்படுகின்றது.

- இஸ்லாத்தின் இரண்டாவது சட்ட மூலாதாரம் என்ற கருத்தில் ஸுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பிரயோகம் அதிகமாக 'உஸுலிய்யூன்' எனப்படும் சட்டக் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் காணப்பட்டது. ஏற்கனவே குறிப்பிட்ட ஹதீஸ்கலை அறிஞர்களது பிரயோகத்தை விடவும் இது சற்று வித்தியாசமானது.

- இங்கு நபியவர்களது வாழ்க்கை நிகழ்வுகளில், இன்றைய எமது வாழ்வுக்கான மூலாதாரமாக அமையக்கூடியவை எவை? அல்லது நபியவர்கள் 'முபல்லிக்' எனும் அல்லாஹ்விடமிருந்து மனிதர்களுக்கு எத்தி வைப்பவர் என்ற வகையில் அமைந்த அவரது வாழ்வு எது? என்ற பரப்பு மாத்திரமே இங்கு நோக்கப்படுகிறது. அந்தவகையில் நபியவர்களது வாழ்வில் அவர் ஒரு மனிதர் என்ற வகையிலோ அல்லது அறபுக் கலாசாரத்தின் அடிப்படையிலோ தொழிற்பட்ட சந்தர்ப்பங்கள்,

நுபுவ்வத்திற்கு முன்னைய அவரது வாழ்வு போன்றன ஸுன்னா என்ற வட்டத்தினுள் அடங்க மாட்டாது. இவை தவிர நபி (ஸல்) அவர்களது வார்த்தைகள், செயற்பாடுகள், செய்ய நினைத்தவை, அங்கீகாரங்கள், நற்குணங்கள் என்பவை மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னா என வழங்கப்படுகிறது.

- ஒரு செயலைச் செய்தால் நன்மை கிடைக்கும் செய்யாத போது குற்றம் இல்லை என்ற கருத்தில் ஸுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. வாஜிப் என்ற சொல் குறிக்கும் கருத்தை விடவும் சற்றுக் குறைந்த கருத்தைத் தருகிறது. அதாவது வாஜிப் என்பது கட்டாயமாக நிறைவேற்றுவதற்குரிய ஒன்று. அதனை செய்தால் நன்மை கிடைக்கும். செய்யாத போது பாவம் ஆகும். ஆனால் ஸுன்னா என்பது கட்டாயமாக நிறைவேற்றுவதற்குரியதல்ல. செய்தால் நன்மை கிடைக்கும் செய்யாத போது குற்றமாக கணிக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட விளக்கங்களின் அடிப்படையில் நபியவர்களது ஸுன்னா என்றால் என்ன? என்பதை விளங்கிக் கொள்வதற்கு நாம் எல்லோரும் சில பொது அடிப்படைகள் மீது உடன்பட வேண்டியிருக்கிறது.

1. நபியவர்களது ஸுன்னா என்பது அல் குர்ஆன் அல்லாத வேறு ஒன்றையே குறிக்கின்றது. அதாவது ஸுன்னா என்பது வேறு அல்குர்ஆன் என்பது வேறு. நபியவர்களது கீழ்வரும் ஹதீஸ் இந்தக் கருத்தைக் குறிக்கின்றது.
   ‘‘அமானிதம் மனிதர்களின் உள்ளங்களில் வேரூன்றியிருக்கிறது. அடுத்து அவர்களுக்கு அல்குர்ஆனைக் கற்றுக் கொடுங்கள்.’’ (புகாரி, முஸ்லிம்)

2. நபியவர்களது ஸுன்னா என்பது ஸஹாபாக்களது வாழ்வு அல்லாத வேறு ஒன்றையே குறிக்கின்றது. ஸஹாபாக்களது வாழ்வுக்கும் ஸுன்னா என்ற சொற் பிரயோகம் பயன்படுத்தப்படுகின்றது. எனினும், இங்கு நபியவர்களது ஸுன்னா என்பது அவரது வாழ்வை மாத்திரம் குறிக்கும் ஒரு சொல்லாகும். ஹதீஸ்களில் ஸுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படும் போது நபியவர்களது ஸுன்னா வேறாகவும் ஸஹாபாக்களது ஸுன்னா வேறாகவும் குறிப்பிடப்படுவதை அவதானிக்கலாம். நீங்கள் எனது ஸுன்னாவையும் எனக்குப் பின்னர் வரும் நல்லாட்சியாளர்களின் ஸுன்னாவையும் கடைப்பிடியுங்கள்.....’’ (அபூதாவுத், திர்மிதி)

3. நபியவர்களது ஸுன்னா என்பது நாம் கட்டாயமாக வாழ்வு முறையாகக் கொள்வதற்குரிய ஒன்று. இக்கருத்தை பல்வேறு ஹதீஸ்கள் வலியுறுத்துகின்றன.
   ‘‘ நான் உங்கள் மத்தியில் இரண்டை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அதனைப் பின்பற்றினால் ஒரு போதும் வழிதவற மாட்டீர்கள். அது அல்லாஹ்வின் வேதமும், அவனது தூதரின் ஸுன்னாவும் ஆகும்.’’ என்றார்கள். (ஹாகிம்)

மேற்குறிப்பிட்ட அடிப்படைகளின்படி பார்க்கும் போது, ஸுன்னா என்பது, அல்லாஹ்வின் மார்க்கத்தை விளங்கி, முழு வாழ்விலும் அதனை கோட்பாட்டு வடிவிலும் சரி, செயற்பாட்டு வடிவிலும் சரி அமுல்படுத்திக் காட்டிய நபியவர்களது வாழ்வு முறை எனலாம். மற்றொரு வகையில் கூறினால் அல்குர்ஆனுக்கு செயல்வடிவம் கொடுத்த நபியவர்களது வாழ்வு எனக்கூறலாம்.

**ஸுன்னாவின் முக்கியத்துவம்**

- குர்ஆனும் ஸுன்னாவும் ஹதீஸின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன.
  1. ''எவர் அல்லாஹ்வுடைய தூதருக்கு வழிப்பட்டு நடக்கின்றாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவராவார்.'' (4:81)
  2. ''(நபியே!)நீர் கூறும். நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்'' (3:31)
  3. ''நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி காணப்படுகிறது.'' (33:21)

- முதலாவது வசனம், இறைத்தூதருக்குக் கட்டுப்பட்டு அவர்காட்டிய வழிமுறைகளைப் பின்பற்றுவது, அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகவே அமைகின்றது என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. இறைத்தூதரைப் பின்பற்றுவதனூடாகவே இறைதிருப்தியை அடைந்துகொள்ள முடியும் என்பதை இரண்டாவது வசனம் தருகின்றது. எமது வாழ்விற்கான முழுமையான வழிகாட்டல்களும் முன்மாதிரிகளும் இறைத்தூதரிடமிருந்தே பெறப்பட வேண்டும் என்பதை இறுதிவசனம் தெளிவாக உணர்த்துகின்றது.

- இறுதி ஹஜ்ஜின் போது முஸ்லிம் உம்மத்தினரை நோக்கி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

1. ''நான் உங்களிடம் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவ்விரண்டையும் நீங்கள் பின்பற்றியொழுகும் காலமெல்லாம் வழிதவறமாட்டீர்கள். அவை அல்லாஹ் வின் வேதமும் எனது வழிமுறையுமாகும்.'' (ஜாமிஉல் பயான்)ஒரு முஸ்லிம் நேர் வழியில் இருப்பதற்கு குர்ஆனையும் ஹதீஸையுமே பின்பற்ற வேண்டும். இன்றேல் வழிதவற நேரிடும் என்ற கருத்தை மேலுள்ள ஹதீஸ் வலியுறுத்துகின்றது.

2. மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி(ஸல்) அவர்கள், "நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். எனக்கு குர்ஆனும் அதனைப் போன்ற ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது." (அபூதாவூத்) என்றார்கள்.
   இங்கு குர்ஆனோடு சேர்த்து அதனை ஒத்ததாக ஹதீஸையே நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அல்குர்ஆனில் பிரயோகிக்கப்பட்டுள்ள ஹிக்மா என்ற சொல் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸைக் குறிப்பதாகச் சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

- நபித் தோழர்களும் தாபிஈன்களும் தபஉத்தாபிஈன்களும் ஹதீஸோடு தொடர்புடைய அறிஞர்களும் இத்துறையில் காட்டிய அதீத ஈடுபாடானது ஹதீஸின் முக்கியத்துவத்தை உணர்த்தும் மற்றொரு சான்றாகும்.

- ஸுன்னாவின் அவசியம் அல்லது பயன்பாடு அதன் முக்கியத்துவத்தை உணர்த்து கின்றது.

1. குர்ஆனைப் புரிந்துகொள்வதற்கு ஹதீஸ் தேவைப்படுதல்.
   நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்ற வகையில் அல்லாஹ்விடமிருந்து பெற்ற நேர்வழிகாட்டலை உரியமுறையில் மனிதசமூகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்புடையவராக இருந்தார். அவரது பொறுப்பைப் பின்வரும் வசனம் எடுத்துக்காட்டுகின்றது.

''மேலும் மனிதர்களுக்கு அவர்கள் பால் இறக்கிவைக்கப்பட்டதை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும் மற்றும் அவர்கள் சிந்திப்பவர்களாக ஆகிவிடலாம் என்பதற்காகவும் உம்பால் இவ்வேதத்தை நாம் இறக்கிவைத்தோம்.'' (38: 29)

- அல் குர்ஆனைப் புரிந்துகொள்வதற்குப் பின்வரும் வழிமுறைகளில் ஹதீஸ் துணைபுரிகின்றது.

i) குர்ஆனின் முஜ்மலான சில போதனைகளின் விரிவான விளக்கத்தைப் புரிந்துகொள்ள (முபஸ்ஸல்) ஹதீஸ் தேவைப்படுகின்றது. உதாரணமாக:
''தொழுகையை நிலைநிறுத்துங்கள், ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள்'' (2:110)
சுருக்கமாக அமைந்த இப்போதனையை நபி அவர்களின் பின்வரும் ஹதீஸ் விரிவுபடுத்துகின்றது.
''எவ்வாறு நான் தொழக்கண்டீர்களோ அவ்வாறு நீங்களும் தொழுகையை நிலை நிறுத்துங்கள்.'' (புகாரி)

ii) அல்குர்ஆனின் சில போதனைகளை ஹதீஸ் மேலும் உறுதிப்படுத்துகின்றது. அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம் நபி அவர்களின் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது என வினவப்பட்டபோது,
''அது அல்குர்ஆனாகவே இருந்தது'' என பதிலளித்தார்கள். இக்கூற்றின் மூலம் நபி அவர்களின் வாழ்க்கை குர்ஆனைப் பிரதிபலித்தது என்ற கருத்தைப் புரிந்து கொள்ள வைக்கின்றது.

''விசுவாசிகளே! நீங்கள் உடன்படிக்கைகள் செய்துகொண்டால், அதனைச் சிறந்த முறையில் நிறைவேற்றுங்கள்.'' (5:1)

இவ்விறை வசனத்தில் விசுவாசிகள் உடன்படிக்கைகளை சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்க்கை யில் இவ்வசனத்தைப் பிரதிபலித்துக்காட்டினார்கள் என்பதை அவரது தனிப்பட்ட, வியாபார, அரசியல் ரீதியான உடன்படிக்கைகள் நிரூபிக்கின்றன. (உதாரணமாக குறைஷியர்களின் அமானிதப் பொருட்களை வழங்கல்) ஹுதைபியா உடன்படிக்கை, மதீனா சாசனம், மக்கா என்பவற்றைக் குறிப்பிடலாம்.

iii) குர்ஆன் சில விடயங்களைப் (அல்ஆம்) பொதுவாகக் குறிப்பிட ஹதீஸ் அதனை சில குறிப்பிட்ட விடயத்தோடு தொடர்புபடுத்தி விளக்குகிறது. இதனைத் தெரிந்துகொள்ள ஹதீஸ் தேவைப்படுகிறது. உதாரணமாக சொத்துரிமையைப் பற்றிய பின்வரும் குர்ஆன் போதனைக்கு ஹதீஸின் விளக்கம் தேவைப்படுவதை அவதானிக்கலாம்.
''உங்களில் இறந்த, அவருக்குச் சந்ததியுமிருந்து (பெற்றோருமிருந்தால்) தாய் தந்தை ஒவ்வொருவருக்கும் (இறந்தவர்) விட்டுச் சென்ற சொத்தில் ஆறிலொரு பாகமுண்டு..'' (4:12)
மேற்படி வசனத்தில் மேலெழுந்தவாரியாகக் குறிக்கப்படும் கருத்தை ஹதீஸ் விளக்குகிறது. குழந்தைகளது சொத்தில் பெற்றோர் சொத்துரிமை பெற

குழந்தைகளும், பெற்றோரும் பின்பற்றும் மார்க்கம் இஸ்லாமாக இருக்கவேண்டுமென ஹதீஸ் கூறுகின்றது.

‘‘ஒரு காபிர், முஸ்லிமின் சொத்திலிருந்து வாரிசுரிமை பெறமாட்டார். ஒரு முஸ்லிம்; காபிரின் சொத்திலிருந்து வாரிசுரிமை பெறமாட்டார்.’’ (முஸ்லிம்)

iv) சிலபோது குர்ஆன் ஒரு விதியைப் பொதுப் பிரமாணமாக (முத்லக்) விளக்க, ஹதீஸ் அதனோடு தொடர்புடைய வேறுவிதிகள் மூலம் அப்பொது விதியை (முகய்யத்) மேலும் விளக்குவதால் அதற்காக ஹதீஸ் தேவைப்படுகின்றது. உதாரணமாக திருட்டுக்குற்றத்திற்குரிய தண்டனை பற்றிய குர்ஆன் வசனத்திற்கு, ஹதீஸ் தரும் விளக்கத்தைக் குறிப்பிடலாம்.
‘‘களவெடுத்த ஆண், பெண் ஆகிய இருவரது கரங்களையும் துண்டித்து விடுங்கள்.’’ (5: 38)
இத்தண்டனையிலிருந்து சித்தசுவாதீனமற்றோர், குழந்தைகள் ஆகியோர் விதிவிலக்குப் பெறுவார்கள் என ஹதீஸ் விளக்குகின்றது.

v) குர்ஆன் குறிப்பிடாத சில விடயங்களை ஹதீஸ் குறிப்பிடுகிறது. அவற்றை ஹதீஸ் மூலமே விளங்கிக் கொள்ள வேண்டும்.
உதாரணம்: திருமணச்சட்டத்தில் மனைவியின் தாயின் சகோதரிகளைத் திருமண முடிப்பது ஹராம் என ஹதீஸ் கூறுவதைக் குறிப்பிடலாம்.

02. இஸ்லாத்தின் சட்ட மூலாதாரங்களுள் ஹதீஸும் ஒன்றாக இருத்தல்.

03. இஸ்லாமிய சட்டத்துறையில் இஜ்திஹாத் பணியினை மேற்கொள்ள ஹதீஸும் துணையாக அமைவதால் முஸ்லிம் உம்மத்தினருக்கு அது தேவைப்படுதல்.

04. முன்மாதிரியானதொரு இஸ்லாமிய வாழ்வைப் பெற்றுக்கொள்ள ஹதீஸ் உதவுதல். இதனால் அது முஸ்லிம் உம்மத்தினருக்குத் தேவைப்படுகின்ற பாங்கை அல் குர்ஆன் பின்வருமாறு தெளிவாகக் கூறுகின்றது.
"நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரிகள் காணப்படுகின்றன." (33:21)

### சட்ட மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னா

- இஸ்லாமிய சட்டத் துறை அறிஞர்கள் அனைவரும் அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்திலான மூலாதாரமாக ஸுன்னாவை அங்கீகரித்துள்ளனர். அல்குர்ஆனின் சட்ட விதிகளைப் போலவே, ஸுன்னாவின் அடியாக எழும் சட்ட விதிகளும் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தும் அந்தஸ்துடையவை ஆகும். ஸுன்னாவுக்கு இவ்வந்தஸ்து கிடைத்தமைக்கு நபிகளாரின் தலைமைத்துவத்தை மக்கள் அங்கீகரித்தமை ஒரு காரணமாக அமையவில்லை. மாறாக, அல்குர்ஆனே இவ்வந்தஸ்தை ஸுன்னாவுக்கு வழங்கியுள்ளது. பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் இதற்குச் சான்றாக அமைந்துள்ளன.
‘‘அவர் (இறைத் தூதர்) தன் இஷ்டப்படி (எதனையும்) கூறுவதில்லை. இது அவருக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறன்று (53:3-4)

‘‘... இறைத் தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ, அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (59:7)

‘‘(இத் தூதரோ,) அவர்களை நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்குவார். நல்லவைகளையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார். அன்றி, அவர்களுடைய பளுவை அவர்களை விட்டும் போக்கி, அவர்கள் மீதிருந்த விலங்குகளையும் (இறைவனுடைய பல கடினமான கட்டளைகளையும் இறைவனின் அனுமதி கொண்டு) நீக்கி விடுவார். (7:157)

- சட்டங்களை இயற்றுகின்ற அதிகாரம் நபி (ஸல்) அவர்களுக்குண்டு என்ற கருத்தைத் தரும் அல்குர்ஆன் வசனங்கள் பல உள்ளன. அவற்றுள் சில மேலே உதாரணத்துக்காக காண்பிக்கப்பட்டுள்ளன. நபி (ஸல்) அவர்களின் தீர்ப்புக்கள், தீர்மானங்கள், ஏவல் விலக்கல் முதலானவை உட்பட அவரது வாழ்க்கை முன்மாதிரிகள் அனைத்தும் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டவை என்பதை மேலே குறித்த அல்குர்ஆன் வசனங்கள் காண்பிக்கின்றன.

- நபி (ஸல்) அவர்களின் ஸுன்னா, சட்டங்களுக்கான ஒரு மூலாதாரம் என்பதை ஹதீஸ்களும் உறுதிப்படுத்துகின்றன. நபி (ஸல்) அவர்கள், முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களை யெமன் பிரதேசத்தின் நீதிபதியாக நியமித்தார்கள். அவர்களிடம் ‘‘எந்த மூலாதாரங்களைத் துணை கொண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள்’’ என நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். இறைவேதத்தைத் துணை கொள்வதாகவும், அதில் தீர்வுகாண வழிமுறை இல்லாதவிடத்து, ஸுன்னாவை மூலாதாரமாகக் கொள்வதாகவும், இவ்விரண்டினதும் துணை கிட்டாத போது, தனது இஜ்திஹாதைத் துணை கொள்வதாகவும் கூறிய அவரது கருத்தை நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்தார்கள். மற்றொரு ஹதீஸில், ‘‘உங்களிடம் இரு அம்சங்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் பின்பற்றும் வரை நீங்கள் வழிதவறமாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் வேதமும் எனது ஸுன்னாவுமாகும் என்றார்கள். (ஜாமிஉல் பயான்)

- தீர்ப்புகளை வழங்குவதற்கு அல்குர்ஆனில் ஆதாரம் கிடைக்காத போது ஸுன்னாவை ஆதாரமாகக் கொள்ளுமாறு கலீபா உமர் (ரழி) அவர்கள் நீதிபதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்கள். நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழ்ந்த போதும், அவரது மரணத்துக்குப் பின்னரும் ஸஹாபாக்கள் ஹதீஸ்களைப் பின்பற்றி வாழ்ந்தார்கள். ஸஹாபாக்களின் ‘‘இஜ்மாவான முடிவும் ஸுன்னா ஒரு சட்ட மூலாதாரம் என்பதைக் காண்பிக்கின்றது. முஸ்லிம் தனிநபர்களும், முஸ்லிம் சமூகமும், முஸ்லிம் அரசும் ஸுன்னாவைப் பின்பற்றி நடக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்பதை அல்குர்ஆனும் ஸுன்னாவும் ஸஹாபாக்கள் வாழ்வும் காண்பிக்கின்றன.

- அல்குர்ஆன் சுருக்கமாகக் கூறும் கட்டளைகளுக்கு விளக்கமளிப்பவராகவும், அல்குர்ஆனில் குறிப்பிடப்படாத விடயங்கள் பற்றிச் சட்டம் இயற்றுபவராகவும், முஸ்லிம் சமூகத்தின் முன்மாதிரிப் புருஷராகவும் செயற்பட வேண்டியவராகவும் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் தேர்ந்தெடுத்தான். அவரிடம் எதிர்பார்க்கப்பட்ட இப்பணிகள் பயன்தர வேண்டுமாயின் மனிதர்கள் முழுமையாக அவருக்குக் கட்டுப்படுவது அவசியமாகும். அதாவது ஸுன்னாவுக்குக் கட்டுப்படுவது அவசியமாகும்.

இஸ்லாமிய சிந்தனையைப் பொறுத்தவரை, அல்லாஹ்வே முழுமையான இறைமையுடையவன். ஆதலால் சட்டம் ஆக்கும் உரிமையை எவருக்கு வழங்குவது என்ற முடிவை அவன் ஒருவனால் மட்டுமே எடுக்க முடியும். அவனாக விரும்பி இறுதித் தூதரைத் தேர்ந் தெடுத்து சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஓர் எல்லையுள் அவர்களுக்கு வழங்கியுள்ளான் என்பதால், இறுதித் தூதரின் ஸுன்னாவை ஒரு மூலாதாரமாகக் கொள்வது அவசியமாகிறது.

- ஸுன்னா அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்திலான மூலாதாரமாதலால் ‘‘முஜ்தஹித்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அல்குர்ஆனுக்கே முன்னுரிமை வழங்கினர். அல் குர்ஆனின் துணை கிட்டாத போது மட்டுமே ஸுன்னாவின் துணையை நாடினர். ஸுன்னா அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் வைத்துக் கருதப்படுவதற்குப் பின்வருவன காரணமாயின.

- அல்குர்ஆனின் உத்தரவாதத்தன்மை ஸுன்னாவை விட மேம்பட்டதாகும். அதில் சந்தேகத்திற்கு இடம் இல்லை. ஸுன்னா, அல்குர்ஆனுக்கு விளக்கமாக இருப்பது அல் குர்ஆனின் முதன்மையைப் பிரகடனப்படுத்தி நிற்கிறது. அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்திலான ஆதாரம் ஹதீஸே என்ற சிந்தனையை முன்வைக்க அது ஏதுவாகியது.

- அல் குர்ஆனுக்கும் ஸஹீஹான ஹதீஸ்களுக்கும் இடையே முரண்பாடு இருக்க முடியாது. அவ்வாறு முரண்பாடு தோன்றினால் முஜ்தஹித்கள் அவற்றுக்கிடையே இணக்கப்பாடு காண முயற்சிப்பர்.

- ஸுன்னா சுதந்திரமான ஒரு மூலாதாரமா? அன்றேல், அல்குர்ஆன் வழி அமைந்த துணை மூலாதாரமா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. ஸுன்னா குறிப்பிடும் போதனைகள் ஏற்கனவே அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ள விதிகளை உறுதிப்படுத்துவதாக உள்ளன.
  ‘‘ஒரு முஸ்லிமின் உடைமைப் பொருளை அவனது அனுமதியின்றி எடுப்பது அனுமதிக்கப்பட்டதல்ல’’ என்ற ஹதீஸ் அல்குர்ஆனின் 4:19 ஆம் வசனத்தின் கருத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கின்றது என்பதை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். ஸுன்னா முன்வைக்கும் இத்தகைய போதனைகள் அல்குர்ஆன் குறிப்பிடும் சட்ட விதிகளை உறுதிப்படுத்துவதாக இருக்கின்றன. ஈமானிய அம்சங்கள், பெற்றோர் உரிமைகள், கொலை, களவு போன்ற குற்றச் செயல்கள் என்பன பற்றி வந்துள்ள ஹதீஸ்களையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- அல்குர்ஆனின் மயக்கமான கருத்துக்களைத் தெளிவாக்குவதும், அல் குர்ஆனிய விதிகளுக்குச் செயன்முறை விளக்கமளிப்பதும் ஸுன்னாவின் மற்றொரு பயன்பாடாகும். தொழுகை, சகாத், ஹஜ் போன்ற இபாதத்கள், வர்த்தகம் போன்ற சமூக செயற்பாடுகள் மற்றும் திருட்டுக் குற்றச் செயலுக்கு கை வெட்டுதல் போன்ற தண்டனைகள் அல்குர்ஆனில் ஏவல்களாக மட்டுமே உள்ளன. அவற்றின் நடைமுறைப் படுத்துவதற்கான விதிகளை ஸுன்னாவே தருகிறது. மேற்குறித்தவாறான ஷரீஆ விதிகளுக்கு ஸுன்னாவை ஒரு சுதந்திரமான மூலாதாரமாகக் கொள்வது பொருத்தமற்றதாகும்.

- ஸுன்னா தரும் போதனைகளில் கனிசமானவை மேற்குறித்தவாறான அம்சங்கள் சார்ந்தவையாகும். இத்தகைய விதிகளுக்கான மூலாதாரமாக அல்குர்ஆனைத் தனியாகவோ, ஸுன்னாவைத் தனியாகவோ கொள்ளாது, இவ்விரண்டு

மூலாதாரங்களினதும் அடியாக அவை உருவானவை என்று கொள்வதே சாலச் சிறந்தது.

- அல்குர்ஆனில் குறிப்பிடப்படாததும், ஸுன்னாவின் மூலம் உருவானதுமான சட்ட விதிகளைப் பொறுத்தவரை ஸுன்னாவை ஒரு சுதந்திரமான மூலாதாரமாகக் கொள்ள முடியும் என சட்டவியலாளர் கருதுவர். இத்தகைய ஸுன்னாவை ''அஸ்ஸுன்னா அல் முஅஸ்ஸிலா'' என்றழைப்பர். இத்தகைய ஹதீஸ்களின் உள்ளடக்கத்தை அல்குர்ஆனில் தேடிப் பெற முடியாது. இதற்கு உதாரணமாக பின்வரும் சட்ட விதியைக் குறிப்பிட முடியும். விவாகம் புரிய ஆகாதவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று அல்குர்ஆனில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவன் ஏக காலத்தில் தன் மனைவியையும் மனைவியின் தாய்வழி அல்லது தந்தை வழி சாச்சி அல்லது மாமியையும் மனைவியாக வைத்துக் கொள்ளக் கூடாது என்று இவ்வட்டவணை தடுக்கவில்லை. ஆயினும் ஸுன்னா மூலம் அவர்கள் தடுக்கப்பட்டுள்ளனர். இவ்விதிக்கு ஸுன்னாவே மூலாதாரமாக அமைவதால் இத்தகைய சட்டங்களைப் பொறுத்தவரை, ஸுன்னா ஒரு சுதந்திரமான மூலாதாரம் எனலாம். இஸ்லாமிய சட்ட அறிஞர்களான ''அஷ்ஷாதிபி'' ''அஷ்ஷவ்கானி'' போன்றவர்களும் இக்கருத்தையே ஆதரிப்பர். எவ்வாறாயினும், ஸுன்னாவின் வழி உருவான சட்ட விதிகளுக்கு முஸ்லிம்கள் அடிபணிய வேண்டும் என்பதும், அதனை மீறுவது பாவச் செயல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாறு

- ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாறு நபி முஹம்மது (ஸல்) அவர்களது நுபுவ்வத்திலிருந்து ஆரம்பமாகி இன்றுவரை தொடர்கின்றது.

- இவ்வரலாற்றின் தோற்றம், அதைப் பெற்றுக் கொள்ளுதல், பாதுகாத்தல், ஏனையோருக்கு அறிவித்தல், ஹதீஸ்களைத் திரட்டுதல்,நூலுருப்படுத்தல், போலிகளிலிருந்து அதனைத் தூய்மைப்படுத்தல், தொகுத்து எழுதுதல், விளக்கி விரிவுரை எழுதுதல் போன்ற அம்சங்கள் இதில் உள்ளடங்குகின்றன.

## நபி (ஸல்) அவர்களது காலம்

- நபி (ஸல்) அவர்களது நபித்துவத்திலிருந்து அவரது வபாத் வரையுள்ள காலப்பகுதி ஹதீஸின் வரலாற்றில் நபி (ஸல்) அவர்களது காலமாக கணிக்கப்படுகிறது. இக்காலப் பகுதியில் தான் ஹதீஸ்கள் வெளியாகின. நபி(ஸல்) அவர்களிடமிருந்து வெளியாகிய ஹதீஸ்களை நபித்தோழர்கள் பெற்றுக்கொள்வதில் மிகத் தீவிர ஆர்வமும் ஈடுபாடும் காட்டினார்கள். உதாரணம் திண்ணைத்தோழர்களின் நடவடிக்கைகள்.

- நபி (ஸல்) அவர்களது காலத்தில் ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்கு மிக முக்கியமான நான்கு வழிமுறைகள் நபித்தோழர்களினால் பின்பற்றப்பட்டமையைக் கண்டுகொள்ள முடிகின்றது.
    1. மனனமிடுதல்
    2. எழுதிப்பாதுகாத்தல்
    3. வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திப் பாதுகாத்தல்.
    4. எத்திவைத்தல்

- திண்ணைத் தோழர்கள், உம்மஹாதுல் மு.்.மினீன்கள், நபிகளாரின் பணியாட்கள், தனிப்பட்ட அடிப்படையில் தோழர்கள் மனனத்தின் மூலம் ஹதீஸ்களைப் பாதுகாத்து

வழங்கினார்கள்.
உதாரணம்: நபி (ஸல்) அவர்களது மனைவிமார்களான உம்மஹாதுல் மு.்.மினீன்கள், பெண்கள் சம்பந்தமான போதனைகளை மனனத்தில் பாதுகாத்து வழங்கியதைக் குறிப்பிடலாம்.

- மனனத்தின் மூலம் ஹதீஸ்களைப் பாதுகாப்பதன் சிறப்பை சிலாகித்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.
"40 ஹதீஸ்களை மனனஞ் செய்பவன் நாளை மறுமையில் ஞானிகளுடன் எழுப்பப் படுவான்."
- ஜாஹிலிய்யாக் கால அரபு நாட்டில் எழுதும் வழக்கம் உடையவர்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவிலேனும் இருந்துள்ளனர் என்பதை க.்.பதுல்லாவில் தொங்கவிடப்பட்ட கவிதைத் தொகுப்புக்கள், உடன்படிக்கைகள், கடிதங்கள் நிரூபிக்கின்றன.

- நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் ஹதீஸ்களை எழுதிப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை நபித்தோழர்கள் மேற்கொண்டார்கள் என்பதற்கு வரலாற்றாதாரங்கள் காணப்படுகின்றன.

i) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் ஒரு முறை நபி(ஸல்) அவர்களிடம் சென்று "நான் ஹதீஸ்களில் சிலவற்றை விளங்கிவைக்க விரும்புகின்றேன். அவற்றை எனது மனனத்தோடு ஒப்பிட்டு எழுதிவைக்கவும் விரும்புகின்றேன். அதுபற்றி தங்களது கருத்தென்ன? என வினவினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், எழுதுவதில் தவறில்லை, ஆனால் "என்னைப்பற்றி மனமுரண்டாகப் பொய்யுரைக்கின்றவன் நாளை மறுமையில் நரகைத் தங்குமிடமாக எடுத்துக்கொள்வான்." (புகாரி) எனக் கூறினார்கள்.

இதற்குப் பின்னர் அப்துல்லாஹ் இப்னு உமர்(ரழி) அவர்கள் ஹதீஸ்களை எழுதிக் கொண்டதாகவும் அவ்வாறு எழுதிக்கொண்ட ஹதீஸ்களை உள்ளடக்கிய திரட்டுக் களை தாபிஈன்கள் கண்டதாகவும், அவருடைய திரட்டு, "ஸஹீபா ஸாதிகா" என அழைக்கப்பட்டதாகவும் வரலாற்றாதாரங்கள் குறிப்பிடுகின்றன.

ii) அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்கள் அனைத்தையும் எழுதிக் கொள்ளும் வழக்கம் உடையவராக இருந்தார். "நபி (ஸல்) அவர்கள் சுகதுக்க வேளைகளில் கூறுகின்றவற்றையுமா எழுதிக் கொள்கின்றீர்? என தோழர்கள் கேட்டபோது, நபி(ஸல்) அவர்களிடம் சென்று இது பற்றி முறைப்பாடு செய்து, சந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டார்.
"அல்லாஹ்வின் மீது ஆணையாக இந்த வாயிலிருந்து உண்மையைத் தவிர வேறு எதுவும் வெளிவராது." என நபி(ஸல்) அவர்கள் இவருக்குக் கூறினார்கள். இதன் மூலம் மேற்படி தோழர் எழுதிக் கொள்வதை நபி (ஸல்) அவர்கள் அனுமதித்துள்ளார்கள் என்பது நிரூபிக்கப்படுகிறது. இவ்வாறு நபித் தோழர்களுள் நாற்பதுக்கு அதிகமானவர்கள் ஹதீஸ்களை எழுதிப்பாதுகாத்ததாக வரலாற்றா தாரங்கள் கூறுகின்றன.

- ஹதீஸ்களைப் பாதுகாக்கும் விடயத்தில் நபி (ஸல்) அவர்களது காலத்தில் பின்பற்றப்பட்ட மிகவும் சிறந்த ஒரு வழிமுறை தோழர்கள் தமது வாழ்க்கையில்

ஹதீஸ்களை அல்லது நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றிவந்தமையாகும். தோழர்கள் நபி (ஸல்) அவர்களை அணு அணுவாகப் பின்பற்றினார்கள் என்பதனை அஷ்-ஷிபா எனும் நூலில் பதிவாகியுள்ள பின்வரும் வரலாற்றுச் சம்பவம் நிரூபிக்கின்றது.

ஒருமுறை நபி(ஸல்) அவர்கள் தொழுகையை நடாத்திக் கொண்டிருக்கும் போது தமது பாதணிகளை ஒருபுறமாகக் கழற்றி வைத்தார்கள். இதை அவதானித்த தோழர் களும் தமது பாதணிகளையும் கழற்றி வைத்தார்கள். தொழுகை முடிந்ததும் நபி (ஸல்) அவர்கள் தோழர்களை நோக்கி "நீங்கள் ஏன் உங்களது பாதணிகளை கழற்றி வைத்தீர்கள்? எனக்கேட்டபோது "யா ரசூலல்லாஹ்! நீங்கள் செய்ததனாலேயே நாங்களும் அவ்வாறு செய்தோம் எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் எனது பாதணியில் நஜீஸ் இருப்பதாக ஜிப்ரீல் (அலை) அவர்கள் அறிவித்ததனாலேயே நான் அவ்வாறு செய்தேன்." எனக் கூறினார்கள். இங்கு தோழர்கள் நபி (ஸல்) அவர்களை அணுவணுவாகப் பின்பற்றி வந்துள்ளார்கள் என்பதை உணர்ந்துகொள்ளமுடிகின்றது.

### ஸஹாபாக்கள் காலம்

- நபி (ஸல்) அவர்களது வபாத்திலிருந்து அதாவது ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டிலிருந்து ஸஹாபாக்கள் காலம் ஆரம்பித்து ஹிஜ்ரி 100 ஆம் ஆண்டுவரை அல்லது கடைசி ஸஹாபி வபாத்தாகும் வரை இக்காலம் தொடர்கிறது. இக்காலம் ஆட்சிப்பரவலின் அடிப்படையிலும், சூழ்நிலை மாற்றங்களின் அடிப்படையிலும் முன்னைய காலத்தைவிட வித்தியாசமான தன்மைகள் கொண்டனவாகக் காணப்பட்டது.

- நபித்தோழர்கள் ஹதீஸின் அல்லது நபிகளாரின் வழிமுறைகளின் பாதுகாப்பிற்கும், ஏனையவர்களுக்கு அதனைச் சென்றடைய வைப்பதற்கும் தம்மால் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்களை அரசியல் மட்டத்திலும், தனிப்பட்டவகையிலும் சிறந்த முறையில் மேற்கொண்டு இன்று வரை முஸ்லிம் உம்மத்தினர் ஹதீஸ்களைப் பெற்று இஸ்லாத்தின் வழியிற் செல்ல வழிவகுத்தார்கள்.

### தாபிஈன்கள் காலம்

- ஸஹாபாக்களை அடுத்து ஹதீஸ்துறைக்குப் பங்களிப்புச் செய்தவர்கள் தாபிஈன்களாவர். தாபிஈன்கள் காலம் ஹிஜ்ரி 100லிருந்து ஆரம்பமாகி ஹிஜ்ரி 150 அல்லது ஹிஜ்ரி 200வரை தொடர்கிறது எனக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

- தாபிஈன்கள் காலத்தின் ஆரம்பத்தில் ஹதீஸ்துறை எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கான காரணங்கள்
    1. குலபாஉர் ராஷிதூன்களுக்குப் பின்னர் ஆட்சிபீடம் ஏறிய உமையா ஆட்சியாளர்களில் ஒரு சிலரின் மோசமான நிலை.
    2. குலபாஉர் ராஷிதூன்கள் ஹதீஸின் பாதுகாப்பு விடயத்தில் கைக்கொண்ட முயற்சிகள் கைவிடப்பட்டமை.
    3. ஒரு நூற்றாண்டு காலம் வரை ஹதீஸ்கள் கோர்வை செய்யப்படாமை. இதனால் போலியானவை தோன்றின. பகுத்தறிவின் அடிப்படையில் தீர்ப்புகூறும் அளவிற்கு நிலைமை மோசமாகியது.

- உமையாக்கள் வரிசையில் ஹிஜ்ரி 99ஆம் ஆண்டு உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஆட்சிபீடமேறியதன் பின்னர் இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்கள். இதற்கடிப்படைக் காரணம் இவரது பெற்றோரது வழிநடத்தலும், அவரது பரம்பரையும், அவர் கல்விகற்ற சூழலும், கற்ற துறைகளுமாகும். அவர் தனது ஆட்சியில் அரசியல் பொருளாதார, சமூக, அறிவியல், ஒழுக்கப்பண்பாட்டுத் துறைகளில் எல்லாம் மாபெரும் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். இந்த வரிசையில் தாபிஈன்கள் காலத்தின் ஆரம்பத்தில் ஹதீஸ்துறை எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வொன்றையும், பாதுகாப்பொன்றையும் வழங்கினார்.

- உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஹதீஸ்களை ஒன்றுதிரட்டி எடுப்பதற்கான முயற்சிகளை ஆரம்பித்து வைத்தார்கள்.

- "ரஸூல் (ஸல்) அவர்களின் ஹதீஸையும் ஸுன்னாவையும் தேடிக்கண்டுபிடியுங்கள், ஏனெனில் நான் அறிவின் மறைவையும் அறிஞர்களின் பிரிவையும் அஞ்சுகிறேன்." என மதீனாவின் கவர்னருக்கு அவர் எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது இதனை உறுதிப்படுத்துகின்றது.

- உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஹதீஸ்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்களையும் ஹதீஸை ஒன்றுதிரட்டும் பணியில் ஈடுபடுத்தியமைக்கு "இமாம் ஷிஹாபுத்தீன் சுஹ்ரி" என்பவர் தூண்டப்பட்டதைக் குறிப்பிடலாம்.

- கிலாபத்தின் நாலா பகுதிகளிலும் ஹதீஸ்களை ஒன்றுதிரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்களை அக்காலப்பகுதியில் காண முடிந்தது.

- ஹதீஸ்களை ஒன்றுதிரட்டும் பணியில் பாரிய பங்களிப்புக்களைச் செய்த தாபிஈன்கள் காலத்து அறிஞர்கள் ஹதீஸின் தூய்மையைப் பேணுவதற்காகச் சில பாதுகாப்பு முறைகளை அல்லது தூய்மை பேணும் முறைகளை அறிமுகஞ் செய்தார்கள். அவற்றுள் மிகப்பிரதானமான இரண்டு வழிமுறைகள் பின்வருமாறு.
    1. இஸ்னாதைக் குறிக்கும் வழிமுறையை முதன் முதலில் நடைமுறைக்கு கொண்டு வந்தார்கள்.
    2. ஹதீஸ்களை அறிவித்தவர்கள் எவராவது உயிருடன் இருந்தால் அவர்களை நேரடியாகச் சென்று சந்தித்து அதனை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

- தாபிஈன்கள் காலத்தில் ஹதீஸ்கள் ஒன்றுதிரட்டப்பட்டதனால் முஸ்லிம் சமூகத்தினருக்கு பல்வேறு சாதகமான சூழ்நிலைகள் உருவாகின.
    1. முஸ்லிம் உம்மத்தினருக்கு முதன் முதலில் ஹதீஸ் கிரந்தங்கள் கிடைத்தன. முதலாவது கிடைத்த கிரந்தமாக அதிகமான இஸ்லாமிய அறிஞர்களினால் குறிக்கப்படுவது இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் 'முஅத்தா' என்ற கிரந்தமாகும்.
    2. தாபிஈன்கள் காலத்தின் ஆரம்பத்தில் ஹதீஸ்துறை எதிர்நோக்கிய பிரச்சினைகளில் இருந்து விடுதலை பெறக்கூடிய சூழ்நிலை உருவாகியது.
    3. பகுத்தறிவின் அடிப்படையில் மார்க்கப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அல்குர்ஆன் அல்லது ஹதீஸின் அடிப்படையில் அவை தீர்க்கப்படவேண்டும் என்ற கருத்தை உறுதிப்படுத்த முடிந்தது.

4. அடுத்துவரக்கூடிய ஹதீஸ்துறை அறிஞர்களுக்கு ஹதீஸ் துறைக்குப் பங்களிப்புக் களைச் செய்ய இவர்களது பணிகள் முன்மாதிரியாக அமைந்தன.

- தாபிஈன்கள் காலத்து அறிஞர்கள் தாம் திரட்டிக்கொண்ட ஹதீஸ்களை 'முஸ்னத்' அடிப்படையிலேயே நூலுருப்படுத்தினார்கள். ஒரு முஹத்திஸ் தான் திரட்டிக்கொண்ட ஹதீஸ்களை அறிவிப்பாளரின் பெயரொழுங்கின் அடிப்படையில் நூலுருப்படுத்திக் கொள்வதை ‘‘ 'முஸ்னத்' வடிவத்தில் நூலுருப்படுத்துதல்’’ என்பது குறிக்கின்றது.

## தபஉத்தாபிஈன்கள் காலம்

- ஹதீஸ்கள் பல்வேறு வகைகளாக வகைப்படுத்தி வழங்கப்பட்டமை.

1. முன்னைய காலங்களைவிட ஹதீஸ்களைப் பாதுகாத்தல், ஒன்றுதிரட்டல், நூலுருப் படுத்தல், விளக்கமளித்தல் போன்ற காரியங்களை மேற்கொள்கின்றபோது இக்காலத்து அறிஞர்கள் பரந்த ஒரு நோக்கத்தின் அடிப்படையில் இம்முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அதாவது நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வழிமுறைகள் அனைத்தும் முஸ்லிம் சமூகத்தினருக்குத் தேவை என்ற அடிப்படையில் இப்பணியில் ஈடுபட்டார்கள்.

2. தபஉத்தாபிஈன்களது காலத்திற்கு முன்னைய காலங்களில் ஹதீஸ்களோடு சேர்த்து அதற்குரிய விளக்கங்களை எழுதிக் கொள்கின்ற ஒரு நடைமுறை பின்பற்றப்பட்டது. இது ஹதீஸின் தூய்மைக்குப் பிரச்சினையாக அமைந்ததால் தபஉத்தாபிஈன்கள் காலத்து முஹத்திஸீன்கள் ஹதீஸ்களை மாத்திரம் குறித்துக்கொள்ளும் முறையை அறிமுகஞ் செய்தார்கள். இதனால் ஹதீஸின் தூய்மை பேணப்பட்டது.

3. தாபிஈன்கள் காலத்து முஹத்திஸீன்கள் தாம் திரட்டிக் கொண்ட ஹதீஸ்களை 'முஸ்னத்' அடிப்படையில் நூலுருப்படுத்தினார்கள். ஆனால் தபஉத்தாபிஈன்கள் காலத்து அறிஞர்கள் தாம் திரட்டிக் கொண்ட ஹதீஸ்களை 'ஜாமிஉ' அல்லது முஸன்னப் அடிப்படையிலேயே நூலுருப்படுத்தினார்கள். ஒரு முஹத்திஸ் தாம் திரட்டி எடுத்துக் கொண்ட ஹதீஸ்களைத் தலைப்புக்களின் அடிப்படையில் நூலுருப் படுத்தி வழங்குவதனை இது குறிக்கின்றது.

   'கிதாப்' என்ற பெரிய தலைப்புக்களின் அடிப்படையிலும் 'பாபுன்' என்ற சிறிய தலைப்புக்களின் அடிப்படையிலும் இவர்கள் தொகுத்து எழுதினார்கள். இதனால் முஸ்லிம் சமூகத்தினர் தமக்குத் தேவையான ஹதீஸ்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

4. போலியான ஹதீஸ்களை இனங்கண்டு கொள்ள ஹதீஸோடு தொடர்பான ஏனைய கலைகள் அறிமுகம் செய்யப்பட்டன. உதாரணமாக அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் வத்த.்.தீல், உஸூலுல் ஹதீஸ்

5. அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா எனும் பரிசுத்த ஹதீஸ் திரட்டுக்கள் வழங்கப்பட்டமை.

## மௌழூஆத்களின் தோற்றமும் அவை ஏற்படுத்திய தாக்கமும்

- ‘‘நபி (ஸல்) அவர்கள் சொல்லாத, செய்யாத, அங்கீகரிக்காதவற்றை, அவர்களது பண்புகளில், வர்ணனைகளில் அடங்காதவற்றை சொன்னதாகவும், செய்ததாகவும் அங்கீகரித்ததாகவும் பண்புகள், வர்ணனைகளில் அடங்குவதாகப் பொய்யாக குறித்துக்

காட்டுவதனையே போலியான ஹதீஸ் என்பது குறிக்கின்றது.''

- போலியான ஹதீஸ்கள் எப்போது தோற்றம் பெற்றன என்பதில் பின்வரும் மூன்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. நபி (ஸல்) அவர்களது காலத்தில் பொய்யான ஹதீஸ்கள் தோன்றின.
2. அபூபக்ர், உமர்(ரழி) அவர்களது காலத்தில் பொய்யான ஹதீஸ்கள் தோன்றின.
3. உஸ்மான் (ரழி)அவர்களது ஆறு ஆண்டு ஆட்சியின் பின்னர் பொய்யான ஹதீஸ் கள் தோன்றின. இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்றதற்கான சான்றுகளே உள்ளன.

- போலியான ஹதீஸ்கள் துரித வேகத்தில் வளர்ச்சியடைந்தமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

1. குலபாஉர் ராஷிதூன் ஆட்சியாளர்கள் ஹதீஸின் பாதுகாப்பு, ஹதீஸின் தூய்மை விடயத்தில் கடைப்பிடித்த நடவடிக்கைகளை, அதன்பின்னர் வந்த ஆட்சியாளர்களில் ஒருசிலர் கைவிட்டமை.
2. ஒரு நூற்றாண்டு காலம் ஹதீஸ்கள் கோவை செய்யப்படாமையை விஷமிகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டமை.

## போலி ஹதீஸ்கள் தோன்றியதற்கான காரணங்கள்

## அரசியல் ரீதியான காரணங்கள்

- உஸ்மான் (ரழி) அவர்களின் முதல் ஆறு ஆண்டு ஆட்சி கழிந்த பின்னர் இஸ்லாத்தின் எதிரிகளால் இஸ்லாமிய அரசியலில் குழப்பங்களும் பிரச்சினைகளும் உருவாக்கப்பட்டன. இதனைச் சாதிப்பதற்கு பொய்யான ஹதீஸ்களை அரசியல் ரீதியாகத் தோன்றிய ஒவ்வொரு உட்பிரிவினரும் பயன்படுத்தினர். ஷீயாக்கள் என்றும், உமையாக்கள் என்றும் காரிஜ்கள் என்றும் முதல் மூன்று கலீபாக்களையும் ஆதரித்தோர் என்றும் அவர்கள் தம்மை இனங்காட்டிக் கொண்டனர். இவர்கள் இட்டுக் கட்டிய போலி ஹதீஸ்களுக்கு உதாரணம்:

1. ''அலி (ரழி) எனது வாரிசுக்காரன், அவர் எனது சகோதரன், எனக்குப் பின்னால் தலைவராக வருபவர், நீங்கள் அவரது கட்டளைகளுக்குச் செவிமடுத்து அவருக்குப் பணிந்து நடந்துகொள்ளுங்கள்.'' (பொய்யான ஹதீஸ்)
2. ''நெருப்பு விறகை எரிப்பது போல அலியை நேசிப்பது பாவச் செயல்களை அழித்துவிடும்'' (பொய்யான ஹதீஸ்)
3. ''முஆவியா(ரழி)யை மிம்பரில் கண்டால் வாளால் வெட்டிவிடுங்கள்''
   (பொய்யான ஹதீஸ்)
4. ''அல்லாஹ்விடத்தில் நம்பிக்கைக்குரியவர்கள் மூவர் நான், ஜிப்ரீல், முஆவியா''
   (பொய்யான ஹதீஸ்)

மேற்குறித்த அடிப்படையில் ஒவ்வோர் உட்பிரிவினரும் பொய்யான ஹதீஸ்களை அறிவித்ததனால் ஹதீஸின் தூய்மை பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் நபி(ஸல்) அவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் கட்டிவளர்த்த ஒற்றுமையும், ஐக்கியமும், ஒருமைப்பாடும் சீர்குலைந்து போய்விட்டன. இன்றுவரை சீர்செய்ய முடியாத அளவிற்கு தாக்கங்களை அது ஏற்படுத்தியுள்ளது. வரலாற்றில் காரிஜ்கள் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தமைக்குச் சான்றுகள் கிடையாது.

## ஸின்தீக்குகள் அல்லது இஸ்லாத்தின் எதிரிகளின் நடவடிக்கைகள்.

- இஸ்லாத்தை அறிவியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் எதிர்க்கின்ற நோக்கத்தில்

பொய்யான ஹதீஸ்களை அறிவித்த இஸ்லாத்தின் எதிரிகளே ஸின்தீக்கள் ஆவர். ஹலால், ஹராம், அகீதா, இபாதத் போன்ற பல்வேறு துறைகளில் பொய்யான ஹதீஸ்களை இவர்கள் அறிவித்தார்கள். இதற்கு உதாரணங்கள் பின்வருமாறு;

1. ‘‘அல்லாஹ் தனது மார்பிலும் கரங்களிலுமுள்ள மயிர்களினால் மலக்குகளைச் சிருஷ்டித்தான்.’’ (பொய்யான ஹதீஸ்)
2. ‘‘அழகான முகத்தைப் பார்ப்பது இபாதத் ஆகும். (பொய்யான ஹதீஸ்)
3. ‘‘அல்லாஹ் தன்னை சிருஷ்டிக்க நாடிய போது குதிரையைச் சிருஷ்டித்து அதனை ஓடச் செய்தான். பின்னர் குதிரையின் வியர்வையிலிருந்து தன்னைச்சிருஷ்டித்தான்’’ (பொய்யான ஹதீஸ்)

மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் இஸ்லாமிய அகீதாவை, இஸ்லாமிய இபாதத்களை, ஹலால், ஹராம் பற்றிய வரம்புகளை பாதிப்படையச் செய்தன. இன்றும் கூட முஸ்லிம்கள் இதன் தாக்கங்களுக்கு உட்பட்டு வருகின்றார்கள்.

## மொழி, இனம், பிரதேசம், மத்ஹப்,இமாம் எனும் விடயங்களில் வெறிகொண்டவர்கள் இட்டுக்கட்டியவை.

- பாரசீக மொழி தனது செல்வாக்கை இழந்து செல்கிறது எனக் கருதி அம்மொழியைப் பேசுகின்றவர்கள் தமது மொழிக்குச் சாதகமாகவும் அரபுமொழிக்கு எதிராகவும் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தார்கள். இதற்காதராமாக பின்வரும் பொய்யான ஹதீஸை குறிப்பிடலாம்.
  ‘‘அல்லாஹ்வின் அர்ஷைத்தாங்கி இருப்பவர்கள் பாரசீக மொழியைப் பேசுகின்றனர். அல்லாஹ் வஹி அருளும் போது மென்மையான விடயங்களை பாரசீக மொழியிலும் கடினமான விடயங்களை அரபு மொழியிலும் அருளுகிறான்’’(பொய்யான ஹதீஸ்)
  அரபிகள் இதனை எதிர்த்து பின்வரும் பொய்யான ஹதீஸை அறிவித்தனர். ‘‘அரபு சுவர்க்கத்தின் மொழி, அல்லாஹ்விடம் மிகவும் வெறுப்புக்குரிய மொழி பாரசீக மொழி’’ (பொய்யான ஹதீஸ்)

- பிரதேச அடிப்படையில் வெறிபிடித்தவர்கள் இட்டுக்கட்டியவற்றுக்காகப் பின்வரும் பொய்யான ஹதீஸைக் குறிப்பிடலாம்.
  ‘‘மக்கா மதீனா, பைதுல் முகத்தஸ், திமிஷ்க் (டமஸ்கஸ்) ஆகிய நான்கு நகரங்களும் இவ்வுலகத்தின் சுவர்க்க நகரங்களாகும்.’’ (பொய்யான ஹதீஸ்)

- இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களை ஆதரித்த ஒருவர் அவருக்குச் சாதகமாக பின்வரும் பொய்யான ஹதீஸை அறிவித்தார்.
  ‘‘எனது உம்மத்தில் அபூஹனீபா இப்னு நு.்மான் என ஒருவர் தோன்றுவார். அவர் சமூகத்தின் ஒளி விளக்காவார்.’’ (பொய்யான ஹதீஸ்)

- இமாம் ஷாபிஈ(ரஹ்) அவர்கள் பிரபல்யம் அடைவதைக் கண்ட மாற்று இமாமை ஆதரித்த ஒருவர் மனவேதனைப்பட்டுக் கூறினார்.
  "முஹம்மத் இப்னு இத்ரீஸ் என்ற ஒருவர் பிற்காலத்தில் எனது சமூகத்தில் தோன்றுவார். அவர் இப்லீஸைவிடவும் கேடுகெட்டவராக இருப்பார்.’’ (பொய்யான ஹதீஸ்)

மேற்படி நடவடிக்கைகளினால் முஸ்லிம்களின் மத்தியில் பிளவுகள் உருவாகி அது,

நபி(ஸல்) அவர்கள் மிகவும் கடினமாக உழைத்துக் கட்டியெழுப்பிய முஸ்லிம்களது ஐக்கியம், ஒற்றுமை, சகோதரத்துவம் என்பன படிப்படியாக மறையக்காரணமாக அமைந்துவிட்டன.

**உபதேசிகளும் கதை கூறுபவர்களும் இட்டுக்கட்டியவை.**

- உபதேசிகள், கதை கூறுபவர்கள் மக்கள் மத்தியில் தாம் செல்வாக்குப் பெற்றுக் கொள்வதற்காகவும், தமது சொந்த நலன்களைப் பேணுவதற்காகவும் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தார்கள். இதற்காதாரமாக இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், இமாம் யஹ்யா இப்னு முஈன் ஆகிய இருவரும் தனக்கறிவித்ததாக ஒரு உபதேசி அவ்விருவரதும் முன்னிலையிலேயே தனது உபதேசத்தில் அறிவித்த பின்வரும் பொய்யான ஹதீஸைக் குறிப்பிடலாம்.

  ‘‘யார் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று மொழிகின்றாரோ அதன் ஒவ்வொரு சொல்லுக்கும் அல்லாஹ் ஒவ்வொரு பறவையைச் சிருஷ்டிக்கின்றான்.
  அப்பறவையின் சொண்டு தங்கத்தினாலும் இறக்கை நவரத்தினங்களினாலும் ஆக்கப்பட்டிருக்கும்.’’ (பொய்யான ஹதீஸ்)

- கதை கூறுபவர்கள் இட்டுக்கட்டியதற்கு பின்வரும் பொய்யான ஹதீஸைக் குறிப்பிடலாம்.
  ‘‘நூஹ் நபியின் கப்பல் தூபான் வெள்ளத்தில் மிதந்து கஃபதுல்லாஹ்வை ஏழுமுறை வலம்வந்து ஒருமுறை ஸுஜூது செய்தது.’’ (பொய்யான ஹதீஸ்)

  மேற்படி பொய்யான ஹதீஸ்களினால் பாமர மக்கள் இஸ்லாத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியது. இஸ்லாத்தைத் தவறாக விளக்கு கின்றவர்களுக்கு இடம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையும் உருவாகியது. இவை இஸ்லாத்தின் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தன.

**பிக்ஹிலும் இல்முல் கலாமிலும் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் இட்டுக் கட்டியவை.**

- பிக்ஹ், இல்முல் கலாம் போன்ற துறைகளில் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் தமக்குச் சார்பாகவும், எதிர்தரப்புடையவர்களை முறியடிக்கும் வகையிலும் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தார்கள். இதற்கு உதாரணமாக பின்வரும் பொய்யான ஹதீஸைக் குறிப்பிடலாம்.

  ‘‘எவர் தொழுகையில் தமது இரு கரங்களையும் உயர்த்துகின்றாரோ அவரது தொழுகை முறிந்துவிட்டது.’’ (பொய்யான ஹதீஸ்) இது ஹனபி மத்ஹபைச் சார்ந்த ஒருவர் அடுத்த மத்ஹபை சார்ந்தவர்களுக்கு எதிராக இட்டுக்கட்டிய பொய்யான ஹதீஸ் ஆகும்.

  ‘‘எவர் அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்று கூறுகிறாரோ அவர் காபிராகிவிட்டார்.’’ (பொய்யான ஹதீஸ்)

**மார்க்கத்தில் அறியாமையும் நல்லதைச் செய்யவேண்டும் என்ற ஆசையும் கொண்டவர்கள் இட்டுக்கட்டியவை.**

- வரலாற்றில் அரசியல் ரீதியாகவும், இயக்கரீதியாகவும், கொள்கைகளின்

அடிப்படையிலும் பிரிந்தவர்களை நல்லிணக்கப்படுத்தும் நோக்கத்திலும், தாம் சார்ந்திருக்கின்ற விடயங் களில் ஈடுபடுத்தும் நோக்கத்திலும் பொய்யான ஹதீஸ்களை இட்டுக்கட்டினார்கள். இவ்வாறு இட்டுக்கட்டி கண்டுபிடிக்கப்பட்டவர்களிடம் இது பற்றி வினவியபோது ‘‘நாங்கள் றஸுலுக்கு சார்பாக இட்டுக்கட்டினோம்’’ என நியாயம் கூறினார்கள். அதுமாத்திரமன்றி முஸ்லிம்கள் அல்குர்ஆனைப் புறக்கணித்து விட்டு இமாம்களது சட்டவிளக்கங்களிலும் வரலாற்றுத் துறைகளிலும் தமது கவனத்தைச் செலுத்துவதில் இருந்து அவர்களை விடுத்து அல்குர்ஆன் பக்கம் திரும்பி விடுவதற்காக இவ்வாறு புனைந்துரைத்ததாகவும் கருத்துத் தெரிவித்தார்கள். குலாம் கலீல் என்ற ஒருவன் திக்ரின் சிறப்பைப் பற்றி பொய்யான ஹதீஸ்களை அறிவித்தான். மக்களின் உள்ளங்களை நெகிழச் செய்து நன்மையின் பால் அவர்களைத் தூண்டுவதற்காக இவ்வாறு செய்ததாகத் தெரிவித்தான்.

## ஆட்சியாளர்களதும் செல்வந்தர்களதும் நலன் தேடுவதற்காக இட்டுக்கட்டப்பட்டவை.

- ஒருசிலர் தமது வாழ்க்கையைக் கடத்துவதற்காகப் பொய்யான ஹதீஸ்களை அறிவித்துள்ளதைக் கண்டு கொள்ள முடிகின்றது. இதற்கு ஆதாராமாகப் பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

  ‘‘அப்பாஸிய கலீபா மஹ்தியிடம் ஏதாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இயாஸ் இப்னு இப்ராஹிம் என்பவன் அரண்மனைக்கு வந்தான். கலீபா புறாக்களுடன் விளையாடிக் கொண்டு இருப்பதைக் கண்ட அவன், இவரது இவ்விளையாட்டு இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்த உண்மையான ஹதீஸான "அம்பையும், குதிரையையும், ஒட்டகத்தையும் தவிர வேறு எதனையும் போட்டிக்கு விடுவது கூடாது" (அல்ஹதீஸ்) பறவைகளையும் எனும் சொல்லையும் இதனுடன் சேர்த்துக் கூறினான். இவர் உரைத்தது பொய்யானது என கலீபா அறிந்தும் கூட அவருக்குச் சன்மானம் வழங்கி அனுப்பிவைத்தார். அவன் பொய்யுரைக்க புறாக்கள் காரணமாக இருந்தன எனக் கருதி புறாக்களை அறுத்துவிடுமாறு கட்டளையிட்டார்.

## விளம்பரத்திற்காக அறிவிக்கப்பட்டவை.

- ஒருசில வியாபாரிகள் தமது வியாபாரப் பொருட்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகப் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தார்கள். மரக்கறி வியாபாரி ஒருவர் அறிவித்த பின்வரும் பொய்யான ஹதீஸை இதற்கு ஆதாரமாக குறிப்பிடலாம்.

  "எவன் கத்தரிக்காய் சாப்பிடுகின்றானோ, அவன் சுவர்க்கம் நுழைவான்"
  (பொய்யான ஹதீஸ்)

## ஸுன்னாவின் தூய்மையைப்பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

- தபஉத்தாபிஈன்கள் காலத்து முஹத்திஸீன்கள் ஹதீஸின் தூய்மையையும், அதன் நம்பகத் தன்மையையும் பேணிக்கொள்வதற்காகவும், உண்மைக்கு முரணான ஹதீஸ்களை இனங்கண்டு கொள்வதற்காகவும் பின்வரும் திறனாய்வுக்கலைகளை மேற்கொண்டார்கள்.
  1. அஸ்மாஉர் ரிஜால்
  2. இல்முல் ஜரஹ் வத்த.்.தீல்

3. உஸூலுல் ஹதீஸ்

**1. அஸ்மாஉர் ரிஜால்**

- ஒரு ஹதீஸின் இஸ்னாத் பற்றி ஆராய்கின்ற கலையே அஸ்மாஉர்ரிஜால் எனக்குறிப் பிடப்படுகின்றது. " மனிதர்களது பெயர்கள்" என்ற மொழிக்கருத்தினை இப்பதம் கொடுத்தாலும் ஹதீஸ்துறையில் அது பின்வரும் கருத்தினையே கொடுக்கிறது.

- "நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து ஹதீஸ்கள் அனைத்தும் வெளியாகியது முதல் அவை பெறப்பட்டு அறிவிக்கப்பட்டு, ஒன்றுதிரட்டப்பட்டு தொகுப்பாசிரியரினால் தொகுத்தெழுதப்படும் வரை யார் யாரெல்லாம் அதில் சம்பந்தப்பட்டார்களோ அவர்கள் அனைவரது வரலாறுகளையும் குறிக்கின்ற ஒரு கலையாக இது உள்ளது. அஸ்மாஉர் ரிஜால் மூலம் ஹதீஸ்களை அறிவித்தவர்களது முழுமையான தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதனால் ஒரு ஹதீஸ் தொடர்பாக இறுதியானதொரு தீர்மானத்திற்கு வர அது உதவுகிறது.''

  *உதாரணம் 1:*
- ஒரு ஸனதில் குறிப்பிடப்பட்டு இருக்கின்ற ஓர் அறிவிப்பாளர் அஸ்மாஉர் ரிஜாலில் அடங்காதவராக இருந்தால் இஸ்னாதில் ஒரு முறிவு ஏற்பட்டு இருக்கின்றது என்ற தீர்மானத்திற்கு வந்து, குறித்த ஹதீஸை நிராகரிக்கப்பட வேண்டிய ஹதீஸின் பட்டியலில் சேர்த்துவிட முடிகின்றது.

  *உதாரணம் 2:*
- ஸனதில் அடங்குகின்ற இரு அறிவிப்பாளர்களுக்கிடையில் ஏற்படுகின்ற வரலாற்று ரீதியிலான முரண்பாட்டை இக்கலை வெளிப்படுத்தக்கூடியதாக இருப்பதால் ஹதீஸின் இறுதியான நிலை பற்றித் தீர்மானிக்க அஸ்மாஉர் ரிஜால் உதவுவதையும் குறிப்பிடலாம். இவ்வாறு அறிவிப்பாளர் வரிசையில் ஏற்படுகின்ற குறைகளை முரண்பாடுகளை அஸ்மாஉர் ரிஜால் இனங்காட்டி ஒரு ஹதீஸின் நம்பகத்தன்மையையும் தூய்மையையும் உறுதிசெய்து கொள்ள உதவுகின்றது.

**2. இல்முல் ஜரஹ் வத்த.்.தீல்**

- ஒரு ஹதீஸின் மத்ன் பற்றியும், ஸனத் பற்றியும் ஆராய்கின்ற கலைகளுள் இல்முல் ஜரஹ் வத்த.்.தீலும் ஒன்றாகும் இத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஹதீஸ்கலை வல்லுனர்கள் பின்வரும் அடிப்படைகளில் அமையுமானால் அவ்வாறான ஹதீஸ்களை நிராகரிக்கக்கூடிய ஹதீஸின் வகைகளில் சேர்த்துக்கொள்ள முடியுமெனக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

  01. அரபிகளது, அதிலும் விசேடமாக குறைஷிகளது மொழி வழக்கிற்கு மாற்றமாக அல்லது தாழ்ந்த அரபு மொழிநடையில் வருபவை.
  02. நபி (ஸல்) அவர்களது மொழிப் பிரயோகத்திற்கு அல்லது மொழிப் போக்கிற்கு மாற்றமாக வருபவை.
  03. அறிவியல், ஒழுக்கவியல் கோட்பாடுகளுக்கும் புலன் உணர்வுகளுக்கும் முரணாகவும், இச்சையின்பால் தூண்டும் விதத்திலும் மருத்துவ, வரலாற்று உண்மைகளுக்கு முரணாகவும் வருபவை.
  04. அல்குர்ஆனின் தெளிவான கருத்துக்களுக்கு எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள

முடியாதவாறு முரணாக வருபவை.

05. நபி (ஸல்) அவர்களது காலத்தில் நடந்த வரலாற்றுச் சம்பவங்களுக்கு முரணாக வருபவை.

    உதாரணம்: கதீர்கும் என்ற இடத்தில் நபி (ஸல்) அவர்கள் அலி (ரழி) பற்றி கூறிய மௌழூவான ஹதீஸ்

06. ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களின் கொள்கைக்குச் சார்பானதாக இருத்தல்.

    உதாரணம் : ஷீயாக்களில் ராபிழிகள் கூறிய அஹ்லுல் பைத்துக்களைப் பற்றியவை.

07. ஒரு சிறிய செயலுக்குப் பெரிய நன்மையையும், ஓர் அற்ப விடயத்திற்கு கடுமையான தண்டனையையும் வழங்குவதாக மிகைப்படுத்திக் கூறப்பட்டவை.

08. எல்லோருக்கும் பொதுவான ஒரு விடயம் ஒருவரினால் மாத்திரம் அறிவிக்கப்பட்டு இருப்பவை.

- இவ்வாறு முஹத்திஸீன்கள் மத்னில் இடம்பெறக்கூடிய உண்மைக்கு முரணானவற்றை இனங்கண்டு கொள்ளும் வழிமுறைகளை அறிமுகப்படுத்திச் சென்றார்கள். இதனால் தரமான, தூய்மையான ஹதீஸ்களை முஸ்லிம் சமூகத்தினர் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

**3. உஸூலுல் ஹதீஸ்**

- தபஉத்தாபிஈன்கள் காலத்தில் ஹதீஸின் தூய்மையைப் பேணுவதற்காக அக்காலத்து அறிஞர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு பாதுகாப்புக் கலையாக அமைவது உஸூலுல் ஹதீஸாகும். ஹதீஸின் அடிப்படை பற்றி ஆராய்கின்ற கலையாக இதனைக் குறிப்பிடலாம். இக்கலையில் ராவி- அறிவிப்பாளர், முஹத்திஸ்- ஹதீஸ் கலை அறிஞர், தாலிபுல் ஹதீஸ்- ஹதீஸை கற்போர்கள் போன்றோரது தகைமைகள் அடிப்படைகள் பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது. உஸூலுல் ஹதீஸ் கூறுகின்ற நிபந்தனைகளுக்கு, வரையறைகளுக்கு முரணாகின்ற வகையில் உள்ள எந்த ஹதீஸூம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகைகளிலும் அடங்கமாட்டாது. ஆகவே இக்கலையும் அறிவிப்பாளர்களையும், முஹத்திஸீன்களையும் ஹதீஸைக் கற்கின்ற மாணவர்களையும் சரியான முறையில் இனங்காட்டித் தூய்மையான ஹதீஸ்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை முஸ்லிம் உம்மத்தினருக்கு தருகின்றது.

- திறனாய்வுக் கலைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக ஹதீஸ்கள் பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டன.
    1. முதவாதிரான ஹதீஸ்
    2. ஆஹாதான ஹதீஸ்

## முத்தவாதிர்

- முத்தவாதிரான ஹதீஸ் என்பது "ஒரு விடயத்தில் அவர்கள் பொய்யுரைத்தல் சத்தியமாகாது என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒவ்வொரு தரத்திலும் அதிகமான எண்ணிக்கையுடைய அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸ் ஆகும்". ஸனதின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை இவ்விதி பேணப்படல் வேண்டும். இவ்வாறான ஹதீஸ், அறிஞர்களால் மிக உறுதியான ஆதாரபூர்வமான ஹதீஸாகக் குறிக்கப்படுகின்றது.

**அல் - ஆஹாத்**

- அல் - ஆஹாத் என்ற அரபுப் பதம் அஹத் அல்லது வாஹித் என்ற அரபுப் பதத்தின் பன்மைச் சொல்லாகும். மொழிக் கருத்தில் ஒருவர் என்ற கருத்தைக் கொள்ளலாம். ஹதீஸின் அடிப்படையில் முத்தவாதிருடைய நிபந்தனைகளை அல்லது முதவாதிரான ஹதீஸின் ஸனதில் அடங்குகின்ற அறிவிப்பாளர்களின் எண்ணிக்கையை எவ்வகையிலும் அடையாத ஹதீஸ்களை இது குறிக்கும். ஒரு ஹதீஸ் ஆஹாதானது என நிரூபிக்கப்பட்டால் உஸூலுல் ஹதீஸின் சட்டவிதிகளின்படி ஆய்வு செய்யப்பட்ட பின்னரே அதனை ஏற்பதா மறுப்பதா என்ற தீர்மானம் பெறப்படும். ஆஹாதான ஹதீஸ்கள் பல உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

அ) அறிவிப்பாளர் வரிசைகளின் (ஸனத்கள்) எண்ணிக்கையைப் பொறுத்து அதனை மூன்று பிரிவுகளாகப்பிரித்து நோக்குவர்.

1. அல் மஷ்ஹூர்
2. அல் அஸீஸ்
3. அல் கரீப்

- ஆஹாதான ஹதீஸ்களை ஓர் இஸ்னாத் சென்றடையும் முடிவிடத்தை கருத்திற் கொண்டு மூன்றாக வகைப்படுத்தலாம்.
  1. மர்பூஃ : இஸ்னாத் முறிவற்றுத் தொடர்ச்சியாக நபி(ஸல்) அவர்கள் வரை சென்று இணையும் ஹதீஸ்
  2. மவ்கூப் : ஒரு ஹதீஸின் இஸ்னாத் ஸஹாபி வரை மட்டும் தொடர்ந்து செல்லுதல்
  3. மக்தூஃ : ஒரு ஹதீஸ் தாபிஈ வரை சென்று அவரோடு நின்றுவிடுதல்.

- ஆஹாதான ஹதீஸ்கள் இஸ்னாதில் ஏற்படும் முறிவுகளின் அடிப்படையிலும் பல வகைகளுக்கு உட்படும்.
  1. முர்ஸல் : ஒரு ஹதீஸின் தொடரில் ஸஹாபியை விட்டுவிட்டு ஒரு தாபிஈ நேரடியாக நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஹதீஸ்
  2. முஅல்லக் : ஒரு இஸ்னாதின் ஆரம்பத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிவிப்பாளர்கள் விடுபடுதல்
  3. முன்கதிஃ : ஒரு இஸ்னாதின் மத்தியில் ஓர் அறிவிப்பாளர் விடுபட்டிருத்தல்.
  4. முஃதல் : ஒரு இஸ்னாதில் தொடர்ச்சியாக இரண்டு அறிவிப்பாளர்கள் ஒரு இடத்திலோ அதற்கு மேற்பட்ட இடங்களிலோ விடுபட்டு இருத்தல்.

- ஆஹாதான ஹதீஸ்களைத் தரப்படுத்திக் கொள்ளும் விடயத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படும்.
  1. அறிவிப்பாளர் ஒழுக்க நெறியுள்ளவராக இருத்தல்
  2. அறிவிப்பு சரியானதும், நுணுக்கமானதுமாக இருத்தல்.

  இவ்விரண்டு பண்புகளும் இணைந்து காணப்படும் ஒருவர் ஹதீஸ் அறிவிப்பாளர்களில் நம்பிக்கையானவர் என அழைக்கப்படுவார். இவர்களது அறிவிப்புக்கள் பொதுவாக முஹத்திஸீன்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

- ஆஹாதான ஹதீஸ்கள் இவ்வாறான திறனாய்வுக்கும், தரப்படுத்தலுக்கும் உட்படுத்தப் பட்டதன் விளைவாக அவை இரண்டு தரங்களாக வகைப்படுத்தப்பட்டன.

1. அல் மக்பூல் - ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஹதீஸ்
2. அல் மர்தூத் - நிராகரிக்கப்படக்கூடிய ஹதீஸ்

- **மக்பூலான ஹதீஸ்** என்பது சொல்லப்பட்ட ஒருவரின் நம்பகத்தன்மை வலுவானதாக அமைகின்ற ஹதீஸ் வகையைக் குறிக்கின்றது. எனவேதான் இவை ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய வகையைச் சார்ந்ததாக அமைகிறது. இவை நம்பகரமானவையாகவும், ஆதாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடியனவாகவும், ஏற்று அமல் செய்யக்கூடியவன வாகவும், மார்க்கத்தின் அல்லது ஷரீஅத்தின் எல்லாத் துறைகளிலும் பிறருக்கும் ஏவக்கூடியனவாகவும் அமைகின்றன.

- **மர்தூதான ஹதீஸ்** மர்தூதான ஹதீஸ் என்பது சொல்லப்பட்ட செய்தியின் நம்பகத் தன்மை வலுக்குன்றியதாக அமைந்த ஹதீஸ் வகையைக் குறிக்கின்றது. இவ்வாறான ஹதீஸைப் பொறுத்தவரை அவற்றை ஆதாரமாக ஏற்கவோ, அதனடிப்படையில் அமல் செய்யவோ அல்லது செயலாற்றவோ, பிறருக்கு அவற்றை ஏவவோ முடியாது. ஆயினும் இவ்வாறான ஹதீஸ்களில் சில வகைகளை நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்ள முடியுமென ஹதீஸ்கலை வல்லுனர்கள் சிலர் குறிப்பிடுகின்றார்கள்.

- மக்பூலான ஹதீஸில், அந்த ஹதீஸின் தராதரங்களைப் பொறுத்து இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.
  1. அஸ் - ஸஹீஹ்
  2. அல் - ஹஸன்

### அஸ் - ஸஹீஹ் (சரியானவை, ஆதாரபூர்வமானவை)

- ஆஹாதான ஹதீஸின் வகையில் தரத்திலும், பலத்திலும், நம்பகத்தன்மையிலும் கூடிய ஹதீஸ் அஸ்-ஸஹீஹான ஹதீஸாகும்.
  "நீதியும், நேர்மையும், உண்மையுமுள்ள, மனனசக்தி அல்லது எழுத்தாற்றல் உள்ள அறிவிப்பாளர்களினால், ஆரம்பமுதல் இறுதிவரை அறிவிப்பாளர் தொடர்பு அறுபடாமல் அறிவிக்கப்பட்ட, ஆதாரபூர்வமான ஹதீஸ்களுக்கு முரணில்லாத வகையில் அமைந்த, ஹதீஸின் கருத்து குறைகாணப்படும் விதத்தில் அமையாத ஹதீஸையே இது குறிக்கின்றது."

### அல்-ஹஸன்

- ஆஹாதான ஹதீஸ் வகையில் ஸஹீஹுக்கு அடுத்ததாக அமைவது ஹஸனான ஹதீஸ்களாகும்.
  "ஒரு ஹதீஸ் ஸஹீஹானதாக இருப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற 'அல்-ழப்த்' எனும் பேணிப்பாதுகாக்கும் திறன் இலகுவானதாக அமைகின்ற அறிவிப்பாளர்களினால் அறிவிக்கப்படும் ஹதீஸ்" ஹஸன் எனப்படுகிறது.
- **நிராகரிக்கப்பட்ட ஹதீஸ்**
  மக்பூலான அல்லது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஹதீஸ்களின் நியதிகளில் ஏதாவதொன்றையேனும் இழக்கும் ஹதீஸ்களும், நிராகரிக்கப்படக்கூடிய ஹதீஸ்களிலேயே அடங்கும். இவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கு அடிப்படையான மூன்று காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. அறிவிப்பாளரின் குறைபாடு
2. இஸ்னாதில் ஏற்படும் முறிவு
3. சந்தர்ப்பவசமான காரணங்களினால் ஏற்படும் பலவீனம்

- **அறிவிப்பாளர்களின் குறைபாடு**

அறிவிப்பாளர்களின் குறைபாடு ராவிகள் தரப்படுத்தலின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

நிராகரிக்கப்படக்கூடிய ஹதீஸ் வகையில் ளஈபான அல்லது பலவீனமான ஹதீஸின் பிரயோகம் பற்றி ஹதீஸ்கலை வல்லுனர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். அல்லாஹ்வின் பண்புகள், சட்டம், நம்பிக்கை தொடர்பான விடயங்கள் தவிர்ந்த உபதேசங்கள், கதைகள், நன்மை தீமையோடு தொடர்பான விடயங்களில் பயன்படுத்துவது ஆகும் எனக் குறிப்பிடுகின்றார்கள். எனினும் பின்வரும் நிபந்தனைக்கமையவே அவ்வாறான ஹதீஸ்களைப் பிரயோகிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

1. குறிப்பிட்ட ஹதீஸ் மிகப்பலவீனமானதாக இருக்கக் கூடாது.
2. குறிப்பிட்ட ஹதீஸ் கூறும் விடயம் அடிப்படையில் ஆதாரபூர்வமான ஒரு விடயமாக இருக்க வேண்டும்.
3. குறிப்பிட்ட ஹதீஸைக் கொண்டு செயற்படும் போது ஆதாரபூர்வமான ஹதீஸைக் கொண்டுதான் அமல் செய்கிறோம் என்று நம்பக் கூடாது.

- நன்மை செய்யத் தூண்டியும் தீமையை விட்டு எச்சரித்தும் அறிவிக்கப்படும் ஹதீஸ் களிலும் கூட ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டியுள்ளது. அல்லாஹ் விடத்தில் இவை இரண்டிற்கும் பெறுமானம் உண்டு. அவற்றைக் கூட்டியோ குறைத்தோ கூற முடியாது.

- செயல்களின் சிறப்பை எடுத்துக்கூறலாமே தவிர புதிதாக ஒன்றை உருவாக்க முடியாது. நன்மை செய்யத் தூண்டியும், தீமையை எச்சரித்தும் வருகின்ற ஹதீஸ்களாக இருந்தாலும் அவற்றை அறிவிப்பதாயின் மேற்குறித்த மூன்று நிபந்தனைகளோடு பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

1. குறிப்பிட்ட ஹதீஸ் பகுத்தறிவாலோ, இஸ்லாத்தின் அடிப்படைகளுக்கு உட்பட்ட வகையிலோ, மொழிரீதியாகவோ ஏற்றுக்கொள்ள முடியாத விதத்தில் மிகைப்படுத் தலைக் கொண்டதாக இருக்கக்கூடாது.
2. குறிப்பிட்ட ஹதீஸைவிட தரத்தில் கூடிய பலமான ஆதாரம் ஒன்றிற்கு முரணாக இருக்கக் கூடாது.

## பிரதான ஹதீஸ் தொகுப்பு நூல்களும் ஆசிரியர்களும்

### i) ஸஹீஹுல் புகாரி -

இதன் ஆசிரியர் இமாம் முஹம்மத் இப்னு இஸ்மாஈல் அல் புகாரி (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 194 இல் புகாரா என்ற பிரதேசத்தில் பிறந்தார்கள். சிறுவயதிலேயே தந்தையை இழந்த அவர்கள் தாயுடன் ஹஜ்ஜுக்கு சென்று கற்பதற்காக அங்கே தங்கினார்கள்.

- அறிவுத்திறன், நினைவாற்றல் உள்ளவராக இருந்தார்.

- ஆரம்பத்தில் பிக்ஹ் துறையைக் கற்ற இவர் பின்னர் ஹதீஸ்துறையில் ஈடுபாடு கொண்டார்.
- 1080 ஆசிரியர்களிடம் ஹதீஸ்களைக் கற்ற இவரது முக்கியமான ஆசிரியர்களாக இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி, அலி இப்னு மதீனி, குதைபா இப்னு ஸஈத், அஹ்மத் இப்னு ஹன்பல் ஆகியோர் விளங்குகின்றார்கள்.
- ஹிஜாஸ், கூபா, பஸரா, குராஸான் பிரதேசங்களுக்குச் சென்று ஹதீஸ்களைத் திரட்டினார்கள்.
- அதிக நினைவாற்றல் உள்ள இவர் பல இலட்சம் ஹதீஸ்களைத் திரட்டி அவற்றைத் தரம் பிரித்து 16 வருடகால முயற்சியின் பின்னர் ஸஹீஹ் புகாரியைத் தொகுத்து வழங்கினார்கள்.
- அவரிடம் சுமார் 90 000 மாணவர்கள் கற்றிருக்கிறார்கள் அவர்களுள் இமாம் திர்மிதி, இமாம் நஸாஈ, இமாம் முஸ்லிம், இப்னு குஸைமா, முஹம்மத் இப்னு நஸ்ர் போன்றோர் முக்கியமானவர்களாவர்.
- உண்மை, பொறுமை, இரக்கம்,தயாளம், தர்மம், வணக்கம் முதலிய நற்குணங்களைக் கொண்டவராக இருந்தார். ஹிஜ்ரி 256 இல் குர்தங் (khartank) எனும் இடத்தில் வபாத்தானார்கள்.
- ஸஹீஹுல் புகாரியை எழுதுவதற்கு இமாமவர்கள் சுமார் 6 இலட்சம் ஹதீஸ்களை சேகரித்தார்கள். அவற்றுள் பத்தாயிரம் ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அவற்றில் 7275 ஹதீஸ்களை வடித்தெடுத்து ஸஹீஹுல் புகாரியைத் தொகுத்தார்கள்.
- இவ்வாறான ஸஹீஹான ஹதீஸ் கிரந்தம் ஒன்றைத் தொகுப்பதற்கு அவரது ஆசிரியரான இமாம் இஸ்ஹாக் இப்னு ராஹவைஹ் என்பவரே தூண்டினார்கள்.
- மிகத்தூய்மையான முறையில் குளித்து, வுழு செய்து இரண்டு ரக்அத் தொழுததன் பின்னரே ஒவ்வொரு ஹதீஸையும் அவர் பதிவு செய்துள்ளார்.
- ஸஹீஹுல் புகாரி அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் வைத்துக் கணிக்கப்படுகின்றது.
- அதில் 97 பெரிய தலைப்புகள் உள்ளன. (கிதாப்) அவை ஒவ்வொன்றும் பல சிறிய தலைப்புகளாகப் (பாபுன்) பிரிக்கப்பட்டுள்ளன.
- தொகுக்கப்பட்ட நூலை தனது ஆசிரியர்களான அஹ்மத் இப்னு ஹன்பல், யஹ்யா இப்னு முஈன் போன்றோரிடம் காட்டி அனுமதியையும் பெற்றுக் கொண்டார்கள்.
- ஸஹீஹுல் புகாரிக்கு பல்வேறு விளக்க நூல்களும் எழுதப்பட்டுள்ளன. இர்ஷாதுஷ்ஷாரி, பத்ஹுல் பாரி என்பன அவற்றுள் முக்கியமானவை.
- இமாம் அவர்களது இதர நூல்களில் அத்தாரிகுல் கபீர் முக்கியமானதாகும்.

## ii) ஸஹீஹ் முஸ்லிம்

- இதன் ஆசிரியர் இமாம் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ். அவர் ஹிஜ்ரி 204இல் நைஸாபூரில் பிறந்தார்.
- ஆரம்பக்கல்வியை நைஸாபூரில் பெற்ற அவர் உயர்கல்விக்காகவும், ஹதீஸ்களைத் திரட்டிக் கொள்வதற்காகவும் பல நாடுகளுக்கும் பிரயாணம் செய்தார்கள்.
- இஸ்ஹாக் இப்னு ராஹவைஹ், முஹம்மத் இப்னு யஹ்யா, அஹ்மத் இப்னு ஹன்பல், இமாம் புகாரி போன்ற தலைசிறந்த ஆசிரியர்களிடம் கற்றார்.
- தாம் திரட்டிய ஹதீஸ்கள் அனைத்தையும் மனனமிட்டிருந்த இமாம் முஸ்லிம் அதிக நினைவாற்றல் மிக்க நால்வரில் ஒருவர் என பாராட்டப்படுகின்றார்.
- பக்தாதிலும், நைஸாபூரிலும் ஹதீஸ்களைக் கற்றுக்கொடுத்த இவருக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் இருந்தார்கள். அவர்களுள் இமாம் திர்மிதி, அபூபக்ர்

இப்னு குஸைபா போன்றோர் முக்கியமானவர்களாவர்.

- தாம் திரட்டிய சுமார் 3 லட்சம் ஹதீஸ்களைப் பகுப்பாய்ந்து, அவற்றுள் நான்காயிரம் ஹதீஸ்களைத் தெரிந்தெடுத்து ஸஹீஹ் முஸ்லிமைத் தொகுத்தார்கள்.
- தனது நூலைத் தொகுத்து, பிரசித்தி பெற்ற முஹத்திஸான அபூ ஸர்ஆ (ரஹ்) அவர்களிடம் காட்டிச் சரியென அனுமதி பெற்றதன் பின்னரே வெளியிட்டார்.
- இவர் வரலாறு, குர்ஆன் விரிவுரை சார்ந்த சுமார் 18 நூல்களை எழுதியுள்ளார்.
- ஸஹீஹுல் முஸ்லிமுக்கு எழுதப்பட்ட விளக்க நூல்களுள் இமாம் நவவி (ரஹ்) அவர்களின் நூலே பிரசித்தி பெற்றதாகும்.
- சாந்தம், தயாளம், பொறுமை, பணிவு முதலான நற்குணங்களை பெற்றிருந்த இமாமவர்கள் ஹிஜ்ரி 261 இல் நைஸாபூரில் வபாத்தானார்கள்.

### iii) சுனன் அபூதாவூத்

- இதன் ஆசிரியர் இமாம் அபூதாவூத் ஸுலைமான் இப்னு அஷ்அஸ் ஸிஜிஸ்தானில் ஹிஜ்ரி 201 இல் பிறந்தார்.
- நைஸாப்பூரில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் குராஸான், எகிப்து, ஸிரியா, ஹிஜாஸ் பிரதேசங்களில் கல்வி கற்றதோடு ஹதீஸ்களையும் திரட்டிக் கொண்டார்.
- இவர் இமாம் அஹ்மத், யஹ்யா இப்னு முஈன், ஸுலைமான் இப்னு ஹர்ப் போன்ற தலைசிறந்த ஆசிரியர்களிடம் கற்றார்.
- (பிக்ஹ்) சட்டக்கல்வியிலும், ஹதீஸ் துறையிலும் சமமான தேர்ச்சி பெற்றிருந்த இவர் பஸராவில் கற்பித்து வந்தார்.
- மிகுந்த நினைவாற்றல் உள்ளவராக இருந்த அவர் தான் திரட்டிய 5 இலட்சம் ஹதீஸ்களை நினைவில் வைத்திருந்தார்.
- தான் திரட்டிய 5 இலட்சம் ஹதீஸ்களிலிருந்து 4800 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து ஹதீஸ் நூலைத் தொகுத்தார்.
- 20 வருடகாலம் இந்தமுயற்சியில் ஈடுபட்டார்கள்.
- இமாம் அபூதாவூத் அவர்களின் கிரந்தங்களில் ஸுனன் அபூதாவூத் முக்கியமானதாகும்.
- அதனை அவர் தனது ஆசிரியர் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலிடம் காட்டி சரிபார்த்துக்கொண்டார்கள்.
- பிக்ஹ் அடிப்படையில் வைத்து நோக்கினால் இவரது கிரந்தமே ஆறு திரட்டுக்களில் முதலிடத்தைப் பெறும் என்பது அறிஞர்களது கருத்தாகும்.
- இவரது மாணவர்களில் அபூபக்கர், லு.ஃலு.ஃ இப்னு அ.ஃராபி, இமாம் திர்மிதி, இமாம் நஸாஈ போன்றோர் முக்கியமானவர்களாவர்.
- இறையச்சம், தியானம், நன்றியுணர்வு, ஈகை, நற்பண்புகளைக் கொண்ட இமாம் அவர்கள் ஹிஜ்ரி 275 இல் பஸராவில் வபாத்தானார்கள்.

### iv) ஜாமிஉத் திர்மிதி

- இதன் ஆசிரியரான அபூ ஈஸா முஹம்மத் இப்னு ஈஸா அத்திர்மிதி (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 209 இல் குராஸானில் உள்ள திர்மித் எனும் இடத்தில் பிறந்தார்.
- ஆரம்பக் கல்வியை குராஸானில் மேற்கொண்ட இவர் கூபா, பஸரா, வாஸித், ஹிஜாஸ் போன்ற பிரதேசங்களில் கல்வி கற்றதோடு ஹதீஸ்களையும் சேகரித்து வந்தார்.
- இமாம் புகாரி, இமாம் முஸ்லிம், குதைபா இப்னு ஸ.ஃத், அஹ்மத் இப்னு முஸ்னி ஆகியோர் இமாமவர்களது ஆசிரியர்களாவர்.

- நினைவாற்றல் மிக்க இவர் ஹதீஸ் கலையோடு தப்ஸீர், பிக்ஹ் துறைகளிலும் சிறந்து விளங்கினார்.
- பல இலட்சம் ஹதீஸ்களைத் திரட்டியெடுத்த இமாமவர்கள் 3956 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து ஜாமிஉத்திர்மிதி நூலை எழுதினார்கள்.
- இவரது ஆயிரக்கணக்கான மாணவர்களுள் முஹம்மத் இப்னு அஹ்மத் மரூஸி என்பவர் முக்கியமானவராவர்.
- இந்நூல் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. ஹதீஸ்கள் திரும்பத்திரும்ப வருவதில்லை, புகஹாக்கள் எந்த ஆதாரங்களைக் கொண்டு சட்டங்களை வகுத்தார்கள் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது, ஹதீஸ்களின் பிரிவுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன, அறிவிப்பாளர்கள் பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது, இமாம்களது கருத்து வேறுபாடுகளும் விபரிக்கப்பட்டுள்ளன.
- நூலைத் தொகுத்த இமாமவர்கள் ஹிஜாஸ், ஈரான், குராஸான் ஆகிய மாகாண அறிஞர்களுக்கு அதனை அனுப்பிச் சரிபார்த்துக் கொண்டார்கள்.
- இறையச்சமும், நல்லொழுக்கமும், பண்பு நலன்களும் நிறைந்தவராக இருந்த இமாமவர்கள் ஹிஜ்ரி 279 இல் திர்மிதில் வபாத்தானார்கள்.

### v) ஸுனனுன் நஸாஈ

- இதன் ஆசிரியரான அபூ அப்துர் ரஹ்மான் அஹ்மத் இப்னு சுஐப் அந்நஸாஈ ஹிஜ்ரி 215 இல் குராஸான் மாநில நஸாஈ எனும் ஊரில் பிறந்தார்.
- ஆரம்பத்தில் இமாம் குதைபா இப்னு ஸஈத் அவர்களிடம் கல்விகற்ற இமாமவர்கள் பின்னர் ஈரான், ஈராக், ஹிஜாஸ், ஸிரியா, எகிப்து முதலான நாடுகளுக்குச் சென்று கற்றதோடு ஹதீஸ்களையும் திரட்டிக் கொண்டார். அவ்வேளை இஸ்ஹாக் இப்னு ராஹவைஹ், இமாம் அபூதாவூத், ஈஸா இப்னு நஸ்ர் முதலான அறிஞர்களிடமும் கல்வி கற்றார்.
- நினைவாற்றல் மிக்கவரான இவர் ஹதீஸ் துறையோடு பிக்ஹ் துறையிலும் ஈடுபாடு கொண்டவராக இருந்தார்.
- தாம் திரட்டிய 5 இலட்சம் ஹதீஸ்களிலிருந்து இமாம் நஸாஈ அஸ்ஸுனனுல் கபீர் அந்நாஸாஈ எனும் நூலை முதலில் தொகுத்து எழுதிய போது ஒரு மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்க ஸஹீஹான ஹதீஸ்களை மாத்திரம் உள்ளடக்கிய ஸுனனுன் நஸாஈயை எழுதினார்.
- தமது ஹதீஸ் கிரந்தத்தைத் தொகுத்த அதே காலப்பகுதியில் கற்றுக் கொடுப்பதிலும் ஈடுபட்டார்.
- இவரது மாணவர்களுள் இமாம் தபராணி, இமாம் தஹாவி ஆகியோர் முக்கியமானவர்களாவர்.
- இவர் பலஸ்தீனில் ரம்ஸா எனும் இடத்தில் ஹிஜ்ரி 303 இல் வபாத்தானார்.

### vi) ஸுனனுன் இப்னு மாஜாஹ்

- இதன் ஆசிரியரான இமாம் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் இப்னு யஸீத் அல்கஸ்வின் ஹிஜ்ரி 209 இல் ஈரானிலுள்ள கஸ்வின் எனும் இடத்தில் பிறந்தார்.
- ஹதீஸ் திரட்டுதலில் உச்சகட்டத்தை அடைந்த காலப்பகுதியில் பிறந்து வளர்ந்ததால் இவர் இத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டார்.
- ஈரானிலும் பின்னர் குராஸான், ஈராக், ஹிஜாஸ், ஸிரியா, எகிப்து, பஸரா, கூபா, வாஸித் முதலான பிரதேச நகரங்களுக்கும் சென்று ஹதீஸ் துறையில் ஈடுபட்டு

ஹதீஸ்களைத் திரட்டிக் கொண்டார்.

- இவர்களது ஆசிரியர்களுள் அபூபக்கர் இப்னு ஷைபா, இமாம் இப்றாஹீம் இப்னு முன்ஸிர் போன்றோர் குறிப்பிடத்தக்கோராவார்கள்.
- ஸுனன் இப்னு மாஜா நாற்பதாயிரம் ஹதீஸ்களிலிருந்து நான்காயிரம் ஹதீஸ்களை தேர்ந்தெடுத்து 35 கிதாபுகளும் 1500 பாபுகளும் கொண்டதாக தொகுக்கப்பட்டது.
- வரலாறு, தப்ஸீர் துறையிலும் இவர் நூல்களை எழுதியுள்ளார்.
- இமாமவர்கள் ஹிஜ்ரி 273 இல் வபாத்தானார்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை :**

1. சுக்ரி எம்.ஏ.எம், **ஹதீஸ் அதன் வரலாறும் முக்கியத்துவமும்** (1990), புர்கான் பப்ளிகேஷன்ஸ், சென்னை, இந்தியா
2. முஹம்மத் முஸ்தபா, **நபி மொழி திரட்டிய நல்லவர்கள்** (1970), யுனிவர்சல் பப்ளிஷர்ஸ் இந்தியா
3. தொலைக்கல்வித் துறை வெளியீடு, **அல் ஹதீஸ் தொகுப்பும்வரலாறும்** (1992) தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.
4. அஸ்மி முஸ்தபா, **ஹதீஸ் முறைமையும் கிரந்தங்களும்,** சமூக அபிவிருத்திக்கான முஸ்லிம் நிறுவனம், தர்காநகர்

**தேர்ச்சி 04: இஜ்திஹாதின் அடியாகத் தோன்றிய மூலாதாரங்களையும் அதன் நோக்கங்களையும் விளங்கி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1: இஜ்திஹாதின் அடிப்படையில் தோற்றம் பெற்ற துணை மூலாதாரங்கள் தொடர்பாக அறிந்து விளக்குவார்.**

**பாடவேளைகள் : 40**

**கற்றல் பேறுகள்:**

- இஜ்திஹாத் எனும் பதத்தின் மொழி மற்றும் பிரயோகக் கருத்துக்களை விபரித்துக் கூறுவார்.
- இஜ்திஹாதின் முக்கியத்துவத்தையும் அதன் தோற்றத்தையும் விரிவாக முன்வைப்பார்.
- முஜ்தஹித்களின் வகைகளையும் அவர்களின் தகைமைகளையும் பட்டியற்படுத்துவார்.
- இஜ்திஹாதின் வளர்ச்சிக் காலப் பகுதியையும் அதற்கு பங்காற்றிய இமாம்களின் பணிகளையும் விபரிப்பார்.
- இஜ்திஹாத் பணி தேக்கமுற்றதற்கான காரணிகளை இனங்கண்டு முன்வைப்பார்.
- சமகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதற்கு இஜ்திஹாத் இன்றியமையாதது என்பதை விபரிப்பார்.
- இஜ்திஹாதின் வழியாகத் தோற்றம் பெற்ற துணை மூலாதாரங்களை இனங்கண்டு விபரிப்பார்.
- இஸ்லாமிய சட்டத்துறையின் உயிரோட்டத்தைப் பாதுகாப்பதற்கு துணை மூலாதாரங்கள் இன்றியமையாதவை என்பதை விபரிப்பார்.
- துணை மூலாதாரங்களின் பிரயோக விதிமுறைகளை விளக்கி எழுதுவார்.
- இஜ்திஹாதின் வழிமூலம் சம காலப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்கப்பட உதாரணங்கள்களுடன் முன்வைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**இஜ்திஹாத் பற்றிய விளக்கம்:**

- **பத விளக்கமும் வரைவிலக்கணமும்**
- அல் இஜ்திஹாத் என்ற பதம் ஜஹ்த் (கஷ்டம்) / ஜுஹ்த் (முயற்சி) என்ற வினை அடியிலிருந்து தோன்றியது. மொழியில் இப்பதம் முழு முயற்சியையும் செலவிடுவதைக் குறிக்கப் பயன்படுகின்றது.
- அல்குர்ஆனோ, ஸுன்னாவோ நேரடியாகத் தீர்வு குறிப்பிடாத ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஒரு சட்ட அறிஞன் மேற்கொள்ளும் அறிவியல் ரீதியான கடும் முயற்சியையே இஸ்லாமிய வழக்கில் இஜ்திஹாத் என்பர்.

**இஜ்திஹாதுக்கான ஆதாரங்கள்:**

- அல்குர்ஆன் முன்வைக்கும் ஆதாரங்கள்:

1. மேலும் பீதியோ, பாதுகாப்பைப் பற்றிய செய்தியோ அவர்களுக்கு எட்டுமானால் உடனே அவர்கள் அதனைப் பரப்பி விடுகிறார்கள். அவர்கள் அதைத் தூதரிடமோ

அவர்களில் நின்றுமுள்ள அதிகாரிகளிடமோ தெரிவித்தால், அவர்களிலிருந்து அதை ஊகித்து அறியக் கூடியவர்கள், அதை நன்கு விசாரித்தறிந்து கொள்வார்கள். (4:83)

2. ‘‘அன்றியும் தம் காரியங்களைத் தம்மிடையே கலந்தாலோசித்துக் கொள்வர்’’ (42:38)

- ஹதீஸ் ஆதாரங்கள்:

1. ‘‘தீர்ப்பு சொல்பவர் இஜ்திஹாத் செய்து அவரது முடிவு சரியாக அமைந்தால் அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு. இஜ்திஹாத் செய்து அவரது முடிவு பிழையாக அமைந்துவிட்டால் அவருக்கு ஒரு கூலி உண்டு’’ (புஹாரி).
2. ‘‘உங்களில் எவரும் பனூ குறைழாக்களிடமேயன்றி அஸர் தொழக் கூடாது’’ (புஹாரி)
3. ‘‘முஆத் (ரழி) அவர்களை யமனுக்கு அனுப்பும்போது, உன்னிடம் ஒரு பிரச்சினை வந்தால் எவ்வாறு தீர்த்து வைப்பீர்? என நபி (ஸல்) அவர்கள் வினவினார்கள். அல்லாஹ்வின் வேதத்திலுள்ளவற்றைக் கொண்டு தீர்ப்பளிப்பேன்’ என அவர் பதிலளித்தார். ‘அல்லாஹ்வின் வேதத்தில் அதற்குத் தீர்ப்பில்லாவிட்டால் என்ன செய்வீர்’ என வினவினார்கள். அதற்கு அவர் ‘அல்லாஹ்வின் தூதரின் ஸுன்னாவின் மூலம் தீர்வு சொல்வேன்’ எனக் கூறினார்கள். ‘அல்லாஹ்வின் தூதரின் ஸுன்னாவில் தீர்வு காணப்படாவிட்டால் என்ன செய்வீர்?’ என வினவினார்கள். அதற்கு அவர், ‘எனது அறிவிற்குட்பட்ட வரை பூரணமாக இஜ்திஹாத் செய்து தீர்வு சொல்வேன்?’ என்றார். முஆத் (ரழி) கூறுகிறார்: ‘இப்பதிலைச் செவியுற்ற நபி (ஸல்) அவர்கள் என் நெஞ்சத்திலே தட்டிக் கொடுத்தார்கள். பின்னர், அல்லாஹ்வின் தூதரைத் திருப்திப்படுத்தக் கூடிய பேற்றை அல்லாஹ்வின் தூதரின் தூதருக்கு அளித்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்’ என்றார்கள். (நஸாஈ, திர்மிதி, அபூதாவூத்)
4. ஸஹாபாக்களில் இருவர் ஒரு பயணத்தில் ஈடுபட்டிருந்தனர். தொழுகைக்கு நேரமாகியது. அவர்களிடம் தண்ணீர் இருக்கவில்லை. எனவே தூய்மையான மண்ணினால் தயம்மும் செய்தனர். பின்னர் தொழுகையின் நேரம் முடிவடைய முன்னரே நீரைப் பெற்றுக் கொண்டனர். அவ்விருவரில் ஒருவர் தொழுகையை திருப்பித் தொழுதார். அடுத்தவர் திருப்பித் தொழவில்லை. இவ்விடயம் நபி (ஸல்) அவர்களிடம் தெரியப்படுத்தப்பட்டபோது, திரும்பத் தொழாதவரைப் பார்த்து, ‘சரியாக ஸுன்னாவைச் செய்தீர். உனது தொழுகை உனக்கு போதியதாகும்’ என்றார்கள். திரும்ப தொழுதவரைப் பார்த்து, ‘உனக்கு இரண்டு தடவைகள் கூலி கிடைக்கும்’ என்றார்கள். (நஸாஈ, அபூதாவூத்)

- **இஜ்மாஉ ரீதியான ஆதாரம்:**

எல்லா மத்ஹபுகளும் இஜ்திஹாதை அங்கீகரித்துள்ளதோடு அதனைப் பிரயோகித்துமுள்ளன.

- **பகுத்தறிவு ரீதியான ஆதாரங்கள்:**

1. ஷரீஆவின் ஆதாரங்களுள் அநேகமானவை பல கருத்துகளுக்கு இடம்பாடானவை. இவற்றுள் மிகப் பொருத்தமான ஒரு கருத்தைத் தெரிவு செய்ய இஜ்திஹாத் அவசியம்.
2. தீர்வு சொல்லப்படாத புதிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளைமுன்வைக்க இஜ்திஹாத் அவசியம்.

**இஜ்திஹாதுக்கு உட்பட்ட பகுதி**

- அல்குர்அன் அல்லது ஹதீஸ் திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ள இடங்களில் இஜ்திஹாத் இடம்பெற முடியாது. அகீதா, இபாதத், பண்பாடுகள், ஷரீஆ வரையறுத்துள்ள அம்சங்கள் உ-ம் : ஹுதூத், கப்பாரா, பித்யா... போன்றன.
- அல்குர்ஆனோ, ஹதீஸோ திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவிக்காத இடங்களில் இஜ்திஹாத் இடம்பெறும்.

 1. பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்கள்.
 2. சட்ட வசனங்கள் இடம்பெறாத புதிய பிரச்சினைகள்

- **இஜ்திஹாதின் வகைகள்:**

1. இஜ்திஹாத் ஜுஸ்ஈ: ஒரு முஜ்தஹித் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட துறையில் மாத்திரம் இஜ்திஹாத் செய்யும் ஆற்றலைப் பெற்றிருப்பின் அவரது இஜ்திஹாத் இஜ்திஹாத் ஜுஸ்ஈ எனப்படுகிறது. உ-ம்: தனியார் சட்டம், பொருளாதாரத் துறை
2. இஜ்திஹாத் குல்லீ / இஜ்திஹாத் அத்தாம்: ஒரு முஜ்தஹித் அனைத்துத் துறைகளிலும் இஜ்திஹாத் செய்யும் ஆற்றலைப் பெற்றிருப்பின் அவரது இஜ்திஹாத் இஜ்திஹாத் குல்லீ எனப்படுகின்றது.

- **முஜ்தஹிதுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்:**
- ஒருவர் இஜ்திஹாதில் ஈடுபட பின்வரும் தகைமைகளைக் கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. அல்குர்ஆன் பற்றிய ஆழமான அறிவு: (சட்ட வசனங்கள், ஸபபுன் நுஸூல், நாஸிஹ்-மன்சூஹ், முஹ்கம், முதஷாபிஹாத், ஹுரூபுல் முகத்தஆத், தப்ஸீர் போன்றன)
2. ஸுன்னா பற்றிய ஆழமான அறிவு: உஸூலுல் ஹதீஸ், இல்முல் ஜரஹ் வத்த.்.தீல், நாஸிஹ்-மன்சூஹ், முஸ்தலஹுல் ஹதீஸ், அஸ்பாபு வுரூதில் ஹதீஸ்
3. ஆழமான அறபுமொழி அறிவு: (இலக்கணம், அணி இலக்கணம்...)
4. முன்னர் இடம்பெற்றுள்ள இஜ்மாவான முடிவுகளைப் பற்றிய அறிவு.
5. உஸூலுல் பிக்ஹ் பற்றிய அறிவு
6. ஷரீஆவின் நோக்கங்கள் பற்றிய அறிவு
7. மக்களைப் பற்றிய அவர்களது சூழல்நிலைகளைப் பற்றிய, பிரச்சினைகள் பற்றிய அறிவு.
8. தக்வா உள்ளவராகவும் நீதி நேர்மை மிக்கவராகவும் பாவச் செயல்களில் ஈடுபடாதவராகவும் இருத்தல்.

- **முஜ்தஹிதுகளின் படித்தரங்கள்**

1. **முஜ்தஹித் முத்லக்:** முஜ்தஹிதுகளில் மிக உயர்ந்த தரத்தில் உள்ளவராக இவரே கருதப்படுகிறார். இப்பிரிவை இரு துணைப் பிரிவுகளாகப் பிரித்து விளக்கலாம்.

 அ)முஜ்தஹித் முஸ்தக்கில்: இவரிடம் முக்கியமான நான்கு சிறப்புப் பண்புகள் காணப்படும்.

1. இஜ்திஹாதுக்குரிய அடிப்படைகளை தாமாக வகுத்துக் கொள்வார்.
2. சட்ட மூலாதாரங்களைக் கையாள்வதில் திறமை
3. குர்ஆன், ஹதீஸ் வசனங்களில் சொல்லப்பட்டுள்ள சட்டங்களை ஆராய்ந்து அறிந்து வைத்திருப்பதோடு, ஒன்றுக்கொன்று முரணான ஆதாரங்களில் பொருத்தமானதை தேர்ந்தெடுப்பார். சட்டங்களுக்குரிய காரணங்களையும் சுட்டிக் காட்டுவார்.
4. சட்ட மூலாதாரங்களின் துணையுடன் ஏற்கனவே தீர்வு கூறப்படாத பிரச்சினை களுக்கு தீர்வு சொல்வார்.

- சட்டத்துறையில் ஆற்றல் பெற்றிருந்த ஸஹாபாக்கள், தாபிஈன்களுள் ஸஈத் இப்னு முஸய்யப், அந்நகஈ, லைஸ் போன்றோரும் பின்வந்த மத்ஹபுடைய நான்கு இமாம்கள் போன்றோர் முஜ்தஹித் முஸ்தக்கில்களாவர்.

2. **முஜ்தஹித் முன்தஸிப்:** சட்டத் தீர்வுகளையும் விதிகளையும் பெறுவதில் குறித்த ஓர் இமாமின் வழிமுறையைப் பின்பற்றுவார். இவர் சுயமாக இஜ்திஹாத் செய்யும் ஆற்றலை பெற்றவர். குறிப்பிட்ட இமாம் சரி என்று அறிந்ததனாலேயே அவரை பின்பற்றுகின்றார். புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வார். அதேநேரம் தனது இமாம் பிழை என்று தான் கருதும் இடங்களில் அவரைப் பின்பற்றமாட்டார்.

   இப்பிரிவில் அடங்கும் முஜ்தஹிதுகளுக்கு உதாரணமாக நான்கு இமாம்களதும் மாணவர்களைக் குறிப்பிடலாம்.

   - இமாம் அபூ ஹனீபாவின் மாணவர்களான அபூ யூஸுப், ஸுபர், அஷ்ஷைபானி
   - இமாம் மாலிகின் மாணவர்களான அவ்வபீ, அபுல் காசிம்.
   - இமாம் ஷாபிஈயின் மாணவர்களான முஸ்னீ, புவைதீ
   - இமாம் அஹ்மதின் மாணவரான கல்லால், இப்னு தைமியா

3. **முஜ்தஹித் பில் மத்ஹப்:**

- இவர் தனது இமாமை பின்பற்றக் கூடியவர். ஆனால் இமாமின் கோட்பாடுகளை, விதிகளை இவர் தெரிந்து வைத்திருப்பார். தனது இமாம் தீர்வு சொல்லாத புதிய பிரச்சினைகள் வரும்போது தனது இமாமின் வழி நின்று அப்பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்வார். உதாரணமாக ஷாபி மத்ஹபைச் சேர்ந்த தகிய்யுத்தீன், ஹனபி மத்ஹபைச் சேர்ந்த இப்னுல் கையிம் போன்றோர்.

4. **முஜ்தஹிபில் பத்வா:**

- இவர் முஜ்தஹிதுகளில் ஆகக் குறைந்த படித்தரத்திலுள்ளவர். குறிப்பிட்ட மத்ஹபில் சிறப்புத் தேர்ச்சியுடையவர். மத்ஹபில் காணப்படும் வித்தியாசமான கருத்துக்களில் ஒரு கருத்தைத் தெரிவு செய்யும் ஆற்றல் உடையவர். சுருங்கக் கூறின் இவர் முஜ்தஹித் பில் மத்ஹபை ஒத்தவர். இவருக்கும் அவருக்கும் இடையே காணப்படும் வேறுபாடு என்னவெனில், அவர் புதிய பிரச்சினைகளின் போது இமாமின் வழிநின்று தீர்வு சொல்ல முனைவார். ஆனால், இவர் புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்ல முனையமாட்டார்.

**சட்டவாக்கத்தில் இஜ்திஹாதின் பங்கு:-**

- நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகும் வரை அல்குர்ஆனும் ஹதீஸுமே சட்டவாக்கத் துக்கான மூலாதாரங்களாகக் காணப்பட்டன. இக்காலத்தில் வஹி வராதபோது நபி

(ஸல்) அவர்கள் இஜ்திஹாத் செய்திருக்கிறார்கள். ஸஹாபாக்களது இஜ்திஹாதை அங்கீகரித்துள்ளார்கள். இது இஜ்திஹாதின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது.

- ஸஹாபாக்கள் மேற்கொண்ட இஜ்திஹாத் பிழையாக அமைந்தபோது வஹீ அதனை திருத்தியது. உ-ம்: பத்ர் கைதிகள் விடயத்தில் எடுக்கப்பட்ட முடிவு. எனவே இக்காலப் பிரிவில் இஜ்திஹாத் தனியொரு மூலாதாரமாக இருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.
- இஜ்திஹாதின் காரணமாகவே இஸ்லாமிய சட்டக் கலை ஒரு தனியான கலையாக உருவாகிப் பாரிய வளர்ச்சியைக் கண்டது.
- அல்குர்ஆனை, ஹதீஸை அடிப்படையாக வைத்துத் துணை மூலாதாரங்கள் தனியாக உருவாவதற்குக் காரணமாக அமைந்தது.
- சட்டமியற்றாது வெறுமையாக விடப்பட்டுள்ள பகுதிக்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதில் இஜ்திஹாத் பங்காற்றுகின்றது.
- அல்குர்ஆன், ஹதீஸ் முன்வைத்துள்ள பொது விதிகளைக் கால மாற்றத்துக்கேற்ப, தொழிற்படுத்துவதற்குப் பொருத்தமான வழிகளைக் கையாள்வதில் பங்காற்றுகின்றது.

**நவீன பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இஜ்திஹாதின் பங்கு:**

- மனித சமூகம் என்றுமே காணாத முன்னேற்றத்தை நவீன உலகில் எல்லா துறைகளிலும் கண்டிருக்கின்றது. இம்முன்னேற்றங்கள் பல்வேறு நவீன பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. உ-ம்: பரிசோதனைக் குழாய்க் குழந்தை, உறுப்பு தானம், க்ளோனிங்.
- இவ்வாறான பிரச்சினைகளுக்குரிய தீர்வை அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ, மத்ஹபுகளிலோ நேரடியாக காண முடியவில்லை. அவற்றை அல்குர்ஆனினதும், ஸுன்னாவினதும் ஒளியில் தீர்ப்பதற்கு இஜ்திஹாதே உதவி செய்கிறது.
- இஸ்லாம் எல்லாக் காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் பொருந்தக் கூடிய சிறப்பியல்பு கொண்ட மார்க்கம் என்ற வகையில் மறுமைவரை தோன்றக் கூடிய சகல பிரச்சினைகளுக்குமான இஸ்லாமியத் தீர்வை முன்வைப்பதன் மூலம் இஸ்லாத்தின் உயிரோட்டத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் துணையாக இஜ்திஹாத் அமைகின்றது.

**இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டதால் வந்த விளைவுகள்:**

- ஹி.4ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டிருந்தது. இதற்கு பின்வரும் காரணிகள் ஏதுவாக அமைந்தன.
  - மத்ஹப் மீது கொண்ட அளவுகடந்த பற்று
  - முஜ்தஹிதுகள் நீதிபதிப் பொறுப்புக்கு தெரிவுசெய்யப்படாது முகல்லித்கள் தெரிவு செய்யப்பட்டமை
  - மத்ஹப் சிந்தனைகள் நூலுருப் பெற்றிருந்தமை
  - மத்ஹபுடைய இமாம்கள் சமூகத்தில் அந்தஸ்துப் பெற்றிருந்தமை
- இஜ்திஹாதின் வாயில் இத்தகு காரணிகளால் மூடப்பட்டமையால் ஏற்பட்ட பாதக விளைவுகள்:
  - மத்ஹப் பற்று அதிகரித்தமை

- மத்ஹபுகளுக்கிடையே அதிகமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றமை
- தக்லீது ஒரு பொதுப் பண்பாக மாறியமை
- அல்குர்ஆனையும் ஹதீஸையும் ஆய்வதை விட்டுவிட்டு இமாம்களின் கருத்துக்களை ஆராய முற்பட்டமை.
- விளங்குவதற்கு கஷ்டமான விடுகதைகள் போன்ற நூல்கள் உருவாகியமை.
- பகுத்தறிவின் பயன்பாட்டை அறியாது போனமை.
- அல்குர்ஆன், ஸுன்னாவுடனான நேரடித் தொடர்பு அற்றுப் போனமை.

- இஜ்திஹாதின் பயன்கள்:
  - இஸ்லாம் எக்காலத்துக்கும் ஏற்றது என்பதை நிறுவ உதவுகிறது.
  - அறிவு ரீதியாக முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க உதவுகிறது.
  - இஸ்லாம், சிந்தனைச் சுதந்திரத்துக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- இஜ்திஹாதின் தேவை பற்றி பின்வருமாறு உணர்த்தலாம்.
  - அல்குர்ஆன், ஸுன்னாவிலிருந்து சட்ட வசனங்களைப் பிரித்து இனங்காண்பதற்கு
  - சட்ட வசனங்களிலிருந்து சட்டவிதிகளை வகுத்துக் கொள்வதற்குப் பொருத்தமானதைத் தெரிந்துகொள்வதற்கு
  - பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து கொள்வதற்கு
  - அல்குர்ஆன், ஸுன்னாவில் நேரடியான விளக்கமில்லாத பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறுவதற்கு
  - இஸ்லாமிய அறிஞர்கள் வெளியிட்ட கருத்துக்களில் மிகப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுப்பதற்கு.

## பிக்ஹ் கலையும் அதன் வளர்ச்சிக் கட்டங்களும்.

- 'பிக்ஹ்' எனும் பதம் அறபுமொழி வழக்கில் ''விளக்கம்'' ''தெளிவு'' என்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது. இஸ்லாமிய வழக்கில் சட்ட மூலாதாரங்களை அடிப்படையாகக்கொண்டு பெறப்பட்ட சட்டங்களைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகின்றது.
- நபி (ஸல்) அவர்கள் காலம் முதல் இன்றுவரை இஸ்லாமிய சட்டங்கள் வளர்ந்து வந்துள்ளன. இதனை ''இஸ்லாமிய சட்டவாக்க வரலாறு'' எனக் குறிப்பிடலாம்.
- இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றை இஸ்லாமிய அறிஞர்கள் பல கட்டங்களாக வகுத்து விளக்குகின்றனர். இதனை ''பிக்ஹ் கலையின் வளர்ச்சிக்கட்டங்கள்'' என்றும் குறிக்கலாம். அது பின்வருமாறு அமையும்.

1. பிக்ஹின் அரும்பு காலம் (நபி (ஸல்) அவர்கள் காலம் முதல் ஹி 1ஆம் நூற்றாண்டின் மத்தியகாலம்)
2. பிக்ஹ் நிலைபெறும் காலம் (ஹி 1ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதி)

3. பிக்ஹின் பொற்காலம் (ஹி 2ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் 4ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி)

4. பிக்ஹின் தேக்கமும், வீழ்ச்சியும் (ஹி 4ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் 7ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி)

5. பிக்ஹ் மீள் எழுச்சி பெறும் காலம் ( ஹி 1286 முதல் இன்றுவரை)

**பிக்ஹின் அரும்பு காலம் (நபி (ஸல்) அவர்கள் காலம் முதல் ஹி 1ஆம் நூற்றாண்டின் மத்தியகாலம் வரை)**

- நபி (ஸல்) அவர்கள் மக்காவிலும், மதீனாவிலும் வாழ்ந்தார்கள். மக்காக் காலப் பிரிவு இஸ்லாத்தை உறுதிப்படுத்துவதிலும் அதனைப் பாதுகாக்க உழைப்பதிலும் கழிந்தது. தனிமனிதர்களை, அவர்களது நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புவதே அங்கு நோக்கமாக இருந்தது. மதீனாக் காலப்பிரிவே சட்டவாக்கத்திற்குரியதாக அமைந்தது.

- அல்குர்ஆனும், ஸுன்னாவுமே இக்காலப்பிரிவில் சட்டமூலங்களாக அமைந்தன.

- நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்வின் மூலமும், கருத்துக்கள், நடத்தைகள் மூலமும் சமூகவாழ்வை இயக்கிக் கொண்டிருந்தார்கள். எனவே இக்காலப் பிரிவில் ‘‘பிக்ஹ்’’ எனும் பதம் தனிக்கலைக்குரிய சொல்லாக இருக்கவில்லை.

- பிக்ஹ் ‘‘எனும் பதம் நம்பிக்கைகள், ஒழுக்கவிழுமியங்கள் வழிபாடுகள் போன்ற வாழ்வியல் அம்சங்கள் அனைத்தையும் குறிக்கும் பொதுச் சொல்லாகவே இருந்தது.

- ‘‘பிக்ஹ்’’ ‘‘இல்ம்’’ எனும் பதங்கள் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டன.

- நபி (ஸல்) அவர்கள் வஹியாக அறிவிக்கப்படாத விடயங்களில் தனது இஜ்திஹாதின் மூலம் தீர்ப்பளித்திருக்கிறார்கள். தாம் இல்லாத சூழ்நிலைகளில் இஜ்திஹாதின் அடிப்படையில் செயற்படுவதற்கு ஊக்கமளித்திருக்கிறார்கள்.

  உ-ம் : முஆத் இப்னு ஜபல் (ரழி) யெமன் நாட்டுக்கு கவர்னராக அனுப்பிய போது இஜ்திஹாதின் அடிப்படையில் செயற்பட அனுமதித்தமை.

- நபி (ஸல்) அவர்களது மறைவின் பின்னர் நபித்தோழர்கள் பிக்ஹை வளர்க்கும் பொறுப்பை ஏற்றார்கள். இக்காலப் பிரிவில் மூன்று பிரதான சட்டமூலாதாரங்கள் காணப்பட்டன.

  (1) அல்குர்ஆன் (2) ஸுன்னா (3) இஜ்திஹாத்

- அல்குர்ஆனில் அல்லது ஸுன்னாவில் குறித்த ஒரு பிரச்சினைக்கான தீர்ப்பு காணப்படாத சந்தர்ப்பத்தில் அதனை நடைமுறைப்படுத்தினர்.

- அபூபக்ர் (ரழி) அவர்களது காலப்பிரிவில் ஏதேனும் ஒரு பிரச்சினைக்கு அல்குர்ஆன், ஸுன்னா என்பவற்றில் தீர்ப்பு காணப்படாத போது ஸஹாபாக்களை ஒன்றுதிரட்டி குறித்த பிரச்சினையை முன்வைத்துத் தீர்ப்பு பெறும் நடைமுறை இருந்ததாக இமாம் பகவி (ரஹ்) குறிப்பிடுகிறார். இந்நிலை உமர் (ரழி) அவர்களது காலப்பிரிவிலும் காணப்பட்டது.

- எனினும் உமர் (ரழி) அவர்களது ஆட்சியில் இஸ்லாமிய கிலாபத் விரிவடைந்தமையால் ஸஹாபாக்கள் சிரியா, எகிப்து, கூபா, பஸரா என பல நாடுகளுக்கும் பரந்து சென்றனர். இதனால் அவர்களை ஒன்றுதிரட்டி சட்டயோசனை பெற முடியாத நிலை தோன்றியது. இஜ்திஹாத் சட்டவாக்கத்தில் பயன்படுத்தப்பட்டது.

- இஜ்திஹாத் ஸஹாபாக்களால் மிக விரிவாகப் பயன்படுத்தப்பட்டது. அது இரு பிரதான பண்புகளைப் பெற்றிருந்தது.

    1. கியாஸை அடிப்படையாகக் கொண்டமை
    2. சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும், பிரச்சினைகளின் தன்மைக்கும் ஏற்ப அறிவும், ஆய்வும் பயன்படுத்தப்பட்டமை.

- ஸஹாபாக்கள் கால இஜ்திஹாத் இருவகைப்பட்டது.

    1. இஜ்திஹாத் ஜமாஇ (கூட்டு இஜ்திஹாத்)
    2. இஜ்திஹாத் பர்தி (தனி நபர் இஜ்திஹாத்)

- தனிநபர் இஜ்திஹாத்களில் உமர் (ரழி) அவர்களது இஜ்திஹாத்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவர்களது காலப் பிரிவில் உருவான பிரச்சினைகளுக்கு அவர்கள் வழங்கிய சட்டத் தீர்ப்புகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

  உ-ம் : குதிரை ஸகாத்திற்குரியதாக கணிக்கப்பட்டமை.

- அலி (ரழி) ஆஇஷா (ரழி) அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) போன்றவர்களது சட்டத்தீர்ப்புகளும் தனிநபர் இஜ்திஹாதுக்கான உதாரணங்களும்.

**பிக்ஹ் நிலைபெறும் காலம் (ஹி 1ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதி)**

- பிக்ஹ் கலைவடிவம் பெறுவதற்கு இக்காலப்பிரிவே அடித்தளமாய் அமைந்தது.

- இஸ்லாமிய கிலாபத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற நபித்தோழர்கள் அவ்வப் பிரதேசங்களில் குடியேறினர்.

- அவ்வாறு குடியேறிய ஸஹாபாக்களை மையமாகக் கொண்டு பிக்ஹ் வகுப்புக்கள் உருவாகின. நபித்தோழர்களின் மாணவர்களான தாபிஈன்கள் ஸஹாபாக்களிடம் இருந்து கற்றுக் கொண்டனர்.

- நபித் தோழர்களை மையமாகக் கொண்டு வளர்ந்த சிந்தனை வட்டங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. மக்கா - இப்னு அப்பாஸ் (ரழி)

   1). முஜாஹித் பின் ஜபர்2). அம்ர் இப்னு தீனார்

   3). அதா பின் அரபாஹ் 4). தாவூஸ் இப்னு கைஸலான்.

2. மதீனா - ஸைத் பின் ஸாபித் (ரழி) அப்துல்லா இப்னு உமர் (ரழி)

1). ஸஈத் இப்னு முஸையப் 2) இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி

3). உர்வா இப்னு சுபைர் 3). அபூபக்ர் இப்னு அப்துர்ரஹ்மான்

3. கூபா - அலி இப்னு அபீதாலிப் (ரழி) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி)

1). இப்ராஹிம் - அந்நகஇ 2). அஸ் ஸஅபி

3). ஹம்மாத் பின் அபீ சுலைமான்

4). அல்கமா பின் கைஸ்

4. பஸரா - அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி) அனஸ் பின் மாலிக் (ரழி)

1). அபுல் ஹஸன் அல் பஸாரி

2). முஹம்மத் பின் சீரின்

- இக்குழுக்கள் இரு பிரதான சிந்தனைப் பிரிவுகளாக அடையாளம் காணப்பட்டன.

1. மத்ரஸது அஹ்லில் ஹதீஸ் அல்லது மத்ரஸது மதீனா : ஹதீஸ்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து இஸ்லாமிய சட்டங்களை விளக்கியவர்கள் இப் பிரிவில் அடங்குவர். மதீனாவில் இவர்கள் இருந்தனர்.

2. மத்ரஸது அஹ்லில் ரஇயி அல்லது மத்ரஸது கூபா

பகுத்தறிவுக்கும், சுய சிந்தனைக்கும் முக்கியத்துவம் கொடுத்து சட்டங்களை விளக்கியவர்கள் இப்பிரிவில் அடங்குவர்.

- ஸஹாபாக்களின் காலப்பிரிவில் வாழ்க்கையின் தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் ஏற்ப பிக்ஹை நோக்கிய தன்மையில் இருந்து எடுகோள்களினதும், கோட்பாடுகளினதும் வெளிச்சத்தில் சட்டங்களை வகுக்கும் முறை அறிமுகமானமை இக்காலப் பிரிவின் சிறப்பியல்பாகும் என பேராசிரியர் அலிஹஸன் அப்துல் காதிர் குறிப்பிடுகிறார்.

**பிக்ஹின் பொற்காலம் (ஹி 2ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் 4ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி)**

- இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் உமையாக்களின் இறுதிப் பகுதியையும் அப்பாஸியர்களின் பெரும் பகுதியையும் இக்காலப் பிரிவு உள்ளடக்குகின்றது.
- பொதுவாக அறிவு, ஆய்வு, தேடல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் பெற்ற காலப்பிரிவாக இது அமைந்தமை சட்டத்துறையில் அவற்றின் செல்வாக்கைச் செலுத்தக் காரணமாகின.
- இக்காலப் பிரிவில் இஸ்லாமிய சட்டக்கலை அதிஉயர் வளர்ச்சி பெற்றமைக்கான காரணிகளை அறிய இஸ்லாமிய அறிஞர்கள் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளனர். அவர்கள் அனைவரதும் கருத்துக்களின் சாரம்சமாக பின்வரும் காரணிகளைக் குறிப்பிடலாம்.

1. இஸ்லாமிய கிலாபத்தின் எல்லைகள் இக்காலப் பிரிவில் மிக விசாலித்திருந்தன. வித்தியாசமான சமூகங்களையும் பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தினுள் வந்தனர். வித்தியாசமான பழக்கவழக்கங்கள், சமூகக் கிரியைகள்,நம்பிக்கைகள் அறிமுகமாயின. இந்த சமூகவியல் தேவைகளுக்கேற்ப சட்டங்களை வகுத்துச் சொல்ல வேண்டிய தேவை உருவானது.

2. இக்காலப்பிரிவில் சட்டம் வகுக்க விழைந்தவர்கள், இதற்கு முன்னர் இருந்த அறிஞர்கள் சந்தித்த பிரச்சினைகளை விட வித்தியாசமான சிக்கலான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர். எனவே தமக்கு முன்வாழ்ந்த அறிஞர்களது அறிவோடு சேர்ந்து, தமது அறிவையும் ஆற்றலையும் விசாலமாகப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

3. முஸ்லிம் சமூகம், தனது ஆன்மீக, லௌகீக, சமூகத் தேவைகள் அனைத்துக்கும் இஸ்லாமிய சட்டங்களை எதிர்பார்த்தது. அத்தோடு சமூகத்தில் இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றும் வேட்கையும் அதிகரித்தது. எனவே சட்டத்தீர்ப்பு வழங்குபவர்களையும், அறிஞர்களையும் தேடிச் செல்லும் நிலை அதிகரித்தது.

4. இக்கால சமூகத்தன் சட்டத்தேவைகளை நிறைவு செய்யக்கூடிய அறிவும், ஆளுமையும், சிந்தனைத் தெளிவும் உள்ளவர்களாக இமாம்கள் இருந்தனர்.

- இக்காலப் பிரிவில் நான்கு மத்ஹப்களின் இமாம்கள் தோற்றம் பெற்றனர்.

**இமாம் அபூ ஹனீபா (ரஹ்) ஹி 80 -150**

- இமாம் அவர்களின் இயற்பெயர் நு:.மான்பின் ஸாபித் என்பதாகும். ஹி 80 கூபாவில் பிறந்து ஹி 150 இல் பக்தாதில் வபாத்தானார்கள்.
- ஹம்மாத் இப்னு அல் சுலைமான், அஷ் ஷஅபி, கதாதா, அதா பின் அபூரபாஹ் ஆகியோரிடம் கல்வி பயின்றார்.
- உமைய, அப்பாஸிய ஆட்சியாளர்களின் போக்கை இமாமவர்கள் ஆதரிக்கவில்லை. எனினும் எவருக்காகவும் தனது கொள்கைகளை விட்டுக் கொடுக்கவுமில்லை.
- இமாமவர்கள் பின்வரும் சட்ட மூலாதாரங்களைத் தனது சட்டவாக்கத்துக்கு அடிப்படையாகக் கொண்டிருந்தார்கள்.

  1. அல்குர்ஆன்
  2. அஸ்ஸுன்னா
  3. நபித்தோழர்களின் இஜ்மா
  4. ஸஹாபாக்களின் தனிப்பட்ட கருத்துக்கள்.
  5. கியாஸ்
  6. இஸ்திஹ்ஸான்
  7. அல் உர்பு

- அறிவுக்கும், ஆய்வுக்கும் அழுத்தம் கொடுக்கும் ''அஹ்லுர் ரஇயி'' எனும் சிந்தனை மரபுக்கு முதலிடம் கொடுத்தமை இமாமவர்களின் சிறப்பியல்பாகும்.

- இமாமவர்கள் தனது மாணவர்கள் உள்ளடக்கிய சபை ஒன்றை நிறுவியிருந்தார்கள். இதில் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு அளிக்கப்பட்ட 83 ஆயிரம் சட்டத்தீர்ப்புக்கள் சுத்தம், தொழுகை, நோன்பு, இபாதத், முஆமலாத் முதலிய தலைப்புக்களில் பெரு நூலாகத் தொகுக்கப்பட்டது. இத்தொகுப்பு ''குதுப் அபூஹனீபா'' என அழைக்கப்பட்டது.

- பிக்ஹுல் அக்பர், அல் ஆலிம் வல் முதஅல்லிம், முஸ்னத் என்பன இமாமவர்களின் முக்கிய நூல்களாகக் கருதப்படுகின்றன.

- ஸுபர் இப்னுல் ஹுஸைல், ஹஸன் இப்னு ஸியாத், இமாம் அபூயூசுப், முஹம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி ஆகியோர் இமாமின் மாணவர்களாவர்.

- இமாம் அபூயூசுப் எழுதிய ''கிதாபுஸ் ஸலாத்'' ''கிதாபுல் பராஇழ்'' என்பவற்றில் இமாமவர்களின் கருத்துக்களே அதிகம் காணப்படுகின்றன.

- ஹனபி மத்ஹப் என அழைக்கப்பட்ட இமாமவர்களின் மத்ஹப், கலீபா ஹாரூன் ரஷீத் காலத்தில் பிரபல்யமடைந்தது.

**இமாம் மாலிக் இப்னு அனஸ் (ஹி 93-179)**

- ஹி 93இல் பிறந்தார். ஹி 179 இல் மதீனாவிலேயே மறைந்தார். வேறு எந்த நாட்டுக்கும் இமாமவர்கள் பயணம் செய்ததில்லை.

- அப்துர்ரஹ்மான் பின் ஹுமூஸ், இப்னுஷிஹாப் அஸ்ஸுஹ்ரி, நாபிஇ, யஹ்யாபின் ஸஅத் முதலிய அறிஞர்களிடம் ஹதீஸ்கலையைப் பயின்றார். மதீனாவில் வாழ்ந்த அஹ்லுர் ரஇயி சிந்தனைப் பிரிவைச் சேர்ந்த ரபிஆ பின் அப்துர் ரஹ்மான் என்பவரிடம் சட்டக்கலையைக் கற்றார்.

- இமாமவர்களது காலப்பிரிவில் மதீனா நகரம் அரசியல் முக்கியத்துவம் குறைந்த நகராகத் திகழ்ந்தது. அறிஞர்களதும், ஆன்மீகவாதிகளதும் நகராக இருந்தது. இமாம் அபூஹனீபாவின் சமகாலத்தவராக இருந்த போதிலும் அவரது சிந்தனைகள் பற்றிய அறிவைப் பெற்றிருக்கவில்லை.

- இமாமவர்களின் சட்டமூலாதாரங்கள்.

    1. அல்குர்ஆன்
    2. அஸ்ஸுன்னா
    3. மதீனாவாசிகளின் நடைமுறைகள்
    4. நபித்தோழர்களின் இஜ்மா
    5. நபித்தோழர்களின் தனிப்பட்ட கருத்துக்கள்
    6. கியாஸ்

7. அல் இஸ்திஸ்லாஹ்
8. அல் உர்பு

- இமாமவர்கள் அஹ்லுர் ரஇயி பிரிவினருக்கும் அஹ்லுல் ஹதீஸ் பிரிவினருக்கும் இடையே நடுநிலை காணும் இயல்பு கொண்டிருந்தார். அவரது பிக்ஹ் சிந்தனைகளில் இதனைக் காண முடிகிறது.
- இமாமவர்களது நூல்களில் ‘‘அல் முவத்தா’’ சிறப்பிடம் பெறுகிறது. இது சமகாலத்தில் ஹதீஸ் நூலாகவும், பிக்ஹ் நூலாகவும் அமைந்துள்ளது.
- இமாமவர்களது சட்டத் தீர்ப்புக்களை அவரது மாணவர்கள் தொகுத்து வெளியிட்டனர். இது ‘‘அல் முதவ்வனா’’ எனப்படுகின்றது.
- இமாமவர்களின் மாணவர்கள் பலர் இருந்தாலும் அப்துல்லாஹ் இப்னு வஹப், அப்துர்ரஹ்மான் இப்னுல் காஸிம், அப்துல்லாஹ் இப்னு முபாரக் ஆகியோரே மிக முக்கியமானவர்கள்.

**இமாம் ஷாபிஈ (ரஹ்) ஹி 150 - 204**

- இமாமவர்களின் முழுப்பெயர் முஹம்மத் இப்னு இத்ரீஸ் அஷ் ஷாபிஈ என்பதாகும். பலஸ்தீனத்தைச் சேர்ந்த காஸாவில் ஹி 150ல் பிறந்து ஹி 204 இல் எகிப்தில் புஸ்தாத் நகரில் மறைந்தார்கள்.
- இமாம் அவர்கள் இஸ்லாமிய உலகின் பல பகுதிகளுக்கும் சென்று அங்கு வாழ்ந்த அறிஞர்களிடத்தே இஸ்லாமிய கலைகளைப் பயின்றார். மக்காவில் சுப்யான் பின் உயைனா என்பவரிடம் பிக்ஹ் கலையை கற்றுக் கொண்டார். மதீ.னாவில் இமாம் மாலிக் அவர்களிடமும் ஈராக்கில் இமாம் முஹம்மத் இப்னு ஹஸன் அஷ் ஷைபானி இடமும் கல்வி கற்றார்.
- இமாமவர்களது சட்ட மூலாதாரங்கள்.

1. அல் குர்ஆன்
2. அஸ்ஸுன்னா
3. அல் இஜ்மா
4. ஸஹாபாக்களின் கருத்துக்கள்
5. அல் கியாஸ்
6. இஸ்திஸ்ஹாப்

- இமாமவர்களின் சட்டத்துறைப் பங்களிப்புக்குச் சான்றாக அவர் எழுதிய நூல்கள் அமைந்துள்ளன.

1. கிதாப் அல் உம்மு
2. கிதாப் அர் ரிஸாலா பீ உஸுலில் பிக்ஹ்

- இதில் முதல் நூல் பிக்ஹ் பற்றியதாகும். இரண்டாவது நூல் உஸுலுல் பிக்ஹ் பற்றியதாகும்.

- இமாமவர்களின் மாணவர்களில் இஸ்மாஈல் இப்னு யஹ்யா அல் முஸ்னி, அர்-ராபிஇ, யூசுப் பின் யஹ்யா போன்றோரே மிக முக்கியமானவர்கள் என சில அறிஞர்களும் அபூபக்ர் அல் ஹுமைதி, ஹுர்மலா பின் யஹ்யா, அர் ரபீ இப்னு சுலைமான், இப்னு தாலூத், அல் புவைதி என்போரே முக்கியமானவர்கள் என்று வேறு சிலரும் குறிப்பிடுகின்றனர்.

**இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ஹி 164-241)**

- அபூ அப்துல்லா அஹ்மத் இப்னு முஹம்மத் ஹன்பல் என்பதே இவரது முழுப் பெயராகும். ஹி 164 இல் பக்தாதில் பிறந்து 241இல் மறைந்தார்.

- இமாமவர்கள் வாழ்ந்த காலம், பக்தாத் அறிவியல் ஆராய்ச்சிகளின் மையமாகத் திகழ்ந்தது. எனவே தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், மொழி, அறபு இலக்கியம் போன்றன வளர்ச்சியுற்றிருந்தன.

- அவ்வாறே அஹ்லுர் ரஇயி பிரிவினரின் சிந்தனைகளும் அஹ்லுல் ஹதீஸ் பிரிவினரின் சிந்தனைகளும் அங்கு இருந்தன. இந்த இரு வழிமுறைகளையும் பின்பற்றி ஷரீஆவைக் கற்றுக் கொண்டார்.

- இப்றாஹிம் இப்னு ஸஃது, இமாம் யூசுப், ஹசீம் பின் பசீர், இமாம் ஷாபிஈ, சுப்யான் பின் உயைனா, யஹ்யா அல் கத்தாம் போன்றவர்களிடம் பிக்ஹ், ஹதீஸ் என்பவற்றைக் கற்றார்.

- முஃதஸிலா கோட்பாட்டை ஏற்க மறுத்ததன் காரணமாக கலீபா மஃமூனால் துன்புறுத்தப்பட்டார்.

- சட்ட மூலாதாரங்கள்

    1. அல்குர்ஆன்
    2. அஸ் ஸுன்னா
    3. ஸஹாபாக்களது இஜ்மா
    4. ஸஹாபாக்களது கருத்துக்கள்
    5. கியாஸ்

- இமாமவர்களின் சிந்தனைகள் இவரது புதல்வர்களான ஸாலிஹ்பின் அஹ்மத் இப்னு ஹன்பல், அப்துல்லாஹ் இப்னு அஹ்மத் ஆகியோரால் தொகுக்கப்பட்டன. அவையே ‘‘மஸாஇல் ஸாலிஹ்’’ என்றும் ‘‘முஸ்னத்’’ என்றும் அழைக்கப்படுகின்றன.

- இமாமவர்களின் சிந்தனைகள் ஹன்பலி மத்ஹபாக வளர்ச்சி கண்டது. இமாமவர்களது நேரடி மாணவராக இல்லாத போதும் அவரது மாணவர்களின் மாணவராக இருந்த அபூபக்ர் அல்ஃகலாம் என்பவரின் முயற்சியினாலேயே இமாமவர்களது கருத்துக்கள் உலகிற்குக் கிடைத்தன.

**பிக்ஹ் தோற்றமும் வீழ்ச்சியும் (ஹி 4ஆம் நூற்றாண்டின் மத்தி ஹி 7ஆம் நூற்றாண்டின் மத்தி)**

- பிக்ஹின் தேக்க நிலைக்கான காரணிகள் பற்றி ஆய்வு செய்த இஸ்லாமிய அறிஞர்கள் பின்வரும் காரணிகளே பிரதானமானவை எனக் குறிப்பிடுகின்றனர்.

1. பிக்ஹின் பொற்காலப் பிரிவில் தோற்றம் பெற்ற இமாம்களின் சட்டத்தீர்ப்புக்களும், பிக்ஹ் கருத்துக்களும் தனித்தனியாக பதிவு செய்யப்பட்டதன் காரணமாக அவற்றைப் பின்பற்றும் குழுக்கள் தோற்றம் பெற்றன. பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடி ஆராய்வதை விட்டுவிட்டு இமாம்களின் நூல்களில் இருந்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் முறை தோற்றம் பெற்றது.

2. குறித்த ஒரு இமாமின் சிந்தனை மரபை விடாப்பிடியாக பற்றிக் கொள்ளும் தன்மை தோன்றியது. இஸ்லாமிய அறிஞர்களிடத்திலே உருவான இந்த பற்றுணர்வு புதிதாகச் சிந்திக்கும் மனப்பாங்கை கட்டுப்படுத்தியது.

3. அப்பாஸிய கலீபாக்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட நீதிமன்ற அமைப்பும், நீதிபதிகளின் நியமனமும் இவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிபதிகள் தாம் சார்ந்திருந்த மத்ஹபுகளுக்கேற்ப தீர்ப்பு வழங்கியமையும்.

4. அப்பாஸிய கிலாபத்தின் இறுதியில் தோன்றிய சிற்றரசுகள் தமது அரசுக்கென்று உருவாக்கிக் கொண்ட வழிமுறைகளில் குறித்த ஒரு மத்ஹபை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்பது முக்கியமானது. இதனால் அந்த அரசில் வாழ்ந்த அனைவரும் குறித்த மத்ஹபை பின்பற்ற நிர்ப்பந்திக்கப்பட்டனர். உ-ம் : எகிப்தில் ஷாபி மத்ஹப், ஸ்பெயினில் மாலிக் மத்ஹப்

5. அறிஞர்களிடையே உருவான பொறாமை உணர்வுகள். இதனால் தமது சிந்தனைகளில் குறைகண்டு பிறர் வழிகேடர்கள் என்று கூறிவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டமையால் முன்னைய இமாம்களின் கருத்துக்களோடு தம்மை சுருக்கிக் கொண்டனர்.

6. தகுதியற்றவர்கள் இஸ்லாத்தைத் தமக்கேற்ப மாற்றிக் கொள்ள முற்பட்டதன் காரணமாக ஷரீஆவின் புனிதத்தைப் பாதுகாப்பதற்காக ‘‘இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுவிட்டது” என்ற கருத்தை அக்காலத்தில் சில இஸ்லாமிய அறிஞர்கள் முன்வைத்தனர்.

- மேற்குறித்த காரணிகளே ‘‘தக்லீத்’’ (குறித்த ஒரு மத்ஹபை ஆய்வின்றி பின்பற்றல்) முஸ்லிம் சமூகத்தில் தோன்றுவதற்கு வழியமைத்தன.

**பிக்ஹ் மீள் எழுச்சி பெறும் காலம் (ஹி 1286 முதல் இன்றுவரை)**

- பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் உஸ்மானியர் ஆட்சிக்காலப் பிரிவே பிக்ஹின் மீள் எழுச்சிபெற ஆரம்பித்த காலப்பிரிவாக அமைந்தது என்பர்.

- உஸ்மானிய சாம்ராஜ்யத்தில் உருவாக்கப்பட்ட பிரதேச நீதிமன்றங்களில் கடமை புரிந்த நீதிபதிகளுக்குச் சட்டக்கோவை ஒன்று அவசியமாகியது. அவர்கள் தமது தீர்ப்புக்களுக்கு அடிப்படையாகக் கொள்ளக் கூடிய பலமான சட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கான ஒரு சட்டத் தொகுப்பு அவசியம் எனக் கருதினர். இத்தகைய ஒரு சட்ட நூலை உருவாக்குவதற்காக ஹி 1286 இல் ஒரு குழு நியமிக்கப்பட்டது.

- இக்குழு ஹனபி மத்ஹபை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய சட்ட நூல் ''மஜல்லதுல் அஹ்காம் அல் அத்லிய்யா'' எனப்பட்டது. இது ஹி 1293இல் வெளியிடப்பட்டது. நவீன சட்ட நூல்களின் பாணியில் இந்நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

- 1924 இல் உஸ்மானிய கிலாபத் வீழ்ச்சியடைந்தது. ஐரோப்பிய ஆதிக்கம் முஸ்லிம் உலகில் ஏற்பட்டது. இதனால் இரு குழுவினர் தோற்றம் பெற்றனர்.

1. முஸ்லிம் சமூகத்தின் பின்னடைவிற்கு காரணம் பழைமை போற்றும் பண்பே என்றும் அதிலிருந்து விடுபட்டு ஐரோப்பிய பாணியிலான வாழ்க்கை முறையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே முன்னேறலாம் என்ற கருத்துக் கொண்டோர்.

2. முஸ்லிம் சமூகத்தின் பின்னடைவிற்கு இஸ்லாமிய வாழ்க்கை முறையோ ஷரீஆ சட்டங்களோ காரணமல்ல என்றும் அல்குர்ஆன், ஸுன்னா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காலத்தின் தேவைக்கேற்ற புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டோர்.

- இரண்டாம் பிரிவினரின் கருத்துக்கள் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஸ்லிம் நாடுகளில் தனியார் சட்டங்கள் என்ற எல்லைக்குள் இஸ்லாமிய சட்டங்கள் சமகாலத்தேவைகளுக்கு ஏற்ப தொகுக்கப்படவும் விளக்கப்படவும் காரணமாயின.

- விவாகப்பதிவு, விவாக வயது, பலதார மணம், மனைவியின் வாழ்க்கைச் செலவு என்பன தொடர்பான சட்டங்கள் எந்த ஒரு தனிமத்ஹபினதும் கருத்துக்களைச் சாராமல் அல்குர்ஆன், ஸுன்னா என்பவற்றின் எல்லைக்குள் சீர்திருத்தப்பட்டன. எகிப்து, துருக்கி, ஜோர்தான், சிரியா போன்ற நாடுகளில் 1920-1955 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சட்ட சீர்திருத்தங்கள் இதற்கு உதாரணங்களாகும்.

- இன்று இஸ்லாமிய சட்டக்கலை மிகவிரிவான அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகின்ற துறையாக மாறியுள்ளது. சமகால அறிவியல், தொழிநுட்ப விருத்தியின் அடியாக தோன்றுகின்ற நவீன பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்லும் துறையாக அது திகழ்கின்றது.

- சட்டப் பிரச்சினைகளுக்கு 2 அடிப்படையில் தீர்வு வழங்கப்படுகின்றது.

    1. தனிநபர் இஜ்திஹாத்

    2. கூட்டு இஜ்திஹாத்

- சமகாலத்தில் வாழ்கின்ற தலைசிறந்த இஸ்லாமிய சட்டக்கலை அறிஞர்கள் தம்மிடம் முன்வைக்கப்படுகின்ற பிரச்சினைகளுக்கு வழங்குகின்ற சட்டத்தீர்ப்புக்கள் முதல் வகையில் அடங்குகின்றன. உ-ம் : கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, பைஸல் மவ்லவி போன்றோர்களின் தீர்ப்புகள்

- பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு வழங்குவதற்காகச் செயற்படுகின்ற ''மஜ்மஉல் பிக்ஹுல் இஸ்லாமி'', மஜ்மஉல் புஹுஸுல் இஸ்லாமி'' போன்ற சட்ட நிறுவனங்கள் இரண்டாம் வகைக்கான உதாரணங்களாகும்.

**அல்-இஜ்மாஉ**

- இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படை மூலாதாரங்களில் அல்குர்ஆனும், அல்-ஹதீஸும் மிகப் பிரதான இடத்தை வகிக்கின்றன. இவ்விரண்டும் வஹியின் அடிப்படையில் அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும். இவ்விரண்டு மூலாதாரங்களுடன் இஜ்திஹாதின் அடிப்படையில் உருவாகிய துணை மூலாதாரங்களும் இஸ்லாமிய வரலாற்றில் தோன்றி வளர்ச்சி பெற்றன. இவ்வரிசையில் தோன்றிய மிக முக்கியமான ஒரு துணை மூலாதாரமே இஜ்மாஉவாகும். அல்-குர்ஆனையும் அல்-ஹதீஸையும் போன்று இம்மூலாதாரம் நேரடியாக வஹியுடன் தொடர்புபடாவிட்டாலும் அவ்விரண்டு மூலாதாரங்களினதும் ஒளியில் பகுத்தறிவைப் பிரயோகித்து உருவாக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது. ஆகவே குர்ஆனையும், ஹதீஸையும் போன்று மக்களைக் கட்டுப்படுத்தும் தன்மை இதற்குமுண்டு.

- இஜ்மாஉ எனும் அறபுப் பதம் அஜ்மஅ எனும் அறபுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். ஒன்று சேர்த்தல், உறுதி கொள்ளுதல், ஒத்த கருத்துக் கொள்ளல், ஏகோபித்த கருத்துக் கொள்ளல் எனும் மொழிக் கருத்துக்களில் இப்பதம் பிரயோகிக்கப்படுகின்றது. இஸ்லாமிய ஷரீஅத்தில் பின்வரும் கருத்திலேயே அது பிரயோகிக்கப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின் ஏதாவதொரு காலத்தில் தோன்றிய பிரச்சினைக்கான தீர்வு குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ தெளிவாகக் காணப்படாதபோது அப்பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்கு அக்காலத்தில் வாழும் முஜ்தஹிதுகள் அனைவரும் ஒன்று கூடி இஜ்திஹாத் செய்வதன் மூலம் ஏகோபித்த கருத்துக் கொள்வதே இஜ்மாஉ ஆகும்.

- **இஜ்மாஉ சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**

  ட இஸ்லாத்தில் எந்தவொரு காரியத்தை மேற்கொள்வதாக இருந்தாலும் அது ஷரீஅத்தில் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இந்த வகையில் இஜ்மாஉவின் அடிப்படையில் தீர்ப்புக்கள் பெறுவதற்கு ஷரீஅத்தில் அங்கீகாரம் இருக்கின்றதா என்பதை அறிவது அவசியமாகும். பொதுவாக இஜ்மா அங்கீகாரம் பெறுகின்றது என்பதற்கு அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

- **அல்குர்ஆன் ஆதாரங்கள்:**

- இன்னும் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னர் எவர் (நம்முடைய) இத்தூதருக்கு மாறுசெய்து, விசுவாசிகளின் வழியல்லாத (வேறு வழியான) தைப் பின்பற்றுகிறாரோ அவரை நாம் அவர் திரும்பிய (தவறான வழியிலேயே திருப்பி விடுவோம். (பின்னர்) அவரை நரகத்தில் புகுத்தி விடுவோம். அது சென்றடையுமிடத்தில் மிகக் கெட்டது. (14:115)

- மக்கள் மீது சாட்சி கூறுவோராகவும், நீதியை ஏற்படுத்துவோராகவும் அமையும் பொருட்டு உங்களை நாம் நடுநிலையான சமூகமாக அமைத்துள்ளோம். (2:143)

- நீங்கள் அல்லாஹ்விற்கு வழிப்படுங்கள், அவ்வாறே அவனது தூதருக்கும் வழிப்படுங்கள். இன்னும் உங்களில் (அல்லாஹ்விற்கும். ரஸூலுக்கும் கட்டுப்படுகின்ற) தலைவர்களுக்கும் கட்டுப்படுங்கள். (4:59)

- மேலும் (யுத்த) அமைதியோ அல்லது பீதியோ பற்றிய யாதொரு செய்தி அவர்களுக்கு வந்துவிட்டால் (உடனே) அவர்கள் அதனைப் (வெளியில் மக்களிடையே) பரப்பி விடுகின்றனர். (அவ்வாறு செய்யாது) அதனை (அல்லாஹ்வுடைய தூதரிடமும், அவர்களில் (மார்க்க ஞானமுள்ள)

அதிகாரமுடையவர்களிடமும் தெரிவித்திருந்தால், அவர்களிலிருந்து அதனை ஆய்ந்து எடுப்பவர்கள் அதனை (நன்கு) அறிந்து கொள்வார்கள். மேலும் (விசுவாசிகளே) அல்லாஹ்வுடைய பேரருளும் அவனுடைய கிருபையும் உங்கள் மீது இல்லாதிருந்தால் (உங்களில்) குறைவானவர்களைத் தவிர நீங்கள் யாவரும் ஷைத்தானையே பின்பற்றியிருப்பீர்கள். (4:83)

- முதலில் குறிப்பிடப்பட்ட இறைவசனத்தில் இறைநம்பிக்கையாளர்களின் கருத்துகளுக்கு வழிப்படுவது மார்க்கக் கடமை என்பதும், அதற்கு முரண்படுவது தண்டனைக்குரியது என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. இரண்டாவது வசனத்தில் மக்கள் மீது நீதி செலுத்த நேர்மை மிக்க நம்பிக்கையாளர்கள் இருப்பதைக் குறிப்பிட்டு அதன் மூலம் அவர்களது சட்ட முடிவுகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மூன்றாவது வசனத்தில் உலுல் அம்ர் எனும் முஸ்லிம் சமூகத்தின் அறிஞர்களுக்கு அல்லது முஜ்தஹிதுகளுக்கு அல்லது தலைவர்களுக்கு வழிப்படும் படி கட்டளையிடப்பட்டுள்ளது. நான்காவது வசனத்தில் பிரச்சினைகளின்போது அறிஞர்கள், பொறுப்பாளர்களை நாடி அதனை ஆய்ந்து தீர்த்துக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. ஆகவே இப்போதனைகள் இஜ்மாஉவின் அடிப்படையில் அறிஞர்கள் வழங்கும் ஏகோபித்த முடிவுகள் பிழையாக இருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

**ஸுன்னாவின் ஆதாரங்கள்:-**

- ‘‘எனது சமூகத்தினர் தவறான விடயங்களில் ஒன்றுபட மாட்டார்கள்.’’(இப்னு மாஜா)
- ‘‘சத்தியத்தில் நிலைத்திருக்கக் கூடிய ஒரு கூட்டம் எனது சமூகத்தில் என்றென்றும் இருந்து வருவார்கள்.’’ (அபூதாவூத்)
- ‘‘‘யார் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுவதிலிருந்து விலகிச் சென்று ஜமாஅத்தை விட்டும் பிரிந்து மரணிக்கின்றாரோ அவரது மரணம் (ஜாஹிலிய்யத்தை) மடமையைச் சேர்ந்ததாகும்.’’ (முஸ்லிம்)
- ‘‘முஸ்லிம்கள் நல்லதாகக் கருதுபவை அல்லாஹ்விடம் நல்லதாகவே இருக்கும். அவ்வாறே அவர்கள் தீயதாக கருதுபவை அல்லாஹ்விடம் தீயதாகவே இருக்கும்.’’ (அஹ்மத்)
- ‘‘யார் சுவர்க்கத்தின் இன்பங்களைச் சுவைக்க விரும்புகிறாரோ அவர் சமூகத்தோடு இணைந்திருக்கட்டும்.’’
- மேற்படி ஹதீஸ்களில் முஸ்லிம் சமூகம் சத்தியத்தில் ஒன்றுபடுவார்கள் என்ற கருத்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதேநேரத்தில் உண்மைக்கு முரணானவற்றில் முஸ்லிம் சமூகம் ஒன்றுபடமாட்டாது என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே இஜ்மாஉவின் முடிவுகளுக்கு முஸ்லிம்கள் கட்டுப்படக் கடமைப்படுகின்றார்கள்.
- மனிதனின் சீரிய பகுத்தறிவு இஜ்மாஉவின் அவசியத்தை ஏற்றுக் கொள்கின்றது. சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு குர்ஆன் ஸுன்னாவில் தெளிவான ஆதாரங்கள் காணப்படாதபோது ஸஹாபாக்களும் இஜ்மாஉ மூலமே தீர்வு பெற்றனர். எனவே இஸ்லாத்தின் உயிரோட்டத்தன்மை, நடைமுறைச் சாத்தியத் தன்மை என்பவற்றை விளக்குவதற்கு இஜ்மாஉ இன்றியமையாததாகும். ஏனெனில், குறிப்பிட்டதொரு பிரச்சினையில் முஜ்தஹித்கள் யாவரும் ஏகோபித்து, எவ்வித எதிர்ப்புமின்றி, கருத்து முரண்பாடின்றி ஒரு முடிவிற்கு வருவார்களாயின் அது இஸ்லாமிய எல்லைக்கு வெளியே செல்லாது. ஆகவே பகுத்தறிவு ரீதியாக

நோக்குகின்றபோதும் இஜ்மாஉ அவசியம். அதனடிப்படையில் பெறப்படுகின்ற தீர்மானங்களுக்கு முஸ்லிம் சமூகத்தினர் கட்டுப்பட வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

- **இஜ்மாஉவிற்கான நியதிகள்**
- இஸ்லாமிய வட்டத்தினுள் ஏற்படுகின்ற ஒரு பிரச்சினையின்போது முஜ்தஹிதுகள் ஒன்றுசேர்ந்து இஜ்மாஉவின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வருவதாக இருந்தால் பின்வரும் நியதிகள் அதில் பேணப்பட வேண்டும்.

1. இஜ்மாஉ மேற்கொள்ளப்படுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட முஜ்தஹிதுகள் இருக்க வேண்டும்.
2. முஜ்தஹிதுகளின் ஏகோபித்த முடிவைப் பெறுதல் வேண்டும். பிரதேச, நிற, மொழி, வேறுபாடுகளைக் கவனத்திற் கொள்ளாது அனைவரும் கருத்தில் ஒற்றுமைப்பட வேண்டும். அவர்களில் ஒரு குழுவினர் முரண்பட்டாலும் இஜ்மாஉ இடம்பெற முடியாது.
3. முஜ்தஹிதுகள் தமது முடிவை வார்த்தைகளால் செயலினால் புலப்படுத்த வேண்டும். பெரும்பான்மையோரின் முடிவுகள் இஜ்மாஉவாகக் கொள்ளப்பட முடியும் என சில சட்ட அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

- மேற்குறித்த நியதிகளுக்குட்பட்ட வகையில் பெறப்பட்ட இஜ்மாஉவான முடிவுகளைப் பின்பற்றுவது முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாகும். அம்முடிவுகளை எடுத்த முஜ்தஹிதுகளின் வபாத்திற்குப் பின்னர்தான் அவை பின்பற்றப்பட வேண்டும் என்ற நியதி கிடையாது. ஏனெனில் இஜ்மாஉ குர்ஆன், ஹதீஸ் நிழலிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஸஹாபாக்களின் இஜ்மாஉ அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது. மரணித்த பின்புதான் பின்பற்ற வெண்டுமென்ற நியதியிருப்பின் மறுமை நிகழும் வரை இஜ்மாஉ முடிவுகளை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றதாகிவிடும்.

**இஜ்மாஉவின் வகைகள்**

- இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இஜ்மாஉவை பல வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை ஒவ்வொன்றும் ஆதாரபூர்வத் தன்மையில் பல படித்தரங்களைக் கொண்டிருக்கின்றன. இஜ்மாஉ ஸரீஹ், இஜ்மாஉ ஸுகூத்தி, இஜ்மாஉ முரக்கப், இஜ்மாஉல் அக்ஸரிய்யா என்பவற்றை இவற்றுக்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

**அ) இஜ்மாஉ ஸரீஹ்:**

சமகாலத்தில் வாழ்கின்ற முஜ்தஹிதுகள் ஒவ்வொருவரும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சட்டப் பிரச்சினை தொடர்பாகத் தமது கருத்தையும் நிலைப்பாட்டையும் தெளிவாக முன்வைப்பதன் மூலம் ஒருமைப்பட்ட முடிவொன்றுக்கு வருவதையே 'இஜ்மாஉ ஸரீஹ்' என்று அறிஞர்கள் அடையாளப்படுத்துவர். 'இஜ்மாஉ ஸரீஹ்' என்பது 'தெளிவான இஜ்மாஉ' என்ற கருத்தைத் தரும். இத்தகைய இஜ்மாஉவே திட்டவட்டமானதாக, சந்தேகத்திற்கிடமற்றதாக ஆதாரபூர்வமானதாக அனைவராலும் கொள்ளப்படுகின்றது. இதனைச் சட்ட அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வர். இதற்கு உதாரணமாக நபி (ஸல்) அவர்களது வபாத்தின் பின்னர் இஸ்லாமிய அரசின் தலைவராக அபூபக்ர் (ரழி) அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதைக் குறிப்பிடலாம். மற்றொரு உதாரணமாக உமர் (ரழி) அவர்களது ஆட்சியில் கால்நடைகளில் குதிரைக்கும் ஸகாத் வாஜிபாகும் என தீர்மானிக்கப்பட்ட இஜ்மாஉவைக் குறிப்பிடலாம்.

### ஆ) இஜ்மாஉ ஸுகூதி:

ஏதேனுமொரு சட்டப் பிரச்சினை தொடர்பாக முஜ்தஹிதுகளில் ஒருவர் ஒரு கருத்தைத் தெரிவித்து அக்கருத்து பிரபல்யமடைந்த நிலையில் ஏனைய முஜ்தஹிதுகள் அது தொடர்பாக சார்பாகவோ, எதிராகவோ எக்கருத்தையும் தெரிவிக்காது மௌனமாக இருந்தால் அதனை இஜ்மா ஸுகூதி - மௌன நிலையில் பெறப்பட்ட இஜ்மாஉ என அறிஞர்கள் அடையாளப்படுத்துவர். 'இஜ்மாஉ ஸுகூதியை' இஜ்மாஉவாகக் கொள்ளலாமா என்பது குறித்து மூன்று விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

1. அதனை இஜ்மாஉவாகக் கொள்ள முடியாது.
2. முதற் தர பலமான இஜ்மாஉக்கு அடுத்த தரத்தில் வைத்து ஏற்றுக் கொள்ளலாம்.
3. இஜ்மாஉவாகவல்லாமல் ஆதாரபூர்வமான ஒரு கருத்தாகக் கொள்ளலாம்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களும், ஹனபி மத்ஹபைச் சார்ந்த சில அறிஞர்களும் உட்பட பெரும்பாலான சட்டத்துறை அறிஞர்கள் மேற்படி இஜ்மாஉவை ஏற்றுக் கொள்வதில்லை. மௌனமாக இருப்பவரின் கருத்தையோ, நிலைப்பாட்டையோ தெளிவாக அறிய முடிவதில்லை. இந்நிலையில் முஜ்தஹிதுகளின் மௌன நிலை அவர்களது அங்கீகாரத்தையே காட்டும் என்ற எடுகோளின் அடிப்படையில் முடிவு பெறப்படுவது அம்முஜ்தஹிதுகள் கூறாத கருத்தை அவர்கள் மீது திணிப்பது போன்றதாகும். எனவே அவர்கள் கூறாத கருத்துக்களுக்கு அவர்கள் பொறுப்பாளிகளல்லர்.

மேற்படி இஜ்மாஉவை ஏற்றுக்கொள்வோர் ''முஜ்தஹிதுகள் தமது உடன்பாட்டை தெளிவான வார்த்தைப் பிரயோகங்களில் முன்வைக்க வேண்டும்'' என்ற நியதியில்லை என்கின்றனர். தமது கருத்தை உறுதிப்படுத்த, பின்வரும் நியாயங்களை முன்வைக்கின்றனர். சட்டப் பிரச்சினையின்போது சட்டத்துறையில் ஆழ்ந்த அறிவுடையோர் சிலர் தீர்வை முன்வைக்க ஏனையோர் அதனை அங்கீகரிக்கும் நடைமுறையே பொது வழக்காகும். ஏனையோர் கருத்தை முன்வைக்க முஜ்தஹிதுகள் மாற்றுக் கருத்துக் கூறாமல் இருப்பது அதனை அங்கீகரிப்பதையே குறிக்கும். ஏனெனில், சட்டத்தை விளக்குவதே அவர்களது பணியாகும். கால அவகாசம் கொடுத்தும் கூட ஒரு தீர்மானத்திற்கு முஜ்தஹித் ஒருவர் எதிர்க்கருத்து கொண்டு அதனைத் தெரிவிக்காமலிருப்பது பாவமானதாகும் எனும் கருத்துக்களுக்கமைய 'இஜ்மா ஸுகூதி' சட்ட அங்கீகாரம் பெற முடியுமென்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட இரு சாராரது நியாயங்களையும் எடுத்து நோக்கும்போது இவ்வகை இஜ்மாஉவை இஜ்மாஉ ஸரீஹின் தரத்தில் வைத்து ஏற்றுக் கொள்ள முடியாது என்பது புலனாகின்றது. முழுமையாக அதனை மறுத்து விடுவதும் பொருத்தமானதல்ல. மாற்றமாக இஜ்மாஉ ஸுகூதியைப் பலமான கருத்தொன்றாகக் கொள்வதே சரியானதாகும். அநேக இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இக்கருத்தையே கொள்கின்றனர்.

### இ) இஜ்மாஉ முரக்கப்:

குறிப்பிட்டதொரு விடயத்தில் ஒரு காலப் பிரிவின் சட்ட அறிஞர்கள் குறிப்பிட்ட சில கருத்துக்களைக் கொண்டுள்ளனர். இவ்வனைத்துக் கருத்துக்களுக்கும் மாற்றமாக ஒருவர் புதிதாக ஒரு கருத்தை வெளியிடக் கூடாது என்பர். இதற்கு உதாரணமாகப் பின்வரும் இஜ்மாஉ முடிவைக் குறிப்பிடலாம்.

ஸஹாபாக்களில் காணப்பட்ட சட்ட அறிஞர்கள், இறந்த ஒருவரின் சகோதரர்களோடு அவரது தந்தையின் தந்தையும் வாரிசுரிமை பெறுவர் என்ற விடயத்தில் கீழ்வரும் மூன்று கருத்துக்களைக் கொண்டனர்.

1. தந்தையின் தந்தைக்கு 1/3 இற்குக் குறையாத ஒரு பகுதி கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சகோதரர்களோடு வாரிசுரிமையில் அவர் பங்கு கொள்வார்.

2. தந்தையின் தந்தைக்கு 1/6 இற்குக் குறையாது கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சகோதரர்களுடன் வாரிசுரிமையில் பங்கு கொள்வார்.

3. தந்தையின் தந்தை இருக்கும்போது சகோதரர்கள் வாரிசுரிமையில் எப்பங்கும் பெறமாட்டார்கள்.

இவ்விடயத்தில் ஸஹாபாக்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் தந்தையின் தந்தை வாரிசுரிமை பெறுவார் என்பதில் ஒன்றுபடுகின்றனர். எனவே பின்னால்வரும் சட்ட அறிஞர்கள் தந்தையின் தந்தை வாரிசுரிமை பெறமாட்டார் என்று ஒரு புதிய கருத்தைக் கொண்டு வர முடியாது என ஒன்றுபட்டனர்.

மற்றொரு உதாரணத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம். முஸ்லிம்களில் ஆண்கள் தாடியை வளர விடுவதோடு தொடர்புடைய சட்டத்தில் சட்ட அறிஞர்கள் பின்வரும் கருத்துக்களை கொண்டுள்ளனர்.

1. தாடி வளர்ப்பது ஸுன்னத்தானதாகும்.

2. தாடி வளர்ப்பது வாஜிபானதாகும்.

தாடி வைப்பதை ஸுன்னத் எனவும், வாஜிபு எனவும், அதன் சட்டத் தரத்தில் கருத்து வேறுபாடு கொண்டாலும் தாடி வைக்க வேண்டும் என்பதில் ஒன்றுபட்டனர். ஆகவே தாடியை நீக்குவது என்ற ஒரு புதிய கருத்தைக் கொண்டு வர முடியாது என ஒன்றுபட்டனர்.

**ஈ) இஜ்மாஉ அக்ஸரிய்யா:**

ஏதேனுமொரு சட்டப் பிரச்சினை தொடர்பாக முஜ்தஹிதுகளில் பெரும்பான்மையானோர் ஒரு கருத்தில் உடன்பட்டு மற்றும் சில முஜ்தஹிதுகள் முரண்பட்டாலும் அது இஜ்மா முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதே இஜ்மா அக்ஸரிய்யாவாகும். முஜ்தஹிதுகளில் பெரும்பான்மையோரது முடிவு இஜ்மாவாகுமா என்பதில் பல்வேறு விதமான கருத்துக்கள் காணப்படுகின்றன.

1. ‘இஜ்மா அக்ஸரிய்யா’ இஜ்மா முடிவாக கொள்ளப்படமாட்டாது என்பதே இஸ்லாமிய அறிஞர்களது பொதுவான கருத்தாகும். இஜ்மா ஒரு சட்ட மூலாதாரம் என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் முழுச்சமூகத்தையும் தழுவியதாக அமைந்துள்ளதேயன்றி சமூகத்தில் பெரும்பான்மையானோர் தவறிழைக்கமாட்டார்கள் என்பதைக் காட்டமாட்டாது என்பது அவர்களது வாதமாகும். ஸஹாபாக்களது நடைமுறையும் இதனையே உணர்த்துகின்றது. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் பெரும்பான்மையினரின் கருத்துக்களுக்கு மாற்றமான கருத்தினையே சில பிரச்சினைகளில் கொண்டிருந்தார்கள் என இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

2. இஜ்மாஉ அக்ஸரிய்யாவை இஜ்மாவாக ஏற்றுக்கொள்ள முடியும் என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். இவர்களுள் இமாம் முஹம்மத் இப்னு ஜரீர் அத்தபரி, அபூபக்ர் அர்ராஸி, அஹ்மத் இப்னு ஹன்பல் போன்றோர் முக்கியமானவர்களாவர்.

3. இன்னும் சிலர் முத்தவாதிருடைய எண்ணிக்கையை விட குறைந்த அளவில் முரண்பட்டோர் இருப்பின் பெரும்பான்மையோரது கருத்து இஜ்மாவாகக் கொள்ளப்படலாம் எனக் கருதுகின்றனர்.

4. மற்றும் சிலர் பெரும்பான்மையோரது முடிவு ஒரு ஆதாரமேயன்றி இஜ்மாவல்ல என்கின்றனர்.
5. வேறு சிலர் பெரும்பான்மையோரது முடிவைப் பின்பற்றுவது பொருத்தமானது என்கின்றனர்.

- இஜ்மாஉ அக்ஸரிய்யாவை ஏற்றுக் கொள்வோர் முன்வைக்கும் ஆதாரங்கள்

1. நபி (ஸல்) அவர்களது ஹதீஸ்கள்

‘‘அல்லாஹுத்தஆலா முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்தை வழிகேட்டில் ஒன்றிணைக்க மாட்டான்’’(ஹாகிம்)

‘‘நீங்கள் கருத்து வேறுபாடுகளைக் கண்டால் பெரும்பான்மையோரது கருத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்’’(புகாரி)

‘‘நீங்கள் சமூகத்தைச் சார்ந்திருங்கள்’’

‘‘தனித்துச் செல்வது குறித்து நான் எச்சரிக்கை செய்கிறேன்’’

2. பெரும்பான்மையான ஸஹாபாக்களின் கருத்தின் அடிப்படையிலேயே முதற் கலீபா தெரிவு இடம்பெற்றது. ஆரம்பத்தில் அலி (ரழி), ஸஃத் இப்னு உப்பாதா (ரழி) ஆகியோர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.
3. ஏதேனுமொரு விடயத்தில் தனித்த சிலரது கருத்து முழுமையான அறிவைப் பிரதிபலிக்கமாட்டாது. ஆனால், பலரது கூட்டான கருத்து தெளிவான அறிவின் அடிப்படையில் அமைந்திருக்கும். ஆகவே இஜ்மாஉவிலும் இது சாத்தியமானதே.
4. பெரும்பான்மையான முஜ்தஹிதுகள் ஒரு கருத்தால் உடன்பட்டிருப்பது அக்கருத்து வலுவானதாக இருப்பதற்கு ஆதாரமாகும்.
5. குறிப்பிட்ட ஒரு சாராரது முரண்பாட்டைக் கருத்திற் கொண்டு செயற்பட்டால் இஜ்மாஉ எந்த வகையிலும் இடம்பெறுவது சாத்தியமாகாது.
6. இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூட தொடர்ந்து வந்த காலப் பகுதிகளில் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார்கள்.

**இஜ்மாஉவின் பிரிவுகள்:**

இஜ்மாஉ ஆனது அதனை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த ஆதாரத்தின் அடிப்படையில் நோக்கும்போது இரு வகைப்படும்.

1. இஜ்மா நக்லி:

அல்குர்ஆன், ஸுன்னா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் இஜ்மா. உ-ம்: பெண்களுக்கு தங்கம் ஹலாலானது என்ற ஏகோபித்த முடிவைக் குறிப்பிடலாம்.

2. இஜ்மாஉ இஜ்திஹாதி:

ஏனைய சட்ட மூலாதாரங்களைக் கொண்டு உருவாகும் இஜ்மாஉ. உ-ம்: அபூபக்ர் (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம்.

இஸ்லாம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்துகின்ற அல்லது கட்டியெழுப்ப முயற்சிக்கின்ற ஓர் அடிப்படை அம்சம் முஸ்லிம்களது ஐக்கியமும், ஒருமைப்பாடுமாகும். மிகப் பிரதான இறைவணக்கங்களிலும் அன்றாட விவகாரங்களிலும் இதனை ஏற்படுத்த இஸ்லாம் முயற்சிக்கின்றது. இந்த வகையில்

இஜ்மாஉ எனும் துணை மூலாதாரத்தின் அடிப்படையிலும் முஸ்லிம்களது கருத்தொற்றுமையைத் தோற்றுவித்து நடைமுறை வாழ்க்கையில் அவற்றைப் பிரதிபலிக்கவைக்க முயற்சிக்கின்றது.

**கியாஸ் (ஒப்புநோக்கல்)**

- கியாஸ் எனும் அறபுச் சொல் அளத்தல், ஒப்புநோக்கல், சமப்படுத்தல் என்ற கருத்துக்களைத் தரும்.
- இஸ்லாமிய பரிபாஷையில் சட்டம் தெளிவாக வராத ஒரு புதிய பிரச்சினைக்குரிய தீர்ப்பை, சட்டம் தெளிவாகக் கூறப்பட்ட அதேபோன்ற ஒரு பிரச்சினையுடன் ஒப்புநோக்கி, அத்தீர்ப்பைப் புதிய பிரச்சினைக்கு வழங்குதல்.
- இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களுள் நான்காம் இடத்தைப் பெறும் கியாஸ், முதல் மூன்று சட்டமூலாதாரங்களான அல்குர்ஆன், அஸ்ஸுன்னா. இஜ்மாஉ ஆகியவற்றுள் ஒன்றிலேனும் தீர்வு கிடைக்காத போதே செயற்படுத்தப்படல் வேண்டும்.
- பொதுப் பண்புகளில் ஒத்த தன்மை காணப்படும்போது, இரு விடயங்களுக்கும் ஒரே சட்டம் கொடுக்கப்படல் வேண்டும் என்பது எளிமையான ஒரு விடயமாகும். இந்த சமத்துவக் கோட்பாட்டை அல்குர்ஆனும் பல்வேறு இடங்களில் வலியுறுத்துகின்றது.
- பூமியில் அவர்கள் பயணம் செய்து அவர்களுக்கு முன்னர் இருந்தவர்களின் முடிவு எப்படி ஆயிற்று என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? (47:10)
- பொதுப்பண்புகள் காணப்படாதபோது அவற்றைப் பிரித்துக் காட்டவும் அல்குர்ஆன் தயங்கவில்லை. ‘‘தீமைகளைச் சம்பாதித்தார்களே அவர்கள், ஈமான் கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களே அவர்களைப் போன்று (மறுமையில்) அவர்களையும் நாம் ஆக்கிவிடுவோம் என்று எண்ணிக் கொண்டார்களா? அவர்கள் உயிர் வாழ்வதும் அவர்கள் மரணமடைவதும் சமமானதாகும். அவர்கள் தீர்ப்புச் செய்வது மிகக் கெட்டதாகிவிட்டது.’’ (45:21)
- ‘‘அறிந்தவர்களாக இருப்பவர்களும் அறியாமலிருப்பவர்களும் (தம்மில்) சமமாவார்களா?’’ (39:9)
- கஸ்அமிய்யா என்ற பெண்மணி நபி (ஸல்) அவர்களிடம், எனது தந்தை ஹஜ்ஜை நிறைவேற்றாது மரணித்துவிட்டார். அதனை நான் நிறைவேற்றலாமா? எனக் கேட்க, உனது தந்தை விட்டுச் சென்ற கடனை நீர் நிறைவேற்றினால் அது நிறைவேறுமா? என நபி (ஸல்) அவர்கள் வினவினார்கள். அதற்கு அப்பெண் ‘ஆம்’ எனக் கூற, ‘அல்லாஹ்வுக்குரிய கடன் நிறைவேற்றுவதற்கு மிகவும் உரித்துடையது’ என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (புஹாரி)

**கியாஸ் இஸ்லாமிய ஷரீஅத்தில் அங்கீகாரம் பெற்றதா?**

- இவ்விடயம் தொடர்பாக மூன்று கருத்துக்களும் அதனை ஒட்டிய செயற்பாடுகளும் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் மத்தியில் காணப்படுகின்றன.

1. கியாஸை ஒரு சட்டமூலாதாரமாக ஏற்றல் வேண்டும். அல்குர்ஆனிலோ, அஸ்ஸுன்னாவிலோ, ஸஹாபாக்களின் கருத்துக்களிலோ, இஜ்மாஉவிலோ தீர்ப்பு எதுவும் காணப்படாதபோது அளவோடு, தேவைக்கேற்ப இதனைப் பிரயோகித்தல் வேண்டும். இக்கருத்தையே பெரும்பாலான சட்ட அறிஞர்கள் கொண்டுள்ளனர்.

2. இஸ்லாமிய சட்டக்கலையில் கியாஸ், அறவே அங்கீகரிக்கப்படாத ஒன்றாகும். இக்கருத்தை ளாஹிரீ மத்ஹபினரும் ஷீஆ இமாமியாக்களும் கூறுகின்றனர். ளாஹிரீ மத்ஹபினர், சட்ட வசனங்களுக்குக் காரணம் கற்பிப்பதை முழுமையாக எதிர்த்தனர். ஒவ்வொரு வசனத்தையும் வெளிப்படையாகவே நோக்க வேண்டும் என அவர்கள் கருதினர்.

3. மத்ஹபுகளை பின்பற்றும் சிலர், கியாஸை அளவுமீறிப் பயன்படுத்தினர். பொதுத் தன்மையில் ஒன்றுபடாத இரு விடயங்களில் வலிந்து அதனை ஒன்றுபடுத்த முனைந்தனர். சிலபோது, குறிப்பாக மாலிக் மத்ஹபினர் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா வில் பொதுவாக வந்தவற்றை கியாஸ் குறிப்பாக்கும் என்றளவிற்குக் கூட சென்றனர்.

- கியாஸ் ஷரீஅத்தில் அங்கீகாரம் பெற்றது. அதனை அளவோடு பயன்படுத்த வேண்டும் என்போரின் ஆதாரங்கள்
- ‘‘மு.்.மின்களே! அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள். இன்னும் (அவன்) றஸூலுக்கும் உங்களில் அதிகாரம் உடையவருக்கும் வழிப்படுங்கள். ஏதேனும் ஒரு விஷயத்தில் பிணங்கிக் கொண்டால் -அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நீங்கள் ஈமான் கொள்பவர்களாக இருந்தால்- அதனை அல்லாஹ்வின் பக்கமும் (அவன்) ரஸூலின் பக்கமும் திருப்பி விடுங்கள். இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகவும், மிக அழகிய முடிவாகவும் இருக்கும்.’’ (4:59). இந்த இறைவசனத்தில், அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் திரும்பிச் செல்வது என்பது புதிய பிரச்சினைக்குச் சட்டம் தேடும்போது சட்ட வசனங்களுக்கான காரணங்களைத் தேடி அதன் மூலம் தீர்ப்புப் பெறுவதைக் குறிக்கும். இதனையே கியாஸ் என்கின்றோம்.
- அல்குர்ஆனே பல்வேறு சட்டங்களுக்குரிய காரணங்களையும் பொதுத் தன்மைகளையும் எடுத்துக் கூறுகின்றது. உதாரணமாக:
- கனீமத் பொருட்கள் பலரிடமும் பிரிந்து செல்ல வேண்டியதற்கான காரணம்: ‘‘(ஏனெனில் பொருள்) உங்களில் செல்வந்தர்களுக்கு மத்தியில் (மட்டும்) சுற்றி வருவதாய் ஆகாமலிருப்பதற்காக...’’ (59:7)
- மதுவும் சூதாட்டமும் தடைசெய்யப்பட்டதற்கான காரணம்: ‘‘ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுவினாலும் சூதாட்டத்தினாலும் உங்களுக்கிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டாக்குவதற்கும் அல்லாஹ்வுடைய திக்ரை விட்டும் தொழுகையை விட்டும் உங்களை அவன் தடுப்பதற்குமேயாகும்.’’ (5:91)
- ஸுன்னாவும் சட்டங்களுக்குரிய காரணங்களை முன்வைக்கின்றது. உதாரணமாக: ஒருவர் பிறரது வீட்டில் நுழைவதற்கு முன் அனுமதி கேட்டல் வேண்டும் என்பதற்கான காரணம்: ‘‘பார்வை காரணமாகவே அனுமதி கோர வேண்டும் என உருவாக்கப்பட்டது.’’ மற்றும் உழ்ஹியா இறைச்சியைச் சேமித்து வைப்பது தடுத்தமையும் பின்னர் அனுமதித் தமைக்குமான காரணம்: ‘‘நாடோடிகளாகத் திரிகின்ற, உணவு வசதிகளற்றவர்களுக்காகத்தான் அதைத் தடுத்திருந்தேன்.’’
- ஸஹாபாக்கள் கியாஸை ஏற்றுச் செயற்படுவதாக இஜ்மாவான முடிவெடுத்திருந்தனர். அந்த அடிப்படையில்தான்: அபூபக்கர் (ரழி) பாட்டானாருக்கு வாரிசுரிமையில் தந்தையுடைய ஸ்தானத்தை வழங்கினார். மற்றும் அபூபக்ர் (ரழி) அவர்கள் தொழுகைக்கு இமாமத் செய்வதை கிலாபத்துக்குத் தகுதி பெறுவதற்கான காரணமாக ஸஹாபாக்கள் கருதினர். அவ்வாறே அலி (ரழி) மதுவுக்குரிய தண்டனையாக அவதூறுக்குரிய தண்டனையை (80 கசையடிகள்) வழங்கப்பட வேண்டும் எனத்

தீர்மானித்தார். போதை அவதூறு கூறுவதற்கு இட்டுச் செல்லும் என்பதால் இத்தீர்மானம் பெறப்பட்டது.

- சில மு.்.தஸிலாக்கள், ளாஹிரிய்யாக்கள், இமாமியாக்கள் போன்றோர் கியாஸ் ஷரீஅத்தின் அங்கீகாரம் பெற்றதல்ல எனக் கூறுகின்றனர்.

**அர்கானுல் கியாஸ்**

- கியாஸ் நான்கு அடிப்படைகளைக்

  கொண்டது.

1. **அஸ்ல்:** இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களினால் தெளிவாக சட்டம் குறிப்பிடப்பட்டுள்ள விடயம். இந்த அடிப்படை அல்குர்ஆன் அல்லது அஸ்ஸுன்னா அல்லது இஜ்மாஉவில் வந்ததாக இருக்க வேண்டும் என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

   இஜ்மாஉவிற்கு உதாரணம்:

   பருவ வயதையடைந்த, சீர்மையான, புத்தியுள்ள பெண்ணுக்கு அவளது சொத்துக்களை வைத்திருக்கும் பூரண உரிமையுண்டு. அவ்விடயத்தில் யாரும் தலையிட முடியாது என்ற இஜ்மாவான முடிவை வைத்து, அவ்வாறான பெண் விரும்பாத ஒருவரை அவளுக்குத் திருமணம் செய்து வைக்க முடியாது. அவளுக்குத் தனது கணவனைத் தெரிவு செய்து ஏற்றுக் கொள்ளும் பூரண உரிமை உண்டு என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

- கியாஸின் மூலம் பெறப்பட்ட ஒரு விடயத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை அஸ்லாக்கி சட்டம் பெற முடியுமா என்பதில் கருத்து வேறுபாடுண்டு. பெரும்பாலான அறிஞர்கள் இதனை முடியாது என்றே கூறுவர். ஏனெனில், கியாஸ் ஏதோவொரு சட்டவசனத்தை அடியாகக் கொண்டே உருவாகியிருக்க வேண்டும். எனவே அதனை வைத்துத்தான் இரண்டாவதுள்ள இப்புதிய பிரச்சினையையும் நோக்க வேண்டும். எனினும், மாலிகி மத்ஹபைச் சேர்ந்த இப்னு ருஷ்த் போன்றோர் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மாஉவின் மூலம் சட்டம் பெறமுடியாது என்ற கட்டத்தில் கியாஸை அடிப்படையாகக் கொண்டும் சட்டம் வகுக்கலாம் எனக் கருதுகின்றனர்.

2. **பரஉ:** தீர்வு காண வேண்டிய புதிய பிரச்சினை: இதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு.

- இப்புதிய பிரச்சினைக்கு நேரடியாக சட்டவசனங்கள் மூலம் தீர்ப்பு வராததாக இருத்தல் வேண்டும். தெளிவாகத் தீர்ப்பு இருக்கும் பட்சத்தில் கியாஸ் செல்லுபடியாகாது.

  உ-ம்: ஸ்பெய்னைச் சேர்ந்த ஒரு சட்ட அறிஞரிடம், ரமழான் பகல் பொழுதில் மனைவியுடன் உடலுறவு கொண்டால் அதற்கான கப்பாரா யாது என வினவப்பட்ட போது, அவர் 60 நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். உடலை வருத்த வேண்டும் என்பதற்காகவும் அதிகமான அடிமைகளைக் கொண்டிருப்பவருக்கு அடிமையை விடுதலை செய்வது இலகுவானது என்பதனாலும் பொது நன்மையைக் கருதி, இத்தீர்ப்பை அவர் வழங்கினார். ஆனால், நபி (ஸல்) அவர்கள் இப்பிரச்சினை தொடர்பாக தெளிவான ஹதீஸ் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர் ஓர் அடிமையை விடுதலை செய்தல், முடியாவிடில் இரண்டு மாதம் தொடர்ந்து நோன்பு பிடித்தல், முடியாவிடில் 60 ஏழைகளுக்கு

உணவளித்தல் என அந்த ஹதீஸில் வந்துள்ளது. இந்நிலையில் இந்த கியாஸ் செல்லுபடியாகாது. அடிமையை விடுதலை செய்வது ஒரு தனிமனிதனின் உடலை வருத்துவதை விட சிலபோது சமூக ரீதியில் நன்மை கூடியதாக அமைய முடியும்.

பரஉவில் காரணம் ஒன்று இடம்பெறுதல் வேண்டும் அந்தக் காரணம் அஸ்லிலும் பரஉவிலும் வித்தியாசப்படாது இருத்தல் வேண்டும்.

உ-ம்: போதை ஏற்படுத்தல் என்ற விடயத்தை இல்லத்தாகக் கொண்டு மதுபானம் ஹராமாக்கப்பட்டது. எனவே, போதை தரக் கூடிய திண்மமான, திரவமான, வாயுவான பொருட்கள் அனைத்தும் ஹராமாக்கப்படல் வேண்டும்.

3. **இல்லத்:** காரணம், பொதுத் தன்மை

கியாஸின் முக்கிய ஒரு கூறாக இல்லத் விளங்குகின்றது. அதற்குக் கீழ்வரும் நிபந்தனைகள் உண்டு.

அ) இல்லத் வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

- உழ்ஹிய்யா இறைச்சியைச் சேமிப்பது தடுக்கப்பட்டமைக்குக் காரணம் அதன்பால் தேவையுள்ள குழுக்கள் வந்திருந்தமையாகும்.
- உறவு முறையில் நெருக்கம் கூடுதலாக அமைந்திருப்பதன் காரணமாகவே உடன் பிறந்த சகோதரன், தந்தை மூலமாகப் பெறப்பட்ட சகோதரனைவிட வாரிசுரிமையில் முற்படுத்தப்படுதல்.

ஆ) இல்லத் சட்டவிதியின் நிரந்தரப் பண்பாகவும் எச்சந்தர்ப்பத்திலும் மாறாததாகவும் இருத்தல் வேண்டும். காலம், இடம், நேரம், தனிமனிதர்களின் மாற்றத்திற்கேற்ப இல்லத் மாறாததாக இருத்தல் வேண்டும்.

உ-ம்: மதுபானத்தில் உள்ள போதை என்ற பண்பு எப்போதும் நிரந்தரமானது.

இ)சட்டத்திற்கும் இல்லத்திற்கும் இடையில் மிகச் சரியான பொருத்தப்பாடு இருத்தல் வேண்டும். அதாவது அது உண்மைக் காரணியாக இருத்தல் வேண்டும். மது தடுக்கப்பட்டதற்கான காரணம், அது போதை தரக்கூடியதாக இருப்பதனாலேயாகும். அது திரவமென்பதனாலோ குறித்த நிறம் கொண்டதாக இருப்பதனாலோ அன்று.

ஈ) இல்லத் குறித்ததொன்றுக்காக என்றிராது மற்றொன்றுக்கும் அமுலாக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

உ-ம்: போதை திரவ மதுசாரத்தில் மாத்திரம்தான் இருக்கும் என்பதில்லை. அது வேறு தன்மைகள் கொண்ட பொருட்களிலும் இருக்க முடியும். ரமழான் நோன்பின் போது பிரயாணம் செய்பவர் நோன்பை விட்டு விட்டு கழாச் செய்யலாம் என்ற விடயத்தில் பிரயாணம் என்பதே இல்லத்தாகும். இந்த இல்லத் தொழுகைக்குப் பொருந்தாது. இது நோன்புக்கு மட்டுமே உரியது.

உ) அந்த இல்லத்தை ஏற்க முடியாது எனச் சட்ட வசனம் எதுவும் வந்திருக்கக் கூடாது. அதாவது சட்ட வசனத்திற்கு முரணான ஓர் இல்லத்தைக் கொண்டு வர முடியாது.

உ-ம்: உடலை வருத்துதல் என்ற இல்லத்தை வைத்து ரமழானின் பகற்பொழுதில் உடலுறவு கொள்வதன் மூலம் நோன்பை முறித்தவருக்கான கப்பாராவை இரு மாதகால நோன்பிலிருந்து ஆரம்பிக்க முடியாது.

**4. ஹுக்கும்:** சட்டம்

- அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மா என்னும் சட்ட மூலாதாரங்களின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்கள் ஹுக்கும் எனப்படும். இவ்வாறான சட்டங்களைப் புதிய பிரச்சினைக்குப் பொருத்துவதே கியாஸின் பணியாகும். அதற்குக் கீழ்வரும் நிபந்தனைகள் காணப்படுகின்றன.

அ) அது நடைமுறை வாழ்வு தொடர்பான சட்டங்களாக இருத்தல் வேண்டும்.

ஆ) மாற்றப்பட்ட (மன்சூக் செய்யப்பட்ட) சட்டவிதியாக இருக்கக் கூடாது.

இ) சட்டவிதிகளுக்குரிய காரணத்தைப் பகுத்தறிவைக் கொண்டு அறியக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

உ-ம்: மது, சூதாட்டம், இறந்த மாமிசத்தைச் சாப்பிடுதல், பிறரின் சொத்தை அபகரித்தல் போன்றன ஹராம் என்பதற்கான காரணம் பகுத்தறிவால் உணரக் கூடியதாகும். ஆனால், தயம்மும் தொழுகையுடைய ரக்அத்துக்களின் எண்ணிக்கைகள், தொழும் முறை போன்றன குறிப்பிட்ட அமைப்பில் கியாஸ் செய்ய முடியாது என்ற ஏகோபித்த முடிவு பெறப்பட்டுள்ளது.

ஈ) குறித்த சில நபர்களுக்கென அமைந்த சட்டவிதிகளாக இருக்கக் கூடாது. உ-ம்: ஒரே நேரத்தில் நான்கு பெண்களை விட அதிகமானவர்களை மனைவிகளாக வைத்திருக்கும் அனுமதி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மாத்திரமே உண்டு. அபூ குஸைமா அல் அன்ஸாரி என்பவரின் சாட்சியத்தை இருவரின் சாட்சியத்திற்குச் சமனானதாக நபியவர்கள் ஏற்றுக் கொண்டமை அவருக்கு மாத்திரமே உரியதாகும்.

**கியாஸின் வகைகள்**

- இல்லத்தின் பெறுமானத்தை மையமாக வைத்து கியாஸ் மூன்று வகையாகப் பிரியும்.

1. கியாஸுல் அவ்லா:

பர்உவில் காணப்படும் இல்லத் அஸ்லின் இல்லத்தை விட பெறுமானத்தில் கூடுதலாக இருத்தல். உ-ம்: பெற்றோருக்குத் துன்புறுத்தல் செய்வதைத் தடுத்துள்ள, ''அவர்களிருவருக்கு நீ சீ என்றும் கூறிவிடாதே'' (17:23) என்ற வசனத்தில் வார்த்தை ரீதியாகத் துன்புறுத்தல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை விட அவர்களுக்குச் சாட்டையால் அடிப்பது கடுமையானது. ஒரு மு.ஃமினைப் பற்றி நல்லதாகவே எண்ணுதல் வேண்டும் என்ற ஹதீஸிலிருந்து அவனைப் பற்றிப் பேசும்போதும் நல்லதாகவே பேச வேண்டும் என்பது மேலானது என்ற கருத்தைப் பெறலாம்.

2. கியாஸுல் முஸாவீ:

அஸ்லிலும் பர்உவிலும் இருக்கும் இல்லத் சமனான பெறுமானம் கொண்டதாக இருத்தல். உ-ம்: நாய் நக்கிய பாத்திரத்தை ஏழுமுறை கழுவுமாறு ஹதீஸில் கூறுகிறது. பன்றி நக்கினாலும் அவ்வாறு ஏழுமுறை கழுவுதல் வேண்டும் என்பது சமமான கியாஸின் மூலம் பெறப்பட்டதாகும்.

3. கியாஸுல் அத்னா:

அஸ்லை விடவும் பர்உவில் உள்ள இல்லத்தின் பெறுமானம் குறைவானதாக இருத்தல். உ-ம்: போதை ஏற்படுத்துதல் என்பது மதுசாரம் தடுக்கப்பட்டதற்கான காரணமாகும். சில மதுசாரங்களில் போதையின் வீதம் குறைவாக இருப்பினும்

அதற்கு ஹராம் என்ற சட்டமே வழங்கப்படுதல் வேண்டும்.

- கியாஸை ஹனபி மத்ஹப் அறிஞர்கள் அல் கியாஸுல் ஜலீ எனவும் அல்கியாஸுல் கபீ எனவும் பிரிப்பர். இமாம் ஷாபிஈ கியாஸுல் ம.்.னா எனவும் கியாஸுஷ் ஷிப்ஹ் எனவும் இரு வகையாகப் பிரித்து நோக்குகின்றார்.

**கியாஸின் பயன்கள்**

- இஸ்லாமிய சட்டக் கலை வளர்ச்சிக்குத் துணை செய்கிறது.
- புதிதாகத் தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற உதவுகிறது.
- எல்லாக் காலத்திலும் தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற முடியும் என்ற கருத்தை உறுதிப்படுத்துகிறது.
- இஸ்லாம் இறுதியாகத் தோன்றிய மார்க்கம் என்பதால் இறுதிவரை அதன் இயக்க சக்தியைப் பேண வழிசெய்கிறது.

**கௌலுஸ்ஸஹாபி**

இது துணை மூலாதாரங்களில் ஒன்றாகும். இது மத்ஹபுஸ் ஸஹாபி என்றும் அழைக்கப்படுகின்றது.

**கௌலுஸ்ஸஹாபி சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரம்**

- ஸஹாபாக்கள் நபி(ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமானவர்கள்; வஹி இறங்குவதை அவதானித்தவர்கள்; நபியவர்கள் சட்ட ஒழுங்குகளை முன்வைத்த போது ஆழ்ந்து அவதானித்தவர்கள்; பின்பற்றியவர்கள் என்றவகையில் நபித்தோழர்களது கருத்துக்களும் வாழ்வும் ஆதாரமாகக் கொள்ளத்தக்கவையாகும்.

- ஸஹாபாக்களது கருத்துக்கள் இறைத்தூதரது ஸுன்னாவாகவும் இருக்க முடியும். ஏனெனில் சிலபோது ஸஹாபாக்கள் இறைத்தூதரது கருத்துக்களை அவரது கருத்துக்கள் என்று குறிப்பிடாமல் முன்வைத்த சந்தர்ப்பங்களும் உண்டு. இந்த வகையில் ஸஹாபாக்களது கருத்துக்களுக்கு உயர்ந்த அந்தஸ்து கொடுக்க வேண்டும்.

- குறிப்பிட்ட ஒரு பிரச்சினை தொடர்பாக ஸஹாபாக்கள் தமது சொந்த ஆய்வின் அடிப்படையில் குறிப்பிட்டிருந்தாலும்கூட அவை சிறந்த கருத்துக்களாகவே கொள்ளப்படும். ஏனெனில் அவர்கள் பரம்பரையினருள் சிறந்த பரம்பரையினர் என நபியவர்களால் போற்றப்பட்டவர்களாவர்.

- ஒரு ஸஹாபி முன்வைத்த கருத்தானது மக்களிடையே பிரபல்யம் அடைந்து அதனை யாரும் மறுக்காவிட்டால் அது இஜ்மா ஸுகூதியின் அந்தஸ்தை அடைகிறது.

- சில குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் ஸஹாபாக்களது உயர்நிலையை எடுத்துக் காட்டுவது அவர்களது கருத்துக்களையும் ஆதாரமாகக் கொள்ள முடியும் என்பதை உணர்த்தும்.

  உதாரணமாக : ‘‘நான் எனது ஸஹாபாக்களுக்கு நம்பிக்கைக்குரியவர். அவ்வாறே எனது ஸஹாபாக்கள் எனது உம்மத்தினருக்கு நம்பிக்கைக்குரியவர்கள்.’’

- சில சட்ட அறிஞர்கள் கௌலுஸ் ஸஹாபியை ஆதாரமாகக் கொள்வதில்லை. அதற்கு அவர்கள் முன்வைக்கும் நியாயங்களாவன.

  அ). ஸஹாபாக்கள் பிழைவிடுவதிலிருந்து பாதுகாக்கப்பட்ட ம.்.ஸூம்கள் அல்லர். அவர்களும் ஏனைய முஜ்தஹித்களைப் போன்றவர்களே முஜ்தஹித்கள் சிலபோது பிழையான முடிவுகளுக்கு வரக்கூடும்.

  ஆ). சில போது தங்களது பத்வாக்களில் தாம் பிழைவிட்டதை ஸஹாபாக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

  இ). ஸஹாபாக்கள் பிழைவிட்ட போது பிறர் அதனைத் திருத்திவிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு

  ஈ). சில ஸஹாபாக்கள் சில சந்தர்ப்பங்களில் தாபிஈன்களின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

  உ). ஸஹாபாக்கள் பற்றி சிலாகித்துக் கூறப்பட்ட ஹதீஸ்கள் அவர்களது உயர்ந்த அந்தஸ்தை உணர்த்துவதேயொழிய தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என்ற கருத்தைத் தர மாட்டா.

- கௌலுஸ் ஸஹாபி குர்ஆன் ஸுன்னா போன்ற ஒரு மூலாதாரமாகக் கொள்ளப்படுவதில்லை. மாறாக குர்ஆன் ஸுன்னாவின் அடிப்படையில் பெறப்பட்ட கருத்துக்களைப் பலப்படுத்துவதாகவும் சிலபோது சமூக நிர்வாக அம்சங்கள் குறித்த விடயங்களுக்குத் தீர்வு பெறுவதற்காகவும் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன.

**அல் இஸ்திஹ்ஸான்**

- அல் இஸ்திஹ்ஸான் மொழிக்கருத்தில் நல்லதென, சிறந்ததென, அழகானதென காணல்/ கருதுதல் எனப் பொருள்படும்.
- இதற்குப் பல வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள்

அ) ஒரு கியாஸை விட்டும் நீங்கி அதனைவிடப் பலமான ஒரு கியாஸை நோக்கிச் செல்வதாகும்.'

அதாவது கியாஸ் சில இடங்களில் பொருத்தமில்லாது அமையும். சில போது அதன் பிரயோகத்தை விட்டுவிட வேண்டி ஏற்படும். அப்போது கியாஸை விட்டு பிறிதொரு தீர்வுக்கு வரும் முயற்சியே இஸ்திஹ்ஸான் ஆகும்.

ஆ) 'குறிப்பிட்ட ஆதாரம் முன்வைக்கின்ற சட்டத்தீர்ப்புக்குப் பகரமாக மனிதர்களது நலன்கருதி அவர்களது வாழ்வில் காணப்படும் மரபு, வழக்கு என்பவற்றை நோக்கிச் செல்வதே இஸ்திஹ்ஸான் ஆகும்.'

இ). ஆதாரவம் வழங்கும் தீர்ப்பை விட்டுவிட்டு மனித நலனைக் கருத்திற் கொண்டு வழக்காறின் அடிப்படையில் தீர்வைப் பெறுவதே இஸ்திஹ்ஸான் ஆகும்.

ஈ) கியாஸின் அடிப்படையிலான சட்டத்திலிருந்து விதிவிலக்களித்து அதனைவிடப் பலமான ஓர் ஆதாரத்தின் அடிப்படையில் குறிப்பான ஒரு சட்டத்தை வழங்குதலே இஸ்திஹ்ஸான் ஆகும்.

உ). பொதுவான கியாஸிற்குப் பகரமாக கிளை நலனொன்றைப் பயன்படுத்தலே இஸ்திஹ்ஸான் ஆகும்.

- இவ்வரைவிலக்கணங்கள் அனைத்தையும் நோக்குகையில் இவற்றுள் எதுவுமே மனோ இச்சையின் பிரகாரம் அல்லது சுய விருப்பின் பிரகாரம் அல்லது வெறுமனே பகுத்தறிவின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதை இஸ்திஹ்ஸான் எனக் குறிப்பிடவில்லை.

- மாலிகி, ஹனபி மத்ஹபினர் இதை அறிமுகப்படுத்தியுள்ளனர். எனினும் ஷாபிஈ, ஹம்பலி மத்ஹபினர் இதை ஒரு சட்ட மூலாதாரமாகக் கொள்வதில்லை.

## இஸ்திஹ்ஸான் வகைகள்

அ). வெளிப்படையாக இருக்கும் கியாஸை விட்டுவிட்டு மறைந்திருக்கும் கியாஸிற்குச் சென்று முடிவு கூறல்.

உதாரணம்: கழுகு, காகம், பருந்து போன்ற வேட்டைப்பறவைகள் அருந்தியதன் பின்பு எஞ்சுகின்ற நீர் சுத்தமானது என இஸ்திஹ்ஸான் அடிப்படையில் தீர்வு பெறப்படுகிறது.

- இங்கு வேட்டைப்பறவைகள் அருந்திய பின்னர் எஞ்சிய நீரை, மனிதன் அருந்திய பின் எஞ்சிய நீருடனே ஒப்பிட்டு முடிவு பெறப்பட்டுள்ளது. ஏனெனில் மனிதன் அருந்திய பின் எஞ்சிய நீர் சுத்தமானதாகும். மனிதன் வாயால் அருந்துகின்றான் அவனது வாய் சுத்தமானதாகும். மேலே சொன்ன பறவைகள் தனது அலகுகளினாலேயே அருந்துகின்றன. அவற்றின் அலகுகள் சுத்தமானதேயாகும். அவ்வலகுகளில் படியும் இரத்தமோ எச்சிலோ அவ்வலகுகளை அசுத்தமாக்காது.

- ஆனால் நாம் வெளிப்படையாகப் பார்த்தால் வேட்டைப்பறவைகள் அருந்தியதன் பின் எஞ்சுகின்ற நீரை, வேட்டை மிருகங்கள் அருந்தியதன் பின் எஞ்சுகின்ற நீருடனே ஒப்பிட வேண்டும். அம்மிருகங்களின் வாயில் உள்ள எச்சில் நீருடன் கலக்கும். அவற்றின் எச்சில் நஜீஸ் என்பதால் நீர் நஜீஸ் என்ற முடிவிற்கே வரவேண்டியது போன்று தோன்றும்.

இங்கு வெளிப்படையான கியாஸை விட்டுவிட்டு மறைவான கியாஸின் (மனிதனுடன் ஒப்பிடல்) மூலமே தீர்வு பெறப்பட்டுள்ளது.

ஆ) பொது விதியாக வந்துள்ள முடிவிற்குப் பகரமாக சிறியதொரு நலனுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் ஒரு முடிவைப் பெறல்.

'நஜீஸை முழுமையாக அகற்றினாலே சுத்தமாகும் என்பது பொது விதியாகும். எனினும் கிணற்றில் ஏதேனும் நஜீஸ் விழுந்துவிட்டால் ஒரு சில வாளி நீரை மாத்திரமே அள்ளி விடுகின்றோம். சுத்தப்படுத்தும் போது நிறம், மனம், சுவை அகற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் மூன்றையும் கிணற்றைச் சுத்தப்படுத்தும் போது நூற்றுக்கு நூறு வீதம் கருத்திற் கொள்வது முடியாததாகையால் அதிலிருந்து விலக்களித்தல் மற்றும் மருத்துவ சிகிச்சைக்காக அவ்ரத்தை பார்க்க அனுமதிக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். அவ்ரத்தைப் பார்ப்பது ஹராமாகும் என்ற பொதுவான விதியிலிருந்து நோயாளிகளுக்குத் தீங்கு நிகழ்வதைத் தடுக்கும் நோக்கில் விலக்களிக்கப்பட்டுள்ளது போன்றவற்றை இங்கு இஸ்திஹ்ஸானுக்கு

உதாரணமாகக் குறிப்பிடலாம். இது நிர்ப்பந்தத்தை (அத்தியவசியத் தேவையை) அடிப்படையாகக் கொண்ட இஸ்திஹ்ஸான் ஆகும். இது இஸ்திஹ்ஸான் ழரூரி ஆகும்.

'மடையன் செய்கின்ற வக்ப் ஏற்றுக் கெள்ளப்படமாட்டாது என்பது பொது விதியாகும். எனினும் மஸ்லஹாவைக் கருத்திற் கொண்டு அவனது வாழ்வில் அவன் செய்யும் வக்ப் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது மஸ்லஹாவை (மனித நலனை) அடிப்படையாகக் கொண்ட இஸ்திஹ்ஸான் ஆகும். இது இஸ்திஹ்ஸான் மஸ்லஹி எனப்படும்.

**இஸ்திஹ்ஸான் சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**

அ). இஸ்திஹ்ஸான் தனியான சட்ட மூலாதாரமன்று. அது கியாஸை அல்லது உருபை சார்ந்து அமைந்தவொன்றாகும்.

ஆ) ஹனபி, மாலிகி மத்ஹபைச் சார்ந்தோர் இதனை அதிகம் பயன்படுத்தியுள்ளனர்.

இ) 'அறிவைப் பத்துப்பாகங்களாகப் பிரித்து நோக்கினால் இஸ்திஹ்ஸான் ஒன்பது பாகங்களாக அமையும்.' என இமாம் மாலிக்(ரஹ்) கூறியுள்ளார்.

ஈ) 'முழுமையாக கியாஸில் மூழ்கிவிடுபவர் நபி அவர்களின் ஸுன்னாவிற்கு வெளியே சென்றுவிட முடியும். இஸ்திஹ்ஸான் அறிவின் தூணாகும்.'என்பது இமாம் மாலிகின் மாணவனான இஸ்பா என்பவரின் கருத்தாகும்.

உ) 'இமாம் அபூஹனீபாவின் மாணவர்கள் கியாஸில் ஏதேனும் சர்ச்சைகளைக் கிளப்பினால் நான் இஸ்திஹ்ஸானுக்குச் செல்கிறேன். அப்போது எவரும் எதனையும் கூறமாட்டார்கள்.' என முஹம்மத் இப்னு ஹஸன் குறிப்பிட்டார்.

ஊ) இஸ்திஹ்ஸான் மூலம் தீர்வு பெறுகின்ற போது கியாஸ், உர்பு, மஸ்லஹா என்பன கருத்தில் கொள்ளப்படுகின்றன. அவை சட்ட மூலாதாரங்கள் என்ற வகையில் இஸ்திஹ்ஸானும் கூட மூலாதாரமேயாகும்.

**இஸ்திஹ்ஸான் சட்ட மூலாதாரமாக ஏற்க மறுப்போர் முன்வைக்கும் நியாயங்கள்.**

அ). எவர் ஒன்றை சிறந்ததெனக்கருதி முடிவெடுக்கின்றாரோ அவர் சட்டமியற்றியவராக மாறுகின்றார். சட்டமியற்றும் அதிகாரம் அடியானுக்கில்லை. அது அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரியதாகும்.

ஆ) சிறந்ததென ஒருவர் கருதுவதானது அவரது விருப்பு வெறுப்பைச் சார்ந்ததாகும். விருப்பு வெறுப்பானது சட்டத்திலும் வேறுபாட்டைத் தோற்றுவிக்கும். எவரும் ஒரு குறித்த திசையை நோக்கி அதன் பக்கமே க.்.பா இருக்கின்றது எனக்கருதித் தொழமுடியாது.

இ) நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் 'உலுல்அம்ர்' களுக்கும் வழிப்பட்டு நடவுங்கள். (விசுவாசிகளே) உங்களுக்குள் யாதொரு விடயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள். (4:59) எனவே இவ்வசனமானது இஸ்திஹ்ஸான் பக்கம் திரும்பும் படி பணிக்கவில்லை.

ஈ) நபி முஹம்மது (ஸல்) அவர்கள் உயர்ந்த அறிவுத் தரத்தில் இருந்தும் கூட இஸ்திஹ்ஸானைப் பயன்படுத்தவில்லை.

உ) வெறுமனே அறிவுக்கும் இஸ்திஹ்ஸானுக்கும் இடம் கொடுத்தால் தகுதியற்றோரும் இஜ்திஹாத் செய்ய முற்படலாம்.

**முடிவு**

இமாம் ஷாபிஈ (றஹ்) கூறுவது போன்று இஸ்திஹ்ஸான் என்பது வெறுமனே நலனை மாத்திரம் கருத்திற் கொண்டு முடிவெடுப்பதல்ல. மாறாக இஸ்திஹ்ஸான் மூலம் தீர்வு பெறுவது என்பது ஒன்றில் உருபை அல்லது மஸ்லஹாவை அல்லது கியாஸை சார்ந்திருந்து தீர்வு பெறுவதாகும். எனவே வெறுமனே மனோஇச்சையில் தங்காமல் ஆதாரம் ஒன்றைத் துணையாகக் கொண்டே இஸ்திஹ்ஸான் பிரயோகிக்கப்படுகின்றது.

**மஸ்லஹா முர்ஸலா / அல் இஸ்திஸ்லாஹ்**

- ஷரீஅத் மனித நலன்காப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இஸ்திஸ்லாஹ் என்பதன் கருத்து சமூக நலனை ஆதாரமாகக் கொள்வதாகும்.

- குர்ஆன் சுன்னாவின் போதனைகள் குறித்த ஒரு விடயம் தொடர்பாகத் தீர்வு சொல்லாத போது மனித நலனைக் கருத்திற் கொண்டு தீர்வு பெறுவதனையே இது குறிக்கும்.

- 'இஸ்திஸ்லாஹ்' என்பது 'மஸ்லஹா முர்ஸலா' எனும் மூலாதாரத்தையே குறிக்கின்றது. ஒரு குறிப்பிட்ட நலன் சம்பந்தமாக அது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கான பிரத்தியேகமான ஆதாரமோ கருத்திற் கொள்ளப்படவில்லை என்பதற்கான பிரத்தியேகமான ஆதாரமோ காணப்படாத போது அதனை 'மஸ்லஹா முர்ஸலா' எனப்படுகிறது. ஷரீஆ எப்போதும் மனித நலன்களைக் கருத்திற் கொள்கிறது. தான் இயற்றியுள்ள அனைத்து சட்டங்களிலுமே அவற்றை நோக்காகக் கொண்டுள்ளது.

- மக்களது அத்தியவசியத் தேவைகள், சாதாரணத் தேவைகள், மேலதிகத் தேவைகள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் மக்கள் நலன்காத்தலையே இது குறிக்கும்.

- மஸ்லஹா அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுகளுக்கு உதாரணங்களாக

- அபூபக்ர் (ரழி) அவர்கள் அல்குர்ஆனை ஒன்றுதிரட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வர இம்மூலாதாரமே காரணமாக இருந்தது. அபூபக்ர் (ரழி) அவர்களுக்கு முன்னர் அல்குர்ஆன் ஒரு நூலாக தொகுக்கப்பட்டிருக்கவில்லை. பல இடங்களில் அது எழுதி வைக்கப்பட்டிருந்தது. ஒரே நூலாக தொகுக்கும் பணியை நபி (ஸல்) அவர்கள் செய்யாததனால் ஆரம்பத்தில் ஆபூபக்ர் (ரழி) அவர்கள் இப்பணியில் ஈடுபடத் தயங்கினார்கள். பின்னர் உமர் (ரழி) அவர்களின் ஆலோசனைப் பிரகாரம் இப்பணியை முன்னெடுக்க அவர்கள் முன்வந்தார்கள். இதனால் இஸ்லாத்துக்கு வரவிருக்கும் நன்மைகளை, நலன்களை உணர்ந்தமையே இதில் ஈடுபட அவர்களைத் தூண்டியது.

- நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் போது தமக்குப் பின்னால் ஆட்சிப் பொறுப்புக்கு யாரையும் நியமித்து விட்டுச் செல்லவில்லை. இருப்பினும் அபூபக்ர் (ரழி) அவர்கள் மரணிக்கும் போது தமக்குப் பின்னால் உமர் (ரழி) அவர்களைக் கலீபாவாக நியமித்து விட்டுச் சென்றார்கள். சமூக நலனைக் கருத்திற் கொண்டமையே இதற்குக் காரணமாகும்.

- உமர் (ரழி) அவர்கள் வரி விதித்தல், திணைக்களங்களை உருவாக்குதல், நகரங்களை நிர்மாணித்தல், சிறைச்சாலைகளை அமைத்தல், விற்பனைக்காக உள்ள நீர் கலக்கப்பட்ட பாலைத் தரையில் கொட்டிவிடல், கவர்னர்கள் தமது பதவிக் காலத்தில் வியாபாரம் செய்தால் அவர்களது சொத்தில் பாதியை பறிமுதல் செய்தல் போன்ற சீர்திருத்தத் தண்டனைகளை வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நலன்களைக் கருத்திற் கொண்டமையே காரணமாக அமைந்தது.

**மஸ்லஹா ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**

1. ஷரீஅத் மக்களது சிரமங்களை நீக்கி அவர்களுக்கு நன்மை பயப்பதனையே நோக்காகக் கொண்டிருக்கின்றது என்றவகையில் புதிதாகத் தோன்றும் பிரச்சினைகளுக்கு மனித நலன்களை உத்தேசித்து தீர்வு வழங்குவது ஷரீஆவின் நோக்கத்துக்கு இணைந்ததாக அமைந்துள்ளது.

2. ஸஹாபாக்கள் மஸ்லஹா முர்ஸலாவை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளார்கள். அபூபக்ர் (ரழி) தனக்குப் பின் உமர் (ரழி) அவர்களை அடுத்த கலீபாவாக நியமித்தமை, குர்ஆன் திரட்டப்பட்டமை போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**மஸ்லஹா முர்ஸலா அடிப்படையில் தீர்வு பெறுவதற்கு அறிஞர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகளாவன**

1. மஸ்லஹா / நலன் யதார்த்தமானதாக இருக்க வேண்டும் அது பிரமையின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கக்கூடாது

2. மஸ்லஹா / நலன் எல்லோருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும்

3. மஸ்லஹா / நலன் ஷரீஆவின் நோக்கங்களுக்கு இயைந்ததாக இருக்கவேண்டும்

4. ஒரு கஷ்டத்தை நீக்குவதாக அல்லது ஒரு நலனை காப்பதாக மஸ்லஹா அமைதல் வேண்டும்

**அல் உர்பு**

இதன் மொழிக்கருத்து ‘‘மரபு’’ என்பதாகும்.

- ஒரு சமூகத்தில் கணிசமானோர் தமது வாழ்வில் சொல் ரீதியாக அல்லது செயல் ரீதியாகப் பின்பற்றிவரும் மரபுகளையே உர்பு- வழக்காறு என்கின்றோம். இவ்வாறான வழக்காறு வார்த்தைகளுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது செயல்களுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். பொதுவானதாகவும் இருக்கலாம் அல்லது குறிப்பானதாகவும் இருக்கலாம்.

- தனி மனிதனது பழக்க வழக்கங்கள், மரபுகள் என்பன ‘‘உர்ப்’’ என அழைக்கப்படுவதில்லை. அவை ‘‘ஆதத்’’ என்றே அழைக்கப்படுகின்றன

**அல் உர்பு இற்கான ஆதாரங்கள்**

1. மக்களிடமிருந்து அவர்களால் செய்ய முடியுமான இலகுவான அம்சங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் மேலும் மக்கள் எல்லோருக்கும் பரீட்சயமான (வழக்கிலுள்ள) விடயங்களையே ஏவுங்கள் (7:199)

2. முஸ்லிம்கள் நல்லவை எனக் கருதியவைகள் அல்லாஹ்விடத்திலும் நல்லவையே என அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) குறிப்பிடுகின்றார்.

3. அபூ ஸுப்யானின் மனைவி ஹின்தா நபியவர்களிடம் வந்து தனது கணவன் தனக்குச் செலவு செய்யும் விடயத்தில் கஞ்சத்தனம் காட்டுவதாக முறையிட்டவேளை, நபி (ஸல்) அவர்கள் ஹின்தாவை விழித்து; உமக்கும் உமது குழந்தைகளுக்கும் வழக்கமாக எவ்வளவு பணம் தேவையோ அந்த அளவை அபூ ஸுப்யானின் சொத்திலிருந்து எடுத்துக் கொள்வீராக; எனக் குறிப்பிட்டார்கள்.

4. குறிப்பிட்டதோர் உர்ப் - வழக்காறு மனித நலனைப் பேணுவதாக அல்லது அவனது சிரமமொன்றை நீக்குவதாக அமையும் போது மனிதன் தொடர்ந்தும் அதனை நடைமுறைப்படுத்துவான். நலன்களைப் பேணிச் சிரமங்களை நீக்குவதே ஷரீஆவின் இலக்காகும். உர்பும் இத்தகையதொன்றாகும். இஸ்லாம் அறிமுகமான போது, அரபிகளிடம் காணப்பட்ட சில உர்ப் வழக்காறுகளை முழுமையாகவும் சிலதை மாற்றங்களுடனும் அங்கீகரித்தது. உதாரணம்

   - திருமணப் பொருத்தம் பார்த்தல்
   - கொலைக்கு தியத் வழங்குதல்
   - க.ஃபாவைத் தவாப் செய்தல்
   - இத்தா அனுஷ்டித்தல்

**உர்பின் வகைகள்**

01. சொல் சார்ந்தவை.

02. செயல் சார்ந்தவை.

என வகைப்படுத்தப்படுகின்றன.

**சொல் சார்ந்தவை**

- சில சொற்களைக் குறிப்பிட்டதொரு கருத்தில் மரபு வழியாகப் பயன்படுத்துவதையே இது குறிக்கும். உதாரணம் ‘அல்லாஹ் மீது சத்தியமாக உமது வாசல்படி மிதிக்கமாட்டேன்’ என ஒருவர் சத்தியம் செய்கிறார். பின்னர் பின்பக்கக் கதவினால் அவ்வீட்டில் நுழைந்தால் அவர் சத்தியத்தை முறித்தவராகவே கருதப்படுவார். அவர் அதற்கான குற்றப்பரிகாரத்தை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் வாசல்படி மிதிக்கமாட்டேன் என்ற சொற்றொடரின் கருத்து வரமாட்டேன் என்பதைக் குறிப்பதாகும்.

### செயல் சார்ந்தவை

- சில செயற்பாடுகளை மரபுரீதியாக கடைப்பிடித்து வந்தால் அதனையே இது குறிக்கும். உதாரணமாக ஈஜாப் கபூல் வார்த்தைகளைப் பிரயோகிக்காமலே வியாபாரம் இடம்பெறுகின்றது. வியாபாரிக்கும் கொள்வனவு செய்பவனுக்குமிடையில் இடம்பெறும் பரிமாற்றல் நடவடிக்கையை வியாபாரம் இடம்பெற்றுவிட்டதற்கான அடையாளமாகவே வழக்காறு கருதுகிறது.

### உர்ப் ஆம்

- உர்ப் ஆம் என்பதன் கருத்து பொதுவான வழக்காறு என்பதாகும். அதாவது எல்லா நாடுகளிலும் எல்லா மக்களிடமும் உள்ள உருபை - வழக்காற்றைக் குறிக்கும்.

- மீன் இறைச்சி வகையைச் சார்ந்தாயினும் உலகில் எப்பிரதேசத்திலும் எம் மொழியிலும் மீன் இறைச்சி என்று அழைப்பதில்லை. மாறாக மீன் என்றே அழைக்கப்படுகின்றது. அவ்வாறே அரபு மொழியில் ‘வலத்’ என்ற சொல் ஆண் பிள்ளையையும் குறிக்கும் பெண் பிள்ளையையும் குறிக்கும். இருப்பினும் ஆண் பிள்ளையைக் குறிக்க இச் சொல் பாவிக்கப்படுவதே வழக்காறாகக் காணப்படுகிறது.

### உர்ப் காஸ்

- உர்ப் காஸ் என்பதன் கருத்து பிரத்தியேகமான உர்ப் என்பதாகும். அதாவது குறிப்பிட்டதொரு இனக் குழுவிற்கு அல்லது சமூகத்திற்கு அல்லது பிரதேசத்திற்கு அல்லது நாட்டிற்கு உரிய பிரத்தியேகமான வழக்காறைக் குறிப்பிடலாம்.

  *உதாரணம்:*

  தனது வாடிக்கையாளருக்குப் பொருட்களைக் கடனுக்கு வழங்கும் வியாபாரி அக்கடனை தனது புத்தகமொன்றில் குறித்துக் கொள்வார். ஆனால் அவ்வாறு எழுதும்போது எந்த சாட்சியங்களையும் வைத்துக் கொள்வதில்லை. இது வியாபார சமூகத்திற்குரிய ஓர் உர்ப் ஆகும்.

### உர்பை நடைமுறைப்படுத்துவதற்கான நிபந்தனைகள்

அ). வழக்காறானது ஷரீஅத்தின் தெளிவான சட்ட வசனமொன்றுக்கு (நஸ் கத்இ) முரணாக அமையக் கூடாது. அவ்வாறு அமையுமாயின் அதனை உர்ப் பாஸித் என்போம். உதாரணமாக, அல்லாஹ் வட்டியை ஹராமாக்கினான் என்பது தெளிவான ஆதாரமாகும். எனவே வட்டியை உர்பாக - வழக்காறாகக் கொள்ள முடியாது.

ஆ). எந்த உர்பை பயன்படுத்தி குறித்த விடயம் அணுகப்படுகின்றதோ அவ்விடயம் தோன்றிய வேளையில் அவ்வுர்பும் காணப்பட வேண்டும். இன்றேல் உர்பில் ஏற்படும் மாற்றம் சட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

### இஸ்திஸ்ஹாப்

- இஸ்திஸ்ஹாப் என்ற பதம் மொழிரீதியாக இணைந்து செல்லல், தோழமை பூணல் என்ற மொழிக்கருத்தைத் தருகின்றது.

இஸ்லாமிய பரிபாசையில் ஏற்கனவே உறுதியாக நிறுவப்பட்ட ஒரு விடயத்தை அல்லது மறுக்கப்பட்ட ஒரு விடயத்தைத் தொடர்ந்தும் அதே நிலையில் வைத்துக் கொள்வதையே இது குறிக்கும்.

- 'இருக்கின்ற ஒன்றைத் தொடர்ந்து வைத்திருத்தல், உறுதியான ஒன்றைத் தொடர்ந்து வைத்திருத்தல், தடுக்கப்பட்ட ஒன்றைத் தொடர்ந்து தடுத்து வைத்தல் என்பதே இஸ்திஸ்ஹாப் ஆகும்' என இமாம் இப்னுல் கையூம் விளக்கியுள்ளார்.

**இஸ்திஸ்ஹாப் சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**

- கடந்த காலத்தில் காணப்பட்ட ஓர் அம்சம் தொடர்ந்தும் இருக்கும் என்பது ஓர் எளிய உண்மையாகும். அதனடிப்படையிலேயே மனித நடவடிக்கைகளும் அமைந்து காணப்படுகின்றன. குடும்பத்தை விட்டு தூர இடமொன்றிற்கு ஒருவர் சென்றுவிட்டால் அவர் உயிருடன் இருக்கிறார்; திரும்பி வருவார் என்ற அடிப்படையிலேயே குடும்பத்தவர்கள் நடந்து கொள்கின்றார்கள். அவர் மரணித்துவிட்டார் என்பதற்கு ஆதாரம் கிடைக்கும் வரை அவர் உயிருடன் இருக்கிறார் என்ற கருதுகோளின் அடிப்படையிலே குடும்பத்தவர்கள் தொழிற்படுவர்.

- ஷரீஆ சட்டமொன்று அது மாற்றப்பட்டு விட்டது என்பதற்கான ஆதாரம் தோன்றும்வரையில் அது மாற்றப்படவில்லை என்றே கணிக்கப்படுகிறது. மதுபானம் வினாக்கிரியாக மாறும் வரை அது ஹராமானது என்றும், திருமண ஒப்பந்தம் ஒன்று முறிக்கப்படும் வரையில் கணவன் மனைவி உறவு ஹலாலெனவும் கணிக்கப்படுவதைக் குறிப்பிட முடியும்.

- மேலும் ரமழான் பிறை தென்படாவிட்டால் ஷ.்.பான் மாதம் 30 நாட்கள் எனக் கணிக்கப்படுவது இஸ்திஸ்ஹாப் அடிப்படையிலாகும்.

**இஸ்திஸ்ஹாப் விதிமுறைகள்**

1. ஒரு விடயம் அது மாற்றப்பட்டுவிட்டது என்பதற்கான ஆதாரம் கிடைக்கும் வரையில் தொடர்ந்தும் அதே நிலையில் இருக்கும்
2. அடிப்படையில் அனைத்துப் பொருட்களும் அனுமதிக்கப்பட்டதாகும்.
3. அடிப்படையில் மனிதன் குற்றமற்றவனாகக் கருதப்படுவான்.
4. உறுதியான ஒரு நிலைப்பாட்டை இடையில் ஏற்படும் சந்தேகம் மாற்றிவிட மாட்டாது.

*உதாரணம்:*

வுழு செய்தமை பற்றி உறுதியான நம்பிக்கையுடன் உள்ள ஒருவருக்கு தனது வுழு முறிந்து விட்டதோ என சந்தேகம் ஏற்படின் அவர் வுழுவுடன் உள்ளவராகவே கருதப்படு வார். இது இஸ்திஸ்ஹாப் அடிப்படையில் பெறப்பட்ட முடிவாகும்.

இஸ்திஸ்ஹாப் என்பது ஒரு புதிய ஆதாரம் அல்ல. ஏற்கனவே இருந்த ஒரு சட்டம் தொடர்ந்தும் நிலைத்திருக்கிறது என்ற அடிப்படையில் பெறப்பட்ட ஒன்றாகும்.

**தேர்ச்சி 04 : இஜ்திஹாதின் அடியாகத் தோன்றிய மூலாதாரங்களையும் அதன் நோக்கங்களையும் விளங்கி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 : மகாஸிதுஷ் ஷரீஆ பற்றிய விளக்கம் பெற்று ஒழுகுவார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள் :**

- மகாஸிதுஷ் ஷரீஆ என்ற பதத்தை விளக்கி அதன் உள்ளடக்கத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவார்.
- மகாஸிதுஷ் ஷரீஆவில் பிரதான மூன்று பகுதிகளையும் உதாரணங்களுடன் விபரித்துக் கூறுவார்.
- ஷரீஆவின் அடிப்படை விதிகளை(கவாஇத் பிக்ஹிய்யா) இனங்கண்டு அவற்றின் பிரயோகம் பற்றி அறிந்து விளக்குவார்.
- அடிப்படை விதிகளின் பிரயோகத்தை விளங்கித் தொழிற்படுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- இஸ்லாமிய ஷரீஆவின் உன்னத நோக்கங்கள் மகாஸிதுஷ் ஷரீஆ என அழைக்கப்படுகின்றது.
- ''மகாஸித்'' என்பது ''மக்ஸத்'' என்பதன் பன்மையாகும். இலக்கு, நோக்கம், அடைவு, எதிர்பார்க்கும் விடயம் போன்ற கருத்துக்களை இப்பதம் குறித்து நிற்கின்றது. ''இஸ்லாமிய ஷரீஆவில் மகாஸித் என்பது இஸ்லாமிய சட்டங்களின் இலக்கு அல்லது நோக்கம் அல்லது அடைவு, அல்லது எதிர்பார்க்கும் விடயம் என்று பொருள் கொள்ளப்படும்'' அதாவது ஷரீஆ தனது போதனைகள் மூலம் அடைய விரும்புகின்ற இலக்குகளைக் குறிக்கின்றது. இக்கருத்தில் வேறு பல பிரயோகங்களையும் இமாம்கள் பயன்படுத்திவந்துள்ளனர். மஸாலிஹ்- நலன்கள்; அஸ்ரார்- இரகசியங்கள்; இலல் - காரணிகள்; நதாஇஜ் - விளைவுகள், மஆல் - அடைவுகள் போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.
- ''மகாஸிதுஷ் ஷரீஆ'' பற்றிய சிந்தனை வளர்ந்து வந்த வரலாற்றுப் பின்னணியை நோக்கினால் குர்ஆனும், ஸுன்னாவும் சிலபோது சட்டங்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் அந்தச் சட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டதற்கான காரணத்தையும் தொடர்புபடுத்தி நேரடியாகவோ. சூசகமாகவோ பேசியிருப்பதைக் காணலாம். இது, குறித்த சட்டம் தோற்றுவிக்கப்பட்டதன் இரகசியத்தை, நோக்கத்தை அல்லது காரணத்தை முன்வைப்பதாக உள்ளது. முஜ்தஹித்கள் இதனை விளக்க முற்பட்ட பின்னணியிலேயே இக்கலை தோன்றியதெனலாம். எனவே ஷரீஆவின் நோக்கம் வெறும் பகுத்தறிவு சரிகாணும் நலனன்று மாறாக படைப்பாளன் சரிகாணும் நலனாகும்.
- அல்குர்ஆனும் ஸுன்னாவும் முன்வைக்கும் போதனைகளுக்குப் பின்னாலுள்ள நோக்கங்களை சில இடங்களில் தெளிவாக வரையறுத்துக் கூறியும் இன்னும் சில இடங்களில் மனித இஜ்திஹாத் ஆய்வுக்கு விட்டும் வைத்துள்ளன.

''ஜின்களையும் மனிதர்களையும் (எனக்கு வழிப்பட்டு) என்னை வணங்குவதற்காகவேயன்றி (வேறெதற்காகவும்) நான் படைக்கவில்லை'' - (51:56)

- ஜும்ஆவுடைய நேரத்தில் வர்த்தகம் செய்வது தடுக்கப்பட்டதன் நோக்கம்: அது ஜும்ஆ தொழுகைக்குத் தடையாக அமைகிறது என்பதனாலாகும். ''விசுவாசிகளே! (வெள்ளிக்கிழமையாகிய) ஜும்ஆத் தினத்தன்று தொழுகைக்காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால் வர்த்தகத்தை விட்டு விட்டு, அல்லாஹ்வை தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள் (63:9)

- காபிர்கள் அறியாத்தனமாக அல்லாஹ்வுக்கு ஏசுவதைக் தவிர்க்க வழி செய்ய வேண்டும் என்ற நோக்கில் அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவோரது கடவுளை ஏச வேண்டாம் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

- (விசுவாசிகளே!) அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் (ஆண்டவர்களென) அழைக்கின்றார்களோ அவற்றை நீங்கள் திட்டாதீர்கள். அதனால் அவர்கள் அறியாமையின் காரணமாக, வரம்புமீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள் (6:108)

- இவ்வாறே ஸுன்னாவிலும் நபி (ஸல்) அவர்கள் தனது போதனைகள் சட்டங்களுக்குப் பின்னால் உள்ள நோக்கங்களை சில இடங்களில் தெளிவாகக் கூறியும் வேறுசில இடங்களில் ஸஹாபாக்கள் வினாத்தொடுத்ததன் பின்னர் நோக்கத்தை தெளிவுபடுத்தி இருப்பதையும் காணலாம். உதாரணம் : பனூ குரைழா கோத்திரத்தை நோக்கி அனுப்பப்பட்ட ஸஹாபாக்களிடம் அங்கு சென்ற பின்னரே அஸர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்று பணித்து அனுப்பியதன் நோக்கம் விரைவாகச் செல்ல வேண்டும் என்பதாகும்.

- ஷரீஅத் சட்டங்கள் மனித சக்திக்கு உட்பட்டவைகளே. மனிதனால் சுமக்க முடியாதவைகளை அல்லாஹ்வும் ரஸுலும் சுமத்தவில்லை என்பதைத் தெளிவுபடுத்தும் நோக்கில் பின்வரும் நிகழ்வு அமைந்துள்ளது. ஒருவர் நோன்புடன் வெயிலில் நிற்க நேர்ச்சை வைத்தார். அது கேள்விப்பட்ட நபிகளார் தடுத்துவிட்டு ''எல்லை மீறி நடப்போர் நாசமாகட்டும்'' என்றார்.

- தொடர்ந்து நோன்பு நோற்று இரவில் நின்று வணங்கி மனைவியை ஒதுங்கி வாழ்வேன் என்று கூறிய ஸஹாபியைப் பார்த்து ''நான் நோன்பு நோற்கிறேன், நோற்காமலும் இருக்கிறேன். இரவில் எழுந்து நின்று வணங்குகிறேன், சிலபோது தூங்கவும் செய்கிறேன்.... என்று விளக்கமளித்ததன் மூலம் ஷரீஅத் மனிதர்களை சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் வீழ்த்த விரும்பவில்லை. இலகுவையே அது நோக்காகக் கொண்டிருந்தது என்பது உறுதியாகின்றது.

- தொழுகையை முன்னின்று நடாத்தும் இமாம் நீட்டித் தொழுவிக்காமலிருக்கக் காரணம், உங்களில் ஒருவர் மக்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்தினால் அதனை நீட்டாது சுருக்கிக் கொள்ளட்டும். ஏனெனில் அவர்களில் பலவீனர், நோயாளி, அவசரத் தேவையுடையோர் இருக்கலாம். உங்களில் ஒருவர் தனித்துத் தொழுதால் அவர் நாடியளவு நீட்டித் தொழுதுகொள்ளட்டும்.

- இஸ்லாம் தண்டனை வழங்குவதன் ஊடாக எதிர்பார்க்கும் நோக்கங்களில் ஒன்றான நீதியை நிலைநாட்டுதல் என்ற அம்சம் நிறைவேறமாட்டாது என்ற சூழ்நிலையில் கலீபா உமர் (ரழி) அவர்கள் மதீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது திருடர்களது கரங்களை வெட்டும் சட்டத்தை இடைநிறுத்தி வைத்திருந்தார்கள்.

- எனவே மகாஸிதுஷ் ஷரீஆ என்பது ஒரு வகையில் சட்டங்களுக்குப் பின்னால் உள்ள நியாயம் என்ன என்பதை விளக்குகின்றது. மற்றொரு வகையில் மகாஸிதுஷ் ஷரீஆ என்பது, ஷரீஆ சில விடயங்களை தடைசெய்வதன் ஊடாகவும் மற்றும் சில விடயங்களை அனுமதிப்பதன் ஊடாகவும் ஏற்படுத்த விரும்புகின்ற சில நன்நோக்கங்களைக் குறித்து நிற்கும். இன்னொரு வகையில் மகாஸிதுஷ் ஷரீஆ என்பது இஸ்லாமிய ஷரீஆ எழுந்து நிற்கின்ற பண்பாட்டு விழுமியங்களையும், தெய்வீக இலக்குகளையும் குறித்து நிற்கின்றது.
- ''மகாஸித்'' என்ற துறையைப் பல்வேறு அறிஞர்கள் பல கண்ணோட்டங்களில் விளக்கியுள்ளனர். ஹிஜ்ரி 3ஆம் நூற்றாண்டில் முஹம்மத் இப்னு அலி அத்திர்மிதி அல் ஹகீம் என்பவர் ''அஸ்ஸலாத் வ மகாஸிதுஹா'' என்ற நூலையும் பின்னர் ''இலலுஷ் ஷரீஆ'', ''இலலுல் உபூதிய்யா'', ''அல் புருல்'' போன்ற நூல்களையும் முன்வைத்தார். ஹி 4 ஆம் நூற்றாண்டில் இமாம் அபூ மன்ஸுர் அல் மாதுருதி ம.்.ஹதுஷ் ஷராஈ என்ற ஆக்கத்தை முன்வைத்தார். ஹிஜ்ரி 5 ஆம் நூற்றாண்டில் இமாம் இப்னு அப்துல்லாஹ் அல் ஜுவைனி (ரஹ்) ''அல் புர்ஹான்'' என்ற நூலில் மகாஸித், மக்ஸுத், கஸ்த் என்ற சொற்பிரயோகங்களை மிக அதிகமாகவே கையாண்டுள்ளார், இவரே ழரூரிய்யாத், ஹாஜிய்யாத், தஹ்ஸீனிய்யாத் என்ற மகாஸிதுஷ் ஷரீஆவின் முப்பிரிவுகளையும் அறிமுகப்படுத்திய முன்னோடியாவார், தொடர்ந்து வந்த இமாம் அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும், இமாம் ஜுவைனியின் கருத்தைப் பின்பற்றி ''மஸாலிஹ் முர்ஸலா'' எனப்படும் வரையறுக்கப்படாத நலன்களின் ஒரு வகையாக மகாஸிதைக் கருதினார். தொடர்ந்துவந்த பல நூற்றாண்டுகளிலும் பக்ருத்தீன் அர்ராஸி, ஸைபுத்தீன் அல் ஆமிதி, இமாம் அல் பைழாவி, இமாம் இப்னு தைமியா, இமாம் இஸ் இப்னு அப்துஸ்ஸலாம் போன்ற பல்வேறு அறிஞர்களும் நவீன காலத்தில் இமாம் ரஷீத் ரிழா, தாஹிர் இப்னு ஆஷுர், செய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி, கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி, கலாநிதி தாஹா ஜாபிர் அலவானி போன்றோர்களும் மகாஸிதுஷ் ஷரீஆ துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகையில் பங்களிப்பு நல்கியுள்ளார்கள்.
- ஒவ்வொரு காலகட்டத்திலும் மகாஸிதுஷ் ஷரீஆ குறித்து அறிஞர்கள் முன்வைத்த வரைவிலக்கணங்களை நோக்குவோம். ஆரம்பகால அறிஞர்களைப் பொறுத்தமட்டில் அவர்களிடம் மிக நுணுக்கமான வரையறுக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் காணப்படாவிட்டாலும் அதன் செயல்வடிவம் காணப்பட்டுவந்துள்ளது. அதனைக் காரணம், நியாயம், நோக்கம், பயன், இரகசியம், எதிர்பார்ப்பு, அடைவு போன்ற சொற்களால் முன்வைத்ததோடு மகாஸிதுஷ் ஷரீஆவின் மூன்று முக்கிய பிரிவுகள், அடிப்படையான 5 அம்சங்கள் குறித்துப் பேசியுள்ளனர்.

  நபி(ஸல்) அவர்கள் காலத்தில் மகாஸிதுஷ் ஷரீஆவின் தேவை வீச்சு மிகவும் விசாலித்தமையால் அது ஒரு ஷரீஅத் துறைசார் அறிவின் கலையாக பரிணாமம் பெற்றது. அது குறித்துப் பல வரைவிலக்கணங்கள் தோன்றியது போலவே நூல்களும் உருவாயின.

1. அல் பாஸி அவர்கள் ''மகாஸிதுஷ் ஷரீஆ என்பதன் கருத்துச் சட்டம் இயற்றியவன் ஒவ்வொரு சட்டத்திற்கு பின்னாலும் வைத்துள்ள இரகசியங்கள் அல்லது நோக்கங்களையே குறிக்கின்றன'' என்று விளக்குகிறார்.

2. கலாநிதி அஹ்மத் அர் ரய்ஸுனி : மகாஸிதுஷ் ஷரீஆ என்பது ஷரீஆ சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது மக்களுக்கு ஏற்படும் நலன்களை இலக்காகக் கொள்வதனையே குறிக்கின்றது.

3. கலாநிதி முஹம்மத் இப்னு ஸ.்த் ''பொதுவாகவும் குறிப்பாகவும் மனித நலன்களை நிலைநாட்டுவதற்காக சட்டங்களை உருவாக்கியவன் அதனை உருவாக்கும் போது கவனத்திற் கொண்ட காரணங்களையும் நோக்கங்களையுமே குறிக்கின்றது''

4. கலாநிதி முஸ்தபா இப்னு கராமா: மகாஸிதுஷ் ஷரீஆ என்பது சட்டத்தை உருவாக்கியவன் அதனூடாக நாடிய நலன்களையே குறிக்கின்றது.

5. நூருத்தீன் அல் காதிமி : ஷரீஆ சட்டங்களுக்குப் பின்னால் உள்ள காரணங்களையும் அதன் விளைவுகளையுமே குறிக்கின்றது; அது ஒரு குறித்த பகுதியிலும் சரி முழுமையிலும் சரி மனிதனது ஈருலக வாழ்வினதும் நலன்களைக் குறிக்கோளாகக் கொண்டு, ஒரே இலட்சியத்தின்பால் அமைந்துள்ளது.

6. இமாம் கராபி (றஹ்) ஷரீஅத்தில் ஒரு விடயம் மகாஸிதுகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டுமெனில் அது தெளிவான ஒரு இலக்கை அடையக் கூடியதாகவும் ஒரு நலனை ஏற்படுத்தக் கூடியதாகவும் அல்லது ஒரு தீங்கை தடுக்கக் கூடியதாகவும் காணப்படல் வேண்டும்.

மகாஸிதினுடைய பரிமாணங்கள் :

- மகாஸிதுஷ் ஷரீஆவின் வகைப்படுத்தல்கள் பல்வேறு வடிவங்களில் அமைந்துள்ளன. பாரம்பரிய வகைப்படுத்தல்கள் மூன்று படிநிலைகளைக் கொண்டது. அவை

  1. ழரூரிய்யாத் - அத்தியாவசிய நிலை (அத்தியசிய தேவைகள்)
  2. ஹாஜிய்யாத் - தேவை நிலை (சாதாரணத் தேவைகள்)
  3. தஹ்ஸீனிய்யா - ஆடம்பர நிலை (மேலதிக தேவைகள்)

**அத்தியவசிய நிலை : ழரூரிய்யாத்**

இதனை அத்தியவசியத் தேவையென்றும் குறிப்பிடலாம். மனித குலத்தின் வாழ்வு எதில் தங்கியுள்ளதோ அவ்வாறான நலன்களே ழரூரிய்யாத் என அழைக்கப்படுகின்றது. இந்த வகையான நலன்கள் புறக்கணிக்கப்பட்டால் மனித வாழ்வு சீர்குலைந்துவிடும், குழப்பங்கள் நிறைந்ததாகமாறும், பெரும் அழிவுக்கும் சீர்கேட்டுக்கும் இட்டுச் செல்லும்.

அத்தியாவசிய நிலைத் தேவைகளை இமாம்கள் ஆறு பகுதிகளாகப் பிரித்து நோக்கினர். அவை தீன், உயிர், புத்தி, பரம்பரை, மானம், செல்வம் என்பனவாகும்.

1. தீனைப் பாதுகாத்தல்

தீனை வளர்த்தல், பாதுகாத்தல் என்பதுவே இதன் நோக்கமாகும். நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல், தீனின் விடயத்தில் அத்துமீறுவோரைத் தடுத்து நிறுத்தல், தீனுக்கு முட்டுக் கட்டையான அம்சங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான வழியாக ஜிஹாதை கடைப்பிடித்தல், மதம் மாறுவோருக்குத் தண்டனை வழங்கல், அகீதாவிற்கு

எதிரான சந்தேகங்களைக் கிளப்புவோருக்கெதிராக நடவடிக்கையெடுத்தல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக தீன் பாதுகாக்கப்படுகின்றது.

2. உயிரைப் பாதுகாத்தல்

உயிரைப் பாதுகாப்பதற்கும், போஷிப்பதற்குமாக உணவு, பானம், ஆடை என்பனவற்றின் மூலம் உத்தரவாதப் படுத்தப்படுகின்றது. மேலும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கையின் ஓர் அம்சமாகவே தற்கொலை தடைசெய்யப்படுகிறது. மேலும் பழிக்குப்பழி, மற்றும் தியத் என்பன விதிக்கப்பட்டிருப்பதும் உயிரைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

மனித உயிர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் அல்லது சுற்றாடல் சுத்தம் பேணும் நடவடிக்கைகள் போன்றவற்றை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இன்றேல் மனித வாழ்வு சீரழிந்து விடும், சிக்கல்கள் நிறைந்ததாகவே மாறும்.

3. புத்தியைப் பாதுகாத்தல்

புத்தியைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே மதுபானம் அருந்துதல், ஏனைய போதைப் பொருட்களைப் பாவித்தல் என்பன தடுக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான தண்டனைகளையும் இஸ்லாம் விதித்துள்ளது.

மனிதனது அறிவு, புத்தி பாதிக்கப்படும் போது மனித வாழ்வே பாதிக்கப்படுகின்றது. இதனாலேயே அனைத்து போதைப் பொருட்களும் தடுக்கப்பட்டுள்ளன.

4. பரம்பரையைப் பாதுகாத்தல்

பரம்பரையைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே திருமணம் ஊக்கப்படுத்தப்பட்டு விபசாரம் தடுக்கப்பட்டு, அதற்கு தண்டனையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் குழந்தை வளர்ப்பு, குடும்ப பராமரிப்பு போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் விதமாக இஸ்லாம் அதிக சட்டங்களை முன்வைத்திருப்பதன் இரகசியமும் இதுதான்.

5. மானத்தைப் பாதுகாத்தல்

தனது மானத்தையும் பிறரது மானத்தையும் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். அதனைக் களங்கப்படுத்துவது பாவமாகும். இதனாலேயே படுதூறு, லிஆன் போன்றவற்றை இஸ்லாம் தடுத்துள்ளதோடு அவற்றைப் பாவமாகக் கருதி தண்டனைகளையும் நிர்ணயித்துள்ளது.

6. செல்வத்தைப் பாதுகாத்தல்

இஸ்லாம் ஹலாலான வழியில் உழைப்பதை வலியுறுத்தியுள்ளது. பிறரது சொத்துக்களை அபகரித்தல், திருடுதல், பதுக்கல், வட்டி, ஊழல், ஏமாற்று போன்ற பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கும் அனைத்தையும் இஸ்லாம் தடுத்துள்ளது. மேலும் புத்தி குறைந்தோர், பைத்தியகாரர்கள் கொடுக்கல் வாங்கள்களில் ஈடுபடுவதை சமூக நலன் கருதி தடுத்துள்ளது.

இந்த ஆறு அம்சங்களும் பாதுகாக்கப்படல், வளர்க்கப்படல் என்பன ஊக்கப்படுத்தப்படும் விதமாகவும் இவை பாதிக்கப்படும் அம்சங்கள் தடுக்கக்கூடியதாகவுமே சட்டங்கள் உருவாகியுள்ளன.

**2. தேவை நிலை : ஹாஜிய்யாத்**

- அடுத்து வருவது தேவை நிலையாகும். மனிதர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள், அசௌகரியங்களை நீக்குவதை வேண்டி நிற்பதே ஹாஜிய்யாத் நிலையாகும். இப்பிரிவைச் சார்ந்த நலன்கள் ழரூரிய்யத்தை விட படித்தரத்தில் குறைந்தவை. இவை இல்லாவிடின் வாழ்க்கை ஒழுங்கு சீர்குலையாது, சமூகத்தின் இழப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமையாது, எனினும் வாழ்வின் நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் எதிர்கொள்ள நேரிடும். இந்த நலன்கள் மனிதர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்குவதாகவே அமையும்.

- மனிதனுக்கு ஏற்படும் கஷ்டங்களையும், நெருக்கடிகளையும் நீக்கி, சௌகரியத்தையும், வசதிவாய்ப்பையும் ஏற்படுத்தும் விதமாக இஸ்லாம் சட்டங்களில் சலுகைகள் தந்திருப்பதை நோக்கலாம். உதாரணமாக நோயாளி, பிரயாணி ஆகியோர் ரமழான் நோன்பு நோற்பதிலிருந்து விதிவிலக்குப் பெற்று பிறிதொரு காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளச் சலுகை வழங்கப்பட்டுள்ளமை, பிரயாணி நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டாக நிறைவேற்றல், நீரில்லாத போது தயம்மம் செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

  ''அல்லாஹ் உங்கள் மீது எந்தவொரு அசௌகரியத்தையும் ஏற்படுத்த விரும்பவில்லை'' (5:6)

  ''அல்லாஹ் உங்களுக்கு இலகுபவை நாடுகின்றான், மேலும் அவன் உங்களுக்கு சிரமத்தை நாடவில்லை (2:185)

  ''நபியவர்களுக்கு முன் இரண்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டால், பாவம் இல்லாவிடில் அவற்றில் மிக இலகுவானதையே அவர் தேர்ந்தெடுப்பார்கள்''

**ஆடம்பர நிலை : தஹ்ஸீனிய்யாத் அல்லது தக்மீலிய்யாத்**

- உயர்ந்த ஒழுக்க விழுமியங்களுக்கும் சீரிய பண்பாடுகளுக்கும் இணங்க மனித வாழ்வு அமைவதற்குத் தேவையான நலன்களே தஹ்ஸீனிய்யாத் - தக்மீலிய்யாத் எனப்படும்.

- இந்த வகையான நலன்கள், ழரூரிய்யாத், ஹாஜிய்யாத் வகையான நலன்களை விடவும் தரத்தில் குறைந்தவை, இவை இல்லாவிடில் வாழ்வொழுங்கு சீர்குலையவோ சிக்கலானதாக அமையவோ அசௌகரியமும் நெருக்கடி நிலையும் ஏற்படவோ மாட்டாது. ஆயினும் அழகிய பண்பாடுகள், நல்லொழுக்கம், சீரான மனித இயல்புகள் என்பவற்றிக்கு முரணாக வாழ்வு அமைந்துவிடும்.

- வெள்ளிக்கிழமை தினங்களில் வெள்ளாடை அணிதல், பெருநாட்களில் புத்தாடையணிதல், வாசனைத் திரவியங்கள் பயன்படுத்தல், உண்ணல், குடித்தல் ஒழுங்குகள் போன்றவற்றை தஹ்ஸீனிய்யாத்துக்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

- இஸ்லாமிய சட்டத் துறையில் பல்வேறு அடிப்படை விதிகளைப் பயன்படுத்தியே சட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அவ்விதிகள் ''அல் கவாஇத் அல் பிக்ஹிய்யா'' என வழங்கப்படுகின்றன. நூற்றுக்கணக்கான கவாஇத்கள்- விதிகள் காணப்பட்டாலும் அவை அனைத்திற்கும் மிக பிரதான அடிப்படைகளாக 5 விதிகள் அமைந்து காணப்படுகின்றன. அவ் ஐந்து விதிகளும் அனைத்து அறிஞர்கள் மத்தியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும். அவ்விதிகள் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

**01. அல் உமூரு பிமகாஸிதிஹா**

நோக்கங்களைப் பொறுத்தே செயற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஆதாரம் ''செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே''

உதாரணம் : ஒருவர் மற்றொருவரை மனமுறண்டாக எந்த நியாயமுமின்றி கொலை செய்தால் அதற்குரிய தீர்வும், ஒருவர் மற்றொருவரை தவறுதலாக கொலை செய்தால் அதற்குரிய தீர்வும் வேறுபட்டே அமைகின்றது. இத்தீர்வுகள் மாறுபட்டு அமைவதற்கான அடிப்படை இருவரதும் வேறுபட்ட நிய்யத் ஆகும்.

**02. அல் யகீனு லா யஸூலு பிஷ் ஷக்**

உறுதியான நிலைப்பாட்டை இடையில் ஏற்படும் சந்தேகம் மாற்றாது

ஆதாரம் : ஒருவருக்கு காற்றுப் பறித்தால் அதன் சத்தம் அல்லது வாசத்தை உணரும் வரை திரும்ப வுழு செய்ய வேண்டியதில்லை.

உதாரணம் : ஒருவர் வுழு செய்தார் என்பது அவருக்கு உறுதியாக ஞாபகத்தில் இருக்கின்றது. இடையில் வுழு முறிந்ததா இல்லையா என சந்தேகம் தோன்றுகிறது. இப்போது வுழுவுடன் இருப்பதாகவே தீர்ப்பாகின்றது. இதற்குக் காரணம் வுழுவுடன் இருப்பது என்பது உறுதியான விடயமாகும்.

**03. அல் மஷிக்கது தஜ்லிபுத் தய்ஸீர்**

சிரமம் சட்டங்களைத் தளர்த்தும்

ஆதாரம் : மார்க்கத்தில் அல்லாஹ் எந்தவொரு கஷ்டத்தையும் ஏற்படுத்தவில்லை (ஹஜ் : 78)

உதாரணம் : பிரயாணிகளுக்கு சேர்த்து தொழுவதற்கும் நான்கு ரக்அத் தொழுகைகளைச் சுருக்கித் தொழுவதற்கும் சலுகை வழங்கப்பட்டிருப்பது இதன் அடிப்படையிலாகும்.

**04. அல்லரரு யுஸாலு - தீமை நீக்கப்பட வேண்டும்**

ஆதாரம் : ''தீங்கு செய்யவும் கூடாது தீங்கிற்கு உட்படவும் கூடாது''

உதாரணம் : ஒருவரது வீட்டு ஜன்னல் அயல் வீட்டாருக்கு இடைஞ்சலாக அமையுமெனில் அதனை அகற்றிக் கொள்ள வேண்டும்.

**05. அல் ஆதது முஹக்கமா - வழக்காறு ஒரு சட்ட மூலாதாரமாகும்.**

ஆதாரம் : முஸ்லிம்கள் எதனை நல்லதெனக் கருதுகிறார்களோ அது அல்லாஹ்விடத்திலும் நல்லதாகவே கருதப்படும் '' (அஹ்மத்)

உதாரணம் : ஈஜாப் கபூல் வார்த்தைகளைப் பிரயோகிக்காமலே வியாபாரம் இடம்பெறுகின்றமை.

**தேர்ச்சி 04: இஸ்லாமிய நாகரிகத்தை வளப்படுத்துவதில் பங்காற்றிய கலைகளையும் ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3: கருத்து வேறுபாடுகளின் போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்க விதிகளைத் தம் வாழ்வில் எடுத்து நடப்பார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள் :**

- கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களை இனங்கண்டு நியாயிப்பார்.
- கருத்து வேறுபாடுகளின் போது முஜ்தஹித்கள் பின்பற்றிய ஒழுக்கங்களை விபரிப்பார்.
- கருத்து வேறுபாடுகளின் போது ஒழுக வேண்டிய வழிமுறைகளை அறிந்து பின்பற்றுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல் :**

- இஸ்லாமிய வரலாற்றில் சட்டத்துறையில் கருத்துவேறுபாடுகள் இஜ்திஹாதை அடிப்படையாக வைத்தே தோற்றம் பெற்றன. அல்குர்ஆனும் ஸுன்னாவும் மிகத் தெளிவாக குறிப்பிடுகின்ற சட்டங்களில் இறுக்கமான போக்கினைக் கொண்டிருந்த போதிலும் அஃதல்லாத சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய சட்டங்கள் தாராள தன்மையும் நெகிழ்ந்து கொடுக்கும் போக்கினைக் கொண்டிருந்தது. சட்டக்கலையின் தோற்றம் முதல் கருத்துவேறுபாடுகளும் வளர்ந்து சென்றதனைக் காணலாம்.

  நபி (ஸல்) அவர்களது காலத்தில் வஹி அருளப்பட்டுக்கொண்டிருந்தமையால் இஜ்திஹாத் பெரும்பாலும் அவசியப்படவில்லை. இதனால் நபி (ஸல்) அவர்களது காலத்தில் கருத்து வேறுபாடுகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றன. ஆனால் நபி (ஸல்) அவர்களது மரணத்தைத் தொடர்ந்து வஹியின் வருகை நின்றுவிட்டன. வஹியின் கருத்துக்களை நன்கறிந்த நபித்தோழர்கள் தூர நாடுகளுக்கு சென்று வாழ முற்பட்டமை போன்ற காரணங்களினால் சட்டங்களில் தோன்றிய கருத்து வேறுபாடுகளை மேலும் விரிவடைந்தன.

  கருத்து வேறுபாடுகள் இரண்டு முக்கிய அடிப்படைகளைக் கொண்டனவாகும்.

- அல்குர்ஆன் - ஹதீஸ்களில் வரும் சட்ட வசனங்கள் பல கருத்துக்களைக் கொடுக்கக்கூடியனவாக இருந்தமை.

- மனித அறிவுத்தரமும், விளங்கும் ஆற்றலும் வித்தியாசமாகக் காணப்படுகின்றமை.

  அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் இடம்பெற்றுள்ள பல வசனங்கள்.

  (கருத்து வேறுபாடுகள் மனித இனத்தின் தோற்றத்தோடு துவங்கிவிட்டது. மனிதனின் அறிவுத்தரவேறுபாடு பிரச்சினைகளை ஏற்படுத்தின.)

ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களைத் தரக்கூடியவை. அவ்வாறே அறபு மொழியில் ஒரு சொல் பல கருத்துக்களைத் தரக் கூடியனவாகவும் உள்ளன.

- மேலும் மனிதனது சிந்தனா ஆற்றல், அறிவுத் தரம், விளங்கிக் கொள்ளும் தன்மை, பிரச்சினைகளை அணுகும் முறை, சட்ட வசனங்களை விளங்கிக் கொள்ளும் முறை போன்றன ஆளுக்காள் வேறுபட்டே அமைந்துள்ளன. இது இறைவனின் ஏற்பாடாகும். எனவே மேற்சொன்ன இரண்டு அம்சங்களும் கண்டிப்பாக சட்டங்களில் கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

  இதனைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் தெளிவாக விளங்கலாம்.

  பல பொருள் கொடுக்கும் அல்குர்ஆன், ஹதீஸ் வசனங்கள் + அறிவுத்தர ஏற்றத்தாழ்வு = கருத்து வேறுபாடு.

  ஒரே பொருளையே கொடுக்கும் திட்டவட்டமான அல்குர் ஆன், ஹதீஸ் வசனங்கள் + ஏற்றத்தாழ்வற்ற அறிவுத்தரங்கள் = ஒற்றுமையான கருத்துக்கள் (கருத்து வேறுபாடின்மை)

  கருத்து வேறுபாடுகளை ஒழிப்பது என்பது சாத்தியமற்றது. சட்டங்களில் காணப்படும் கருத்து வேறுபாடுகள் இயல்பானவை. தவிர்க்க முடியாதவை.

- மார்க்க சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் எதுவும் இருக்கக் கூடாது. முரண்பாடுகள் ஏதுமின்றி எல்லோரும் ஒரே சட்டத்தையே பின்பற்ற வேண்டுமென்றிருந்தால் அல்லாஹ் குர்ஆனிலும், ஹதீஸிலும் எல்லாவற்றையும் மிகத் தெளிவாக, துல்லியமாக வரையறுத்து, திட்டவட்டமான ஒரே கருத்தை மாத்திரம் முன்வைத்திருப்பான். அவ்வாறே மனிதர்களது அறிவுத்தர வேறுபாட்டை நீக்கி எல்லோரையும் சம அறிவுத் தரத்தில் படைத்திருப்பான். ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை.

  உதாரணமாக : தலாக் சொல்லப்பட்ட பெண்கள் மூன்று குரு.ஃ. " காலம் வரை எதிர்பார்த்திருக்கவும். (2:228) சில ஸஹாபாக்கள் இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள ‘‘குருஉ’’ என்ற பதத்தின் கருத்து ‘‘மாதவிடாய்’’ என்று கருதினர். இன்னும் சிலர் மாதாந்த ருதுவிலிருந்து தூய்மையாவதையும் குர்உ என்று கருதினர்.

- உமர் (ரழி) , அலி (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி) அபூ மூஸா அல் அஷ்அரி(ரழி) முஜாஹித், கதாதா, இக்ரிமா போன்றோர் ‘குர்உ’ என்பதை மாதாந்த ருது என்று கருதினர். ஆயிஷா (ரழி) இப்னு உமர் (ரழி) இமாம் ஷாபிஈ (ரஹ்) போன்றோர் ‘குர்உ’ என்பது மாதாந்த ருதுவிலிருந்து தூய்மையாதல் என்று கருதினர். எனவே உமர் (ரழி) அணியைச் சார்ந்தோர் கருத்துப்படி மூன்றாவது மாதாந்த ருது வெளிப்பட்டதும் இத்தா முடிவடையும். மாறாக ஆயிஷா (ரழி) அணியைச் சார்ந்தோரது கருத்துப்படி மூன்றாவது மாதாந்த ருதுவிலிருந்து தூய்மையடைந்த பின்னரே இத்தா முடிவடையும். இதுவானது ஸஹாபாக்கள், மற்றும் ஸலபுகளிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டமையை உறுதிப்படுத்துகின்றது. ஆயினும் அவர்கள் தமக்கெதிரான கருத்துக் கொண்டோரை எதிர்க்கவில்லை, அவர்களது கருத்துக்கள் அடிப்படையிலேயே பிழையானவை என்று மறுத்துரைக்கவுமில்லை. இவ்வாறு இஜ்திஹாத் செய்வது ஆகுமென்றே இவர்கள் கருதினார்கள்.

- மேலே உதாரணத்திற்கு எடுத்துக் கொண்ட 2:228 வசனத்திற்கு இரண்டு வசனங்களுக்கு முன்னால் ''தங்களது மனைவிமார்களுடன் சேருவதில்லை என்று சத்தியம் செய்து கொண்டவர்களுக்கு நான்கு மாதங்கள் பொறுத்திருக்க வேண்டும்.. (2:226) இந்த வசனத்தில் அல்லாஹ் 'நான்கு மாதங்கள்' என்று மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளான். இங்கு ஒரே கருத்தைத் தரக்கூடியவிதமாக திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ் தலாக்கிற்கான இத்தா விடயத்தில் கருத்து ஒற்றுமை காணப்படவேண்டும் என்று விரும்பியிருந்தால் (2: 226) இல் தெளிவாக நான்கு மாதங்கள் என்று குறிப்பிட்டது போல (2:228) இல் மூன்று 'குருஉ' என்று குறிப்பிடாமல் மூன்று மாதங்கள் என தெளிவாக சொல்லியிருப்பான்.

  இவ்வாறே அல்குர்ஆனின் வேறுபல இடங்களிலும், ஹதீஸ்களிலும் இத்தகைய பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்கள் இடம்பெற்றுள்ளதை அவதானிகலாம்.

- சட்டம் பற்றிய வசனங்களில் அதிகமானவை கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிப்பதாக இருப்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. பல கருத்துக்களுக்கு இடம் கொடுத்து மக்களுக்கு சட்டங்களில் விரிந்த வசதிகளை எற்படுத்த வேண்டும் எனவும், மேலும் மனிதனுக்கு ஆராய்வதற்கு - இஜ்திஹாத் செய்வதற்கு- இடத்தைக் கொடுக்க வேண்டும் எனவும் அல்லாஹ் விரும்பியுள்ளான் என்பது தெளிவாகின்றது.

- நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலும் அவரது வபாத்திற்குப் பின்னர் ஸஹாபாக்களிடையேயும் சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. அவற்றுக்கான சில உதாரணங்களை நோக்குவோம்.

1. இமாம் புகாரி, இப்னு உமர் அறிவிப்பதாக பின்வருமாறு ரிவாயத் செய்கிறார். ''நபி (ஸல்) அவர்கள் அகழி யுத்த நாளன்று பின்வருமாறு கூறினார்கள். பனூ குறைழாக்களின் பூமியிலேயே அனைவரும் அஸர் தொழ வேண்டும். பயணத்தின் போது அஸர் நேரம் வந்ததும் அவர்களில் சிலர் நாம் அங்கு போய்த்தான் தொழ வேண்டும் என்றனர். வேறு சிலர் நபி (ஸல்) அவர்கள் அந்தக் கருத்தில் கூறவில்லை, என்று கூறி பாதையிலேயே அஸரைத் தொழுது கொண்டார்கள். இவ்விடயம் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவிக்கப்பட்டபோது அவர்கள் யாரையும் கண்டிக்கவில்லை''

- இங்கு நபியவர்கள் அஸருக்கு முன்பே எதிரிகளின் பிரதேசத்தைச் சென்றடைய வேண்டுமென்று எதிர்பார்த்தே இவ்வாறு கூறியிருக்கிறார், மாறாக அஸர் தொழுகையைத் தாமதப்படுத்துவது நபியின் நோக்கமாக இருக்க முடியாது என்று கருதிய ஸஹாபாக்கள் இடையில் தொழுதனர். ஏனைய சில ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களின் கூற்றின் வெளிப்படையான கருத்தை வைத்துக் கொண்டு குறித்த எல்லையை அடைந்த பின்னரே தொழுதனர். இரு சாராரையும் நபி (ஸல்) அவர்கள் சரிகண்டு, அங்கீகரித்தார்கள்.

  உ-ம் : இமாம் அபூதாவூத் (ரஹ்), அபூ ஸஈத் அல்குத்ரி (ரழி) அறிவித்ததாக ரிவாயத் செய்கிறார். '' இரு ஸஹாபாக்கள் பிரயாணம் செய்தனர். பிரயாணத்தின் போது தொழுகையின் நேரமாகியது. ஆனால் வுழு செய்வதற்கான நீர் அவர்களுக்கு கிடைக்கவில்லை. எனவே இருவரும் சுத்தமான மண்ணால் தயம்மும் செய்து தொழுதனர். பின்னர் அத்தொழுகைக்குரிய நேரத்தில் இருவருக்கும் நீர் கிடைத்தது. அவர்களின் ஒருவர் மீண்டும் வுழு செய்து தொழுகையையும் மீட்டித் தொழுதார். ஆனால் மற்றவர் மீட்டித் தொழவில்லை. இதனை அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம்

வந்து கூறினார், அப்போது நபி (ஸல்) அவர்கள் தொழுகையை மீட்டித் தொழாதவரைப் பார்த்து 'நீர்' ஸுன்னாவின்படியே நடந்து கொண்டீர், உமது தொழுகை நிறைவேறிவிட்டது என்றார்கள். தொழுகையை மீட்டித் தொழுத மற்றவரைப் பார்த்து 'உமக்கு இரண்டு முறை கூலி உண்டு' என்று கூறினார்கள்.

உ-ம் அனஸ் (ரழி) கூறியதாக இமாம் பைஹகி (ரஹ்) பதிவு செய்கிறார் ''இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோழர்களாகிய நாங்கள் (ரமழான் காலத்தில்) பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தோம் அப்போது எங்களில் நோன்பு நோற்றோரும் இருந்தனர். நோற்காதோரும் இருந்தனர். இன்னும் எங்களில் தொழுகையை சுருக்கித் தொழுவோரும் இருந்தனர். சுருக்காது முழுமையாக தொழுவோரும் இருந்தனர். ஆனால் நோன்பாளி நோன்பு நோற்காதவரையோ, நோன்பு நோற்காதவர் நோன்பு நோற்றவரையோ, சுருக்கித் தொழுபவர் சுருக்கித் தொழாதவரையோ, சுருக்கித் தொழாதவர் சுருக்கித் தொழுபவரையோ குறைகூறவில்லை.

- நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின்னர் ஸஹாபாக்களிடையே கருத்து வேறுபாடுகள் அதிகம் தோன்றின. முஜ்தஹித்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஸஹாபாக்களின் கருத்து வேறுபாடுகள் வழிகோலின.

- நபி (ஸல்) அவர்களின் வபாத்தை தொடர்ந்து, ஸஹாபாக்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்கு பின்வருவன சில உதாரணங்களாகும்.

1. நபி (ஸல்) அவர்களது வபாத்தின் யதார்த்தம் குறித்து உமர் (ரழி) அபூபக்ர் (ரழி) இடையே நிலவிய கருத்து வேறுபாடு.

2. நபி (ஸல்) அவர்களை எங்கே நல்லடக்கம் செய்வது என்பது குறித்து தோன்றிய கருத்துவேறுபாடு.

3. நபிக்கு பின் யாரை கலீபாவாக தெரிவு செய்வது என்பதில் தோன்றிய கருத்து வேறுபாடு.

4. ஸகாத் வழங்க மறுத்தோர் குறித்து அபூபக்ர் (ரழி) உமர் (ரழி) இடையே நிலவிய கருத்து வேறுபாடு.

5. கைப்பற்றப்பட்ட நிலங்களை யாது செய்வது என்பது குறித்து உமர் (ரழி) அபூபக்ர் (ரழி) இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு.

- இவ்வாறு நபி (ஸல்) அவர்களது காலத்திலும், ஸஹாபாக்கள் காலத்திலும், தாபிஈன்கள் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த பல்வேறுபட்ட காலங்களிலும் கருத்துவேறுபாடுகள் என்பது தவிர்க்க முடியாத ஓர் அம்சம் என்பதனை இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சி ஆய்வு செய்யும் குறித்து ஒருவர் தெளிவாகப் புரிந்து கொள்வார். அவை இஸ்லாமிய சட்டத்துறையில் விசாலித்த தன்மைக்கும், தாராள போக்கிற்கும், மனித வாழ்வின் சௌகரியத்திற்கும் வழிவகுத்தன என்பதை நியாயமாக நோக்கும் எவரும் மறுக்க மாட்டார். உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களது கூற்று இதற்கு மேலும் வலுவூட்டுகிறது. ''நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் தங்களிடையே கருத்துவேறுபாடு கொள்ளாமல் இருந்திருந்தால் அது எனக்கு சந்தோசத்தைத் தந்திருக்காது ஏனெனில் அவர்கள் கருத்து வேறுபாடு கொள்ளாமல் இருந்திருந்தால் நமக்கு பல அனுமதிகள் (சலுகைகள்) கிடைத்திருக்காது''

**கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்கள் :**

அறிஞர்கள் சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களைப் பல்வேறு வகையில் விளக்கியுள்ளனர். அவற்றைத் தொகுத்து நோக்கும் போது நான்கு அடிப்படைகளிலேயே அவை எழுந்துள்ளன. ஏனைய துணைக் காரணிகள் அவற்றிலிருந்தே பிரிந்து செல்வதனை அவதானிக்கலாம்.

1. ஒரு குறிப்பிட்ட ஹதீஸை உறுதிப்படுத்துவதில் உண்டாகும் கருத்து வேறுபாடு.

- குறிப்பிட்ட ஹதீஸ் ஓர் இமாமுக்கு கிடைத்திருக்கும். மற்றோர் இமாமுக்கு கிடைத்திருக்காது. சிலபோது கிடைத்திருந்தாலும் அவரைப் பொறுத்தவரை அது ஆதாரபூர்வமாக இருக்காது. மற்றவர் அதனை ஆதாரபூர்வமாக கருதியிருப்பார். இதற்குக் காரணம் ஹதீஸ் அறிவிப்பாளர்களின் நிலை, தகைமை பற்றிய ஆய்வில் ஏற்படும் கருத்து வேறுபாடாகும். குறித்த ஹதீஸை ஆதாரபூர்வமானதென்று நிறுவவும் அவர்களிடம் விதிகளும் அடிப்படைகளும் இருக்கும். குறித்த ஹதீஸின் கருத்தை விளக்குவதற்கும் இதே வகையான விதிகளும் அடிப்படைகளும் அவர்களிடமுண்டு. இந்த அடிப்படை விதிகளும் இமாம்களிடம் வேறுபட்டவையாக இருக்கின்றன. இதனால் ஒருவர் இன்னொருவரின் கருத்தை ஏற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை.

2. சட்ட வசனத்தை (நஸ்ஸின்) விளக்குவதில் ஏற்படும் கருத்து வேறுபாடு.

- சட்ட வசனங்களை விளக்குவதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கலாம். இது சட்டதிட்டங்களில் வித்தியாசமான முடிவுகளைத் தோற்றுவிக்கலாம். ஏனெனில் மொழியில் ஒரு திட்டவட்டமான கருத்தைத் தரும் சொற்களுமுண்டு அவ்வாறே பல கருத்துக்களைத் தரக்கூடிய சொற்களும் உண்டு. உதாரணமாக அறபு மொழியில் 'அல் அய்ன்' என்ற சொல் கண், நீரூற்று, உளவாளி போன்ற பல்வேறு கருத்துக்களில் பிரயோகிக்கப்படுகிறது. இப்படியான வசனங்கள் சட்ட வசனங்களில் இடம்பெறும் போது அதுவே கருத்து வேறுபாட்டுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள குருஉ, லாமஸ போன்ற சொற்கள் இவற்றுக்கு சிறந்த உதாரணங்களாகும்.

  மேலும் குறிப்பிட்ட சில வசனங்கள் சுருக்கமாக கூறப்பட்டிருப்பதால் அதனை விளக்க வேண்டியேற்படலாம். அல்லது மொழியில் ஆகுபெயராக வந்தவற்றை மொழியோடு தொடர்புபடுத்தி விளக்கவேண்டியேற்படலாம். இவ்வாறான நிலைமைகள் சட்டத்தீர்ப்புகளில் கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கலாம்.

  மேலும் சில வசன அமைப்புக்களும் பல கருத்துக்களைத் தந்து கருத் வேறுபாட்டுக்கு இட்டுச் செல்லலாம். உதாரணமாக அபூ ஸஈத் அல்குத்ரி (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் பின்வருமாறு அமைந்துள்ளது. '' தகாதுல் ஜனீனி தகாது உம்மிஹி'' இதன் கருத்து ''ஒரு தாயின் வயிற்றில் இருக்கும் கன்றை அறுப்பது தாயை அறுப்பதேயாகும்'' இந்த வகையில் வயிற்றில் கன்றுள்ள ஒரு மிருகத்தை அறுக்கும் போது அதன் கன்று வயிற்றில் இறந்துவிடினும் அறுத்தாகவே கருதப்படும். ஏனெனில் தாயை அறுப்பதே அதனை அறுப்பதாகும் என்ற கருத்தை இந்த ஹதீஸ் கொடுக்கிறது. எனவே, மீண்டும் கன்றை அறுக்க வேண்டிய அவசியமில்லை.

  இந்த ஹதீஸ் ''தகாதல் ஜனீனி தகாத உம்மிஹி' என்றும் ரிவாயத் செய்யப்பட்டுள்ளது. இப்போது இதன் பொருள் ஒரு மிருகத்தின் வயிற்றில் இருக்கும் கன்றை அந்த

தாய் மிருகத்தை அறுப்பது போன்று அறுங்கள்' என்பதாகும் அதாவது தாயை அறுப்பது போலவே அதன் வயிற்றிலிருக்கும் கன்றையும் அறுத்தல் வேண்டும் என்ற கருத்தை இது தருகிறது.

3. முரண்பட்ட சட்ட வசனங்களிடையே இணக்கம் காண்பதிலும் அவற்றில் ஒன்றை உறுதிப்படுத்துவதிலும் ஏற்படும் வேறுபாடுகள்.

மேலே கூறப்பட்ட முதலாம், இரண்டாம் அம்சங்களிலும் அறிஞர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டார்கள் என வைத்துக் கொண்டாலும் இன்னுமோர் அம்சமும் எமது கவனத்திற்கு வருகிறது. சிலபோது வெளிப்படையாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தைக் கொண்ட பல ஹதீஸ்கள் வரலாம். அப்போது அவற்றிடையே இணக்கம் காணவேண்டும். அல்லது ஒன்றை ஏதோ ஒரு வகையில் உறுதிப்படுத்த வேண்டும். இதன்போது ஒரு அறிஞர் முரண்பாடில்லை எனக் கருதி வெளிப்படையாகவே முரண்பட்டதாகத் தோன்றும் வசனங்களிடையே இணக்கம் காண்பர். வேறொருவரோ ஒன்றை ஏதோ ஒரு வகையில் ஆதாரம் கண்டு உறுதிப்படுத்துவார்.

சட்ட வசனங்களிடையே காணப்படும் முரண்பாடுகளுக்கும், அவற்றிடையே இணக்கம் காண முற்படும் போது ஏற்பட்ட கருத்து வேறுபாட்டுக்கு உதாரணமாக இமாமுக்கு பிறகு ம:ஃமூம் ஸூரா பாத்திஹா ஓதுதல் பற்றிய கருத்து வேறுபாட்டில் மூன்று நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

1. எல்லாத் தொழுகைகளிலும் ம:ஃமூம் பாத்திஹா ஸூரா ஓத வேண்டும். இது இமாம் ஷாபிஈ அஹ்மத் ஆகியோரது கருத்தாகும்.

2. எல்லாத் தொழுகைகளிலும் ம:ஃமூம் பாத்திஹா ஸூராவை ஓதக் கூடாது. இது இமாம் அபூ ஹனீபாவின் கருத்தாகும்.

3. இமாம் மெதுவாக ஓதும் தொழுகைகளில் ம:ஃமூம் பாதிஹா ஸூராவை ஓத வேண்டும். சப்தமில்லாமல் ஓதும் தொழுகைகளில் பாதிஹா ஸூராவை ஓதக் கூடாது.

இக்கருத்து வேறுபாட்டுக்குக் காரணம் சட்டவசனங்கள் வேறுபட்ட முறையில் வந்திருப்பதேயாகும். சிலர் ஹதீஸ்களில் சிலவற்றை உறுதிப்படுத்தி வேறுசிலவற்றை விட்டுவிட்டனர். வேறு சிலர் இந்த ஹதீஸ்களிடையே இணக்கம் கண்டனர். இந்த வகையில் இமாமின் பின்னால் இருக்கும் ம:ஃமூம் ஓத வேண்டும் என்று வந்த ஹதீஸ்கள் மெதுவாக ஓதும் தொழுகைகளைக் குறிப்பிடுகின்றன என்றும் ம:ஃமூம் ஓதக்கூடாது என்று வந்த ஹதீஸ்கள் சப்தமிட்டு ஓதும் தொழுகைகளைக் குறிக்கின்றன எனவும் இவர்கள் கூறினர். இதுவே இமாம் மாலிக் போன்றோரின் கருத்தாகும்.

நபி (ஸல்) அவர்களது தோழர்கள், தாபிஈன்கள், பின்னால் வந்த இமாம்கள் இவர்களில் பெரும்பாலானோர் இமாமின் பின்னால் நிற்கும் ம:ஃமூம்கள் பாதிஹாவை ஓத வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளனர். இமாம் ஷாபிஈ, அஹ்மத் இப்னு முபாரக், இஸ்ஹாக் போன்றோரது கருத்தும் இதுவாகும்.

இமாம் இப்னு முபாரக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார். ''நான் இமாமுக்குப் பிறகு ஓதுகிறேன். கூபாவாசிகளில் சிலர் தவிர ஏனையோர் இவ்வாறு செய்கின்றனர். இமாமுக்குப் பிறகு ம:ஃமூம் ஓதாவிட்டாலும் அவரது தொழுகை நிறைவேறும் என்பதுவே எனது கருத்தாகும்.

இமாம் இப்னு முபாரக்கின் ஆதாரங்கள் இரு பக்கமும் சமமாகக் காணப்படுவதால் இந்த ஹதீஸ்களிடையே இணக்கம் காண முனைகிறார் போல் தோன்றுகிறது.

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து, முரண்பாடாகத் தோன்றும் சட்ட வசனங்களிடையே இணக்கம் காணமுனையும் போது உருவாகின்ற கருத் வேறுபாடுகள் பற்றி விளங்கிக் கொள்ள முடிகிறது.

4. சட்டவாக்க மூலாதாரங்கள், விதிகளில் காணப்பட்ட கருத்து வேறுபாடு.

ஹதீஸ்களை ஏற்பதிலும் மறுப்பதிலும் ஒவ்வோர் இமாமுக்கும் வேறுபட்ட நிபந்தனைகளும் அடிப்படை விதிகளும் உள்ளன. அவ்வாறே குறிப்பிட்ட சட்ட வசனத்திலிருந்து சட்டங்களை வகுத்துக் கொள்வதிலும் வேறுபட்ட போக்குகளும் விதிமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. அதே போன்று சில சட்டவாக்க மூலாதாரங்களும் கருத்துவேறுபாட்டுக்குரியனவாக காணப்டுகின்றன. ஒரு ஸஹாபியின் சொல்லை அல்லது மார்க்கத் தீர்ப்பை பலம் வாய்ந்த ஒரு சட்டவாக்க மூலாதாரமாக அதாவது குர்ஆன், ஹதீஸ் என்பவற்றின் தரத்தில் வைத்து நோக்குவோரும் அவற்றைவிடக் குறைந்த தரத்தில் வைத்து நோக்குவோரும் இமாம்களிடையே காணப்படுகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட விடயத்தில் மதீனாவாசிகளின் செயல் (அமலு அஹ்லில் மதீனா) சட்ட மூலாதாரமாகக் கொள்ளப்படும். சில போது சில வகையான ஹதீஸ்களை விட அதனை மேலாக மதிப்பவர்களும் இமாம்களிடையே காணப்படுகின்றனர்.

ஒரு ஹதீஸ் அறிவிப்பாளர் தான் அறிவிக்கும் விஷயத்துக்கு முரணாக செயற்பட்டிருப்பார். இந்த அறிவிப்பாளரின் செயலைக் கணிப்பதிலே இமாம்களிடையே கருத்து வேறுபாடு தோன்றுகிறது. ஒரு குறிப்பிட்ட செயல் கூடாது என்று தடுக்கப்பட்டால் அச் செயல் முற்றாக செல்லுபடியாகாது எனச் சிலர் கணிப்பர். வேறு சிலரோ இதற்கு மாற்றமான கருத்தைக் கொள்வர்.

இவ்வாறு சட்டவாக்க அடிப்படைவிதிகளிலும் சட்டவாக்க மூலாதாரங்களிலும் மற்றும் வரையறைகளோடு கூடிய சட்டவசனங்கள், வரையறைகளற்ற சட்ட வசனங்கள், எதிர்மறைப் பொருள் கொள்ளல் (மப்ஹூம் அல் முகாலபா) போன்ற சந்தர்ப்பங்கள் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களில் ஒன்றாக அமைகிறது.

**கருத்து வேறுபாடுகளின் போது பேண வேண்டிய ஒழுக்கங்கள்.**

இஸ்லாமிய சட்டத்துறையில் கருத்து வேறுபாடென்பது தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகும். ஸலபுஸ் ஸாலிஹீன்கள் கருத்து வேறுபாடுகளை உம்மத்துக்கான அருள் எனக் குறிப்பிட்டனர். நவீன கால சட்ட அறிஞர்களுள் ஒருவரான முஸ்தபா அஹ்மத் ஸர்கா (ரஹ்) அவர்கள் ''மனிதனுக்கு, சொகுசுவாக அமர்வதற்கு இயைந்து கொடுக்கக்கூடிய ஒரு கதிரைக்கு கருத்து வேறுபாடுகளை ஒப்பிட்டுச் சொன்னார்கள். அருளாக கணிக்கப்படும் கருத்துவேறுபாடுகள் மருளாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகப் பேண வேண்டிய சில ஒழுங்குகளை முன்வைக்கின்றோம்.

1. கருத்தொற்றுமையான விவகாரங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்தல் :-

முஸ்லிம்கள் அனைவரும் உடன்படுகின்ற விடயங்களில் பரஸ்பரம் உதவிக் கொள்ள வேண்டும். அல்குர்ஆன் இறைவனிடமிருந்து வந்தது என்றும், ஐங்கால தொழுகை,

ரமழானில் நோன்பு நோற்பது என்பது கடமையென்றும் முஹம்மத் (ஸல்) இறுதித் தூதரென்றும் நாம் அனைவரும் உடன்படுகின்ற விடயங்களில் ஒத்துழைத்துக் கொள்ள வேண்டும். தொழுகையிலும், நோன்பு நோற்பதிலும் என சில விவகாரங்களில் சட்டம் சார் கிளைப்பிரச்சினைகளில் எழும் கருத்து வேறுபாடுகள் பிளவுகளாக அமைய ஒருபோதும் வழிசெய்யக் கூடாது. இமாம் ரஷீத் ரிழா அவர்கள் அழகான ஒரு கருத்தை முன்வைத்தார்கள். ‘‘கருத்தொற்றுமையான விடயங்களில் நாம் பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்வோம். கருத்து வேறுபாடு கொண்ட அம்சங்களில் பரஸ்பரம் நியாயம் காண்போம்.

2. கருத்து வேறுபாடு கொண்ட விடயங்களில் விட்டுக் கொடுத்தல் :-

விட்டுக் கொடுத்தல் என்பது எமது தீனை, அகீதாவை விட்டுக் கொடுப்பதோ, அடிப்படையில் ஒரு போதும் மாறாத விடயங்களில் விட்டுக் கொடுப்பதோ அல்ல. மாறாக இஜ்திஹாதிற்குரிய அம்சங்களாக அமைகின்ற பல கருத்துக்களுக்கு இடம்பாடான சட்டம்சார் கிளைப்பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்து நடத்தல் வேண்டும். ஏனெனில் ஒரே விடயத்தில் பல முடிவுகள் சரியாக அமையலாம். அல்குர்ஆனை ஓதும் முறையில் பலதரப்பட்ட கிராஅத்துக்களை நபி (ஸல்) அவர்கள் அனுமதித்துள்ளார்கள். மேலும் முஜ்தஹித் ஒருவரது முயற்சிக்கு அது சரியானால் இரண்டு கூலி தவறினால் ஒரு கூலி என அங்கீகரித்திருப்பதும் பல முடிவுகள் வரலாம் அவை முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியதல்ல என்பதைச் சுட்டிநிற்கின்றது. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ஒரு பிரபலமான கூற்றை முன்வைத்துள்ளார்கள். ‘‘ என்னுடைய கருத்துச் சரியானது. சில சமயம் அது தவறாகவும் இருக்கலாம். பிறர் கருத்துத் தவறானது சில சமயம் சரியாகவும் இருக்கலாம்’’

3. ஒருவரையெருவர் சாடாதிருத்தல், மதித்து நடத்தல் :-

நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஸஹாபாக்கள் வித்தியாசமான கருத்துக்களை தெரிவித்த சந்தர்ப்பங்களிலும், வித்தியாசமாகத் தொழிற்பட்ட சந்தர்ப்பங்களிலும் அவர்கள் அனைவரையும் மதித்து அவர்களுக்கு கணிப்புக் கொடுத்து நடந்து கொண்டுள்ளார்கள். ஒருவர் மற்றவரைச் சாடுபவராக ஸஹாபாக்கள் இருக்கவில்லை. இதற்குச் சான்றாக பனூகுறைழா சம்பவத்தையும், பயணத்தின் போது இரண்டு ஸஹாபாக்கள் நீர் கிடைக்காத போது தயம்மும் செய்து தொழுவிட்டு, பின்னர் நீர் கிடைத்த போது அவர்கள் இருவரும் நடந்து கொண்ட விதத்தையும் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு அணுகினார்கள் என்பதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் மதித்து நடந்துகொள்வதற்கு இமாம் புகாரி (ரஹ்) தன்னுடைய ஹதீஸ் நூலில் பித்அத்வாதிகளின் அறிவிப்பைப் பதிவு செய்துள்ளார்கள். ஏனெனில் அவர்கள் உண்மையாளர்களாக இருந்தார்கள். இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் அறிவிப்பாளர்களில் இம்ரான் இப்னு ஹத்தான் என்ற ஒருவர் உண்டு. இவர் கவாரிஜ்களை சார்ந்த ஒரு பித்அத்வாதி மற்றும் அவர்களது ஆஸ்தானக் கவிஞர் அலி (ரழி) அவர்களைக் கொலை செய்த இப்னு முல்ஜிமை புகழ்ந்து பாடியவரும் கூட.

பித்அத் செய்கின்ற மக்களுடன், அவர்களை மதித்து நல்ல முறையில் நடப்பதன் மூலம் அவர்கள் தம் தவறுகளை உணர்ந்து நேர்வழியில் வரக்கூடும். ஒரேயடியாக

வெறுத்து ஒதுக்கினால் அவர்கள் அந்த பித்அத்திலேயே தொடர்ந்திருக்க வாய்ப்பு உள்ளது. உஸ்மான் (ரழி) அவர்களுடைய கடைசி காலத்தில் மதீனா முற்றுகையிடப்படுகிறது. மதீனாவையே தம் கைவசம் கொண்டுவருகிறார்கள், உஸ்மான் (ரழி) அவர்களை கலகக்காரர்கள் வீட்டுக்கு வெளியே விடவும் இல்லை. பள்ளியில் இமாமாக நின்று தொழுகை நடாத்த அனுமதிக்கவுமில்லை. தொழுகை நடாத்தும பொறுப்பைக் கூட கலகக்காரர்களே எடுத்துக் கொள்கிறார்கள். அந்த நேரத்தில் அலி (ரழி) உட்பட பெரும் நபித் தோழர்கள் உஸ்மான் (ரழி) அவர்களிடம் தனியே தொழுவதற்கு அனுமதி கேட்டபோது அனுமதிக்க மறுத்தார்கள். உஸ்மான் (ரழி) அவர்களைத் தவிர அனைத்து நபித் தோழர்களும் கலகக்காரர்களின் பின்னால் ம∴மும்களாக நின்று தொழுதார்கள். இங்கு நபித்தோழர்கள் தனிப்பள்ளி அமைக்கவும் இல்லை. கலகக்காரர்களை காபிர்கள் என்று அழைக்கவும் இல்லை.

4. ஒரு மத்ஹபின் அல்லது தனிமனிதனின் கருத்துக்களில் பிடிவாதப் போக்கை தவிர்த்தல்.

ஆதாரமற்ற யாருக்குப் பின்னாலும் செல்லாத மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஸைத் (ரழி) அவர்களின் கூற்று இதற்கு நல்லதோர் சான்றாகும். ‘‘இன்னார் சொன்னார் என்பதற்காக அல்லது இமாமின் கருத்து என்பதற்காக நாம் அல்லாஹ்வை வழிப்படவில்லை. அல்லாஹ்வின் வேதத்தில் வந்திருக்கிறது அவரது தூதர் கூறியிருக்கிறார் என்பதற்காகவே வழிப்படுகிறோம்’’ அதே நேரம் இமாம்களின் தகுதியை மறந்து அவர்களை கீழ்த்தரமாக விமர்சிக்கின்ற தீவிரவாத நிலைக்குச் சென்றுவிடக் கூடாது. ஒவ்வொருவரும் தவறை ஒத்துக் கொள்ளும் மனோநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். விமர்சனங்களை வரவேற்க வேண்டும். அது எம்மை நெறிப்படுத்தக்கூடியது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறினார்கள் ‘‘ உண்மை என் நாவிலிருந்து வருகிறதா அல்லது என்னுடன் விவாதம் புரிபவர் நாவிலிருந்து வருகிறதா என்பதைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. உண்மை வெளிவர வேண்டும் அவ்வளவுதான்’’

5. அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளல்.

அடுத்தவர் பற்றிய நல்லெண்ணம் கொள்ளும் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். கறுப்புக் கண்ணாடி அணிந்து அடுத்தவரை அவதானிக்கும் முறையை கைவிட்டுவிட வேண்டும். நான் தூய்மையானவன் பரிசுத்தமானவன் என்ற மனோபாவம் ஒரு மு∴மினிடம் வந்துவிடக் கூடாது. ‘‘நீங்கள் உங்களைத் தூய்மையானவர் என்று சொல்லாதீர்கள். யார் தக்வா உடையவர் என்பதை அல்லாஹ்வே மிகவும் நன்கறிவான். (53:52)

ஈமானின் சிறந்த அடையாளமே ‘‘அல்லாஹ்வைக் குறித்தும், மக்களைக் குறித்தும் நல்லெண்ணம் கொள்ளல். ஈமானின் மோசமான அடையாளம் அல்லாஹ்வைக் குறித்தும் மக்களைக் குறித்தும் கெட்ட எண்ணம் கொள்ளல்’’ என்பது ஸலபுகளின் கூற்றாகும்.

எப்போதும் ஒரு முஸ்லிம் எப்படி இருக்க வெண்டுமெனில் பிறரைக் குறித்து ஏதாவது ஒரு செய்தி தன் காதில் விழுந்தால் உடனே கற்பனை செய்வதை நிறுத்த வேண்டும். அல்லது அப்படி இருக்காது என்று நல்லெண்ணம் கொள்ள வேண்டும்.

சந்தேகம் கொள்வதிலிருந்து யாரும் தப்பிக்கவே முடியாது. ஏனெனில் சைத்தான் அதனைத் தூண்டுகிறான். நபி (ஸல்) அவர்கள் தன் மனைவி ஸபிய்யா (ரழி) அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவ்விடத்தால் சென்ற இரண்டு ஸஹாபாக்களுக்கும் நபி (ஸல்) அவர்கள் இது என் மனைவி ஸபிய்யா பின்த் . என்று சொல்லிக் காட்டிய நிகழ்வு அவர்களைச் சந்தேகக் கண்கொண்டு நோக்காதிருக்க வேண்டும் என்பதற்காகும். எனவே மார்க்க விவகாரங்களை வைத்துக் கொண்டு முஸ்லிம்களாகியவர்கள் ஒருவர் அடுத்தவரை சந்தேகக் கண்கொண்டு நோக்குவது மிகப் பெரிய தவறாகும். நபி (ஸல்) அவர்களுக்கு அதிக கோபம் தருவதும் மறுமை நாளில் நபி (ஸல்) அவர்கள் தம் அருகிலேயே வர அனுமதிக்காதவர்களும் யார் எனில் .... மக்களின் குறைகளைத் தேடி வெளிப்படுத்துபவர்களே (அஹ்மத்)

6. விவாதங்களை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ளல் :-

- கருத்து வேறுபாட்டின் போது விவாத மேடைகள் அமைத்து ஒருவரையொருவர் தம் திறமையால் வீழ்த்திட வேண்டும், தம் பேச்சுத் திறமையால் மட்டம் தட்ட வேண்டும் என முனைந்திடக் கூடாது.

  இஸ்லாம் விவாதத்தை முற்றாக தடுக்கவில்லை. ஆயினும் அழகிய முறையில் விவாதிக்கும்படி வேண்டுகிறது. விவாதம் என்றாலே அங்கு மென்மையை காண்பது சிரமம். எனவேதான் அல்லாஹ் (16:125) இல் விவாதத்தின் போது மென்மையை கடைப்பிடிக்க உத்தரவிடுகிறான்.

- இதே நேரம் விவாதங்களைத் தவிர்த்து கொள்ளுவதை வரவேற்று பல நபிமொழிகள் வந்திருக்கின்றன. ''சத்தியத்தில் தான் இருக்கிறோம் என்று தெரிந்த பின்பும் விவாதத்தை விட்டவருக்கு சுவனத்தின்நடுவே ஒரு வீட்டிற்கான உத்தரவாதத்தை நான் தருகிறேன். பிறரைச் சிரிக்க வைப்பதற்கே என்றாலும் பொய் சொல்வதை யார் விட்டுவிடுகிறாரோ அவருக்கு சுவனத்தின் நடுவே ஒரு வீட்டிற்கான உத்தரவாதத்தை நான் தருகிறேன். யாரிடத்தில் நற்பண்புகள் நிரம்ப இருக்கிறதோ அவருக்கு உயர்ந்த சுவனத்தில் ஒரு வீட்டிற்கான உத்தரவாதத்தை நான் தருகிறேன். (அபூதாவூத்)

- மேலும் நபி (ஸல்) கூறினார்கள் : ''நேர்வழியை அடைந்ததன் பின்னால் ஒரு கூட்டம் எப்போது வழிகெடும் என்றால் விவாதங்களில் ஈடுபடும் போதுதான் அப்துல்லாஹ் அம்ரு இப்னு ஜுன்து (ரழி) அறிவிக்கிறார்கள். நானும் எனது சகோதரரும் ஒரு தடவை மஜ்லிஸில் கலந்து கொள்வதற்காகப் பள்ளி வாசலுக்குச் சென்றோம். அப்போது மூத்த நபித் தோழர்கள் வாசலில் அமர்ந்து இருந்தனர். அவர்களைக் கடந்து உள்ளே செல்வது மரியாதையாக இருக்காது என்று ஓர் ஓரத்தில் அமர்ந்தோம். அப்போது அவர்கள் அல்குர்ஆனின் ஒரு வசனத்தை எடுத்து விவாதிக்கத் தொடங்கினர். விவாதம் சூடுபிடித்து அவர்களுடைய சப்தம் பள்ளிவாசலில் உயரத் தொடங்கியது. கடைசியில் நபி (ஸல்) அவர்கள் கோபமாக முகம் சிவக்க அவர்களை நோக்கி வந்தார்கள். சிறிது மண்ணை எடுத்து அவர்களை நோக்கி வீசிவிட்டு சொன்னார்கள். நிறுத்துங்கள்! உங்களுக்கு முன் சென்ற கூட்டம் இப்படித்தான் அழிந்தது. நபிமார்களுக்கிடையே சிலரை, சிலரைவிட உயர்த்தி, வேத வரிகளில் சிலவற்றை சிலவற்றுக்கு முரணாக விவாதித்துத்தான் அழிந்து போயினர். அல்குர்ஆனின் வசனங்கள் சிலவற்றைக் கொண்டு சிலவற்றைப்

பொய்யாக்குவதற்காகவா இறக்கப்பட்டிருக்கின்றன... ? எதைக் கற்றீர்களோ அதைச் செயற்படுத்துங்கள். எது தெரியவில்லையோ அதை அறிந்தவரிடம் கேளுங்கள் .. (முஸ்னத் அஹ்மத்)

- சிலர் சட்டங்களின் கிளைப் பிரச்சினைகளை மையப்படுத்தி அனைத்தையுமே விவாத மேடைக்கு இழுக்கின்றனர். தங்களின் கருத்துக்களை எந்த விதத்திலும் திருத்திக் கொள்ளத் தயார் இல்லாத சிலர், தாங்கள் சொல்வதைப் பிறர் கேட்கவேண்டும். ஆனால் நாங்கள் யார் சொல்வதையும் கேட்க மாட்டோம் என்ற நிலையில் சிலர், நாங்களே எப்போதும் சத்தியத்தில் இருப்பவர்கள். மற்றவர்கள் எல்லாம் எப்போதும் அசத்தியத்தில் இருப்பவர்கள் என்று என்னும் சிலர் என விவாதிப்போரை காணலாம்.

  இத்தகு விவாதங்கள் சத்தியத்தை தெளிவுபடுத்துவதைவிட குரோதங்களையும், பகைமைகளையும் வளர்த்துவிடுவதாகவே அமைகின்றது.

  தவிர்க்கமுடியாத நேரங்களில் மாற்றுக் கருத்துக் கொண்டோருடன் எவ்வாறு விவாதிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டலை குர்ஆன் தெளிவாக முன்வைக்கின்றது.

7. மார்க்கத்தைப் பின்பற்றுவதில் நடுநிலைப் போக்கைப் பின்பற்றல் :-

- எந்த விடயத்திலும் அளவுக்கு மீறிய கடுமையான போக்கை விட்டுவிட்டு நடுநிலையாக இருத்தலே சிறப்பு. ஏனெனில் எம்மை நடுநிலைச் சமூகம் என குர்ஆன் புகழ்ந்துரைக்கின்றது.

  எனவே மார்க்கத்தைப் பின்பற்றுவதில் வரம்பு கடந்த போக்கை கடைப்பிடிக்கக் கூடாது. அதில் சமநிலை பேணும் பண்பு உருவாகும் போது தான் கருத்து வேறுபாடு நீங்க வாய்ப்பு ஏற்படுகிறது.

  இப்னு மஸ்ஊத் (ரழி) அறிவிக்கிறார்கள் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘தீவிர போக்கைக் கையாள்பவர்களுக்கு நாசம்’’ என்று மூன்று முறை கூறினார்கள். (முஸ்லிம்)

  இங்கு தீவிர போக்கென்பது ‘‘தங்களுடைய செயல்களிலும் சொற்களிலும் எல்லை கடந்து செயற்படுபவர்கள்’’ என இமாம் நவவி (ரஹ்) விளக்கமளித்தார்கள்.

  ‘‘மார்க்கத்தில் அளவு கடந்த போக்கை நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன். உங்களுக்கு முன் சென்ற சமூகம் அழிந்து போனதெல்லாம் மார்க்கத்தில் அளவு கடந்த போக்கை கடைப்பிடித்ததால் தான்’’ (அஹ்மத்)

- தீவிர போக்குப் பிரிவினையைத் தோற்றுவிக்கும். இலகுவைக் கையாள்வது நெருக்கத்தையும் இணக்கத்தையும் கொண்டுவரும். ஸலபுகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் எப்போதும் எளிதான விடயங்களைக் கையாள்பவர்களாக இருந்தார்கள். தமக்கிடையே எத்தனையோ விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் யாரும் தங்களுக்கிடையே முரண்பட்டுக் கொள்ளவில்லை. மாறாக ஒருவர் தீவிர போக்கைக் கையாண்டால் அதைக் கண்டித்திருக்கிறார்கள்.

  குறித்த ஒரு விடயம் குறித்து அதிகம் கேள்வி கேட்பது கடுமையின் பக்கமே இட்டுச் செல்லும் என்பதை நபி (ஸல்) அவர்கள் உணர்த்தினார்கள்.

''முஸ்லிம்களுக்குச் செய்யும் அநீதி என்னவென்றால் ஹராம் அல்லாத ஒரு விடயத்தில் மீண்டும் மீண்டும் ஒருவர் கேள்விகள் கேட்டு இவர் கேட்ட காரணத்தினாலேயே அது ஹராமாகிவிட்டால் அதுதான் முஸ்லிம்களுக்குச் செய்யும் அநீதி (புகாரி)

8. கலைச் சொற்களின் கருத்துக்களை அறிந்து பயன்படுத்துதல்.

- குர்ஆன் ஸுன்னாவில் இடம்பெற்றுள்ள கலைச் சொற்களை கருத்தறிந்து பயன்படுத்தாவிட்டால் அது சமூகப் .. தகருக்கும் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கலாம். உதாரணமாக குப்ர், ஷிர்க், நிபாக், ஜாஹிலிய்யத் போன்ற சொற்களைப் பயன்படுத்தும் போது அவற்றில் நூற்றுக்கணக்கான அர்த்தங்களை அறிந்து பயன்படுத்த வேண்டும். ஏனெனில் ஷரிஅத் சட்டத்தில் ஒரு வார்த்தை எந்த வழக்குச் சொல்லில் வருகிறது. அந்த வார்த்தை தரும் உண்மையான பொருள் என்ன என்பதைப் புரியாமல் பேசமுற்படும் போது வீண் விவாதங்களும் மோதல்களும் ஏற்படுவது மட்டுமன்றி தாமும் வழிகெட்டுப் பிறரையும் வழிகெடுத்திடும் நிலைதான் தோன்றும்.

  ஷிர்க் என்ற வார்த்தையை எடுத்து நோக்கினால் அது இணைவைத்தல் என்ற கருத்தைத் தருகிறது. ஷிர்க்கில் பெரியது, சிறியது என்று தராதரம் உள்ளது அனைத்தையும் ஒரே தரத்தில் வைத்து உடனே தீர்ப்பு வழங்கக் கூடாது. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் பெரிய ஷிர்க்காகும். அதேநேரம் சில பாவங்களை ஷிர்க் என்ற பெயரில் நபி மொழி குறிப்பிட்டுக் காட்டுகின்றது. '' குறிபார்த்தலும், தாயத்துக் கட்டுதலும் மந்திரித்தலும் இணைவைப்பாகும்'' (அஹ்மத்)

  எனவே அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் என்ற பெரிய ஷிர்க்கின் தரத்தில் நபிமொழியில் குறிப்பிட்ட செயற்பாடுகளைச் சமப்படுத்தி நோக்க முடியாது.

9. இஜ்திஹாதுக்குரிய விடயங்களை அடித்துக் செல்வதைத் தவிர்த்தல்.

- ஒரு முஜ்தஹிதின் கருத்தை அடுத்த முஜ்தஹித் மதித்து நடக்க வேண்டும். தனது கருத்தில் தனது மத்ஹபில் உள்ளதை வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கொண்டு அடித்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

  அன்றைய அறிஞர்கள் பிறரின் கருத்தை மதித்து நடந்தார்கள். தங்களின் கருத்துக்கு மாற்றமான கருத்தை சிலசமயம் செயல்வடிவில் கொண்டுவரும் நிலை வந்தபோது எந்தவித மனக்கஷ்டமும் இன்றி அதைச் செய்தார்கள். ''இந்தக் கருத்துப் பாதுகாப்பானது'' இது சிறந்த கருத்து'' ''மாறாக இதுவே சிறந்தது, இதைத்தவிர வேறு எல்லாக் கருத்துக்களும் கருத்து என்று எவரும் கூறவில்லை. நபித்தோழர்களுள் அந்நியப் பெண்களைத் தொட்டால் வுழு செய்தவர்களும் இருந்தனர்.

  இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ஒருமுறை பக்தாதில் ஸுபஹ் தொழுகையை நிறைவேற்றினார்கள். அவர் தொழுத அந்தப் பள்ளிவாசல் இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் சட்டத்தளத்திற்குப் பக்கத்தில் இருந்தது. அப்போது இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் குனூத்தும் ஓதவில்லை. ருகுவிலிருந்து நிமிரும் போது கைகளை உயர்த்தவும் இல்லை. ஏன் என்று கேட்டதற்கு இமாம் அபூஹனீபாவின் கருத்துக்கு நாம் கண்ணியம் கொடுக்கிறோம் என்று கூறினார்கள்.

**தேர்ச்சி 05 : இபாதா பற்றிய இஸ்லாமிய நோக்கை விளங்கி ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் பற்றி விரிவான விளக்கத்தைப் பெற்று அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளைகள் : 35**

**கற்றல் பேறுகள் :**

- இபாதத் என்ற எண்ணக்கருவை இஸ்லாமிய மூலாதாரங்களின் துணையோடு விளக்குவார்.
- அடிப்படை வணக்கங்களின் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் அறிந்து விளக்கம் தருவார்.
- அடிப்படை வணக்கங்களின் ஆன்மீக, லௌகீக பயன்களை விளக்கி எழுதுவார்.
- பிரதான இபாதத்துக்களின் விதிமுறைகளையும் செயன்முறைகளையும் ஆதாரங்களுடன் விபரிப்பார்.
- அடிப்படை இபாதத்துகளை வாழ்வில் முறையாக நிறைவேற்றி வருவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**இபாதத் பற்றிய விளக்கம்**

- ''அபத'' ''உபூதிய்யா'' எனும் அரபு மூலவேர்ச் சொற்களிலிருந்து தோன்றிய பதமே இபாதாவாகும். அடிபணிதல், பணிபுரிதல், ஊழியம் செய்தல், அடிமையாய் இருத்தல், வணங்குதல், வழிபடுதல் முதலான கருத்துக்களை இப்பதம் தருகின்றது.
- இபாதா பற்றி குர்ஆனும் ஸுன்னாவும் தெளிவுபடுத்துகின்றன.

  ஜின்களையும் மனிதர்களையும் (எனக்கு வழிபட்டு) என்னை வணங்குவதற்கன்றி (வேறெதற்காகவும்) நான் படைக்கவில்லை (51:56)
- இது பற்றி நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ் கூறியதாக பின்வருமாறு கூறியுள்ளார்கள். ''என் அடியார்களே நிச்சயமாக நான் உங்களைக் கொண்டு என் தனிமையைப் போக்கிக் கொள்ளவோ படைப்பினங்களின் தொகையை அதிகரிக்கவோ, என்னால் இயலாமல் போன ஒரு செயலில் உங்களின் உதவியைப் பெறவோ, ஒரு நன்மையைக் கொண்டு வரவோ, ஒரு தீமையைத் தடுக்கவோ உங்கைளப் படைக்கவில்லை. உங்களைப் படைத்ததெல்லாம் நீங்கள் என்னை வணங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக, அதிகமாக என்னை நினைவுபடுத்துவதற்காக'' (ஹதீஸுல் குத்ஸி)

  ''உங்களில் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் தவிர வேறு எதனையும் நேசிப்பவர் ஈமான் கொண்டவராக ஆகமாட்டார்'' (முஸ்னத் அஹ்மத்)
- மேற்படி குர்ஆன், ஹதீஸ் போதனைகள் இபாதா பற்றிப் பல்வேறு கருத்துக்களை வலியுறுத்தி நிற்கின்றன. மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கத்தைப் புரிந்து

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முற்று முழுதாக அடிபணிந்து வழிப்பட்டு வாழ்வு முழுவதையும் இபாதாவாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே அவற்றின் நோக்கமாகும்.

- குர்ஆனும், ஸுன்னாவும் இபாதா பற்றி முன்வைத்துள்ள போதனைகளை அடிப்படையாக வைத்து இஸ்லாமிய அறிஞர்கள் அதைப் பல்வேறு விதமாக விளக்கியுள்ளனர்.

  ''அடிப்படையில் அல்லாஹ்வுக்கு வழிபடுதல் (தாஅத்) அடிபணிதல் (குழூ∴) முதலாம் அம்சங்களை உள்ளடக்கிய இபாதாவானது ஹுப்பு எனப்படும் இறை நேசத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்'' (இப்னு தைமியா (ரஹ்))

  ''இபாதத்தின் அடிப்படை அல்லாஹ்வை நேசித்தல் ஆகும். அதாவது அவனைத் தவிர வேறு எவரையும் நேசிக்காமல் அவனை மாத்திரமே நேசித்தல் இபாதாவாகும்'' (இப்னுல் கையும் (ரஹ்))

  ''இஸ்லாத்தில் இபாதாவானது முக்கிய இரண்டு அடிப்படைகளைக் கொண்டுள்ளது. அல்லாஹ்வை முற்றிலும் நேசித்தலும் அவனை வழிபடுவதுமே அவை இரண்டுமாகும்'' (யூசுப் அல் கர்ளாவி)

- இவற்றை அடிப்படையாகக் கொண்டு இபாதாவைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம். ''இஸ்லாத்தை விசுவாசிக்கும் ஒருவன் அல்லாஹ்வின் மீது கொண்ட உச்ச அன்பின் அடிப்படையில் அவனது ஏவல் விலக்கல்களுக்குப் பூரணமாகக் கட்டுப்பட்டு வாழ்வதனைக் குறிக்கின்றது.''

- இறை நேசம் அல்லது இறையன்பு என்பது ஒரு முஸ்லிமிடம் தோன்றுவதற்கு அவன் தன்மீது அல்லாஹ் சொரிந்துள்ள அருட்கொடைகளை உணர்வது அவசியமானதாகும். மனிதனது இவ்வாறான உணர்வுக்கு ஏற்பவே அவனது இறை நேசமும் வித்தியாசப்பட்டிருக்கும்.

- இபாதத்தில் ஈடுபடுதல், வழிபடுதல் என்பதன் கருத்து ஒருவன் தான் மேற்கொள்ளும் வணக்கங்களை ஆர்வத்தோடும், ஆசையோடும், விருப்பத்தோடும் நிறைவேற்றுவதாகும். இவ்வாறான மனிதனுக்கு, அவன் எதிர் கொள்ளும் இடர்பாடுகள் எதுவும் ஒரு பொருட்டாக அமையமாட்டாது.

- மனிதனின் வெளிப்படையான, மறைவான குறைபாடுகள், தவறான மனப்போக்குகள், கோணலான சிந்தனைகள், கொடுமைகள், அநீதி என்பவற்றிலிருந்து அவனது நடவடிக்கைகளைச் சீர்செய்யும் நோக்கத்தோடு அல்லாஹ் இபாதத்களைக் கடமையாக்கியுள்ளான். வணங்குபவர்கள் இபாதாவின் வெளித்தோற்றப்பாடுகளைக் கடந்து அவற்றின் யதார்த்தத்தை அடையும் பட்சத்தில்தான் அவன் சீரடைந்து பண்படுவது சாத்தியமாகும்.

- இபாதா ஒரு மனிதனது பிறப்பிலிருந்து அவனது இறப்பு வரையுள்ள எல்லா அம்சங்களையும் உள்ளடக்குவதால் அது பரந்துபட்டதாகவே அமையும். அடிப்படை வணக்கங்களுடன், மனிதனது அன்றாட நடிவடிக்கைகள் அனைத்தும் இதில் உள்ளடங்கும்.

- இபாதாக்கள் இரண்டு வகைகளாக வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன.

  1) அடிப்படை வணக்கங்கள் : உதாரணம் - தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்

2) அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்படுகின்ற செயற்பாடுகள்.
உதாரணம் - உழைத்தல், உண்ணல், பருகல், உறங்கல், குடும்பத்தினரை நேசிப்பதும் உதவுவதும், அயலார் அநாதைகள், ஏழைகள், ஜீவராசிகள் மீது இரக்கம் காட்டுதல்.

- இவ்விபாதத்துக்களை நிறைவேற்றுவதற்கு விதிமுறைகளும், ஒழுங்கு முறைகளும் காணப்படுகின்றன.
  - அடிப்படை வணக்கங்கள் குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையிலும், இஹ்லாஸுடனும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
  - அன்றாட நடவடிக்கைகளுக்குரிய செயற்பாடுகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்படும் போது அவை இபாதத் என்ற அங்கீகாரத்தைப் பெறும்.

1). தூய எண்ணம் :- அடிப்படை வணக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு நிய்யத் அவசியப்படுவது போலவே அன்றாட நடவடிக்கைகள் இபாதத்தாக மாறுவதற்கும் தூய எண்ணம் அவசியமாகிறது.

2). இஸ்லாமிய ஷரீஆவின் அனுமதி :- அன்றாட நடவடிக்கைகளுக்குரிய செயற்பாடுகள் ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இஸ்லாம் தடுத்த காரியங்கள் எதுவும் தூய எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டாலும் அது அங்கீகரிக்கப்படமாட்டாது.

3). ஷரீஆவின் வரையறைகளை மீறாதிருத்தல் :- குறித்ததொரு அனுமதிக்கப்பட்ட செயலை அன்றாட வாழ்வில் செய்வதாக இருந்தாலும் அதற்கென விதிக்கப்பட்டுள்ள சட்டங்களையும், ஒழுங்குகளையும் பேணி அதனை நிறைவேற்ற வேண்டும்.

4). நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல் :- அன்றாட விவகாரங்கள் அதற்குரிய ஒழுங்கமைப்பைப் பேணியும், சீராகவும் நிறைவேற்றப்படல் வேண்டும். ஒழுங்கீனம், வீண்விரயம், ஊழல் இடம்பெற முடியாது.

5). அடிப்படை வணக்கங்களுக்குத் தடையாக அமையாதிருத்தல் :- அன்றாட நடவடிக்கைகள், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற கடமைகளை நிறைவேற்றத் தடையாக அமையுமாயின் அச்செயற்பாடுகள் இபாதாவாகக் கணிக்கப்படமாட்டாது.

- மேற்படி இபாதத்கள் அனைத்தும் பர்ளு, ஸுன்னத் என இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன. பர்ளு என்பதை கட்டாயமானது எனவும், ஸுன்னத் என்பதை மேலதிகமானது அல்லது உபரியானது எனவும் குறிப்பிடலாம்.
- பர்ளு கட்டாயமான பிரிவில் அடங்குபவை இரண்டு கூறுகளாக நோக்கப்படுகின்றன.

**1) பர்ளு ஐன் :**

இது ஒவ்வொரு தனிமனிதன் மீதும் விதியாகும் கட்டாயக் கடமைகளைக் குறிக்கின்றது. காரணங்களின்றி இக்கடமைகளைப் புறக்கணிப்பவன் பாவியாக மாறுகிறான். தண்டனைக்கு உட்படுவான். உதாரணமாக ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றல், ரமழானில் நோன்பு நோற்றல், குடும்பத்தைப் பராமரித்தல்.

**2) பர்ளு கிபாயா:**

இவையும் ஒவ்வொரு தனிமனிதன் மீதும் கடமையானதாகும். ஆனால் எவரேனும் இக்கடமையை நிறைவேற்றினால் செய்தவர்களுக்கு நன்மை கிடைக்கும். எவரும்

நிறைவேற்றாவிட்டால் அனைவரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவர். இவற்றுள் சமூகக் கடமைகள் அடங்கும். ஜனாஸாவுக்கு கடமைகளை நிறைவேற்ற சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்தல், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் தேச சமூக நலன்களில் பங்கு கொள்ளல், துறை சார்ந்த மனித வளங்களை உருவாக்குதல் போன்றன.

- பர்ளுகளில் அடங்காதவைகள் ஸுன்னத் எனும் பிரிவில் அடங்கும். இவை பர்ளுகளுக்கு மேலதிகமாக நிறைவேற்றப்படும். இவற்றின் மூலம் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக ஸுன்னத்தான தொழுகைகள், ஸுன்னத்தான நோன்புகள், திலாவத், திக்ர், இஸ்தி∴பார், ஸலவாத், அவ்ராதுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- இபாதத்துகள் அனைத்தும் இஹ்லாஸ் (தூய எண்ணம்) வர∴ (பேணுதல்) தக்வா (இறையச்சம்) குஷுஉ (பயஉணர்வு) குளூ∴ (பணிவு) என்பவற்றுடன் நிறைவேற்றப்படல் வேண்டும். அப்போதுதான் அதை நிறைவேற்றுபவனுக்குள் அது மாற்றத்தைக் கொண்டுவரும்.

### அடிப்படை வணக்கங்களின் முக்கியத்துவங்களும், நோக்கங்களும்

இபாதத்துக்கள் வரிசையில் ஐம்பெரும் கடமைகள் வாழ்வு முழுவதையும் இபாதாவாக மாற்றுவதற்கு மனிதனை இட்டுச் செல்ல உதவுவதால் அவை இஸ்லாத்தில் தலையாய வணக்கங்களாகக் கணிக்கப்படுகின்றன. இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் இது பற்றிப் பின்வருமாறு கூறினார்கள்.

‘‘ இஸ்லாம் ஐந்து அம்சங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சான்று பகர்தல், தொழுகையை நிலைநிறுத்துதல், ஸகாத்தைக் கொடுத்தல், ரமழானில் நோன்பு நோற்றல், ஹஜ் செய்ய வசதியுள்ளவர்கள் அதனை நிறைவேற்றல்’’ (அல் ஹதீஸ்)

- ஐம்பெரும் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் விசுவாசி தூய்மை அடைவதோடு அவனது வாழ்வு முழுவதும் சீர்படவும் வழி பிறக்கின்றது. ஆனால் இவற்றை மாத்திரம் நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹ்வின் பரிபூரணமான அடிமையாகவோ அவனுக்கான சகல இபாதத்துக்களையும் நிறைவேற்றியவனாகவோ ஆகிவிட முடியாது என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். இவற்றின் மூலம் தனி மனித சீர்திருத்தம் ஏற்படவும் குடும்ப மாண்புகள் மேலோங்கவும் வழி பிறக்க வேண்டும். இதன் மூலம் மறுமையில் விமோசனம் கிட்ட வேண்டும்.

### தொழுகை (Õ á ì)

- Õ á ì எனும் அரபுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்ற அரபுப் பதமே ÕáÇÉ ஆகும். பிரார்த்தனை, முக்கிய பாகம், முதுகெலும்பு எனும் மொழிக்கருத்துக்களை இப்பதம் தருகின்றது,
- இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாக கணிக்கப்படுகின்ற தொழுகையைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம். ‘‘இஹ்ராம் தக்பீருடன் ஆரம்பிக்கப்பட்டு பர்ளான, ஸுன்னத்தான ஓதல்களையும், பர்ளான, ஸுன்னத்தான செயற்பாடுகளையும் உள்ளடக்கி ஸலாத்துடன் முடிவடைகின்ற அல்லாஹ்வுக்காக நிறைவேற்றப்படுகின்ற ஒரு வணக்கமாகும்


www.nie.lk
info@nie.lk

- தொழுகை ஏனைய நபிமார்களுக்கும் விதியாக்கப்பட்ட ஒரு கடமையாகும். இதுபற்றி அல்குர்ஆனும் குறிப்பிடுகின்றது. (13:14, 14:40, 29:45)

**தொழுகையின் முக்கியத்துவம்**

- தொழுகையின் முக்கியத்துவத்தை குர்ஆனும், ஸுன்னாவும் வலியுறுத்துகின்றன.

  ''(விசுவாசிகளே) அனைத்துத் தொழுகைகளையும் (குறிப்பாக)மத்தியில் அமைந்துள்ள தொழுகையையும் (நேரம் தவறாமல்) பேணித் தொழுது கொள்ளுங்கள். மேலும் (தொழுகையில்) அல்லாஹ்வுக்குப் பயந்து மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள்'' (2:238)

  நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான, வெறுக்கத்தக்க கருமங்களிலிருந்து (மனிதனைப்) பாதுகாத்துவிடும்''(29:45)

  ''(சுவர்க்கவாசிகள்) சுவனபதியில் இருந்து கொண்டு குற்றவாளிகளை நோக்கி உங்களை (ஸகர் எனும்) நரகத்தில் புகுத்தியது எது என்று கேட்பார்கள். அதற்கவர்கள் நாங்கள் தொழவில்லை என்று கூறுவார்கள்'' (29: 40-43)

  ''முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்'' (முஸ்லிம்)

  ''மறுமை நாளில் அடியான் தொழுகையைப் பற்றியே முதலில் விசாரிக்கப்படுவான். அது சீராகிவிட்டால் அவனது ஏனைய அமல்களும் சீராகிவிடும். அது பழுதாகி விட்டால் ஏனைய அமல்களும் பழுதாகிவிடும்''(தபரானி)

- அல்லாஹ் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குத் தொழுகை தவிர்ந்த ஏனைய எல்லாக் கடமைகளையும் இவ்வுலகில் வைத்தே விதியாக்கினான். ஆனால் தொழுகையை முஹம்மத் (ஸல்) அவர்களை விண்ணுலகத்திற்கு அழைத்தே தனது பரிசாக வழங்கினான். இதுவும் தொழுகையின் முக்கியத்துவத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

- தொழுகை அல்லாஹ்வை சதாவும் நினைவுகூரக்கூடிய விதத்திலும், அவனுக்கு கட்டுப்பட்டு நடக்கக் கூடிய விதத்திலும் காலங்களும், நேரங்களும், நிறைவேற்றக்கூடிய ஒழுங்கு முறைகளும் வகுத்து வழங்கப்பட்டுள்ளமை அதன் முக்கியத்துவத்தை மற்றொரு வகையில் எடுத்துக்காட்டுகின்றது.

- தொழுகை விதியாகும் ஷர்த்துக்களுக்கு உட்படும் ஒருவர் அதனை விடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். நோயாளி, பிரயாணி, யுத்தத்தில் கலந்து கொள்வோர், நீரைப் பயன்படுத்த முடியாதோருக்கென சில ஒழுங்கு முறைகள் தரப்பட்டு தொழுகையை நிறைவேற்றுமாறு வேண்டப்பட்டுள்ளமையும் தொழுகைக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

- தொழுகை முக்கியமான கடமை என்பதனால்தான் தொழும் பழக்கத்தை பிள்ளைகளிடம் கொண்டுவர ஓர் ஒழுங்கு முறையை இஸ்லாம் காட்டுகின்றது.

- தொழுகை உடற்பரிசுத்தத்திற்கும் உளப் பரிசுத்தத்திற்கும் வழிவகுக்கும் கடமை என்ற வகையிலும் முக்கியத்துவமடைகின்றது. தொழுபவனது உடல், உடை, இடம்

சுத்தமாக இருக்க வேண்டும். தொழுபவன் தனது உள்ளத்தை ஒருமுகப்படுத்தி உள்ளத்தில் அல்லாஹ்வை நினைத்துத் தொழுவதால் உள்ளம் தூய்மையடைகின்றது.

- தொழுகை உடலுக்கு ஒரு சிறந்த பயிற்சியாகவும் அமைகின்றது. அத்தோடு குறித்த நேரங்களில் தொழுவதால் நேரத்திற்கு இயங்கும் பயிற்சியும் கிடைக்கின்றது. இதன் மூலம் நேரத்தை முகாமைப்படுத்திக் கருமமாற்றக் கற்றுக் கொள்கின்றான்.

**தொழுகையின் நோக்கங்கள்**

- தொழுகையில் அடியார்களின் சிரசும், அவயவங்களும் சிரம் சாயும் போது அவர்களது உள்ளமும் சிந்தனையும் அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்ய வேண்டும். அவர்களது நாவுகள் தொழுகையின் ஓதல்களை மொழியும் போது சிந்தனையும் ஆன்மாவும் அதற்கேற்ப இயங்க வேண்டும். அப்பொழுதுதான் தொழுகையின் உண்மையான நோக்கங்களை அடைய முடியும்.

- தொழுகை அதன் வெளித்தோற்றத்தோடும், வெறுமனே உடல் உறுப்புக்களின் அசைவுகளுடனும் மட்டும் நின்று விட்டால் அவை தொழுபவனின் தவறுகளைத் திருத்தவோ, சீராக்கவோ அவனது உள நோய்களைக் குணப்படுத்தவோமாட்டாது.

  ‘ நீ அல்லாஹ்வை வணங்கும் போது அவனைக் காண்பதாக நினைத்துக் கொள். அவனை நீ காணாவிட்டாலும் அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்றாவது நினைத்துக் கொள்’ (   )

- தொழுகை ஒரு முஸ்லிம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ள இறை வணக்கமாகும்.

  ‘‘என்னையே நீர் வணங்குவீராக. என்னை நினைவு கூர்வதற்காகத் தொழுகையை நிலை நிறுத்துவீராக’’ (20:14)

  இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் ‘‘தொழுகையிலே எனது கண்குளிர்ச்சி இருக்கிறது’’ (புகாரி) எனக் கூறினார்கள்.

- தொழுகை உள அமைதியையும், சாந்தியையும் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு கடமையாக்கப்பட்டுள்ளது.

  ‘‘மெய்யாகவே நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் அவர்கள் தாம். (அவர்கள்) முன் அல்லாஹ்வின் திருப் பெயர் துதி செய்யப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் நிம்மதியடைந்து விடுகின்றன. (ஏனென்றால்) அல்லாஹ்வின் திருப்பெயரை துதி செய்வதனால் (உண்மை நம்பிக்கையாளர்களின்) உள்ளங்கள் நிச்சயம் நிம்மதி அடையும் என்பதை (நபியே) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் (13:28)

- தொழுகை தீய பண்புகளை அகற்றி நல்ல பண்புகளை ஏற்படுத்துகின்றது. (நிச்சயமாகத் தொழுகை மானக் கேடான தீய விடயங்களைத் தடுக்கிறது). இது இறையச்சத்திற்கு இட்டுச் செல்வதை நோக்காகக் கொண்டுள்ளது.

  ‘‘நம்பிக்கையாளர்கள் வெற்றியடைந்து விட்டார்கள். அவர்கள் தங்கள் தொழுகையில் உள்ளச்சமுடையவர்களாக இருப்பார்கள்’’ ( 23:1-2)

- ரூஹிற்கு உணவளித்து, ம.:.ரிபதுல்லாஹ் எனும் அல்லாஹ் பற்றிய அறிவை பெற்றுக் கொடுப்பதையும் இலக்காகக் கொண்டு தொழுகை கடமையாக்கப்பட்டுள்ளது.

- மு.:.மீன்களின் மி.:.ராஜாகக் கணிக்கப்படும் தொழுகை அல்லாஹ்வுடன் முனாஜாத் செய்து அளவளாவுவதையும் அதன் மூலம் உள்ளத்தை ஒளிபெறச் செய்வதையும் இலக்காகக் கொண்டு விதியாக்கப்பட்டுள்ளது.

  ''சுத்தம் ஈமானின் ஒரு பகுதியாகும்'' (முஸ்லிம்)

- தொழுகை, குறிப்பாக ஐவேளைத் தொழுகை ஒரு முஸ்லிமிடம் கடமையுணர்வு, நேரத்திற்கு இயங்குதல், சுறுசுறுப்புடன் இயங்குதல், புரிந்துணர்வை வழங்குதல் எனும் பண்புகளை வளர்க்கிறது.

- தொழுகை வாழ்வின் அசாதாரண நிலைகளில், துன்பகரமான நிலைகள், மனக் குழப்பங்களின் போதெல்லாம் ஆறுதலையும், மன அமைதியையும் பெற்றுக் கொடுக்கக்கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்தி வழங்கப்பட்டுள்ளது.

- கூட்டு வாழ்க்கை முறைக்கு மனிதனை இட்டுச் செல்வதையும் தொழுகை நோக்காகக் கொண்டுள்ளது.

**தொழுகையின் பயன்கள்**

- தொழுகையின் முக்கியத்துவங்களையும், அதன் நோக்கங்களையும் அறிந்து அதனை நடைமுறைப்படுத்தும் போது அதனை நிறைவேற்றும் முஸ்லிம் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்வான்.

- தொழுபவனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையிலான தொடர்பு புதுப்பிக்கப்பட்டு இறை நெருக்கம் ஏற்பட வாய்ப்புக்கிடைக்கின்றது.

- இறை நினைவு ஏற்படுவதால் உள அமைதி கிடைக்கின்றது.

- இறையச்சத்துடன் வாழ வழிவகுக்கின்றது.

- தொழுபவனுக்கு இறையருள் கிடைக்கின்றது

  ''(நம்பிக்கையாளர்களே) நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தொழுகி, ஸகாத்தும் கொடுத்து (அவனுடைய தூதரை முற்றிலும்) பின்பற்றி வாருங்கள் நீங்கள் (இறைவனுடைய) அருளை அடைவீர்கள்.'' (24:56)

- சுவனத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டுகின்றது.

  ''தொழுகையின் திறவுகோல் வுழூவாகும். சுவனத்தின் திறவுகோல் தொழுகையாகும்'' (திர்மிதி)

- உளப்பரிசுத்தத்திற்கு வழிவகுக்கின்றது. எந்நேரமும் தொழுகை இறை நினைவில் இருக்கச் செய்வதால் உள்ளம் சகல அழுக்குகளைவிட்டும் பரிசுத்தமாகிறது.

- தொழுகை மானக்கேடான, பாவமான காரியங்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.

- அல்லாஹ்வைப் புரிந்து அவன் இட்ட கட்டளைப் பிரகாரம் வாழ்வை அமைத்துக் கொள்ள வழி செய்கிறது.
- தொழுகை ஆரோக்கியமாக வாழ்வதற்கு தளமமைத்துக் கொடுக்கின்றது.
- வாழ்க்கையில் நேர முகாமைத்துவம் பேணுவதற்கும், ஒழுங்குற வாழ்வதற்கும் பயிற்சியைத் தருகின்றது.
- சேர்ந்து வாழ்வதற்கும் அதனூடாக பரஸ்பரம் புரிந்து, உதவி வாழ்வதற்கு வழி வகுக்கின்றது.
- தலைமைத்துவப் பயிற்சி, தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படல் என்பன வளர்க்கப்படுகின்றன.
- ஆன்மீக விமோசனத்திற்கு வழி வகுக்கின்றது.

**ஸகாத்**

ஸகாத் என்ற அரபுச் சொல் வளர்ச்சி, அதிகரிப்பு, அருள், தூய்மை,பேறு, சீர்மை போன்ற கருத்துக்களைத் தருகின்றது.

ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஸகாத்தை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் அல்லது ஷரீஆவின் நோக்கில் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம்.

''ஸகாத் விதியாவதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற முஸ்லிம்கள் தமது சொத்தில் அல்லது செல்வங்களில் இருந்து அவற்றின் நிஸாபையும் காலத்தையும் அடைந்ததன் பின்னர் அல்லாஹ் விதியாக்கிய குறித்த விகிதத்தை எடுத்து குர்ஆன் கூறும் எட்டுக் கூட்டத்தினரிடையே பகிர்ந்தளிக்கும் அமைப்பைக் கொண்ட கடமையாகும்.''

**ஸகாத்தின் முக்கியத்துவம்**

- ''(நபியே!) அவர்களின் செல்வங்களிலிருந்து ஸகாத்தை எடுத்து, அதனால் அவர்களை உள்ளும், புறமும் தூய்மைப்படுத்துவீராக'' (9:103)
- இஸ்லாத்தின் அடிப்படைக்கடமைகளில் ஒன்றாக இருக்கின்றமை. ஹதீஸ் ஜிப்ரீல் தொடரில் இஸ்லாம் என்றால் என்ன என ஜிப்ரீல் (அலை)அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வினவிய போது, ''இஸ்லாம் என்பது, அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் ஆவார் எனச் சான்று பகர்வதும் தொழுகையை நிலை நாட்டுவதும், ஸகாத்தைச் செலுத்துவதும், ரமழானில் நோன்பு நோற்பதும், சக்தி பெற்றிருந்தால் ஹஜ்ஜை நிறைவேற்றுவதுமாகும்.'' எனப் பதிலளித்தார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)
- குர்ஆனும், ஸுன்னாவும் ஸகாத் பற்றி முன்வைக்கும் போதனைகள் மூலம்

''எவர்கள் அல்லாஹ் தன் அருளால் தங்களுக்கு வழங்கிய பொருள்களில் கஞ்சத்தனம் செய்கின்றார்களோ அவர்கள் அது தங்களுக்கு, நல்லதென எண்ணிவிட வேண்டாம். அது அவர்களுக்குத் தீங்காகவே இருக்கும். கஞ்சத்தனத்தால் சேர்த்த

பொருட்கள் மறுமையில் அவர்கள் கழுத்தில் அரிகண்டமாக(இரும்பு வளையமாக) மாட்டப்படும்'' (3: 180)

''ஸகாத் மூலம் நீங்கள் உங்கள் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்'' (அபூதாவூத்)

- தொழுகையுடன் இணைத்து ஸகாத் குர்ஆனில் சுமார் 27 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

''தொழுகையினை நிலைநாட்டுங்கள், ஸகாத்தைக் கொடுங்கள்'' (2:110)

''தொழுகையை நிலைநாட்டுமாறும், ஸகாத் கொடுக்குமாறும் கட்டளையிடப்பட்டுள்ளீர்கள். யார் ஸகாத் கொடுக்கவில்லையோ அவருக்குத் தொழுகை கிடையாது'' (தப்ஸீர் தபரி (பா :14 பக்கம் :153)

- இஸ்லாமிய ஷரீஆவின் கண்ணோட்டத்தில் ஸகாத் கொடுக்காதவன் பெரும் பாவியாவான். அது கடமை என்பதை மறுப்பவன் அதனை இழிவுபடுத்துபவன் முர்தத்தாவான். அவனுக்கெதிராகப் போராடுவது இஸ்லாத்தில் கடமையாக்கப்பட்டுள்ளது.

''மக்கள் அல்லாஹ் ஒருவன். முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என மொழிந்து, தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுக்கும் வரை நான் அவர்களோடு போராட ஏவப்பட்டுள்ளேன்'' (புகாரி, முஸ்லிம்)

- இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாக ஸகாத் இருக்கின்றமை.

''செல்வம் உங்களிலுள்ள செல்வந்தர்களுக்கிடையில் மட்டும் சுற்றிக் கொண்டிருக்காமல் (மற்றவர்களுக்குக் கிடைக்கும் பொருட்டு இவ்வாறு பொருளைப் பங்கிடும்படி கட்டளையிடுகின்றான்.) (59:7) எனவேதான் ஸகாத் செல்வத்தை இயக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும், உழைக்கும் சக்தியைக் கூட்டவும் விருத்தியை உண்டுபண்ணவும் வழிவகுக்கிறது''

**ஸகாத்தின் நோக்கங்கள்**

- அல்லாஹ்வின் கட்டளைகளை எந்நிலையிலும் அமுல்படுத்தும் மனப்பாங்கை ஏற்படுத்தல் :-

''அலிப் லாம் மீம் . இது தான் வேதநூல். இதில் சந்தேகமேயில்லை. இறையச்சம் உடையவர்களுக்கு (இது) நேரான வழியைக் காட்டும். அவர்கள் மறைவானவற்றை (உண்டென்று) நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையையும் நிலைநிறுத்துவார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (தானமாக) செலவும் செய்வார்கள்'' (2: 1-3)

- உலோபித்தனத்திலிருந்து பாதுகாத்தல்.

  ‘‘எவர்கள் (அல்லாஹ்வின் அருளால்) கஞ்சத்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்களோ அத்தகையவர்கள் தாம் வெற்றி பெற்றவர்கள்’’ (59:9)

- அல்லாஹ்வின் அருட்கொடைக்கு நன்றி செலுத்தப் பழக்குதல்.
- செல்வந்தனிடம் நல்ல ஆளுமைகளை வளர்த்தல்.
- சமூகக் கூட்டுறவையும் உறுதியான பிணைப்பையும் நேசத்தையும் ஏற்படுத்தல்.
- செல்வத்தைத் தூய்மைப்படுத்தல்.

  ‘‘நீ உனது செல்வத்தின் ஸகாத்தைச் செலுத்தினால் உன்னை விட்டு உன் செல்வத்தின் தீங்கைப் போக்கி விட்டாய்’’ (இப்னு குஸைமா)

  ‘‘செல்வத்தை விட்டும் வேறாக்கப்படாத ஸகாத், குறித்த செல்வத்தை அழித்துவிடும்’’ (பைஹக்கி)

- செல்வத்தை விருத்தியடையச் செய்தல்
- வறுமையின் விபரீதங்களைக் குறைத்தல்.
- பிறரிடம் தேவையற்றிருக்கச் செய்தல்.
- பொறாமை, குரோதம், வெறுப்பு போன்ற தீய பண்புகளிலிருந்து தூய்மைப்படுத்தல்.

**ஸகாத் விதிமுறைகளும், செயற்படுத்தலும்**

- ஸகாத் விதியாகும் செல்வங்களுக்கான நிபந்தனைகள்.
  - குறிப்பிட்ட சொத்தின் மீது பூரண உரிமை பெற்றிருத்தல்.
  - நிஸாபை அடைந்திருத்தல்.
  - ஒரு வருடம் பூர்த்தியாகியிருத்தல். (சில பொருட்கள் கிடைத்தவுடன் கடமையாகின்றன)
  - ஹலாலான வழிகளில் சேர்ந்த செல்வமாக இருத்தல்
  - ஷரீஅத் தடை செய்த பொருளாக இல்லாதிருத்தல்.
  - அடிப்படைத் தேவைகளை விட மேலதிகமாக இருத்தல்.
  - கடன் பொறுப்பு நீங்கியிருத்தல்.
  - விருத்தியுறக்கூடிய செல்வமாக இருத்தல்.
- ஸகாத் விதியாகும் செல்வங்களுக்கான நிஸாப் அளவுகள்.
  - கால்நடைகளில் ஆடுகளுக்குரிய நிஸாப் 40 ஆடுகள்

040 - 120 வரை 1 ஆடு

121 - 200 வரை 2 ஆடுகள்

201 - 399 வரை 3 ஆடுகள்

400 - மேல் ஒவ்வொரு நூறுக்கும் 1 ஆடு வீதம் வழங்க வேண்டும்.

- கால்நடைகளில் மாட்டுக்குரிய நிஸாப் 30 மாடுகள்.

30 மாடுகள் வரை 1 வருடம் பூர்த்தியான 1 மாடு

40 மாடுகள் வரை 2 வருடம் பூர்த்தியான 1 மாடு.

- கால் நடைகளில் ஒட்டகத்திற்குரிய நிஸாப் 5 ஒட்டகங்கள்.
- பணத்திற்குரிய நிஸாப் 85 கிராம் தங்கத்தின் பணப் பெறுமானம். வருட இறுதியில் இப்பெறுமானத்தை அடைந்தவன் தனது பணத்தில் 2.5% ஸகாத்தாக வழங்க வேண்டும்.
- 85 கிராம் தங்கம் வைத்திருப்பவன் வருட முடிவில் 2.5% ஸகாத்தாக வழங்க வேண்டும்.
- 595 கிராம் வெள்ளி வைத்திருப்பவரும் வருட முடிவில் 2.5% ஸகாத்தாக வழங்க வேண்டும்.
- வியாபாரப் பொருட்கள் வருட முடிவில் 85கிராம் தங்கத்தின் பெறுமானத்தை அடைந்திருப்பின் 2.5% ஸகாத்தாக வழங்க வேண்டும்.
- தானியங்கள் 635 கிலோவை அறுவடையின் போது அடைந்திருப்பின் அத்துடன் நீர்ப்பாசனத்துக்கு உட்பட்டிருப்பின் 5% மும் நீர்ப்பாசன செலவு இல்லையேல் 10% ஸகாத் வழங்கப்பட வேண்டும். பழவகையிலும் இதே விதி பின்பற்றப்படும்.
- தொழிற்சாலை, வாடைகைக்கு விடப்படும் கட்டடங்கள், சம்பளம், கூலி, மீள்வருமானம் என்பவற்றிலும் 85 கிராம் தங்கத்தின் பெறுமானம் தாண்டியிருப்பின் (செலவுகள் போக) ஸகாத் 2.5% வழங்கப்பட வேண்டும்.

**ஸகாத்தின் பர்ளுகள்**

- நிய்யத்
- பெறத் தகுதியானோருக்கு வழங்குதல்.

**ஸகாத் பெறத் தகுதியானோர்.**

1. **பகீர்**
2. **மிஸ்கீன்**
3. **ஆமில்கள்**

**4. முஅல்லபதுல் குலூப்**

**5. அர்ரிகாப் (உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள்)**

**6. அல் காரிமூன்**

**7. பீ ஸபீலில்லாஹ்**

**8. இப்னு ஸபீல்**

**ஸகாத் பெறத் தகுதியற்றோர்**

- செல்வந்தர்கள்

  ''செல்வந்தர்களுக்கும் தொழில் செய்யச் சக்தியுள்ள திடகாத்திரமானவர்களுக்கும் ஸகாத்தைப் பெறுவது ஆகுமாகாது'' (திர்மிதி)

- தொழில் செய்ய சக்தியுள்ளவர்கள்
- இஸ்லாத்தின் எதிரிகள் :
  ஹர்பிக்காபிர்கள், மதம் மாறியோர், நாஸ்திகர்கள்
- செல்வந்தனான ஒரு முஸ்லிமின் பராமரிப்பில் உள்ளோர்.
- நபி (ஸல்) அவர்களது குடும்பத்தினர்.

**ஸகாத் கூட்டாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம்.**

- சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சமூகக் கடமையாக இருக்கின்றமை.
- ஸகாத்தைச் சேகரித்து, பாதுகாத்து, கணக்கிட்டு, விநியோகிப்பதற்கு கூட்டமைப்பு அவசியமாக இருக்கின்றமை.
- ஸகாத்தின் உச்ச பயனை அடைய வேண்டியுள்ளமை.
- ஸகாத்தோடு தொடர்புடைய குர்ஆன் போதனையில் ''ஆமிலூன்'' எனும் சொல் இதனை வேண்டி நிற்கின்றமை.
- நபி (ஸல்) அவர்கள் தனது தூதுவர்களுக்கு ஸகாத்தை சேகரித்து விநியோகிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு வேண்டியுள்ளமை.
- ஸகாத் சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல், கணக்கிடல், உரியவர்களுக்கு வழங்கல் என்பவற்றைக் கூட்டமைப்பின்றி சரியாக நிறைவேற்ற முடியாமை.
- தனியாகச் செல்வந்தர்கள் ஸகாத்தை வழங்கும் போது அதனைப் பெறுபவர்கள் செல்வந்தர்களின் கெடுபிடிகளுக்கு ஆளாகி சுய கௌரவம் பாதிக்கப்பட முடியுமாக இருக்கின்றமை.
- தனித்து நிறைவேற்றும் போது பங்கீட்டில் ஒழுங்கீனம் இடம்பெற வாய்ப்புள்ளமை.

- இஸ்லாமிய அரசாக இருப்பின் அதன் நிதி நிர்வாக ஒழுங்குக்கு இது பயனளிக்கின்றமை.

**ஸகாத்தின் பயன்கள்**

- **ஸகாத் வழங்குபவர் பெற முடியுமான பயன்கள்**
    - செல்வத்தைப் பிரயோகிப்பதில் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட வழி வகுக்கின்றமை.
    - உலோபித்தனம் நீங்கி தாராளத்தன்மையுடன் நடந்து கொள்ளச் செய்கின்றமை.
    - சுயநலம் நீங்கிப் பொது நலன் பேண வழி வகுக்கின்றமை.
    - உள்ளத்தையும், செல்வத்தையும் தூய்மைப்படுத்துகின்றமை.
    - செல்வத்தின் மீதான ஆசையைக் கட்டுப்படுத்துகின்றமை.
    - செலவு செய்யப் பயிற்றுவிக்கின்றமை.
    - அல்லாஹ்வின் அன்புக்கும், அருளுக்கும் உட்படுகின்றமை.
    - அல்லாஹ்வின் குணத்தை அணிகலனாகப் பெற்றுக் கொடுக்கின்றமை.
    - ஏழைகளுடன் கருணையோடு நடந்து கொள்ளச் செய்கின்றமை.
    - செல்வத்தை விருத்தியடையச் செய்கின்றமை.
    - மறுமையில் சுவர்க்கத்தைப் பெற ஒரு காரணமாகின்றமை.
- **ஸகாத் பெறுபவர் பெற முடியுமான நன்மைகள்.**
    - வறுமையின் விபரீதங்களிலிருந்து பாதுகாப்புப் பெற ஏதுவாகின்றமை.
    - பொருளாதார மேம்பாடு ஏற்படுதல்.
    - வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு வழிவகுக்கின்றமை.
    - பிறரிடம் தேவையற்றிருக்கச் செய்கின்றமை.
    - செல்வந்தர்களுடன் புரிந்துணர்வை ஏற்படுத்துகின்றமை.
    - ஆரோக்கியமான மனிதர்களை உருவாக்க முடிகின்றமை.
- **சமூகத்துடன் தொடர்புடைய பயன்கள்.**
    - இஸ்லாமிய அகீதா பாதுகாப்புப் பெறுகின்றமை.
    - சகோதரத்துவம், ஒற்றுமை வலிமை பெறுகின்றமை.

- செல்வந்தன், ஏழை பரஸ்பர ஒத்துழைப்பு வளருகின்றமை.
- போட்டி பொறாமை நீங்குகின்றமை.
- சமூகக் குறைபாடுகள் நீங்குகின்றமை.
- சமூக, பொருளாதார வளர்ச்சி, விருத்தி சகல துறைகளிலும் ஏற்படுகின்றமை.
- பாதுகாப்பான சமூக சூழல் உருவாகின்றமை.
- பொருளாதார ஏற்றத் தாழ்வு குறைவடைதல்.
- பணத்தேக்கம் ஏற்படாமல் சுழற்சிக்கு வழிவகுக்கின்றமை.

**நோன்பு**

- நோன்பு அறிமுகம்.

‘‘ஸவாம் என்ற அரபுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்ற அரபுப் பதமே ‘‘ஸவ்ம் ஆகும். தவிர்த்தல், தவிர்ந்து கொள்ளல் எனும் மொழிக் கருத்தை இது தருகின்றது. இஸ்லாமிய ஷரீஅத்தில் பின்வரும் கருத்தில் இது குறித்துக் காட்டப்படுகின்றது.

‘‘குறித்த நிபந்தனைகள் பூர்த்தியான நிலையில் உள்ள; நோன்பு விதியாவதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் திருப்தியை நாடி நோன்பு நோற்கிறேன் என்ற நிய்யத்துடன் கிழக்கு வெளுத்தது முதல் அல்லது பஜ்ர் உதயமாகியது முதல் சூரியன் மறையும் வரை நோன்பை முறிக்கும் காரியங்களைத் தவிர்ந்து அல்லாஹ்விற்காக நிறைவேற்றுகின்ற ஒரு இபாதத்’’

நோன்பு பர்ளானவை, ஸுன்னத்தானவை என இரு வகைப்படும். ரமழான் மாத நோன்பும் நேர்ச்சை நோன்பும் பர்ளானவைகளாகும். நபி(ஸல்) அவர்கள் நோற்ற பர்ளு அல்லாத நோன்புகளும், நோற்குமாறு அவர்களால் ஆர்வமூட்டப்பட்ட நோன்புகளும் ஸுன்னத்தான நோன்புகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றை வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் நோற்பவை என வகைப்படுத்தலாம்.

- நோன்பின் முக்கியத்துவங்கள்.

நோன்பு உடல், ஆன்மா, அறிவு என்பவற்றுக்குப் பயிற்சி வழங்கி சமநிலைப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றது. இந்த வகையில் நோன்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து அதனைப் பயன்படுத்தி சமநிலை ஆளுமையுள்ள மனிதனாக ஒரு முஸ்லிம் தன்னை மாற்றிக் கொள்ள முடியும். அதன் முக்கியத்துவங்கள் பின்வருமாறு.

- அடிப்படை அல்லது தலையாய வணக்கங்களில் ஒன்றாக இது உள்ளமை.
- நோன்பின் முக்கியத்துவத்தைக் குர்ஆனும், ஸுன்னாவும் எடுத்துக் கூறுகின்றமை.
- ‘‘ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன்பிருந்தோர் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீங்கள் தக்வாவைப் பெற்றுக் கொள்வீர்கள். (2:83)

‘‘அல்குர்ஆனும், நோன்பும் மறுமை நாளில் அடியானுக்காகப் பரிந்துரை செய்யும். நோன்பு அல்லாஹ்வைப் பார்த்து எனது இரட்சகனே நான் அவனை உணவிலிருந்தும் இச்சைகளிலிருந்தும் தடுத்து விட்டேன். எனவே அவனுக்காக ஷபாஅத் செய்யும் உரிமையைக் கொடு’’ (அஹ்மத், தபரானி)

- நோன்பு மறைவான வணக்கமாக இருந்து ஈமானில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றமை
- குர்ஆன் அருளப்படல், லைலதுல் கத்ர் இரவு என்பவற்றைக் கொண்டு ரமழான் அலங்கரிக்கப்பட்டுள்ளமை.
- உலக முஸ்லிம்களால் ஏக காலத்தில் நிறைவேற்றப்படும் இறைவணக்கம்.

- **நோன்பின் நோக்கங்கள்.**

- தக்வாவை ஏற்படுத்தல்.
- அல்லாஹ்வுக்காக, தன் தேவைகளையும் ஆசைகளையும் கட்டுப்படுத்தும் பயிற்சியை வழங்குதல்.
- ஆன்மாவைப் பலப்படுத்தல்.

‘‘தனது மனோ இச்சையைத் தனது கடவுளாக எடுத்துக் கொண்டவனை நீர் பார்த்தீரா? நீ அவனுக்கும் பொறுப்பாளியாக இருப்பீரா? அல்லது அவர்களில் அதிகமானோர் செவிமடுக்கிறார்கள் அல்லது பகுத்தறிந்து கொள்கிறார்கள் என நீர் நினைக்கிறிரா? அவர்கள் மிருகங்களைப் போன்றவர்கள். இல்லை அவர்கள் அதனைப் பார்க்கிலும் வழிகெட்டவர்கள்.’’ (25: 43-44)

- ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

  ‘‘நீங்கள் நோன்பிருங்கள்: ஆரோக்கியம் பெறுவீர்கள்.’’ (ஹதீஸ்)

- ஆளுமையையும் தன்னம்பிக்கையையும் பெற்றுக் கொடுத்தல்
- இறை அருட்கொடைகளைப் புரிந்து கொள்ளச் செய்தல்
- ஏனையோரின் கஷ்டங்களை, துயரங்களைப் புரிந்து கொள்ளச் செய்தல்
- அல்லாஹ்வுக்குப் பூரணமாக அடிபணிய வைத்தல்.
- தீய செயல்களிலிருந்து விடுபட வழிவகுத்தல்.

- **நோன்பின் விதிமுறைகள்.**

1. **நோன்பின் ஷர்த்துக்கள்.**
2. **நோன்பை விடுவதற்கு சலுகை வழங்கப்பட்டோர்.**

நோன்பை விடுவதற்கு சலுகை வழங்கப்பட்டவர்களை மூவகைப்படுத்தலாம்.

1. நோன்பு நோற்பது ஹராம் என்ற நிலையில் உள்ளவர்கள். (உ-ம்) மாதவிலக்கு, பிரசவருது உள்ள பெண்கள். இவர்கள் தாம் விட்ட நோன்புகளை கழாச் செய்ய வேண்டும்.

2. கப்பாரா (குற்றப் பரிகாரத்துடன் நோன்பை விட அனுமதிக்கப்பட்டோர் (உ-ம்) நோன்பு நோற்கவே முடியாது என்ற நிலையில் உள்ள வயதாளிகள், குணமடையாது என்ற நிலையில் உள்ள நோயாளிகள்

3. கழாச் செய்தல் என்ற நிபந்தனையுடன் நோன்பை விட அனுமதிக்கப்பட்டவர்கள். (உ-ம்) பிரயாணிகள், குணமடையும் நிலையில் உள்ள நோயாளிகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள்.

- நோன்பு நோற்றல் உயிராபத்தை ஏற்படுத்தும் என அஞ்சப்படும் சந்தர்ப்பங்களில் நோன்பை விடுவது பர்ளாகும். பின்னர் நோன்பு நோற்க முடியுமான நிலை ஏற்படுமாயின் கழாச் செய்தல் வேண்டும்.

**3. நோன்பின் பர்ளுகள்**

**4. நோன்பை முறிக்கும் காரியங்கள்**

**5. நோன்பின் ஸுன்னத்துக்கள்**

**6. நோன்பின் பயன்பாடுகள்.**

- தக்வா - இறையச்சத்தைப் பெற்றுத் தருகின்றது.
- உளத் தூய்மையை ஏற்படுத்துகின்றது.
- பொறுமையைக் கட்டியெழுப்புகின்றது.
- ஆன்மீக விமோசனத்திற்கு வழிவகுக்கின்றது.
- குர்ஆனோடு இணையும் வாய்ப்புக் கிடைக்கின்றது.
- லைலதுல் கத்ர் எனும் இரவை எதிர்பார்த்து செயற்பட்ட அதிக அமல்களின் நன்மைகளை ஈட்டிக் கொள்ள முடிகின்றது.
- பாவங்களிலிருந்து பாதுகாப்புப் பெற வழிசெய்கின்றது.
- ஆன்மாவைப் பாதிக்கும் பாவச் செயல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் உதவுகின்றது.
- நோன்பு பசியின் கொடுமையை, வறுமையின் வன்மையை உணர்த்துவதால் அடுத்தவர்களது கஷ்டங்களில் பங்குகொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துகின்றது.
- உடல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கின்றது.
- ஏழைகளோடு அன்புடனும், கருணையுடனும் இணைந்திருக்கச் செய்கின்றது.

- சகோதரத்துவம், சமூக உணர்வு, ஒற்றுமை, மனித நேயம், சமத்துவப் பண்பு போன்றவற்றை வளர்க்கின்றது.

- கட்டுப்பாடான வாழ்க்கைப் பயிற்சியை தருகின்றது.

- வீண்விரயம் தவிர்த்து சிக்கனமாக வாழ வழிகாட்டுகின்றது.

**அல் ஹஜ்ஜு**

- ஹஜ் என்ற பதம் தரிசித்தல், நாடுதல் எனும் கருத்துக்களைத் தருகின்றது.

- ஐம்பெரும் கடமைகளில் இறுதியானதாக அமையும் ஹஜ்ஜை ஷரீஅத் நோக்கில் பின்வருமாறு குறிப்பிடலாம். துல்ஹஜ் பிறை 8-13 வரையுள்ள தினங்களில் குறித்த சில நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்குரிய விதிமுறைகளை அனுசரித்து புனித மக்கமா நகரத்திலுள்ள குறித்த தலங்களுக்குச் சென்று அல்லாஹ்வுக்காக நிறைவேற்ற வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள கடமையினை குறிக்கின்றது.''

  ''ஆகவே எவர்கள் அங்கு யாத்திரை செய்யச் சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று) அவ்வாலயத்தை ஹுஜ்ஜு செய்வது கடமையாகும்.'' (3:97)

  ''எவரேனும் ஒருவர் முற்றிலும் அவசியமான தேவையோ, கொடுங்கோல் அரசனோ, பிரயாணம் செய்ய முடியாதவாறு பீடித்துள்ள நோயோ ஹஜ் செய்வதைத் தடுக்காதிருந்த பின்னரும் அவர் ஹஜ்ஜுக்குச் செல்லாமலிருந்தால் அதே நிலையில் அவருக்கு மரணம் வந்துவிட்டால் யூதனாகவோ நஸாராவாகவோ அவர் விரும்பியவாறு இறக்கட்டும்.'' (தாரமி)

- **ஹஜ்ஜின் முக்கியத்துவங்கள்.**

  குர்ஆனும், ஸுன்னாவும் ஹஜ்ஜின் முக்கியத்தைக் கூறுகின்றன.

  ''நாம் இந்த ஆலயத்தை மனிதர் ஒதுங்கும் தலமாகவும் அபயமளிக்கக் கூடியதாகவும் ஆக்கினோம்.''(2:125)

  ''அல்லாஹ்வுடைய தூதுவர்கள் மூன்று வகையினர். புனிதப் போருக்காகச் செல்லும் முஜாஹிதீன்கள், ஹஜ்ஜுக்குச் செல்வோர், உம்ராச் செய்வோர்.''(நஸாஈ)

  - இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது; மறுமை வாழ்வு நிரந்தரமானது என்ற இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையை ஆழப் பதியவைக்கும் கடமை.

  - அல்லாஹ்விற்கு அடிமைப்படுதல், தன்னை அர்ப்பணித்தல், தியாகம் செய்தல் முதலான பண்புகளை வளர்க்கின்ற கடமை.

  - மனித குலம் பிரதேச, நிற, குல, கோத்திர, மொழி, அடிப்படையில் பிரிக்க முடியாதவர்கள் எனும் தத்துவத்தை வருடாவருடம் உலகிற்கு எடுத்துக் காட்டும் கடமை.

- முஸ்லிம்கள் ஓர் இறைவனை ஏற்று, ஒரு கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்து ஓர் இலக்கை நோக்கிச் செல்லும் தனித்துவமானவர்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தும் கடமை.
- புனித மக்கமா நகரை அடிப்படையாக வைத்து இக்கடமை செயற்படுத்தப்படுவதால் நபிமார்களது வரலாறுகளை நினைவுபடுத்தி ஒரு முஸ்லிம் தனது பணியினை திட்டமிட்டுக் கொள்ள வழி வகுக்கும் கடமை.
- சைத்தானுக்கும், மனோ இச்சைக்கும் எதிரான முஸ்லிமினது போராட்டத்திற்குச் சிறந்ததோர் பயிற்சிக் களத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் கடமை.
- ஹஜ்ஜுக்காக அணியும் ஆடை எளிமையான வாழ்வை மேற்கொள்ளப் பயிற்சி அளிப்பதோடு மறுமையை நினைவு கூர்வதற்கும் அடிப்படையாக உள்ளமை.

- **ஹஜ்ஜின் விதிமுறைகள்.**

1. ஹஜ்ஜின் ஷர்த்துக்கள்
2. ஹஜ்ஜின் பர்ளுகள்

- ஹஜ்ஜின் வாஜிபுகள்

3. ஹஜ்ஜின் ஸுன்னத்துக்கள்
4. ஹஜ்ஜின் போது விலக்கப்பட்ட (முஹர்ரமாத்.்.முப்திலாத்) செயல்கள்
5. ஹஜ்ஜுக்கு நிய்யத் வைக்கும் முறைகள் அல்லது ஹஜ்ஜின் வகைகள்

- இப்ராத், தமத்து.்., கிரான்

மீகாதுகள்

- துல்ஹுலைபா: மதீனாவிலிருந்தும் அதற்கு வடக்கே இருந்தும் வருபவர்களுக்கான மீகாத்.
- அல் ஜுஹ்பா: சிரியா, துருக்கி வழியாக வருபவர்களுக்கான மீகாத்
- கர்னுல் மன்ஸில் : நஜ்த், பாரசீகக் குடாவழியாக வருபவர்களுக்குரிய மீகாத்.
- யலம்லம் : யமன், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, மலேசியா போன்ற பிரதேசங்களிலிருந்து வருவோருக்குரிய மீகாத்
- தூத்துல் இராக் அல்லது ஸ.்.த், ஈராக், ஈரான் வழியாக வருவோருக்குரிய மீகாத்.

மேற் குறிப்பிட்ட விதிமுறைகளை அனுஷரித்து துல்ஹஜ் 8-13 வரையுள்ள நாட்களில் அதற்குரிய தலங்களுக்குச் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றுவது ஹாஜிகளுக்குக் கடமையாகும்.

ஹஜ்ஜின் பர்ளுகள் எவையேனும் விடுபட்டால் ஹஜ் நிறைவேறாது. ஹஜ்ஜின் வாஜிபுகள் எவையேனும் விடுபட்டால் அதற்குப் பரிகாரமாக

பித்யா அல்லது தம் கொடுக்க வேண்டும். ஓர் ஆட்டை குர்பானி கொடுக்க வேண்டும். அதற்கு வசதியில்லையாயின் ஹரமிலுள்ள 10 மிஸ்கீன்களுக்கு உணவளிக்க வேண்டும். அதற்கும் வசதியில்லையாயின் மக்காவில் மூன்று நாட்களும் ஊர் திரும்பியதன் பின்னர் 7 நாட்களும் நோன்பு நோற்க வேண்டும். விலக்கப்பட்டவைகளைச் செய்யின் அதற்கும் பித்யா கொடுக்க வேண்டும். ஆனால் மனைவியுடன் உடலுறவு கொண்டால் மட்டும் அதற்குப் பிரதியாக ஓர் ஒட்டகம் அல்லது ஒரு மாடு அல்லது 7 ஆடுகள் குர்பானி செய்ய வேண்டும். அந்த ஹஜ்ஜை அல்லது உம்ராவை தொடர்ந்து நிறைவேற்றுவதோடு காலம் தாழ்த்தாது கழாச் செய்ய வேண்டும்.

- **ஹஜ்ஜின் நோக்கங்கள்**

1. அகீதா சார்ந்த நோக்கங்கள்
    - தௌஹீதை நிலை நாட்டுதல்
    - அல்லாஹ்விற்கு முற்றிலும் அடிமைப்படல்
    - வணக்க வழிபாடுகளில் குப்ர் சமூகத்திற்கு முரண்படுதல்
    - அல்லாஹ்வை நினைவுபடுத்துவதும் அதில் தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்வதற்குமான பயிற்சி பெறல்.
    - ஹஜ்ஜின் தலங்களை முக்கியத்துவப்படுத்தல் அல்லாஹ்விற்காக அர்ப்பணித்தல்.
2. பிக்ஹ் சார்ந்த நோக்கங்கள்
    - முஸ்லிம் சமூகத்திற்கு இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றுவதில் இலகு தன்மையை ஏற்படுத்தல்.
    - இஸ்லாமிய சட்டங்களைப் பேணுவது வளர்க்கப்படுகின்றது.
3. அறிவு சார்ந்த நோக்கங்கள்.
    - மார்க்கம் பற்றிப் பொதுவாகவும் ஹஜ் பற்றிக் குறிப்பாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
    - பலர் ஒன்று கூடுவதனால் ஏற்படும் அனுபவங்கள்.
4. பொருளாதாரம் சார்ந்த நோக்கங்கள்
    - ஹலாலாகச் செலவு செய்வதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
    - செல்வத்தை அல்லாஹ்வுக்காகச் செலவு செய்து அனுபவித்தல்
    - ஹஜ் கிரியை நடைபெறும் பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வருமானம் சேர்த்தல்.

5. சமூகவியல் சார்ந்த இலக்குகள்

- உடற் சுத்தம் பேணுதல்
- பெரும் பாவம், வீண் வார்த்தைகளிலிருந்து தவிர்ந்திருக்கச் செய்தல்
- அடுத்தவர்களை மதித்து நடத்தல்
- ஒழுங்கு பேணுதல், நேரத்திற்கு இயங்கச் செய்தல்
- முஸ்லிமினது உயிர், மானம், செல்வம் என்பவற்றுக்கான பாதுகாப்பு உத்தரவாதம்
- முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாடு வலியுறுத்தப்படல்
- இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளோடு(மக்கா, மதீனா) நெருக்கத்தை ஏற்படுத்தல்
- ஆன்மீக, லௌகீக பயன்பாடுகளை அடைந்து கொள்ளச் செய்தல்

- **ஹஜ்ஜின் பயன்பாடுகள்**

1. ஆன்மீகப் பயன்பாடுகள்

- தக்வா இறையச்சம் ஏற்படுதல்.
- அடிமைப்படல், அர்ப்பணிப்பு, தியான உணர்வு என்பன வளர்தல்.
- பாவமன்னிப்புக் கிடைத்தல்.
- அதிக நன்மையும், சுவர்க்கமும் கிடைத்தல்.
- முற்றிலும் அல்லாஹ்விடம் தன்னைப் பாரம் சாட்டும் நிலை தோன்றுதல்.
- மறுமைச் சிந்தனையைத் தோற்றுவித்தல்.
- இறை சிந்தனையுடன் வாழ வழி செய்தல்.
- பிறருக்காகப் பிரார்த்திக்கவும், சிபாரிசு செய்யவும் வாய்ப்புக் கிடைத்தல்.
- கட்டுப்பாடான வாழ்க்கைப் பயிற்சி

2. லௌகீகப் பயன்பாடு

- உலகளாவிய முஸ்லிம் உம்மத்தில் தானும் ஒருவன் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.
- சகோதரத்துவ உணர்வை வளர்க்கின்றது.
- முஸ்லிம்களது தனித்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

- கூட்டு வாழ்க்கைப் பயிற்சி, மனப்பக்குவத்தை வழங்குகின்றது.
- பிரயாண அனுபவம், வாழ்க்கையில் சிரமங்களை சகித்துக் கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படுகின்றது.
- மனித நேயம் வளர்க்கப்படுகின்றது.
- சர்வதேச சமாதானத்திற்கு வித்திடுகின்றது.

**தேர்ச்சி 05 : இபாதா பற்றிய இஸ்லாமிய நோக்கை விளங்கி ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : ஹுகூகுல் இபாத் பற்றிய விளக்கத்தைப் பெற்று அவற்றை நடைமுறைப்படுத்துவார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள்:**

- ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் ஆகிய பதங்களின் கருத்தையும் அவற்றுக்கிடையிலான தொடர்பையும் விளக்கிக் கூறுவார்.
- ஒரு முஸ்லிம் தனக்கும், பிறருக்கும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை பட்டியற்படுத்துவார்.
- ஒரு முஸ்லிம் பிற படைப்புக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை விளக்குவார்.
- தனக்கும் பிறருக்கும் பிற படைப்புக்களுக்கும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளின் முக்கியத்துவத்தை அறிந்து வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்.
- பௌதிக வளங்களை முறையாகப் பேணுவதோடு அவற்றைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்புச் செய்வார்.
- இபாதாக்களுக்கும் அக்லாக்குகளுக்கும் இடையிலான தொடர்பை விளக்குவார்.
- இபாதத்துக்களை நிறைவேற்றுவதன் ஊடாக தனது அக்லாக்குகளை மேம்படுத்திக் கொள்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் பதவிளக்கமும், அவற்றுக்கிடையிலான தொடர்பும்.**

- மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் அவன் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஹுகூகுல்லாஹ் என அழைக்கப்படுகின்றது.
- அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகளுள் அல்லாஹ்வை இறைவனாக ஏற்றுக் கொள்ளல், அவனை வணங்கி வழிபடல், அவனது ஸிபாத்துக்கள் அஸ்மாக்கள் அடிப்படையில் அவனைத் தனித்துவப்படுத்தி ஏற்றுக் கொள்ளல், அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றல், அவனது தூதரான முஹம்மத்(ஸல்) அவர்களை ரஸுலாக ஏற்றுப் பின்பற்றல் போன்றன முக்கியத்துவம் பெறுகின்றன.
- இஸ்லாத்தின் பார்வையில் ஹுகூகுல்லாஹ்வுக்கு வழங்கப்படும் அதே முக்கியத்துவம் ஹுகூகுல் இபாதுக்கும் வழங்கப்படுகிறது. எனினும் செயற்பாட்டைப் பொறுத்தவரை சில சந்தர்ப்பங்களில் ஹுகூகுல்லாஹ்வை முதன்மைப்படுத்த வேண்டிய நிலையும் இன்னும் சில சந்தர்ப்பங்களில் ஹுகூகுல் இபாதை முதன்மைப்படுத்தவேண்டிய நிலைமைகளும் ஏற்படலாம். உதாரணமாக அனர்த்த நிலைமையொன்றின் போது ஹுகூகுல்லாஹ்வின் செயற்பாடான உம்ராவை விட்டு விட்டு ஹுகூகுல் இபாதின் செயற்பாடான பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது சிறந்ததாக கொள்ளப்படுவதனைக் குறிப்பிடலாம்.
- ஹுகூகுல் இபாதில் அடங்குகின்ற ஒரு மனிதன் தனக்குத்தானே செய்ய வேண்டிய கடமைகளை அலட்சியப்படுத்த முடியாது. மனிதனது உயிரும், உடலும்

அல்லாஹ்வினால் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள அமானிதங்களாகும். அவற்றைப் பேணுவதும், பாதுகாப்பதும் மனிதனது கடமையாகும்.

- மனிதன் தனது உயிருக்கோ, உடலுக்கோ, பிறரது உடலுக்கோ தீங்கு விளைவிப்பதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை.
- மனிதன் தனதும், பிறரதும் உயிருக்கு ஆபத்து நேராமல் பாதுகாத்தல் வேண்டும்.

- இஸ்லாம் பொருத்தமான உணவை அளவோடு உண்ணுமாறு வேண்டுகின்றது.
- உடலையும், மானத்தையும் உடையைக் கொண்டு மறைத்துப் பாதுகாப்புப் பெற இஸ்லாம் வழிகாட்டுகின்றது.
- உள்ளத்திற்கும் உடலுக்கும் ஓய்வு வழங்குமாறு கூறுகின்றது. ''மக்கள் மறந்திருக்கக் கூடிய இரண்டு அருள்கள் உள்ளன. அவை ஆரோக்கியமும், ஓய்வும் ஆகும்'' (புகாரி, முஸ்லிம்)

  ''அடிக்கடி உங்கள் உள்ளங்களுக்கு ஓய்வு கொடுங்கள். ஏனெனில் சோர்வுற்ற உள்ளம் இருளடைந்துவிடும்'' என அலி (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

- இஸ்லாம் சுத்தத்தை வலியுறுத்தி சுகவாழ்விற்கு மனிதனை இட்டுச் செல்கின்றது. உடல், உடை, இடச் சுத்தம் எல்லா நிலைமைகளிலும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

  ''அல்லாஹ் பரிசுத்தவான்களையே நேசிக்கின்றான்'' (9:108)

- ஆரோக்கியமான வாழ்வுக்கு உடற்பயிற்சி மனிதனுக்கு முக்கியமானதாகும்.

  ''பலாசாலியான ஒரு மு∴மின் பலவீனமான ஒரு மு∴மினை விட சிறந்தவனும் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமுடையவனுமாவான்'' (முஸ்லிம்)

- மனிதன் தனதுடலின் ஆரோக்கியத்தைப் பேண நோய்களின் போது பொருத்தமான சிகிச்சை பெறுவதும் கடமையாகும்.

  ''ஒவ்வொரு நோய்க்கும் ஒரு மருந்து இருக்கின்றது. ஒரு நோய்க்காக ஒரு மருந்தைப் பயன்படுத்தினால் நிவாரணம் அல்லாஹ்வின் கருணையால் கிடைக்கின்றது'' (முஸ்லிம்)

- மனிதன் எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பதையும் மகிழ்ச்சியைத் தருகின்றவற்றையுமே நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். துன்பம், துயரம், கவலை, இயலாமை, சோம்பல் என்பவற்றிலிருந்து நபி (ஸல்) பாதுகாப்புத் தேடினார்கள்.
- ஹுகூகுல் இபாதில் அடங்குகின்ற ஒரு மனிதன் பிற மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் புறக்கணித்து வாழ முடியாது.
- மனிதன் ஒருபோதும் தனித்து வாழ முடியாது. குடும்பத்துடனும், சமூகத்துனும் சேர்ந்து வாழவேண்டிய நிலையிலேயே அவன் உள்ளான். அவ்வாறான நிலைமைகளில் அவனது கடமைக் கூறுகள் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இஸ்லாம் கூறுகின்றது.
- குடும்பமாக வாழும் மனிதன் கணவனாக, மனைவியாக, தந்தையாக, தாயாக, மகனாக, மகளாக, சகோதரனாக, சகோதரியாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இஸ்லாம் வரையறுத்துக் கூறியுள்ளது.

- குடும்பத்தலைவனான ஆண் தனது மனைவி பிள்ளைகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றக் கடமைப்படுகின்றான். உணவு, உடை, வீடு, பொருத்தமான கல்விக்கான செலவு, சுகவாழ்வு, பாதுகாப்பு, ஒழுக்கம், ஆன்மீகப் பயிற்சி போன்றவற்றை நிறைவேற்றக் கடமைப்படுகின்றான். அதற்காக உழைப்பது, செலவு செய்வது, வழிகாட்டுவது குடும்பத் தலைவனுக்கு கடமையாகின்றது.

- குடும்பத் தலைவியான பெண் மனைவியாக, தாயாக நிறைவேற்ற வேண்டிய கடமைக் கூறுகளுக்கு உட்படுகின்றாள். கணவனது ஒத்துழைப்போடு குடும்பத்தை வழிநடாத்தல், வீட்டில் பிள்ளைகளின் உடல், உள, கல்வி, ஒழுக்க, ஆன்மீக வளர்ச்சிக்காக உதவுதல், கணவனுக்கு ஒத்துழைத்தல், அவனது செல்வத்தை, கௌரவத்தைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் அவளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- மனிதன் தனது குடும்பத்திற்கு வெளியேயுள்ள உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் என விரிந்து செல்லும் சமூகத்தவர்களது கடமைகளையும் நிறைவேற்றக் கடமைப்படுகின்றான்.

- உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு மனிதன் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இஸ்லாம் விளக்கியுள்ளது. அன்பாக உறவாடுவது, பழகுவது. தேவைகளின் போது உதவுவது, மகிழ்ச்சியின் போது பாராட்டுவது, துன்பத்தில் ஆறுதல் கூறுவது, அவர்களது உரிமைகளை மதித்து நடப்பது ஆகியன முக்கிய கடமைக் கூறுகளுக்கு சில உதாரணங்களாகும்.

  ''அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். பெற்றோருக்கு நன்றி செய்யுங்கள். அவ்வாறே உறவினருக்கும், அண்டை வீட்டினரான அயலவர்களுக்கும் (எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக்கூடிய நண்பர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்கள் ஆதிக்கத்தில் இருப்போருக்கும் (அன்புடன்) நன்றி செய்யுங்கள். எவன் கர்வம் கொண்டு பெருமையாக நடக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை'' (4:36)

  ''அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டவர் தமது அண்டை அயலாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளட்டும்'' (முஸ்லிம்)

- சமூகத்தில் சுயமாக தமது வாழ்வைக் கொண்டுசெல்ல முடியாதவர்களும் இருப்பார்கள். இவர்களுக்கும் சமுதாய உறுப்பினர்கள் உதவுவது கடமையாகின்றது. அநாதைகள், விதவைகள், நோயாளர்கள், அங்கவீனர்கள், கைவிடப்பட்ட வயோதிபர்கள் எனப் பலர் இதில் அடங்குவார்கள். இவர்களுக்குத் தனிப்பட்ட வகையிலும் கூட்டாகவும் சமூகம் உதவ வேண்டும். ஸகாத், ஸதகா, ஸகாதுல் பித்ர் எனவுள்ள பொதுக் கடமைகளுக்கூடாகவும் சமூகம் இவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் பூரணப்படுத்தலாம்.

- சமூக நலன் கருதி செய்ய வேண்டிய பொதுப் பணிகளும் உள்ளன. பொதுப் பாதைகள், கிணறுகள், கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள், பள்ளிவாசல்கள், கழிவறைகள் என்பவற்றை நிறுவுவதை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

  ''நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்'' (5:2)

  ஸஃத் இப்னு உபாதா (ரழி) அவர்களின் தாயார் வபாத்தான போது அவர்களின் சார்பாக ஒரு நிலையான தர்மத்தைச் செய்திட அவர் விரும்பி நபி (ஸல்)

அவர்களிடம் வந்து எந்த தர்மம் சிறந்தது எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ''கிணறு வெட்டுவீராக'' என்றார்கள். (அபூதாவூத்)

''காடைப் பறவை முட்டையிடுவதற்காக அமைத்துக் கொள்ளும் கூடு போன்றேனும் ஒரு மஸ்ஜிதைக் கட்டுவோருக்கு சுவனத்தில் அல்லாஹ் ஒரு வீட்டைக் கட்டி வைக்கிறான்'' (அஹ்மத்)

- வறட்சி, வெள்ளம், புயல், பூகம்பங்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போதும் விபத்து, கலவரம், யுத்தம் போன்ற அசாதாரண சூழ்நிலைகளின் போதும் சமூக நலப்பணிகளில் ஈடுபடுவதும் ஹுகூகுல் இபாதில் உள்ளடங்குகின்றன.

''விசுவாசிகளே நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளுங்கள். ஒவ்வோர் ஆத்மாவும் (மறுமை) நாளைக்காக தான் எதனைச் (சேகரித்து) அனுப்பியிருக்கிறது என்பதைக் கவனித்து (நடந்து) கொள்ளுங்கள்'' (59:18)

''நீங்கள் தருமம் தருவதற்கு ஈத்தம் பழத்தின் ஒரு துண்டுதான் இருக்கின்றது என்றால் அதையும் தந்தே ஆகவேண்டும்'' பனூ மதர் என்ற குலத்தை சேர்ந்த மக்களின் வறுமையைக் கண்ட போது நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களிடம் இவ்வாறு உதவுமாறு கண்டிப்பாக வேண்டிக் கொண்டார்கள்.

- ஹுகூகுல் இபாதில் பிற உயிரினங்கள், பௌதிக வளங்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் உள்ளடங்குகின்றன.
- உயிரினங்களையும், பௌதிக வளங்களையும் முறையாகப் பயன்படுத்துவதை இஸ்லாம் இபாதத்தாக குறிப்பிடுகின்றது.
- பிரபஞ்ச செயற்பாடுகள் அனைத்தும் அல்லாஹ்வின் திட்டத்திற்கமைய சமநிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

''அவனே வானத்தை உயர்த்தினான். மேலும் சமநிலையையும் ஏற்படுத்தினான்'' (55:7)

- ஒவ்வொரு உயிரினமும் சுபீட்சமாய் வாழ வேண்டுமாயின் பிரபஞ்ச சமநிலை பேணப்பட வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு உயிரினத்திற்கும் குறிப்பிட்டளவு ஆற்றலும், சக்தியும் காணப்படுகின்றது.

''நாம் ஒவ்வொரு பொருளையும் குறிப்பிட்ட அளவின்படி படைத்துள்ளோம்'' (54:59)

- மனிதன் தான் விரும்பியவாறு பிரபஞ்ச, உலகப் பொருட்களைப் பயன்படுத்திப் பிரபஞ்ச, உலக சமநிலையைக் குலைக்க முடியாது.

''எங்கள் இறைவா! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை என அறிவுடையோர் கூறுவார்கள்'' (3:191)

- எனவே மனிதன் தன்னைச் சூழவுள்ள உயிரினங்கள், பௌதிக வளங்களை முறையாகப் பயன்படுத்தவும், பாதுகாக்கவும் வேண்டியவானக உள்ளான். இதற்கு மாற்றமாக செயற்பட்டால் அதன் விளைவுகளை மனிதன் அனுபவிக்க வேண்டியேற்படும்.

''அல்லாஹ்வின் அருட்கொடைகள் தம்மிடம் வந்த பின்னர் யார் மாற்றுகின்றாரோ அவர்களுக்குத் தண்டனை வழங்குவதில் அல்லாஹ் கடுமையானவன்'' (2:211)

- பிரபஞ்ச இயல்பு சமநிலையானது என்பதால்தான் அல்லாஹ் முஸ்லிம் சமூகத்தை நடு நிலையான சமூகம் என வர்ணித்துள்ளான். முஸ்லிம் சமூகத்தில் வாழ்வோர்

உயிரினங்களை, பௌதிக வளங்களை தேவைக்கேற்ப பயன்படுத்துவார்கள். மாறாக எல்லை மீறி அவற்றை உபயோகித்து வீண்விரயம் செய்ய மாட்டார்கள்.

‘‘அருளாளனின் அடியார்கள் செலவு செய்தால் வீண்விரயம் செய்யமாட்டார்கள். மேலும் உலோபித்தனமாக குறைத்து செலவிடவும் மாட்டார்கள். எனினும் இரண்டுக்கும் மத்திய நிலையில் இருப்பார்கள்’’ (25:67)

- உயிரினங்களோடு நல்ல முறையில் நடந்துகொள்வதை அல்குர்ஆனும், ஸுன்னாவும் வலியுறுத்தி நிற்கின்றன.

‘‘பூமியில் ஊர்ந்து திரியக் கூடியவைகளும், தன்னுடைய இரு இறக்கைகளால் (ஆகாயத்தில்) பறக்கக் கூடியவைகளும் உங்களைப் போன்ற (உயிருள்ள) படைப்புகளே (சமுதாயங்களே) அன்றி வேறில்லை (இவைகளில்) ஒன்றையுமே (நம்முடைய பதிவுப்) புத்தகத்தில் (லவ்ஹுல் மஹ்பூலில் குறிப்பிடாது நாம் விட்டு விடவில்லை. (ஒரு நாளில்) இவைகளும் தங்களுடைய இறைவனிடம் கொண்டுவரப்படும்.’’ (6:38)

‘‘ அல்லாஹ்வின் பார்வையில் அனைத்துப் படைப்புக்களும் அவனது குடும்பங்களாகும். அவற்றில் சிறந்தது அவனது குடும்பத்திற்கு பயனுடையதாகும்’’ (புகாரி)

- உயிரினங்களுக்கு தீங்கு செய்வதை, அநியாயமாக அவற்றை அழிப்பதை இஸ்லாம் தடுத்துள்ளது. உயிரினங்கள் உலக சமநிலை பேணவும் அல்லாஹ்வினால் படைக்கப்பட்டுள்ளன.

‘‘யாராவது ஒரு சிட்டுக் குருவியைக் கொன்றால் அது மறுமையில் அல்லாஹ்விடம் பின்வருமாறு கூறும் இறைவா! ஒரு நபர் என்னை எவ்விதப் பயனையும் எதிர்பாராது வீணாகக் கொலை செய்தான்’’ (அந்நஸாஈ, இப்னு ஹிப்பான்)

‘‘பூனையைத் துன்புறுத்திய ஒரு பெண் நரகம் சென்றாள்’’ (புகாரி)

‘‘தாகித்த நாயொன்றுக்கு நீர் புகட்டிய ஒரு மனிதனின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன. (புகாரி)

‘‘சேவல் கூவும் போது திட்டாதீர்கள். அது உங்களைத் தொழுகைக்காக எழுப்புகின்றது’’ (நஸாஈ)

- உயிரினங்களோடு நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு முறைகளை இஸ்லாம் கூறியுள்ளது. மனிதனோடு அண்டி வாழும் உயிரினங்களுக்கு இரக்கம் காட்டுதல், தீங்கிழைக்காதிருத்தல், ஓய்வளித்தல், பாதுகாப்புக் கொடுத்தல், உணவு, நீர் முறையாக வழங்குதல் போன்றவற்றை செய்வது மனிதனுக்கு கடமையாகும்.
- மனிதனுக்கு தீங்கு செய்யும் பிராணிகளுடன் இஸ்லாமிய வழிகாட்டலுக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

தீங்கிழைக்க வரும் பிராணிகளை கொல்வதற்கு அனுமதியிருந்தாலும் அவற்றுக்கு சித்திரவதை செய்வதையோ, தீயினால் பொசுக்குவதையோ இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

‘‘நிச்சயமாக அல்லாஹ் எல்லாச் செயல்களிலும் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறே விதித்திருக்கிறான்’’ (முஸ்லிம்)

- அறுவைப் பிராணிகளையும் பண்பாக அறுக்க வேண்டுமென இஸ்லாம் கூறுகின்றது.

''நீங்கள் பிராணியை அறுப்பதானால் அவற்றை நல்ல முறையில் அறுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் தமது கத்தியை நன்கு தீட்டிக் கொள்ளுங்கள். அறுத்த பின் அறுக்கப்பட்ட பிராணியின் உயிர் பிரியும் வரை அதற்கு ஓய்வு வழங்குங்கள்.'' (புகாரி)

- பௌதிக சூழலுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள்
- பௌதிக வளங்களைப் பேணிப் பாதுகாப்பதும் முறையாகப் பயன்படுத்துவதும் ஹுகூகுல் இபாதாவில் உள்ளடங்குகின்றன. இது ''இமாரத்'' பணியாகவுள்ளது.
- இஸ்லாம் பௌதிக வளங்களைப் பாதுகாத்து பிரபஞ்ச சமநிலையைப் பேணுவதற்கு கூடிய அக்கறை செலுத்துவதனூடாக உலகில் மனித மற்றும் உயிரினங்களின் வாழ்வை வளப்படுத்த உதவுகின்றது.
- அல் குர்ஆனில் 172 இடங்களில் மரம், மரத்துடன் தொடர்பான விடயங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

''வானத்திலிருந்து மிக்க பாக்கியமுள்ள நீரை இறக்கி அதனைக் கொண்டு தோட்டங்க்களையும், அறுவடை செய்யப்படும் தானியங்களையும் முளைப்பிக்கிறோம். அடுக்கடுக்கான (கனிகள்) நிறைந்த குலைகளையுடைய நீண்டு வளரும் பேரீத்த மரங்களையும் (முளைப்பிக்கச் செய்து) அதனை (நம்) அடியார்களுக்கு உணவாக்கி அவைகளைக் கொண்டு இறந்த பூமியை நாம் உயிர்ப்பிக்கிறோம்'' (50:9-11)

- நபி (ஸல்) அவரக்ள மரநடுகையை ஊக்குவித்து பல ஹதீஸ்களை முன்வைத்துள்ளார்கள்.

''உன்கையில் பேரீத்த மரச் செடி ஒன்றிருப்பின் அடுத்த நிமிடம் உலகம் அழியும் என்றிருந்தாலும் அதற்கு முன் அச்செடியை நட்டிவிடு. அச்செயலுக்கும் கூலியுண்டு'' (அஹ்மத்)

''ஒரு முஸ்லிம் ஒரு செடியை அல்லது ஒரு பயிரைப் பயிரிட்டு அதிலிருந்து ஒரு பறவை அல்லது ஒரு மனிதன் அல்லது மிருகம் உணவைப் பெறுமாயின் அது அவனுக்கு நன்மையைப் பெற்றுத்தரும் ஸதகாவாக அமையும்'' (முஸ்லிம்)

- இஸ்லாம் பௌதிக வளங்களை மிக இக்கட்டமான நிலைமைகளிலும் பேணிப் பாதுகாக்கவே கட்டளையிடுகின்றது. அபூ பக்ர் (ரழி) அவர்கள் தனது படையினருக்கு உபதேசித்ததை இதற்கு அடிப்படை ஆதாரமாகக் கொள்ளலாம்.

''பேரீத்த மரங்களை வெட்டி எரிக்க வேண்டாம். மேலும் பழம் தரும் எந்தவொரு மரத்தையும் வெட்ட வேண்டாம்''

- பௌதிக சூழல் மாசடைவதைத் தடுப்பது அனைத்து மனிதர்களதும் கடமையாகும். இது தனிமனிதர்கள், நாடு, சர்வதேசம் என்ற அடிப்படையில் உலகத்தார் அனைவர் மீதும் கடமையாகின்றது.

''நன்மையிலும், பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்'' (5:2)

**இபாதாக்களுக்கும் அக்லாக்குகளுக்கும் இடையிலான தொடர்பு**

- அக்லாக் இஸ்லாத்தின் எல்லாப் பகுதிகளோடும் தொடர்புபடும் ஓர் அடிப்படை அம்சமாகும். எனவேதான் நபி (ஸல்) அவர்கள் தான் உலகிற்கு நபியாக அனுப்பப்பட்டதன் நோக்கத்தைப் பின்வருமாறு விபரித்தார்.

‘‘நிச்சயமாக நற்பண்புகளைப் பூரணப்படுத்துவதற்காகவே நான் நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்’’

- இபாதாக்கள் உயர் அக்லாக்குகளுக்கு பின்னணியாக இருக்கின்றன.
- தொழுகை தக்வாவையும், இறை நெருக்கத்தையும், உள்ளம் பிரகாசம் அடைவதையும் ஏற்படுத்துவதால் அதன் மூலம் நல்லொழுக்கம் கட்டியெழுப்பப்படுகின்றது. தீய செயல்களிலிருந்தும் மனிதனைப் பாதுகாக்கின்றது.

  ‘‘நிச்சயமாக தொழுகையானது மானக்கேடான தீய காரியங்களிலிருந்து பாவங்களிலிருந்தும் மனிதனை விலக்கிவிடும்’’

- பிரபஞ்ச வளங்கள் அனைத்தும்அல்லாஹ்விற்கு சொந்தமானவை. அவற்றை மனிதன் எவ்வாறு அல்லாஹ் விரும்பும் பிரகாரம் பயன்படுத்துகின்றான் என்பதைப் பரீட்சித்துப்பார்ப்பதற்காக விதியாக்கப்பட்டுள்ள கடமையே ஸகாத் ஆகும். இக்கடமையினை நிறைவேற்றுவதனூடாக அப்பரீட்சையில் சித்தி பெறுவதுடன் முக்கிய அஃலாக்குகளையும் பெறுகின்றான். அன்பு, தயாள சிந்தனை, ஈகை, இரக்கம் எனும் பண்புகளைப் பெறுகின்றான். உலோபித்தனம், உலக ஆசை, அகந்தை எனும் தீய பண்புகள் அகன்றுவிடுகின்றன.

  ‘‘அவர்களுடைய பொருளைத் தானமாக எடுத்துக் கொண்டு அவர்களைப் பரிசுத்தமாக்கி வைத்து அதைக் கொண்டு அவர்களை தூய்மைப்படுத்தி அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். (9:103)

- தக்வாவை இலக்காகக் கொண்டு கடமையாக்கப்பட்டுள்ள நோன்பின் மூலம் பொறுமை, ஈகை, தயாளம், அன்பு போன்ற நற்பண்புகளைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. உள்ளத்தில் தோன்றும் தீய ஆசைகள், உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அதன் விபரீதங்களிலிருந்து பாதுகாக்கின்றது.

  ‘‘வெறுமனே உண்ணாமலும் பருகாமலும் இருப்பதல்ல நோன்பு அது தீமையானவற்றிலிருந்தும் மானக்கேடானவற்றிலிருந்தும் விலகி இருப்பதாகும். நீங்கள் நோன்பிருக்கும் போது யாராவது உங்களோடு தர்க்கித்தால் நான் நோன்பிருக்கிறேன் என்று சொல்லிவிடுங்கள்’’ (இப்னு ஹுஸைமா)

- நபி இப்ராஹிம் (அலை) அவர்களதும், அவரது குடும்பத்தினரதும் அல்லாஹ்விற்காக வாழ்ந்த தியாகப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கும் ஒரு கடமையாக ஹஜ் அமைந்துள்ளது.

  நம்பிக்கை. தியாகம், அர்ப்பணிப்பு, பொறுமை, இறையன்பு எனும் நற்பண்புகளை இக்கடமை மனிதனுள் கட்டியெழுப்புகின்றது. சகோதரத்துவம், ஒற்றுமை, ஐக்கியம், மனித நேயம், எனும் உயர் இலக்குகளையும் இது கொண்டுள்ளது. ஷைத்தானியத்திற்கெதிராகப் போராடுதல், மனோ இச்சைக்களைக் கட்டுப்படுத்தல் எனும் போராட்டப் பயிற்சிக்கும் வழிவகுக்கின்றது. இதனூடாக உயர் அஃலாக்குகள் கொண்ட மனிதனை அது உருவாக்குகின்றது.

  ‘‘எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தன்மீது கடமையாக்கிக் கொண்டால் ஹஜ் (மாதத்தின் 10 ஆம் நாள்) வரையில் வீடு கூடுதல், தீச் சொல் பேசுதல், சச்சரவு செய்து கொள்ளுதல் கூடாது’’ (2:197)

- இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுக்கும் அக்லாக்குகளுக்கும் இடையில் ஆழமானதொரு பிணைப்பு இருப்பதை மேற்படி விளக்கங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்விபாதத்துக்களை நிறைவேற்றும் முறைகளில் வேறுபாடுகள் இருப்பினும் இவை கடமையாக்கப்பட்டதன் நோக்கத்தில் ஒன்றுபடுகின்றன. மனிதனைத் தூய்மைப்படுத்தி நல்ல ஒழுக்கத்தில் உயர்ந்துவனவாகவே அவை அமைந்துள்ளன.

- அடிப்படை வணக்கங்கள் மனிதனின் மனங்களைத் தூய்மைப்படுத்தாவிட்டால், உயர்ந்த அக்லாக்குகளைக் கொண்டு வராவிட்டால், இறை நெருக்கத்தை ஏற்படுத்தாவிட்டால் மனிதனை பண்பாளனாக மாற்ற வேறு பாசறை கிடையாது. அவன் அழிவையே அடைய வேண்டியிருக்கும்.

‘‘உண்மையாகவே எவன் குற்றவாளியாகத் தன் இறைவனிடம் வருகின்றானோ, அவனுக்கு நிச்சயமாக நரகம்தான். அதில் அவன் மரணிக்க மாட்டான், வாழவும் மாட்டான். எவர் விசுவாசம் கொண்டவராகவும், நற்கருமங்களைச் செய்தவராகவும் வருகின்றாரோ அத்தகையோருக்கு மேலான பதவிகள் இருக்கின்றன’’ (20:74-75)